# அபத்தம்

வைகாசி 2024 17



## புத்தகங்களும் நிர்வாணமும்

# புத்தகங்களும் நிர்வாணமும்

வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகிறான்.

•••

ஆச்சி சொல்வது போல, எனக்கு அவ்வப்போது நரி வெருட்டும். அல்லது வீட்டுக்காரி சொல்வது போல, ஒவ்வொரு காலத்திற்கு ஒவ்வொரு விசர் பிடிக்கும்.

ஒவ்வொரு காலத்திலும் ஏதோ ஒரு விடயத்தில் ஆர்வம் தோன்றும். இப்போதைக்குப் போன்று, இணையத்தில் தேடியே அந்த விடயங்களை ஒரு கரை காண முடியாத காலம். புத்தகங்கள் தான் அறிவு வளர்ச்சிக்கான தஞ்சம்.

தோன்றுகின்ற ஆர்வங்கள் சம்பந்தமில்லாத எத்தனையோ விடயங்கள் பற்றியதாக இருக்கும். நொஸ்ட்ரடாமுஸ், பேர்முடா முக்கோணம், படட / பக்க வடிவமைப்பு (page layout / graphic design), புகைப்படக் கலை, பங்குச் சந்தை முதலீடு, இணையத் தள வடிவமைப்பு, இசைக்கருவிகளைக் கற்றுக் கொள்ளல், ஆங்கிலப் பாடல் வரிகளை எழுதுதல், அவ்வப்போது நான் ஆர்வம் கொண்டிருந்த வெவ்வேறு கணினி மென்பொருட்கள் பயன்படுத்துதல், சினிமா என்பது கனவாக இருந்ததால் ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு முதல் படத்தொகுப்பு வரை, Steve Jobs முதல் Carlos Santana வரையிலான வாழ்க்கை வரலாறுகள் என்றெல்லாம் புத்தகங்களைத் தேடி வாசித்துக் கொண்டிருப்பேன்.

கடைசியில் 'ஒரு கரை கண்டு', இன்னொரு புத்தகம் எழுதக் கூடிய அளவுக்கு விடயங்களை வாசித்துத் தள்ளியிருப்பேன்.

இங்கே றொறன்ரோவில் உள்ள நூலகத்தில் நான் வந்த காலத்தில் இருந்தே அங்கத்துவம் பெற்றிருக்கிறேன். அங்கத்துவ அட்டையின் 14 டிஜிட் இலக்கம் கூட எனக்கு மனப்பாடம். அந்த அட்டையும் அதீதமான பாவிப்பால் உடைந்து முறிந்த பின்னால், அவர்களாகவே புதியது ஒன்றைத் தந்தார்கள். இந்த நகரம் முழுவதும் உள்ள நூலகக் கிளைகளில் உள்ள நூல்களின் பட்டியலை வலைப்பின்னல் மூலமாக பார்வையிட முடிந்ததால், கணினிக்குள்ளாலேயே புத்தகங்களை பதிவு செய்தால் எனக்கு அருகில் உள்ள கிளைக்கு வந்து சேரும். அப்போது அந்தப் பதிவுகளைச் செய்ய நூலகத்திற்குத்தான் செல்ல வேண்டும். இணைய வருகையின் பின்னான, கணினிப் பரவலாக்கத்தின் பின்னர் வீட்டிலிருந்தே அதைச் செய்ய முடிந்தது.

சமீபத்தில் கூட, wood working முதல் wood turning என தற்போது எனக்கு நரி வெருட்டிய ஓய்வுநேரப் பொழுது போக்குகள் வரைக்கும் வாங்கி வாசித்திருந்தேன்.

இப்போது இணையத்தில் புத்தகங்களை வாசிக்க முடிந்திருப்பதாலும், அறிவை புத்தகங்கள் ஊடாக மட்டுமே தேட வேண்டிய அவசியம் இல்லாதபடிக்கு தேடி வாசிக்கக் கூடிய அளவுக்கு இணையத்தில் கொட்டிக் கிடப்பதாலும், நூலகப் பாவனை தற்போது எனக்கு அதிகம் இல்லை.

இந்தப் புத்தகங்களை எல்லாம் விலைக்கு வாங்கி வாசிக்க

ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்

பாப்லோ நெருடாவை வாசித்ததாக பேஸ்புக்கில் பீலா பதிவு போடலாம். வாசித்திருந்தாலும், சில நேரம் அது கூட பாப்லோ நெருடாவின் மொழிபெயர்ப்பு நூலாக இருக்கக் கூடும். ஸ்பானிய மொழியிலிருந்து ஆங்கிலத்திற்குப் போய், ஆங்கிலத்திலிருந்து தமிழிற்கு வந்திருக்கக் கூடியது. கவிதை சும்மா வாசித்தாலே புரிவதில்லை. இதற்குள் மொழிபெயர்ப்பின் மொழிபெயர்ப்பு?
#MeToo வின் பின்னால், பாப்லோ நெருடாவுக்கு இப்போது சிலியில் நடப்பது குறித்து வேறெங்காவது வாசித்தால் தான் தெரிந்து கொள்ள முடியும். பாப்லோ நெருடாவைத் தெரிந்து வைத்திருப்பதைப் பெருமையாகப் பீற்றிக் கொள்ளும் நம் தமிழ் 'இலக்கிய சஞ்சிகைகள்' அது பற்றி மூச்சே விடுவதில்லை. அவர் இடதுசாரிகளின் ஆதர்ஷ புருஷர் வேறு. இந்த அருந்தமிழ் இலக்கிய சஞ்சிகைகளை மட்டுமே வாசித்து 'இலக்கிய யாகம், வேள்வி' செய்யும் இலக்கிப் பிரகிருதிகளுக்கு அதெல்லாம் தெரிந்திருக்காது.
பாப்லோ நெருடா தான் பிறந்த நாட்டிலேயே சமூக நீக்கம் செய்யப்பட்ட கதை பற்றி எல்லாம் எதுவும் தெரியாமல், 'நெருடாவின் சீலே நாட்டுக்குப் போக' பிச்சை கேட்கலாம். நெருடாவை மேற்கோள் காட்டி 'சும்மா போகிற போக்கில் அடிச்சு விட்டால்' தமிழ்நாட்டு 'இலக்கியப் பெருந்தகைகள்' 'பின்னிட்டீங்க, தோழர்த் தல' என்று பின்னூட்டம் விடுவார்கள்.



facebook: George RC

வேண்டியிருந்தால், என் உழைப்பு முழுவதுமே புத்தகச் சேகரிப்பிலேயே முடிந்திருக்கும். நான் கட்டுகின்ற மாநகர சபை சோலைவரிப் பணத்தினால் ஆய பயன் அது.

நூலகத்தில் வாசித்த புத்தகங்களில் தொடர்ந்தும் பயன்படுத்தக் கூடியவற்றை விலைக்கு வாங்கி விடுவேன். வாங்கி வைத்திருக்கும் புத்தகங்களும் அளவுக்கு அதிகமாகவே இருக்கின்றன.

இதற்குள் வெளியீட்டு விழாக்களில் வாங்கிய முதற் பிரதிகள் தனிக்கதை.

நான் ஆங்கிலத்தில் இலக்கணம், எழுத்துக் கலை, வீட்டுத்தோட்டம் பற்றி வைத்திருக்கும் புத்தகங்கள் மட்டுமே, பேஸ்புக்கில் புத்தக அடுக்குகளின் முன்னால் உட்கார்ந்து வாசித்தபடி படம் போடும் இலக்கியகாரர்கள் வைத்திருப்பதை விட அதிகம்.

முழுநேர வேலையும் செய்து கொண்டு, ஒரு வார இதழாக தாயகத்தை நடத்தி எழுதிக் கொண்டும் இருந்த காலத்தில், வேலைக்குப் போகும் போது பொதுப் போக்குவரத்தின் போதும், வேலை நேர உணவு இடைநேரத்தின் போதும் கிடைக்கின்ற நேரங்களில் வாசித்தவை இவை.

இதை விட, எனது பத்திரிகை, சஞ்சிகை வாசிப்புகள் தனி. இதனால், தொழில்நுட்பங்கள் மீதான என் ஆர்வம் காரணமாக கணினி அறிவு முதல் வருமான வரி விதிமுறைகள் வரைக்கும், குவாண்டம் பௌதிகம் முதல் கிறிப்டோகரன்சி வரைக்கும் எவரோடும் எது பற்றியும் உரையாடக் கூடிய அளவுக்கும், சந்தேகம் தீர்க்கும் அளவுக்கும் எனக்கு அறிவு இருக்கிறது... விளையாட்டு ஒன்றைத் தவிர.

கிரிக்கட் முதல் பேஸ்போல், ஹொக்கி வரைக்குமான எந்த விளையாட்டு விடயங்களும் பற்றி எனக்கு எதுவும் தெரியாது... ஒரு காலத்தில் போர்முலா 1 கிரான் பிரி எனப்படும் Grand Prix கார்ப் பந்தயம் தவிர.

என்னுடைய மக்கின்ரோஷ் கணினி அறிவில் நம்பிக்கை கொண்டு உலகின் மறுமுனையில் இருந்து நள்ளிரவில் போன் அடித்து செயன்முறை கேட்டவர்கள் கூட உண்டு. அதைக் கூட கணினியில் பார்க்காமலேயே குழம்பிய நித்திரையிலேயே மனத்திரையில் பார்த்தபடியே ஐயம் தெளிவுற வைத்திருக்கிறேன்.

புத்தகங்கள் எப்போதுமே எனக்கு அறிவு வளர்ச்சிக் கானவையாகத் தான் இருக்கின்றன. இதனால், ஒரு காலத்தில் ஆர்வத்தோடு வாசித்த புனைவு இலக்கியங்களில் இப்போது எனக்குப் பெரிதாக ஆர்வமும், அதற்கான நேரமும் இல்லை.

பாப்லோ நெருடாவை வாசித்ததாக பேஸ்புக்கில் பீலா பதிவு போடலாம்.

வாசித்திருந்தாலும், சில நேரம் அது கூட பாப்லோ நெருடாவின் மொழிபெயர்ப்பு நூலாக இருக்கக் கூடும். ஸ்பானிய மொழியிலிருந்து ஆங்கிலத்திற்குப் போய், ஆங்கிலத்திலிருந்து தமிழிற்கு வந்திருக்கக் கூடியது. கவிதை சும்மா வாசித்தாலே புரிவதில்லை. இதற்குள் மொழிபெயர்ப்பின் மொழிபெயர்ப்பு?

#MeToo வின் பின்னால், பாப்லோ நெருடாவுக்கு இப்போது சிலியில் நடப்பது குறித்து வேறெங்காவது வாசித்தால் தான் தெரிந்து கொள்ள முடியும். பாப்லோ நெருடாவைத் தெரிந்து வைத்திருப்பதைப் பெருமையாகப் பீற்றிக் கொள்ளும் நம் தமிழ் 'இலக்கிய சஞ்சிகைகள்' அது பற்றி மூச்சே விடுவதில்லை.

அவர் இடதுசாரிகளின் ஆதர்ஷ புருஷர் வேறு. இந்த அருந்தமிழ் இலக்கிய சஞ்சிகைகளை மட்டுமே வாசித்து 'இலக்கிய யாகம், வேள்வி' செய்யும் இலக்கிப் பிரகிருதிகளுக்கு அதெல்லாம் தெரிந்திருக்காது.

பாப்லோ நெருடா தான் பிறந்த நாட்டிலேயே சமூக நீக்கம் செய்யப்பட்ட கதை பற்றி எல்லாம் எதுவும் தெரியாமல், 'நெருடாவின் சீலே நாட்டுக்குப் போக' பிச்சை கேட்கலாம். நெருடாவை மேற்கோள் காட்டி 'சும்மா போகிற போக்கில் அடிச்சு விட்டால்' தமிழ்நாட்டு 'இலக்கியப் பெருந்தகைகள்' 'பின்னிட்டீங்க, தோழர்த் தல' என்று பின்னூட்டம் விடுவார்கள்.

இந்தப் புனைவுகள் பற்றிய அறிவை எல்லாம் வைத்துக் கொண்டு என்ன பயன் பெற முடியும்? அதைப் பற்றி பொதுவெளியில் யாருடன் உரையாட முடியும்?

இப்படி ஒரு நாள் நூலகத்தில் எடுத்த புத்தகம் ஒன்றை, வேலைக்குப் போகும் போது நிலக்கீழ் புகையிரதத்தில் வாசித்து, பின் இறங்கி ஏறிய பஸ்ஸில் வாசித்துக் கொண்டிருக்கிறேன். வேலையிடம் வந்ததும் என்னோடு வந்திறங்கிய, என்னோடு வேலை செய்யும் வெள்ளையன் ஒருவன் வீதியைக் கடக்கக் காத்திருந்த போது, என் கையிலிருந்த புத்தகத்தைப் பார்த்து விட்டுச் சிரித்த 'நக்கல்' சிரிப்பும் அந்த இடமும் ஒரு முப்பது வருடங்களின் பின்னாலும் என் கண்ணுக்குள் நிற்கின்றன. தன்னைப் போல, ஆண்டுக்கணக்கில் நிலக்கீழ் அறையில் வேலை செய்து கொண்டிருந்த வந்தேறி ஒருவன் வாசித்துக் கொண்டிருந்த புத்தகம் அவனுக்கு சிரிப்பு ஊட்டியிருக்க வேண்டும்.

ஆசானுக்கு அற்பர்கள் மீதான சிரிப்புப் போல!

அப்போது நான் வாசித்துக் கொண்டிருந்தது, ஹொலிவூட் படங்களுக்குத் திரைக்கதை எழுதுவது பற்றிய புத்தகம்.

கிடங்குக்குள் வேலை செய்தாலும், என்னுடைய

புத்தக தினத்தில் புத்தகங்களுடன், புத்தகக் காப்புரிமையும் கொண்டாடப் படுகிறது. எந்தப் புத்தகம், உலகத் திரைப்படம் பற்றிச் சொன்னாலும் Pdf please, link please என்கின்ற இலக்கிய ஆர்வலர்களுக்குள், உள்ளூர் உற்பத்திகளை ஆதரிக்கும் இலக்கிய நல்லுள்ளங்கள் பேஸ்புக்கில் தாங்கள் வாங்கிய புத்தகங்களை படம் போட்டுக் காட்டுவது உள்ளூர் குடிசைக் கைத்தொழில் பொருளாதாரத்தை வளம்படுத்தி, சில வீடுகளில் அடுப்பு எரிவதில் எனக்கு என்ன மனம் எரிதல் இருக்க முடியும்?

சாருவின் புத்தங்களையும் இப்படி யாராவது வாங்கி படம் போட்டால், 'சாமி தர்மம் போடுங்க, சாமி' இராப்பிச்சை தொல்லை குறையக் கூடும். பிச்சை போடாதவர்களை கெட்ட வார்த்தையால் திட்டாத அளவுக்கு பிச்சைக்காரர்களுக்கு தொழில் தர்மமும், பிச்சை போடக் கூடிய மற்றவர்களை கோபத்துக்குள்ளாக்காத அளவுக்கு புத்தியும் உண்டு. இலக்கிய இராப் பிச்சைகளுக்கு அந்த நாகரீகமும் 'காமன் சென்ஸ்'ம் இல்லை.

சிந்தனையும் உலகங்களும் கிணறுகளுக்கு உள்ளேயே நின்று விடுவதில்லை. என் சிந்தனைகளும் கனவுகளும் அதையெல்லாம் தாண்டியவை. அவை சாத்தியமானவையா, அவை நிறைவேறாதபடிக்கு விதி என்னை எப்படி இழுத்து விழுத்தியது என்பதெல்லாம் வேறு கதைகள்.

பேஸ்புக்கில் புத்தக தினம் வந்தது. பதிவர்கள் எல்லாம் புத்தகங்களோடு படம் போட்டார்கள். அவர்கள் படம் போட, புத்தக தினம் எல்லாம் வர வேண்டும் என்பதும் இல்லை. பணம் கொடுத்து வாங்குவதைப் படம் போட்டுக் காட்டுவதில் எனக்கொன்றும் ஆட்சேபனையும் இல்லை.

புத்தக தினத்தில் புத்தகங்களுடன், புத்தகக் காப்புரிமையும் கொண்டாடப் படுகிறது. எந்தப் புத்தகம், உலகத் திரைப்படம் பற்றிச் சொன்னாலும் Pdf please, link please என்கின்ற இலக்கிய ஆர்வலர்களுக்குள், உள்ளூர் உற்பத்திகளை ஆதரிக்கும் இலக்கிய நல்லுள்ளங்கள் பேஸ்புக்கில் தாங்கள் வாங்கிய புத்தகங்களை படம் போட்டுக் காட்டுவது உள்ளூர் குடிசைக் கைத்தொழில் பொருளாதாரத்தை வளம்படுத்தி, சில வீடுகளில் அடுப்பு எரிவதில் எனக்கு என்ன மனம் எரிதல் இருக்க முடியும்?

சாருவின் புத்தங்களையும் இப்படி யாராவது வாங்கி படம் போட்டால், 'சாமி தர்மம் போடுங்க, சாமி' இராப்பிச்சை தொல்லை குறையக் கூடும். பிச்சை போடாதவர்களை கெட்ட வார்த்தையால் திட்டாத அளவுக்கு பிச்சைக்காரர்களுக்கு தொழில் தர்மமும், பிச்சை போடக் கூடிய மற்றவர்களை கோபத்துக்குள்ளாக்காத அளவுக்கு புத்தியும் உண்டு. இலக்கிய இராப் பிச்சைகளுக்கு அந்த நாகரீகமும் 'காமன் சென்ஸ்'ம் இல்லை.

புத்தகங்கள் என்பன உண்மைகளுக்கான முதலும் முடிவும் ஆனவையல்ல.

not be-all and end-all of all truth.

இன்றைய உலகின் சகல அநீதிகளுக்கும், யுத்தங்களுக்கும், பல கொலைகளுக்கும் நீதியைப் போதிப்பதாகக் கூறிக் கொள்ளும் மதப் புத்தகங்கள் தான் காரணம் என்பதில் இருந்து தான் புத்தகங்கள் பற்றிய பேச்சைத் தொடங்க வேண்டும். மானிடத்திற்குத் தேவையான எல்லா உண்மைகளையும் நீதிகளையும் கொண்டிருப்பதாகச் சொல்லும் இந்த நூல்கள் தான் மானிடத்தில் பெரும்பாலோர் படிக்கும் அல்லது அறிந்து கொள்ளும் முதல் புத்தகங்களாக இருக்கும். பலர் அந்தப் புத்தகங்களை மட்டும்

படிப்பவர்களாகவோ, அவற்றைப் படித்தவர்கள் உப்புப் புளி விட்டுச் சொல்வதை கேட்கும் கேள்விச் செவியர்களாகவோ மட்டும் இருந்து விடுகிறார்கள்.

இந்தப் புத்தகங்கள் குழந்தை மனதில் பதிய வைத்து விடுகின்ற விடயங்களில் இருந்து பலரால் வெளியில் வர முடிவதில்லை. இந்தப் புத்தகங்கள் பகுத்தறிவை வளர்ப்பதை விட, வெறும் நம்பிக்கைகளையும் பொய்மைகளையும் உண்மை களாக மனதில் பதிய வைப்பவையாக, பகுத்தறிவை மழுங்கடிப் பவையாகவே இருக்கின்றன. அவை குறித்த கேள்விகள் மத நிந்தனையாகவும், மரண தண்டனைக்குரிய குற்றங்களாகவும் ஆக்கப்பட்டிருக்கின்றன.

அந்தப் புத்தகங்கள் உண்மை யானவையாக இருக்கும் பட்சத்தில், இந்தப் புத்தகங்களால் கடவுள் எனப்படுபவர் உலகில் நீதியை நிலை நாட்டுகிறவராக இல்லாமல், மாமா வேலை பார்க்கிறவராகவும், கூட்டிப் கொடுப்பவராகவும், தான் படைத்த மக்கள் கூட்டத்தில் ஒரு கூட்டத்தினரை மட்டும் 'தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக' ஓர வஞ்சகம் செய்கிறவராகவும், 'அவர்களுக்கு மட்டும் காணி உரிமை வழங்குகிறவராகவும்', மற்ற எல்லோரையும் கீழான வர்களாகவும், கொலை செய்யப்படக் கூடியவர்களாகவும் பிரகடனப்படுத்தி, மிருகங்களை மட்டுமன்றி பிள்ளைகளையும் பலி கேட்பவராகவும், தலைப் பிள்ளைகளைப் பலி வாங்குகிறவராகவும், பெண்களை ஆண்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்கள் என்பவ ராகவும், நவீன உலகத்தில் சட்ட விரோதமாக்கப்பட்ட சகல விதமான பாலியல்வக்கிரங்களையும்முறைகேடு களையும் செய்கிறவராகவும், நியாயப் படுத்துகிறவராகவும் என்று, தற்போதைய உலக சட்டங்களின்படி 'முட்டிக்கு முட்டி தட்டி, உள்ளே தள்ளப்படவோ, இரண்டு கைகளையும் பின்னே கட்டி முழங்காலில் இருத்தி கழுத்து வெட்டப்படவோ அல்லது

இது மதங்களுக்கு மட்டுமானதுமில்லை. அரசியல் தத்துவங்களிற்கான மூலநூல்கள் கூட மதநூ ல்களின் நிலைக்கு அந்தத் தத்துவங்களின் ஆதரவாளர்களால் ஆக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தத்துவங்களை முன்மொழிந்தோரும், அமுல்படுத்தியோரும் கடவுளரா கவும், அந்தத் தத்துவங்கள் எல்லாம் விஞ்ஞானபூர்வமான உண்மைகள் என்றும் தான் அவர்களால் விசுவசிக்கப்படுகின்றன.
மதவாதிகளும் பக்தர் களும் மதநூல்கள் பற்றிச் சொல்வது போலவே, இந்த நூல்களும் கேள்விகளுக்கும் விமர்சனங் களுக்கும் அப்பாற்பட்டவையாக ஆக்கப்பட்டிருக்கின்றன.

தங்களைப் பகுத்தறி வாளர்களாகவும், சிந்திக்கத் தெரிந்தவர்களாகவும் காட்டிக் கொள்கிறவர்களால் கூட, இந்த நூ ல்கள் பற்றிய கேள்விகளையும் விமர்சனங்களையும் எதிர்கொள்ள முடிவதில்லை.

யுகங்களுக்கும் அழுந்தி உழலுமாறு எரியும் நரக நெருப்பில் வீசப்படவோ' வேண்டிய பாவியாகவும், குற்றவாளியாகவும் தண்டிக்கப்பட வேண்டியவர்.

ஆனால், நீதிமன்றங்களிலும், அதிகாரங்களின் பதவி ஏற்புகளிலும் இந்தப் புத்தகங்களில் கை வைத்துத் தான் சத்தியப்பிரமாணங்கள் எடுக்கப்படும் அளவுக்குத் தான் உலகில் நிலைமை இருக்கிறது. அவ்வாறான உலகத்தின் நிலை வேறு என்னவாக இருக்க முடியும்?

இந்தப் புத்தகங்கள் எல்லாம் மீற முடியாத அடிமைச்சாசனங்கள் மாதிரி, தங்களின் உணவு முதல் உடை வரைக்கும், உறவுகள் ஈறாக, அதன்படி ஒழுகியே ஆக வேண்டும் என்ற நிலையில் ஒரு பக்தர் கூட்டத்தை, பகுத்தறிவு வளர முடியாத நிலையில் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வைத்திருக்கின்றன.

இது மதங்களுக்கு மட்டுமானதுமில்லை. அரசியல் தத்துவங்களிற்கான மூலநூல்கள் கூட மதநூல்களின் நிலைக்கு அந்தத் தத்துவங்களின் ஆதரவாளர்களால் ஆக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தத்துவங்களை முன்மொழிந்தோரும், அமுல்படுத்தியோரும் கடவுளரா கவும், அந்தத் தத்துவங்கள் எல்லாம் விஞ்ஞானபூர்வமான உண்மைகள் என்றும் தான் அவர்களால் விசுவசிக்கப்படுகின்றன.

மதவாதிகளும் பக்தர் களும் மதநூல்கள் பற்றிச் சொல்வது போலவே, இந்த நூல்களும் கேள்விகளுக்கும் விமர்சனங் களுக்கும் அப்பாற்பட்டவையாக ஆக்கப்பட்டிருக்கின்றன.

தங்களைப் பகுத்தறி வாளர்களாகவும், சிந்திக்கத் தெரிந்தவர்களாகவும் காட்டிக் கொள்கிறவர்களால் கூட, இந்த நூல்கள் பற்றிய கேள்விகளையும் விமர்சனங்களையும் எதிர்கொள்ள முடிவதில்லை.

இந்த அரசியல் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட சர்வாதிகார அரசுகளின் சகல மனித உரிமை மீறல்களையும் நியாயப்படுத்தவும், அந்த அரசுகளின் பொய்ப் பிரசாரங்களை உண்மை என்று நம்பவும் வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கிறது.

மதவாதிகளும் சரி, தத்துவங்களின் தொடராளர்களும் சரி, அவர்களின் இருப்பும், அதை வைத்து அதிகாரத்தை வைத்திருப்போருக்கு ஆதிக்கமும் இந்தப் புத்தகங்களில் தான் தங்கியுள்ளன. தங்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கி, அதிகாரத்தை இழப்பதற்குத் தயாரான மனநிலை இல்லாததால், மதவாதிகள், பக்தர்கள் போன்றே, இந்த 'முற்போக்குச் சிந்தனையாளர்களும்'

இந்தத் தத்துவங்களை முழுமுதல் உண்மைகளாக நம்ப வேண்டி ஏற்படுகிறது.

மதவாதிகள் மதநிந்தனை என்று முடித்து விட முயல்வது போல, இவர்கள் தங்களது நம்பிக்கைகள் மீதான கேள்விகளை எதிர்த்தரப்பின் பொய்ப்பிரசாரம் என்பதோடு முடித்து விட முயற்சிப்பார்கள். தங்கள் தத்துவங்கள் மீதான முழுமையான நம்பிக்கை இல்லாததால், தங்களை மனம் மாற்றி விடும் என்றோ, தங்களின் கருத்து நிர்வாண வெறுமையை குத்திக் காட்டி விடும் என்றோ, மாற்றுக் கருத்துக்கள் உள்ள எதையும் வாசிப்பதில்லை என்பதைப் பெருமையாகக் கூடச் சொல்வார்கள்.

நான் மேலே சொன்னது போல, புத்தகங்கள் உண்மைக்கு முதலும் முடிவும் ஆனவை அல்ல. அவை உண்மையைத் தேடுவதற்கான வெறும் தொடக்கம் மட்டும் தான்.

தாயகம் வெளிவந்த போது, அதன் தாரக மந்திரத்தை, ‘உண்மையைத் தேடி’ (In search of truth) என்பதாகத் தான் வைத்திருந்தேன். அதை புரிந்து கொள்ள முடியாத யாழ்ப்பாணிக் கூழ்ப்பானை முட்டாள் கூட்டத்திற்கு அதற்கு விளக்கம் சொல்ல நான் பட்ட பாடு தனிக்கதை.

நவீன உலகில் பொய்ப்பிரச்சாரம் என்பது எங்களை அறியாமலேயே எங்கள் மனதில் திணிக்கப்படுவது. யுத்தங்களை மக்கள் மனதில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒன்றாக மாற்றுவதற்கு, ஊடகங்களைக் கைக்குள் கொண்டு வருவது மட்டுமன்றி, அரசுகள் பொதுத்தொடர்பு நிறுவனங்களை பணிக்கமர்த்தி, பொய்களை பொதுமக்கள் மத்தியில் மட்டுமன்றி, சட்டவாக்கவாளர்கள் (Lawmakers) மத்தியிலும் திணித்துப் பயன்படுத்த முயல்கின்றன.

இதற்கான உதாரணங்களை சமீப காலங்களில் ஈராக்கிய யுத்தம் முதல் உக்ரேனிய யுத்தம் வரைக்கும் காணலாம். வந்தேறு குடிகளுக்கு எதிரான மனப்பான்மையுள்ள

புத்தகங்கள் உண்மைக்கு முதலும் முடிவும் ஆனவை அல்ல. அவை உண்மையைத் தேடுவதற்கான வெறும் தொடக்கம் மட்டும் தான்.

தாயகம் வெளிவந்த போது, அதன் தாரக மந்திரத்தை, ‘உண்மையைத் தேடி’ (In search of truth) என்பதாகத் தான் வைத்திருந்தேன். அதை புரிந்து கொள்ள முடியாத யாழ்ப்பாணிக் கூழ்ப்பானை முட்டாள் கூட்டத்திற்கு அதற்கு விளக்கம் சொல்ல நான் பட்ட பாடு தனிக்கதை.

மேற்குலகை உக்ரேனிய அகதிகளுக்கு தஞ்சம் வழங்குவதற்கு சார்பானதாக மாற்றியதும், வானொலிகளில் பொனி எம்மின் ரஸ்புட்டின் பாடலை அடிக்கடி வானொலியில் ஒலிபரப்புவதன் மூலமாக புட்டின் மீதான வெறுப்பை ஏற்படுத்துவதும் கூட இந்த வகைப் பிரசாரம் தான்.

ஈராக்கிய யுத்தத்தில் குவைத்தில் வைத்தியசாலையில் குறைமாதக் குழந்தைகள் கொல்லப்பட்டதாக, அமெரிக்க செனட் தெரிவுக்குழுவிற்கு சாட்சியமளித்த குவைத் பெண்ணிற்கு பயிற்சி அளித்தது குவைத் அரசினால் சம்பளத்திற்கு அமர்த்தப்பட்ட பெரிய பொதுத்தொடர்பு நிறுவனம் என்பது பழைய கதை.

எங்களுக்கு ஊட்டப்படுவதை மட்டும் விழுங்கிக் கொண்டிருந்தால், எங்கள் உலகம் உண்மைகளுக்கு அப்பாலானதாக, ஒரு கனவுலகமாகத் தான் இருக்கும். உண்மையை அறிந்து கொள்வதாயின் அதற்கான சுயமான தேடல் மூலமாகத் தான் அது முடியும்.

பேர்முடா முக்கோணத்தில் விமானங்களும் கப்பல்களும் காணாமல் போனதற்கு அந்தப் பகுதியில் உள்ள காந்தப்புலங்கள் முதல், வேற்றுக் கிரக மனிதர்கள் வரைக்கும் காரணம் என்று சொல்லும் பல புத்தகங்களை நான் இலங்கையில் இருந்த காலத்திலிருந்தே வாசித்திருக்கிறேன்.

ஜோன் எஃப்.கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டதற்கு ரஷ்யா, கியூபா, மாபியா, சமஷ்டி புலனாய்வு அமைப்பு, சிஐஏ தான் காரணம் என்று ‘ஆதாரபூர்வமாக நிறுவும்’ புத்தகங்களையும் வாசித்திருக்கிறேன். இப்படி எத்தனையோ விடயங்கள் பற்றி முன்னுக்குப் பின் முரணான ‘ஆதாரங்களைத்’ தோண்டி எடுத்துக் கண்டுபிடித்து எழுதப்பட்ட புத்தகங்கள் இன்றைக்கும் வெளிவந்து கொண்டு தான் இருக்கின்றன.

சமீப காலங்களில் எங்களுக்குத் தெரிந்த, காணாமல் போன மலேசிய விமானம், லிபியா குற்றம் சாட்டப்பட்ட லொக்கர்பீ விமான விபத்து என்பது பற்றி எல்லாம் பல்வேறு பட்ட ‘தத்துவங்கள்’, பல்வேறு ‘ஆதாரங்களுடன்’ வெளிவந்தபடி தான் இருக்கின்றன.

இதில் லொக்கர்பீ விமானத் தகர்ப்புக்கு, சிஐஏ தான் காரணம் என்று ரொறன்ரோ ஸ்டார் விசேட கட்டுரை ஒன்றை ஒரு காலத்தில் வெளியிட்டிருந்தது. கடைசியில் லிபியா ஓய்வு பெற்ற ஒரு புலனாய்வு அதிகாரியை தண்டனைக்காக கையளித்திருந்தது. அவரும் கொஞ்சக் காலத்தில் புற்றுநோயால் இறந்து விட்டார்.

ஈரானிய பணயக் கைதிகளை மீட்க ஜிம்மி கார்ட்டர் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்ததற்கு, சிஐஏ காரணம் என்றெல்லாம் வாசித்திருக்கிறேன். அது பற்றி கருத்துச் சொன்ன ஜிம்மி கார்ட்டர் உண்மை ஒருநாள் வெளிவரும் என்று சொல்லியிருந்தார்.

இதில் உண்மை என்பது சம்பந்தப்பட்டவர்கள் தவிர்ந்து மற்றவர்களுக்குத் தெரியாது. இது பற்றி எல்லாம் கிடைக்கிற தகவல்களை வைத்துக் கொண்டு ஊகிக்க முடியுமே அன்றி, உண்மைகளைத் தெரிந்து கொள்வது என்பது எல்லா நேரமும் சாத்தியமில்லை. காலம் கடந்த பின்னால், declassified information மூலமாகத் தான் பல உண்மைகள் காலம் தாழ்த்தி வந்து சேர்கின்றன.

இப்படி, புத்தகங்கள் எல்லாம் உண்மைகளைக் கொண்டிருப்பதில்லை.

பொதுச் சிந்தனையில் அச்சில் வந்தால் உண்மையாக இருக்க வேண்டும் என்பது ஏதோ ஒரு வகையில் பதிந்து விட்டிருக்கிறது. பின்னர் தொலைக்காட்சி, இப்போது யூடியூப்பில் வந்தாலேயே உண்மை ஆகி விடுகிறது என்பதால் எங்களுக்கு பயில்வான்கள் அபிமான ஊடகவியலாளர்கள் ஆகி விட்டிருக்கிறார்கள்.

அச்சில் வந்தால் உண்மையாக இருக்க வேண்டும் என்பதற்கான அடிப்படை ஒன்று உண்டு. பத்திரிகைகள், சஞ்சிகைகள் எல்லாம் உண்மையை வெளிக் கொணர்வதற்காக, பல்வேறு மூலங்களைத் தேடிக் கண்டுபிடித்து தீரவிசாரித்து, உண்மைகளை ஒப்புநோக்கி (fact checking), உண்மையை வெளிக் கொணர்வதற்காக பெரும் உழைப்பைச் செலவிட்ட காலம் ஒன்றிருந்தது. புத்தகம் எழுதுவதாக இருந்தால், அதற்கான ஆராய்ச்சியும் உழைப்பும் இருந்தது. அந்த உழைப்புத் தான் வாஷிங்டன் போஸ்டில் வெளிவந்த வாட்டர்கேட் ஊழல் விவகாரம் மூலமாக றிச்சாட் நிக்சனை பதவி விலகச் செய்தது.

இன்றைய அவசர உலகத்தில் அதெல்லாம் அனாவசியமாகிவிட்டன. லாபம் கருதிய முதலாளித்துவ உலகும், உள்ளங்கைக்குள் உலகத்தைக் கொண்டு வந்திருக்கும் தொழில்நுட்பமும், போகிற வழியில் வேடிக்கை பார்க்கும் மனநிலையுடனான, கவனத்தைக் கோரும் காலத்தைக் குறுக்கி (Short attention span), இல்லாத ஏதோ ஒன்றைச் சுட்டு விரலால் சதா தேடிக் கொண்டிருக்கும் வாழ்வு முறை உண்மைக்கான தேடலை கிட்டத்தட்ட இல்லாமலே ஆக்கி, செய்திகளை உண்மைகள் பற்றியதாக இல்லாமல், வெறும் கேளிக்கை ஆக்கி விட்டிருக்கிறது.

இந்த சிந்தனை மாற்றத்தால் ஏற்பட்டிருக்கும், இன்றைய பாரம்பரிய ஊடகங்களின் நலிவு,

சமூக வலைத்தள ஊடகம் என்பது விருப்புக் குறிகளுக்கும் கண்மணிகளுக்குமான (eyeballs) போராட்டமாக இருப்பதற்கான காரணம், அதைப் பெரும் பணம் புரளும் வழியாகப் பயன்படுத்த முடியும் என்றாகி விட்ட பின்னால், பரபரப்பை ஏற்படுத்தி கவர்ந்திழுக்கக் கூடிய Clickbait தலைப்புகள் பொய்களை மட்டுமே பரப்புகின்றனவாக இருக்கின்றன. அதுதான் யூடியூப் பயில்வான்களின் பலமாக இருக்கிறது.

கையில் உள்ள செல்போனை மட்டுமே நம்பிய யூடியூபர்களுக்கு கிடைத்திருக்கும் நம்பகத்தன்மை, உயிரைப் பணயம் வைத்து செய்தி சேகரிக்கும் பாரம்பரிய ஊடகவியலாளர்களுக்கு இன்றைக்கு இல்லை.

இன்றைக்கு உண்மை என்பது அவசியமானதாக இல்லாமல், அவசர உலகின் நொறுக்குத் தீனிக் கேளிக்கையாகத் (Entertainment) தான் முடிந்திருக்கிறது.

உண்மையை அறிந்து கொள்வதற்காக அந்த ஊடகங்கள் உழைப்பையும் பணத்தையும் செலவிட முடியாமல் ஆக்கி விட்டிருக்கிறது.

சமூக வலைத்தளங்கள் மூலமாக குடிமக்கள் கையில் ஊடகங்கள் கிடைத்ததால் (Citizen journalism) செய்திச் சேகரிப்பு ஜனநாயகம் அடையும், முதலாளித்துவத்திற்குச் சேவகம் செய்யும் ஊடகங்களைக் கடந்து உண்மையை அறிந்து கொள்ளலாம் என்ற நம்பிக்கைகள் எல்லாம் தகர்ந்து விட்டன.

சமூக வலைத்தள ஊடகம் என்பது விருப்புக் குறிகளுக்கும் கண்மணிகளுக்குமான (eyeballs) போராட்டமாக இருப்பதற்கான காரணம், அதைப் பெரும் பணம் புரளும் வழியாகப் பயன்படுத்த முடியும் என்றாகி விட்ட பின்னால், பரபரப்பை ஏற்படுத்தி கவர்ந்திழுக்கக் கூடிய Clickbait தலைப்புகள் பொய்களை மட்டுமே பரப்புகின்றனவாக இருக்கின்றன. அதுதான் யூடியூப் பயில்வான்களின் பலமாக இருக்கிறது.

கையில் உள்ள செல்போனை மட்டுமே நம்பிய யூடியூபர்களுக்கு கிடைத்திருக்கும் நம்பகத்தன்மை, உயிரைப் பணயம் வைத்து செய்தி சேகரிக்கும் பாரம்பரிய ஊடகவியலாளர்களுக்கு இன்றைக்கு இல்லை.

இன்றைக்கு உண்மை என்பது அவசியமானதாக இல்லாமல், அவசர உலகின் நொறுக்குத் தீனிக் கேளிக்கையாகத் (Entertainment) தான் முடிந்திருக்கிறது.

அச்சில் வந்தால் உண்மையாகத் தான் இருக்கும் என்றிருந்தது, இன்றைக்கு வட்சப்பில் வருவது வரலாறாகி விட்டிருக்கிறது. திருநள்ளாறு கோயிலுக்கு மேல் சட்டலைட் பிரேக் அடிப்பதைக் கேள்விப்பட்டு, மேலே பார்த்து கன்னத்தில் போட்டுக் கொள்ள வேண்டியது தான்.

‘தென்னாடுடைய சிவனே போற்றி! எல்லா உலகும் கடந்த இறைவா போற்றி!

உபகோளை ஏவும் றொக்கட்டுக்கு மந்திரம் ஓதி, தேசிக்காய் நசிக்க வைத்து, ‘ராமாயணத்தில் ராக்கட்’ என்று வட்சப்பில் இன்னொரு ‘நம் முன்னோர்கள் ஒன்றும் முட்டாள்கள் இல்லை’ உண்மையைப் பரப்பலாம்.

புத்தகங்கள் எல்லாமே உண்மைகள் பற்றியதாக இருக்க வேண்டும் என்பதில்லை. புனைவுகளாகக் கூட இருக்கலாம். புனைவுகள் உண்மைகள் பற்றியதாக இருக்க வேண்டியதுமில்லை. கதை சொல்லல்களும் கவிதைகளும் உண்மைகளைக் கடந்து, வெறும் கற்பனைகளாகக் கூட இருக்கலாம்.

அவை பஸ்ஸில் வாசித்து விட்டு, அதிலேயே விட்டுச் செல்லும் வெறும் பொழுதுபோக்கு சஞ்சிகை போல இருக்க முடியுமா?

ஒரு புத்தகத்தை வாசித்து முடித்த பின்னால், அதில் takeaway என்று சொல்லக் கூடியது எங்களைப் பரவசப்படுத்துவது மட்டுமா? எங்கள் மனதில் எஞ்சி நிற்பது என்ன?

நூல்கள் எங்களைப் பரவசப்படுத்துவதுடன் நின்று விடுமாயின் அவை கணப்பொழுது சுகம் தரும் வெறும் பொழுதுபோக்குச் சிற்றின்பம் மட்டும் தான். அவை எங்கள் கற்பனைகளை விரிவுபடுத்துவதாக, மனதில் அழியாத நினைவுகளை விட்டுச் செல்வனவாக இருக்க வேண்டும்.

கதை சொல்லல்களும், கவிதைகளும் வரலாறுகளையும் வாழ்க்கை முறைகளையும் கற்பனை உலகங்களையும் எங்கள் மனக்கண்ணில் விரிய வைத்தால் அவை ஏற்படுத்தும் பரவசம் கணநேர சுகிப்புக்கும் அப்பாலானது.

புத்தகங்களை வாசிப்பதால் அறிவு வளர்ந்து விடுகிறதா?

ஸ்டீபன் ஹாக்கிங் எழுதிய The Brief History of Time என்ற புத்தகம் 25 மில்லியன் பிரதிகள் வரை விற்பனையான பெருவெற்றியடைந்த புத்தகம். அதை வாசித்தவர்கள் எல்லாம் இயற்பியல் விஞ்ஞானிகள் ஆகி விட முடியுமா? அது பெருவெற்றியடைந்த அதே அமெரிக்காவில் தானே டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக முடிகிறது?

இவ்வாறான புத்தகங்களால் கிடைக்கும் அறிவு பெரும்பாலும் துறை சார்ந்த அறிவுதான். அது வாசித்தவருக்குத் தனிப்பட்ட வகையில் பயன் அளிக்கக் கூடும். அந்த அறிவால் சில நேரம் சமூகம் பயன் பெறக் கூடும்.

ஆனால் புனைவுகள் புத்தகங்களாகும்போது, அவை கேளிக்கை என்பதற்கும் அப்பால், எங்கள் உலகங்களை விரிவுபடுத்த வேண்டும்.

**பேஸ்புக்கில் தாங்கள் வாசிப்பதாகப் படம் போடும் எவரும் தங்கள் அறிவு வளர்ச்சிக்கான புத்தகங்கள் எதையும் வாசிப்பதாகப் படம் போட்டதாக நான் கண்டதில்லை. பின்நவீனத்துவக் கவிதைகளும், கதைப் புனைவுகளும், மிஞ்சிப் போனால், விமர்சனங்களும் வெளிநாட்டுத் தத்துவ வியலாளர்களின் எழுத்துக்களும் தவிர்ந்து, அறிவு வளர்ச்சிக்கான எதையும், குறைந்த பட்சம் பி. சி.கணேசனின் 'வாழ்க்கையில் முன்னேறுவது எப்படி? எழுத்தாளராவது எப்படி?' களைக் கூட, இவர்கள் யாரும் வாசித்ததாகப் படம் போட்டதாகக் கண்டதில்லை. இந்த வாசிப்புகள் எந்த வகையில் இவர்களை வளர்த்திருக்கும்?**

நான் இத்தனை அறிவியல் புத்தகங்களை வாசித்தாலும், என்னை நான் ஒரு நிபுணனாக ஒரு போதும் கருதியதில்லை. ஆர்வத்தினால் வந்த தேடலில் கிடைத்த அறிவு எனக்கு ஏதோ வகையில் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது.

என்னுடைய வாசிப்புத் தான் யாழ்ப்பாணக் கிணற்றுக்கு வெளியேயான உலகங்களை எனக்குக் கொண்டு வந்தது. அது தான் என் தேடல்களை விரிவுபடுத்தியது.

பலர் எத்தனையோ புத்தகங்களை வாசித்த பின்னாலும், தங்கள் உலகங்களுக்குள் இருந்து இன்னும் வெளியால் வரவில்லை. அவர்களின் சிந்தனை அவர்களின் குழந்தைப் பருவங்களில் அவர்களின் மூளைகளுக்குள் திணிக்கப்பட்ட நம்பிக்கைகளில் இருந்து வெளியே வரவில்லை.

பேஸ்புக்கில் தாங்கள் வாசிப்பதாகப் படம் போடும் எவரும் தங்கள் அறிவு வளர்ச்சிக்கான புத்தகங்கள் எதையும் வாசிப்பதாகப் படம் போட்டதாக நான் கண்டதில்லை. பின்நவீனத்துவக் கவிதைகளும், கதைப் புனைவுகளும், மிஞ்சிப் போனால், விமர்சனங்களும் வெளிநாட்டுத் தத்துவ வியலாளர்களின் எழுத்துக்களும் தவிர்ந்து, அறிவு வளர்ச்சிக்கான எதையும், குறைந்த பட்சம் பி. சி.கணேசனின் 'வாழ்க்கையில் முன்னேறுவது எப்படி? எழுத்தாளராவது எப்படி? களைக் கூட, இவர்கள் யாரும் வாசித்ததாகப் படம் போட்டதாகக் கண்டதில்லை.

இந்த வாசிப்புகள் எந்த வகையில் இவர்களை வளர்த்திருக்கும்?

வாசிப்பு தேடல்களுக்கான உந்துதல் என்றால், வாசிப்பின் நோக்கமும் வெற்றியும் சிந்தனையைச் செழுமையடையச் செய்வது தான்.

நாங்கள் வாழும் உலகம் என்ற குமிழிக்குள் இருந்து, அதற்கப்பாலான உலகங்களைத் தேடும்போது, உண்மைகள் என்பது எங்கள் உலகங்களோடு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்று அல்ல என்ற உண்மை தெரிய வரும்.

உலகநீதி என்பது, ஊர், சாதி, இனம், சமயம், நாடு என்ற குறுகிய எல்லைகளுக்கு அப்பாற்பட்டது என்ற உண்மை உறைக்கும். எங்களுடைய இறுக்கமான விதிமுறைகள் அந்த உலகங்களில் செல்லாது என்பதும், அவை மூடத்தனமானவை, பகுத்தறிவின் பாற்பாட்டவை அல்ல, அவை பெருமைக்குரியதாயன்றி, அவமானத் திற்குரியவை என்பதெல்லாம் புரிய வரும். தன்னை உயர்ந்த சாதி என்று பீற்றிக் கொண்டு பெருமை கொள்பவரும் இன்னொரு உலகத்தில் தீண்டத்தகாதவராக இருந்து விடக் கூடும் என்பதெல்லாம் கிணறுகளைத் தாண்டிய உலகங்களைக் காணும்போது தான் தெரியவரும்.

புத்தகங்கள் இவ்வா றான உலகங்களைத் தரிசிப் பதற்கான வழிகளைத் திறந்து

அபத்தம்
வைகாசி 2024




விடுகின்றவையாகத் தான் இருக்க வேண்டும். அந்த உலகங்களுக்கு எங்களைச் சுமந்து செல்கின்றவையாக இருக்க வேண்டும். அந்த உலகங்களைக் கண்டடைவது எங்கள் அறிவை வளர்த்து, சிந்தனையை செழுமைப்படுத்துவதாகத் தான் இருக்க வேண்டும்.

வாசிப்பின் நோக்கம் அதுவாகத் தான் இருக்க முடியுமே தவிர, தன்னைப் பற்றி மற்றவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் ஏற்பட வேண்டும் என்பதற்காகப் பீற்றிக் கொள்ளும் ஒன்றாக இருக்க முடியாது.

வெறும் வாசிப்பினால் எந்த மனிதனும், (மனுஷியும் தான்!) பூரணம் அடைவதில்லை. அந்த வாசிப்பினால் அறிவில் வளர்ச்சியும், சிந்தனையில் செழுமையும் வரும்போது தான் ஒரு வாசகன் தன்னைக் குறித்துப் பெருமை கொள்ள முடியும்.

சங்க இலக்கியங்களை தோண்டியெடுத்து அகழ்வாராய்ச்சி செய்து, 'சங்க காலத்தில் சினைப்படுத்தல்' ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்து, டாக்டர்களான துறைசார் 'தமிழறிஞர்களை' விட, 'ஒலக எலக்கியம்' படிக்கும் இந்த நவீன இலக்கியக் கல்லாநிதிகள் எந்த விதத்தில் மேலானவர்கள்?

இத்தனை புத்தகங்களைப் படித்த பின்னாலும், அதே கிணற்றுத் தவளைச் சிந்தனைகளும், சுயசாதிப் பெருமையும், பிறசாதி வெறுப்பும் தான் மிஞ்சியிருக்கும், அவை தான் தன்னைப் பற்றிய அடையாளத்தின் பெருமையாக இருக்கும் என்றால்...

இத்தனை புத்தகங்களை வாசிப்பதும், வாசித்ததாகப் பீலா காட்டுவதும் வெறும் கோமாளித்தனங்களே.

புத்தக வாசிப்பே இந்த இலட்சணத்தில் இருக்கும்போது, மற்றவர்களின் திறமைகளில் பொறாமையும், சதா அங்கீகாரத்திற்கான வேட்கையும், அதற்காக ஆன்மாவையும் விற்கத் தயாராக இருப்பதும் தான் இருப்பின் நோக்கமாக, தன்னையே தான் அறியாமல், தங்களை ஏதோ மேலானவர்கள் என்ற நினைப்போடு இருக்கும், எங்கள் இலக்கியப் பிரகிருதிகளும், பெருந்தகைகளும், பீலாக்களும் என இந்த 'பெரிய நெனப்புப் பேராண்டிகள்' எல்லாம் புத்தகம் வேறு எழுதுகிறார்கள் என்னும் போது...

எழுதுகிறவர்களின் உலகங்களே கிணறுகளைத் தாண்ட முடியவில்லை எனில், இவற்றையெல்லாம் வாசிப்பவர்களின் சிந்தனையும் அறிவும் அந்தக் குட்டைகளுக்குள் தானே தேங்கியிருக்க முடியும்!?

புத்தகங்கள் பரிநிர்வாணம் அடைய வைக்க வேண்டுமே தவிர, வெறும் நிர்வாணங்களை வெளிக் காட்டுவதாக இருக்கக் கூடாது.

அ

ஆக்கங்களுக்கு ஆக்கியோர்களே பொறுப்பு. ஆயினும் அதைப் பிரசுரிப்பதற்கான பொறுப்புகளில் இருந்து அபத்தம் விலக மாட்டாது.

email: apaththam@gmail.com
www.thayagam/apaththam
www.facebook.com/apaththam

ஆசிரியர், வடிவமைப்பு
ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
Editor/Design
George R. Ckrhushchev

அபத்தம் வெளியிடுவதற்கான உழைப்பின் நேரத்தையும் அதன் பெறுமதியையும் உணர்ந்து கொண்ட நண்பர்கள் சில பலர், அதற்கு தங்களால் முடிந்த நிதியுதவி செய்ய வேண்டும் என்று தாங்களாகவே நினைத்து அதை மாதாந்தமோ, ஒரு தடவையாகவோ செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என் இதயபூர்வமான நன்றிகள் எப்போதும் இருக்கும்.

இனியும் யாராவது அதைச் செய்ய விரும்பினால், அபத்தத்தின் மின்னஞ்சல் முகவரிக்கு paypal மூலமாகவோ, வேறுவழியிலோ அனுப்பலாம். இது தாங்களாகவே விரும்பிச் செய்யும் செயற்பாடு. அதற்கான நிர்ணயிக்கப்பட்ட தொகையோ, நிர்ப்பந்தமோ எதுவும் இல்லை. விரும்பியவர்களும் முடிந்தவர்களும் தங்களால் இயன்றதைச் செய்யலாம். மற்றவர்கள் தொடர்ந்தும் அபத்தத்தை வாசித்து தங்கள் நண்பர்களுக்கும் அது குறித்துத் தெரியப்படுத்தியும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தும் தொடர்ந்தும் இதை வெளியிடுவதற்கான உற்சாகத்தைத் தரலாம்.




# அவுஸ்திரேலிய தமிழ் அகதிகள் கழக நினைவுகள் 3

**அவுஸ்திரேலியாவில் இருந்து சென்று விடுதலைப்புலிகளோடு வாழ்ந்து, பல வழிகளில் அவர்களுக்கு உதவிய அவுஸ்திரேலிய தமிழ் குடிமக்களை வெகு இலகுவாக வவுனியா அகதி முகாங்களிளிருந்து போர் முடிந்தபின் எந்த அரவமுமின்றி மீட்டதுடன், அவுஸ்திரேலியாவுக்கும் கொண்டுவந்து சேர்த்தார்கள்.**

இலங்கைத் தமிழ் அகதிகள் கழகமாக, அவுஸ்திரேலியாவில் நாங்கள் வேலை செய்த போது, அரசிற்கும் அகதிகளுக்குமிடையே நாம் தொடர்பாடலாக இருந்தது மட்டுமல்லாமல், அகதிகளுக்குத் தனிப்பட்ட ரீதியாக உதவல், அரசின் கொள்கையை அகதிகள் சார்பாக மாற்றுதல் என்பனவும் எமது வேலையாக இருந்தன. (Lobbying and advocating) ) இவை பற்றிய தெளிவான நோக்கம் அப்போது எமக்கு இருந்தது. இந்த விஷயத்தில், அரசு பற்றிய அறிவைப் பெற நாங்கள் அரசு பிரதிநிதிகளுடனும், ஏனைய அரசாங்கத்தின் திணைக் களத்திலுள்ளவர்களுடனும் சேர்ந்து நாம் வேலை செய்யவேண்டும்.

அரச இயந்திரத்தில் பல பகுதிகள் உண்டு. அத்துடன் பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆலோசகர்களுக்கும் இதில் பங்குண்டு. அவுஸ்திரேலிய அரசின் வெளி விவகாரக் கொள்கையில் வணிகம், பாதுகாப்பு என்பன முக்கிய பங்கு வகிக்கும். இவற்றுக்குப் பங்கம் வராமலே ஜனநாயக அரசின் மற்றைய விடயங்கள் தீர்மானிக்கப்படும்.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவிற்கும் தொடர்பு உள்ளது. கொழும்புத் திட்டம் மற்றும் பொது நலவாய அமைப்பு என்பன நிரந்தரமான இணைப்புக்கள்.

**நோயல் நடேசன்**

இதனால் அவுஸ்திரேலிய அரசு, இலங்கையிலிருந்து வருபவர்களை ஒட்டுமொத்தமாக அரசியல் அகதிகள் எனப் பிரகடனப்படுத்தி, அகதி அந்தஸ்து வழங்கினால், இரு நாட்டுகளுக்குமான அரச தொடர்புகள் பாதிக்கப்படும். இதனால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கிறோம் அல்லது ஏற்கனவே அவுஸ்திரேலியாவில் வசிப்பவர்களது உறவினர்களுக்கு விசேட கவனிப்பு கொடுக்கிறோம் என்று பல கோணத்தில் செயல்படுவார்கள்.

இப்படியான வகைகளில் அரச உறவுகள் பேணப்படும்போது, பிற்காலத்தில் அவை பல வழிகளில் எமக்கு உதவும். உதாரணமாக அவுஸ்திரேலியாவில் இருந்து சென்று விடுதலைப்புலிகளோடு வாழ்ந்து, பல வழிகளில் அவர்களுக்கு உதவிய அவுஸ்திரேலிய தமிழ் குடிமக்களை வெகு இலகுவாக வவுனியா அகதி முகாங்களிளிருந்து போர் முடிந்தபின் எந்த அரவமுமின்றி மீட்டதுடன், அவுஸ்திரேலியாவுக்கும் கொண்டுவந்து சேர்த்தார்கள். இந்த

உண்மைச் சம்பவத்தை மனத்தில் வைத்தே கானல் தேசத்தின் கதாநாயகி ஜெனி செய்ததாக எழுதினேன்.

அரச கொள்கைகளை மாற்றுவதென்பது, ராட்சத எண்ணைக் கப்பலை, போன பாதையில் நேர் கோட்டில் (180 பாகையில்) மீண்டும் திருப்புவது போன்ற விடயமாகும். இதற்கு ஒழுங்காகத் தொடர்ச்சியாக வேலை செய்ய வேண்டும். இதை நாங்கள் சேவையாகச் செய்த போதும் பலர் பணம் பெற்றும் செய்தார்கள். இவர்களே பெரிய தொழில் நிறுவனங்களுக்காக லொபியிஸ்ட்டுகளாக (Lobbyist) வேலை செய்பவர்கள்.

இதில் முக்கியமானது, அரச மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற அங்கத்தினர் என இரண்டு பகுதியோடும் வேலை செய்ய வேண்டும். தனிப்பட்டவர்கள், கட்சிகள் என ஜனநாயக அரசியலில் எதுவும் நிரந்தரமில்லை. நான் அகதிகள் கழகத்தில் வேலை செய்த காலத்தில் அவுஸ்திரேலிய அரசில், தொழிற்கட்சியினர் பதவியிலிருந்தார்கள். அவர்களுடன் நெருங்கிப் பழகுவதற்கு நானும் தொழிற்கட்சி அங்கத்தவர் ஆனேன்.

எனக்கு அரசியலில் எந்தப் பதவியையும் அடையும் நோக்கம் இருக்கவில்லை, என்பதுடன் எந்த ஒரு அரசியல் கட்சியிலுமிருந்து விலகி இருப்பது நல்லது எனவும் நினைப்பவன். ஆனாலும் இந்த அகதிகள் கழக வேலைக்காக நான் தொழிற்கட்சியில் சேர்ந்து தொடர்ந்து அங்கத்தவராக பதினைந்து வருடங்கள் இருந்தேன். தொழிற்கட்சி அங்கத்துவம் ஆரம்ப காலத்தில் அகதிகளுக்கான பிரசார வேலைக்கு உதவியதுடன் பிற்காலத்தில் உதயம் நடத்தும் போது கர்ணனின் கவச குண்டலம்போல ஒரு பாதுகாப்புக் கவசமாக இருந்ததென்பதுவும் உண்மை. உதயம் பத்திரிகையை நிறுத்திய பிற்காலத்தில் தொழிற்கட்சிக்கு, அங்கத்துவப் பணத்தை நான் செலுத்தவில்லை.

> என்னைத் துரோகி என விடுதலைப்புலிகள் தங்கள் ஈழநாடு பத்திரிகையில் எழுதினார்கள். அவர்கள் என்னைத் துரோகி என முத்திரை குத்தியபோது, 'துரோகி' என முத்திரை குத்தியவர்களை புலிகள் பிற்காலத்தில் கொலை செய்வது வழக்கம், என்று அவர்களுக்கு ஒரு ஆட்சேபக் கடிதமொன்றை, இலங்கையைச் சேராத வழக்குரைஞர் மூலம் எழுதியதுடன், அந்தக் கடிதத்தின் பிரதியை அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் அனுப்புவேன் எனவும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரைப் பயமுறுத்தியபோது, அவர்கள் என்னிடம் மன்னிப்புக் கேட்டார்கள். தொழிற்கட்சி அங்கத்தினராக இருந்ததால் எனது அரசியல் கருத்துக்கு மதிப்பு அதிகம் என்பது அவர்களது குறைந்தபட்ச அறிவுக்கு அக்காலத்தில் தெரிந்திருந்தது.

இதேவேளை என்னைத் துரோகி என விடுதலைப்புலிகள் தங்கள் ஈழநாடு பத்திரிகையில் எழுதினார்கள். அவர்கள் என்னைத் துரோகி என முத்திரை குத்தியபோது, 'துரோகி' என முத்திரை குத்தியவர்களை புலிகள் பிற்காலத்தில் கொலை செய்வது வழக்கம், என்று அவர்களுக்கு ஒரு ஆட்சேபக் கடிதமொன்றை, இலங்கையைச் சேராத வழக்குரைஞர் மூலம் எழுதியதுடன், அந்தக் கடிதத்தின் பிரதியை அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் அனுப்புவேன் எனவும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரைப் பயமுறுத்தியபோது, அவர்கள் என்னிடம் மன்னிப்புக் கேட்டார்கள். தொழிற்கட்சி அங்கத்தினராக இருந்ததால் எனது அரசியல் கருத்துக்கு மதிப்பு அதிகம் என்பது அவர்களது குறைந்தபட்ச அறிவுக்கு அக்காலத்தில் தெரிந்திருந்தது.

இப்பொழுது நான் எழுத வந்த விடயம் அதுவல்ல. அகதிகளுக்காக வேலை செய்யும் போது அவர்களுக்கு வேலை செய்யும் வழக்குரைஞர்களோடு பழக்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாது.

அப்படிப் பலர் எனக்குப் பரிட்சியமானார்கள். சிலர் நண்பர்களானார்கள். அக்காலத்தில் நடந்த ஒரு சம்பவத்தை விவரிக்கவே இதை எழுதுகிறேன்.

அமைப்பின் செயலாளராக நான் இருந்த காலத்திலே, பொக்சில் நகரமண்டபத்தில் ஒரு இரவு விருந்தை நடத்தி, அதற்கு அவுஸ்திரேலிய அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளை அழைக்கவேண்டுமென செயற்குழு முடிவு செய்தது. இதற்காக ஒரு மலர் அடிப்பதென முடிவுசெய்யப்பட்டு அதற்கு விளம்பரம் சேர்க்கும் பொறுப்பு என்னிடம் விடப்பட்டது.

இதற்காக நாங்கள், எங்கு போகமுடியும்?

தமிழர்கள் வைத்திருக்கும் கடை முதலாளிகளிடமும் அவர்களுக்கு விண்ணப்பங்கள் தயாரிக்கும் தமிழ் வழக்குரைஞர்களிடமும் போனோம்.

அப்போது ஒருவரிடம் ஏற்பட்ட அனுபவத்தையே இங்கு எழுதுகிறேன்.

அந்த வழக்குரைஞரை கறுப்புசாமி என்ற புனைபெயரில் அழைப்போம்.

அவர் பேசும்போது, கல்லெறிந்து உடைந்த, தேனடையிலிருந்து விழும் துளித்தேனாக வாயிலிருந்து வார்த்தைகள் ஒழுகும்.

'தம்பி, எங்களை விட்டா உங்களுக்கு யார் உதவுவார்கள்? நீங்கள் எப்போதும் எங்களிடம் வரலாம்' என்பார்.

விலங்குகளுக்கே மருத்துவம் செய்யும் எனக்கு அவரது கதையில் உள்ள செயற்கைத் தன்மை தெரிந்தாலும், பரவாயில்லை மனுசன் உதவுவதாகச் சொல்லுகிறார். அதில் மயிர் பிரிப்பது நல்லதல்ல என நினைத்தேன்.

அவரிடம் விளம்பரம் கேட்ட காலத்தில் அவர் சிட்னியில் வேலை செய்தார். எனக்கு விடுமுறையான நாளொன்றில் அவரைத் தொடர்பு கொண்டேன்

'நாங்கள் அகதிகள் கழகத்தால் விருந்து நடத்துகிறோம், அதன் பொருட்டு ஒரு மலர் வெளியிடுகிறோம். உங்களால் ஒரு விளம்பரம் தரமுடியுமா? எனக்கேட்டேன்.

'ஐயோ தம்பி, உங்களுக்கு இல்லாமலா, நான் நான் வார விடுமுறையில் வந்தபின் வீட்டுக்கு தொலைப்பேசி அழையுங்கள்' என்றார்.

பின்பு காத்திருந்து, வார விடுமுறையில் அவரது வீட்டுக்குத் தொலை பேசியில் அழைத்தபோது. 'உங்களுக்குத் தராமல் யாருக்கு தரப்போறம்? அவ கடைக்குப் போய்விட்டா. அவவிட்ட கேட்டு சொல்லுகிறேன்' என்றார்.

அவரது மனைவியாரும் வழக்குரைஞர் என்பதால் அவர் சொல்வது சத்தியமானது என நினைத்தேன். அதன்பின்னர், வேலைப் பழுவில் மீண்டும் தொடர்பு கொள்வோம் என்ற நினைப்பில் கறுப்புசாமியை மறந்துவிட்டேன்.

அந்தக் காலங்களில் அகதிகளுக்காக வேலை செய்ததுடன் அரசியலும் செய்தோம். அந்தக் கூட்டத்திற்குப் பல அமைச்சர்களை அழைத்தோம். அத்துடன் எதிர்க்கட்சியைச் சேர்ந்த இருவரையும், செயலாளர் என்ற முறையில் நானே அழைத்தேன்

இக்காலத்தில் அவுஸ்திரேலியாவின் எதிர்க்கட்சியான நாசனல் கட்சியியின் தலைவர் ரிம் ஃபிசர் (Timothy Fisher) வெளிநாட்டிலிருந்து வருபவர்களின் எண்ணிக்கையை ஒரு கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்று பேசியவர். அவரது பேச்சின் தொனிப்பொருள் அரசிலுள்ள தொழிற்கட்சிக்கு எதிரானது. அந்த விடயம் தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகளில் விவாதிக்கப்பட்டது

பெரும்பாலான விளம்பரங்களைச் சேகரித்து விட்டேன். ஆனாலும் எமது கறுப்புசாமி அப்பேது நினைவுக்கு வந்ததால், மலர் அச்சுக்குப் போவதற்கு முன்பு ஒரு நாள், அவரைத் தொலைப்பேசியில் தொடர்பு கொண்டேன்.

**எப்பொழுது கருப்புசாமி இறங்குவார் எனக் காத்திருந்து நேரத்தைப் பார்த்தபடியிருந்தேன். அவரது வாயிலும் கையிலும் பசை போட்டதுபோல் அந்த ஒலிவாங்கி ஒட்டிவிட்டதோ என நினைத்தபடி எனக்கருகே இருந்த எதிர்க் கட்சி அங்கத்தினர் இருவரிடமும் ''அவரது கருத்து எங்கள் கழகத்தின் கருத்து அல்ல' என்றேன். அவர்கள் நாகரிகமாக ''உண்மை, அது அவரது கருத்து' என்றார்கள்.**

அப்பொழுது அவர் 'மன்னிக்கவும் இந்த முறை எங்களை மிஸ் பண்ணுங்கள். அடுத்தமுறை கட்டாயம் விளம்பரம் தருவோம்' எனத் தனது மனக்கவலையை வாக்கியமாக்கி நீட்டி நெளித்து வளைத்தார்.

விளம்பரம் தருவதோ அல்லது நிராகரிப்பதோ அவரது உரிமை. என்றாலும் என் மனதில் அவரது செய்கை கடுப்பாக இருந்தது என்ற உண்மையை மறைக்க முடியாது.

இரவு விருந்தும் வந்தது.

அமைச்சர்கள், பாராளுமன்ற அங்கத்தினர், எதிர்க் கட்சியிருந்தது நான் அழைத்த வேட்பாளர்கள் உட்படப் பலர் வந்தார்கள். அத்துடன் கறுப்புசாமியும் அந்த விருந்துக்கு வந்திருந்தார்

எல்லோரையும் நான் அழைத்ததால், நான் பம்பரமாகச் சுழன்று வரவேற்றேன். அதிலும் முக்கியமாக எதிர்க்கட்சியினரை அக்கறையாகக் கவனித்தேன். காரணம் குறுகிய காலத்தில் வரவிருக்கும் அடுத்த தேர்தலில் அவர்கள் தெரிவானால் எங்களுக்கு அவர்களின் ஆதரவு முக்கியம் என்பதே. இது எனது பச்சையான சுயநலமான நோக்கம்தான்!

அந்த விருந்துக்கு வழக்குரைஞர் ரவீந்திரன் வந்திருந்தார். அவர் எங்கள் கழகத்தின் ஒரு ஆலோசகராக இருந்தார். அவரும் மேடையில் பேசினார்.

பேச்சாளர்கள் பேசி முடிய, விருந்துக்கு முன்பாக ஒரு அதிர்ஷ்டலாபச் சீட்டை விற்று, அதன் மூலம் பணம் திரட்டவும் எண்ணியிருந்தோம். ஏற்கனவே வழக்குரைஞர் ரவீந்திரனுக்கு மேடை கொடுத்தோம் என்ற காரணத்தால் அந்த அதிஷ்ட்ட லாபச் சீட்டை எடுக்க, கருப்பு சாமியை மேடைக்கு அழைத்தேன்.

கறுப்புசாமி சீட்டை எடுத்துவிட்டு மேடை விட்டு இறங்குவதற்குப் பதிலாகத் தொழிற்கட்சித் தலைவர் ரிம் ஃபிசரின் பேச்சைக் கண்டித்தார். ஓரிரு வசனங்கள் பேசிவிட்டுப் போவதற்கு மனிதன் தயாரில்லை. கட்டபொம்மன் படத்தில் சிவாஜிபோல, ஆங்கிலத்தில் எதிர்கட்சியினரை தெருவுக்கு இழுத்து, தெருநாய்க்கு ஊரில் அடிப்பதுபோல் வாய் வார்த்தைகளால் மனிதன் கடித்தார்.

பாவம் ரிம் ஃபிசர் என்ற கவலை எனக்குத் தொற்றியது

என்னால் என்ன செய்யமுடியும் ?


எப்பொழுது கருப்புசாமி இறங்குவார் எனக் காத்திருந்து நேரத்தைப் பார்த்தபடியிருந்தேன். அவரது வாயிலும் கையிலும் பசை போட்டதுபோல் அந்த ஒலிவாங்கி ஒட்டிவிட்டதோ என நினைத்தபடி எனக்கருகே இருந்த எதிர்க் கட்சி அங்கத்தினர் இருவரிடமும் 'அவரது கருத்து எங்கள் கழகத்தின் கருத்து அல்ல' என்றேன்.

அவர்கள் நாகரிகமாக 'உண்மை, அது அவரது கருத்து' என்றார்கள்.

கடற்கரையில் கஸ்டப்பட்டு சிறுவர்கள் வீடு கட்ட, ஒருவர் வந்து காலால் உடைத்தால், அந்த சிறுவர்களது மனநிலை எப்படியிருக்கும்?

இதன் பின்னர் கருப்புசாமியை எங்கு கண்டாலும் பலகாத தூரம் சென்று விடுவேன். நேர் எதிரில் வரும்போது மட்டும் சிரிப்புடன் விலகிவிடுவேன். அ

# பற்றாக்குறை ஜன்மங்களின் விசித்திர மன உளைச்சல்கள்



சஞ்சயன் செல்வமாணிக்கம்

*1984 என்று நினைக்கிறேன். இலங்கையின் முக்கிய புகையிரதச் சந்தியான மாகோவில் ஓரிரவை முழுமையாகக் கழிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன். மறுநாள் முன் மதியம்தான் மட்டக்களப்பிற்கான புகையிரதம் வரும்.*

*இரவு 10 மணியிருக்கும். மாகோச் சந்தியில் இருந்த சிற்றுண்டிச்சாலையில் தேநீர் வாங்கிய பின் மிகுதிப் பணத்தை எண்ணிப்பார்த்தேன். மறுநாள் தேநீருக்கும் காலையுணவிற்கும் போதுமாயிருந்தது.*

*மழை சிணுங்கியபடியிருக்க பயணிகள் வண்டிகள், சரக்கு வண்டிகள் வந்து போயின. சிற்றுண்டிச்சாலை அலுத்தது. வெளியே நின்றேன்.*

*புகையும் அடுப்புப் போன்று சற்றுத் தள்ளி ஒருவர் பீடியின் புகையை வெளியே ஊதிக்கொண்டிருந்தார். மாலையில் இருந்து அவரும் அங்கேதான் நின்று கொண்டிருக்கிறார். அவருக்கு 50 வயதிருக்கும். அதற்கு மேலுமிருக்கலாம். முகத்தில் சில நாட் தாடி.*

*‘மட்டக்களப்பு ரயிலுக்காகவா நிற்கிறாய்?’*

*ஆம் என்று தலையாட்டினேன்.*

*‘இரவு இங்குதான் தங்க வேண்டும்போல‘*

*அதற்கும் தலையாட்டினேன்.*

*இலங்கையெங்கும் பதற்றங்கள் உச்சமடைந்திருந்த நாட்கள். கைதுகளும் கொலைகளும் சாதாரணமானவை. பெரும்பான்மை யாகச் சிங்கள மக்கள் வாழும் இடங்களில் அறிமுகமில்லாதவர்கள் இரவில் நடமாடுவது மிக ஆபத்தாக இருந்த காலம். சிங்கள நண்பர்கள் இருந்தமையினால் எனக்குச் சிங்கள மொழி நன்கு தெரிந்திருந்தாலும் காலச் சூழ்நிலை சாதகமாக இருக்கவில்லை.*

*அப்போது, ஆங்கிலேயக் காலத்துச் வெள்ளைச் சீருடையில் அங்கு வந்த புகையிரதநிலைய அதிகாரி, ‘இரவு நீங்கள் இங்கு தங்கியிருக்கும்போது போலீசார் வந்தால் நீங்கள் கைது செய்யப்படுவீர்கள்‘ என்றுவிட்டு நகர்ந்தார்.*

*எவரையும் இந்த ஊரில் அறியேன், எங்கு யாரிடம் போவேன் என்று சிந்தித்துக் கொண்டிருந்தபோது புகையிரத நிலையத்தின் சிற்றூழியர் ஒருவர் சாக்கு ஒன்றினை தலையில் போட்டபடி கையில் லாம்புடன் வந்துகொண்டிருந்தார். எம்மை அண்மித்த அவர் சிங்களத்தில் உரையாடியபோது ‘இங்கு தங்கியிருக்க வேண்டாம். நேற்று இரவு நால்வரைக் கைது செய்தார்கள். எனது வீட்டில் தங்கியிருக்கலாம் வாருங்கள்‘ என்று அழைத்தார்.*

*பீடி புகைப்பவரைக் காண்பித்து ‘இவரும் தனியே நிற்கிறார். அவரும் வந்தால் சிரமாக இருக்குமா?’ என்று நான் கேட்டபோது ‘அதிலென்ன பிரச்சனை‘ என்று கூறி நடந்தார். நான் அவர் பின்னால் நடக்கத்*

தொடங்கினேன். பீடி மனிதர் அசையவில்லை.

'எனக்குப் பயமாயிருக்கு. உங்களை நம்ப ஏலாது. நீங்க போங்க' என்றுவிட்டு மற்றையதொரு பீடியைப் பற்ற வைத்துக் கொண்டு எங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மழை வலுக்கத் தொடங்கியிருந்தது. லாம்பின் வெளிச்சத்தில் தண்டவாளங்களின் நடுவே நடந்து கொண்டிருந்தோம். புகையிரத எண்ணெய் படிந்திருந்த சிலிப்பர் கட்டைகள் வழுக்கத் தொடங்கின. நான் சிலிப்பர் கட்டைகளைத் தவிர்த்துக் கருங்கற்களில் கால்வைத்து நடந்து கொண்டிருந்தேன். திடீர் என எனக்குப் பின்னால் யாரோ நடப்பதுபோன்று தோன்றியதால் திரும்பிப் பார்த்தேன். இருட்டில் பீடி புகைந்துகொண்டிருந்தது.

'தம்பி, உனக்குப் பயமில்லையா' என்றார் பீடி மனிதர்.

'என்னத்துக்கு?' என்றேன். அமைதியானார்.

இருண்டு கிடந்த தென்னந் தோப்பொன்றின் ஊடாக அரை மணிநேரம் நடந்து வந்து ஒரு கொட்டிலை அடைந்தோம். 'வெளியே கிடங்கு இருக்கிறது. அதுதான் எனது தண்ணீர்க் கிடங்கு, கவனம் விழுந்து விடாதீர்கள்' என்றார் லாம்புடன் வந்தவர்.

களிமண் தரை, தென்னங் கிடுகால் வேயப்பட்ட குடிசை. லாம்பு வெளிச்சத்தைத் தவிர வேறு வெளிச்சமும் இல்லை. படுப்பதற்குப் பிய்ந்துபோன ஒரு சாக்குக் கட்டில் அடுப்பங்கரையில் சில பாத்திரங்கள் ஒரு குடத்தில் நீர் வாசலுக்கு அருகே ஒரு கம்பியில் சில உடைகள் அவை மட்டுமே குடிசையினுள் இருந்தன.

வெளியில் மழை. உள்ளே மழையின் பிசுபிசுப்புடன் மழைத்துளிகள் ஓலையில் மோதி ஓயும் ஒலி கேட்டுக்கொண்டிருந்தது.

'மல்லி, பொனவாத?' (தம்பி குடிப்பாயா?) என்று ஒரு போத்தலை நீட்டினார். 'இல்லை' என்று சிங்களத்தில் கூறினேன். பீடிமனிதர் 'தம்பி நான் குடிப்பேன்' என்றார். வாங்கிக் கொடுத்தேன். போத்தலை அப்படியே இறக்கினார்.

சற்று நேரத்தில் அவர்களுக்குச் சுருதி சேர்ந்தது. எனக்குப் பசித்தது. குடத்தில் இருந்து நீர் அருந்தினேன்.

பீடி மனிதர் இப்போது தமிழில் உரையாடத் தொடங்கியிருந்தார். மற்றையவரும் சிங்களத்தில் உரையாடினார். நான் காலை நீட்டிப் படுத்துக்கொண்டேன்.

மறுநாள் அதிகாலை அவரிடம் இருந்த ஒரே ஒரு நெளிந்த அலுமினியத் தேநீர்க் குவளையில் மாறி மாறித் தேநீர் அருந்தினோம். அந்தச் சிங்களவரும் எம்மைப்போன்று காலையுணவு அருந்தவில்லை. உண்பதற்கும் அங்கு உணவேதும் இருக்கவில்லை. மீண்டும் தென்னந்தோப்பினுள்ளால் நடந்து தண்டவாளத்தை அடைந்தபோது விடிந்திருந்தது.

கடந்து விட்ட நான்கு தசாப்தங்களில் இந்தச் சம்பவத்தைப் பல தடவைகள் நினைத்துப் பார்த்ததுண்டு. வசதியும் வாய்ப்பும் இருந்த புகையிரதநிலைய அதிகாரி எதுவுமே செய்ய முன்வரவில்லை. ஆனால், அந்த சிங்கள மனிதரிடம் பகிர்ந்துகொள்வதற்கு ஒரு குடிசை, ஒரு பாய், ஒரு குடம் நீர், கொஞ்சம் கள்ளைத் தவிர வேறு எதுவும் இருக்கவில்லை.. ஆனால், மொழி, இனம், மதம் வேறுபட்ட இருவரை எதுவித சங்கடமுமின்றித் தன் வீட்டிற்கு அழைத்துச்செல்லும் மனிதம் நிறைந்த மனம் இருந்திருக்கிறது.

கிருஸ்ணன் நம்பியின் 'எக்ஸென்ட்ரிக்' என்னும் ஆங்கிலச் சொல்லைத் தலைப்பாகக் கொண்ட கதை பெயரைப்போலவே விசித்திரமானது.

நேர்மையான கொள்கையாளராக வாழும் ஒரு சாதாரண குமாஸ்தா (இலிகிதர்) ஒருவருக்குச் சம்பள நாள். அவர் வீட்டில் இருந்து புறப்படும் போதே தான் 'ஆயிரம்பேருக்கு பதில் சொல்லவேண்டும்' என்று மனைவி நினைவூட்டி அனுப்புவார்.

சம்பளத்தைக் கையில் வாங்கும்வரை வாழ்க்கை, செலவுகள், அவரது அலுவலகத்தை, மேலாளரைப்பற்றிப் பேசும் அவர் மனது அந்த புத்தம் புதிய 80 ரூபாய்களை வாங்கியபின் மாறிப்போகிறது.

கைக்குழந்தைக்கு மருந்து வாங்குவதற்குப் பணமின்றித் தாலியை விற்கும் வறுமையான நிலையில் வாழும் அவரைத், தனது வறுமையை மறந்து, தனது முழுச்சம்பளத்தையும் கொண்டு வேறு பலரை மகிழ்வித்துப் பார்க்கும் மனநிலைக்கு இட்டுப்போகிறது. அதை நடத்தியும் பார்க்கிறார்.

சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு வரும்போது ஒரு செல்வந்தரை அவரது மோட்டார் வாகனத்தில் காண்கிறார். அதன் காரணமாக தானும் ஒரு செல்வந்தராகுவதாகவும் மனைவியை விலையுயர்ந்த புடவை நகைகளுடன் அழைத்துப் போவதுபோலவும் நினைக்கும் அவர் இப்படி அந்தக் கற்பனையை முடித்திருப்பார்.

'பற்றாக்குறை ஜன்மங்களின் மன உளைச்சலுக்கு இம்மாதிரிக் கனவுகள் ஒரு டானிக்'

நானும் அவரைப்போல் பல சந்தர்ப்பங்களில் கனவு கண்டிருக்கிறேன். அவர் சொல்லும் அந்த 'டானிக்' உண்மைதான்.

எதிலும் பற்றாக்குறை இருந்தால் தானா வாழ்வுமீதான ருசி இருந்துகொண்டே இருக்கும் என்ற மனநிலைக்கு வந்துவிட்டேன் நானும். நினைப்பதெல்லாம் கிடைத்துவிட்டால் ஏதாவது ருசிக்குமா என்ன?

தனது வாழ்வின் இயலாமையை நினைத்தபடி அந்த செல்வந்தரிடத்தும் அவரது நாயிடமும் படகு போன்ற அவரது வாகனத்திலும் பொறாமை கொண்டபடி கோப்பி குடிப்பதற்காக ஒரு சிற்றுண்டிச்சாலைக்குள் நுழைவார்.

இனித்தான் கதையே.

'அதிஸ்டம் என்னும் விபத்துத் தனக்கு ஏற்படாது' என்று நினைத்தபடியே சம்பள நாளை மகிழ்வாக வாழ்ந்து விட முயற்சிப்பார். அவரிடம் சம்பளமாகக் கிடைத்த எண்பது

ரூபாய் இருக்கும்.

சிற்றுண்டிச் சாலைக்குள் நுழையும்போது வறுமையில் வாடும் ஆனால் அவருக்கு சற்று அறிமுகமான மூட்டைதூக்கிப் பையனான முத்தையா வெளியே நின்றிருப்பான். 'காப்பி சாப்பிட வரயா?' என்று கேட்கும் போது பலமாக ஆச்சர்யப்படும் அவனை உள்ளே அழைத்துப் போவார்.

அவர்கள் போட்டி போட்டு உண்பார்கள். 'மூட்டைதூக்கும் பையனைப்போல் அவரால் உண்ண முடியவில்லை' என்கிறார். இந்த ஒரு கூற்றே பல கதைகளை எனக்குள் உருவாக்கிவிட்டது. மூட்டை தூக்கிகளின் வாழ்வு மிகவும் வலிமிக்கது. பசி அவர்களை கலைத்துக் கொண்டே இருக்கும். அவர்களது பசியை யாரும் பெரிதாக கணக்கிலெடுப்பதோ, கண்டுகொள்வதோ இல்லை.

தினமும் ஒரே ஒரு கோப்பியைத் தவிர வேறு எதையும் உண்ணாத ஒரு மனிதர், இன்று தடபுடலாக இன்னொருவருக்கும் உணவு வாங்கிக்கொடுப்பதைக் கண்ட பரிசாரகர் இவரிடம் 'என்ன விசேசம்?' என்னும்போது அவருக்கும் ஒரு ரூபாய் டிப்ஸ் கொடுப்பார். அந்தக் காலத்தில் அது தினக்கூலியான ஒருவருக்குப் பெரிய காசு.

உண்டபின் 'பீடி ஒன்று வாங்கித் தாருங்கள்' என்னும் முத்தையாவுக்கு, இரண்டு சிகரட்டுக்கள் வாங்கிக் கொடுப்பார். அது போதாது என்று, அவன் சினிமா பார்ப்பதற்கும் ஒரு ரூபாய் கொடுப்பார்.

ஒரு புதிய டாக்ஸியை வரவழைத்து ஏறிக்கொள்வார். கடற்கரைக்குச் சென்று பிச்சைக்காரர்களுக்குப் பிச்சை போடுவதும் அப்போது அவர் தனது மற்றும் பிச்சைக்கார்களது மனநிலையை விபரிக்கும் விதமும் தனி ரகம்.

டாக்ஸியில் சென்று முதல் வகுப்பில் இருந்து படம் பார்த்துவிட்டு வந்து, சாரதியிடம், வாழ்க்கையின் சந்தோசங்களை இன்றே அனுபவித்து முடிக்கவேண்டும் என்பார்.

கள்ளச் சாராயத்தையும் பாலக்காட்டுப் பெண் ணொருத்தியையும் அறிமுகப் படுத்துவார் சாரதி.

கள்ளச்சாராயம் விற்கும் சோமுவிடம் இருந்து ஒரு போத்தலை வாங்கிச் சாரதியிடம் 'குடி' என்பார். முழுவதையும் குடித்தபின் அவர் முகத்தில் தோன்றும் மயக்கமான மகிழ்ச்சி இவரை மகிழ்விக்கும். மனம் நெகிழ்ந்து போவார். இவருக்குக் கண்கலங்கும். சாராயத்திற்கான பணத்தினை வீசி எறியும் மனநிலை பெரும் உளவியலைப் பேசுகிறது.

'சரி; வா, அந்தப் பாலக்காட்டுப் பெண்ணிடம் செல்வோம்' என்பார். டாக்ஸியில் அவளிடம் செல்வார்கள் இருவரும். அவளைக் கண்டதும் அவளுடம்பின் மதமதப்பில் சாரதியும் இவரும் சொக்கிப்போவார்கள்.

சாரதி 'அவளின் விலை இருபது ரூபாய்' என்றபோது; இவர் அவளிடம் போகப்போகிறார் என்றுதான் நினைத்தேன். ஆனால், சாரதியிடம் 20 ரூபாய்களைக் கொடுத்துவிட்டு 'நான் காரில் காத்திருக்கிறேன். சீக்கிரம் வந்துவிடு' என்று சொல்லும் போது சாரதியின் மகிழ்ச்சி இவரை நெகிழவைக்கும்.

இப்படி எழுபது ரூபாய்களைச் செலவழித்துவிட்டு வந்து மிகுதி பத்து ரூபாயைத் தேடும்போது அது தொலைந்து விட்டிருக்கும். 'அற்ப புத்திக்குச் சரியான தண்டனை. அதை மிகுதிப்படுத்தச் சிந்தித்ததற்கான தண்டனையாகத்தான் அது தொலைந்திருக்கிறது' என்று நினைப்பார். வீடு வந்ததும் மனைவி சம்பளம் எங்கே என்பார். சர்வ சாதாரணமாக 'நாளைக்கு' என்பதுடன் கதை முடிகிறது.

சாதாரணமாகப் பார்த்தால் எதுவுமே இல்லாத ஒரு கதைதான். ஆனால் ஒவ்வொரு சம்பவத்தையும் உடைத்து உடைத்துக் கதாபாத்திரங்களின் மனநிலைகளை ஆராயும்போது, ஒரு கதை பல கதைகளாக விரிந்து செல்வது மட்டுமல்ல, தன்னைப் போன்ற வறுமையானவர்களை, ஒரே ஒரு நாள் தன்னாலான விதத்தில் மகிழ்வித்து, அவர்களின் மகிழ்வில் மகிழும் ஒரு மனிதனின் கதையைத் தான் கிருஸ்ணன் நம்பி இந்தக் கதையில் எழுதியிருக்கிறார்.

கதையை வாசித்து முடிந்தபோது 'அய்யோ, நாளைக்கு மனிதர் மனைவிக்கு என்ன சொல்லப்போகிறார்? அவருடைய இந்த மாத வாழ்வு எப்படி இருக்கும்? என்றெல்லாம் மனது யோசனையில் இருந்துபோதுதான் கதையின் கருவே 'மற்றையவர்களை மகிழ்விப்பதே வாழ்வு' என்பது புரிந்தது.


இந்தக் கதையை இரண்டு நாட்களுக்குள் மூன்று முறை வாசித்துவிட்டேன். எழுத்தின் வேகம், மொழியாடல், கதைகளுக்குள் இருக்கும் கிளைக்கதைகள், மனிதர்களின் உளவியல், வறுமையானவர்களின் எதிர்பார்ப்புகள் மனநிலைகள் என்று மனம் கிருஸ்ணன நம்பியின் 'எக்ஸென்ட்ரிக்' கதையில் மூழ்கிக் கிடக்கிறேன்.

என்னை அந்த மூட்டைதூக்குபவனாக, சிற்றுண்டிச்சாலைப் பரிசாரகனாக, கடற்கரையில் பிச்சை பெற்றவர்களாக, டாக்ஸிச் சாரதியாக, கள்ளச்சாராய வியாபாரியாக, பாலியற் தொழிலாளியாக நினைத்துப் பார்க்கிறேன்.

அவர்கள் எதிர்பார்க்காத, நினைத்துப் பார்க்க முடியாதவையெல்லாம் இவரால் அவர்களுக்குக் கிடைக்கிறது. பாலியற் தொழிலாளியிடம் விலைபேசாத மனநிலை என்பது கதையின் முக்கிய இடங்களில் ஒன்று.

'பற்றாக்குறை ஜன்மங்களின் மன உளைச்சலுக்கு இம்மாதிரிக் கனவுகள் ஒரு டானிக்' என்று அவர் தனக்குத் தானே சொல்லிக்கொண்டாலும் அதை மற்றவர்களுக்கு உண்மையாக்கும் மனம் இருக்கிறதல்லவா; அங்குதான் இந்தக் கதையின் நாயகனும் கிருஸ்ணன் நம்பியும் இருக்கிறார்கள்.

இன்னொருவனின் நலம் நாடுவது 'விசித்திரமானது' என்றாகிவிட்ட காலத்தில் இப்படியான கதைகளிடமிருந்து கற்றுக்கொள்ள ஏராளமிருக்கிறது.




# இன்னுமொரு இந்திய, இலங்கை ஒப்பந்தம் வேண்டும்

**மல்லியப்புசந்தி திலகர்**

கோ.நடேசய்யர் எழுதிய ‘ இந்திய - இலங்கை ஒப்பந்தம்‘ *(1941)* எனும் நூலை பேராதனைப் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் பெருமாள் சரவணகுமார் மறுபதிப்புச் செய்துள்ளார். இந்த நூல் முன்வைக்கும் கருத்தியல் 80 ஆண்டுகளுக்குப் பின்னர் மலையகத் தமிழ் மக்களின் அடையாள அரசியல், மலையகத் தேசியம் முதலான விடயங்களில் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சுகிறது. அதனை முன்வைத்தே கட்டுரையாளர் இன்னுமொரு ‘இந்திய - இலங்கை ஒப்பந்தம்‘ வேண்டும் எனும் பரிந்துரைப்பை ஆய்வு ரீதியாக முன்மொழிந்துள்ளார்.

இதுவரை செய்யப்பட்ட ஐந்து இந்திய-இலங்கை உடன்படிக்கை களிலும் 1987 ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஐந்தாவதை மட்டுமே பேசிக் கொண்டு இருக்கும் இன்றைய சூழலில் அதற்கு முன்னதான 1974, 1964, 1954, 1941 ஆகிய ஆண்டுகளில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் நீட்சியாக இனுமொரு ஒப்பந்தத்தின் தேவை இப்போது எழுந்துள்ளது.

கோ.நடேசய்யர் எழுதிய ‘இந்திய - இலங்கை ஒப்பந்தம்‘ (1941) எனும் நூ ல் 2022 ஆம் ஆண்டு மறுபதிப்பு செய்யப்பட்ட நிலையிலேயே புதிய ஒப்பந்தம் ஒன்றுக்கான தேவை குறித்த சிந்தனை எழுகின்றது.

1987 ஆம் ஆண்டு இடம்பெற்ற ராஜீவ்-ஜே.ஆர் ஒப்பந்தம் தான் இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்வுக்காக மேற்கொள்ளப் பட்டிருப்பது போன்ற ஒரு தோற்றப்பாடு காட்டப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தம் இலங்கையின் வடக்கு - கிழக்கு மக்களுக்கான தீர்வுப் பொதியாக முன்வைக்கப்பட்ட அதே நேரம் அதற்கு முன்பதாக நான்கு இந்திய - இலங்கை ஒப்பந்தங்கள், இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள் சார்ந்து செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் பிந்திய மூன்றும் (1954,1964,1974) இலங்கையில் வாழும் இந்தியர்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்புவது சம்பந்தமான ஒப்பந்தங்களாகும்.

ஆனால், 1941 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ‘இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில்‘ காலனித்துவ ஆட்சி காலத்தில் இலங்கை நோக்கி வர நேர்ந்த இந்தியர்கள் நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்துவிட்ட நிலையில் அவர்கள் எவ்வாறு இலங்கையில் நிலை நிறுத்தப்படலாம், இலங்கையர் களாக அங்கீகரிக்கப்படலாம் என்பது தொடர்பாக விரிவாக விவாதிக்கப் பட்டுள்ளது.

அந்த ஒப்பந்தத்தின் ஊடாக அப்போதைய இந்தியர்கள் குறிப்பாக தோட்டத் தொழிலாளர்கள் எவ்வாறு இலங்கையர்களாகலாம்? அதற்காக ஒப்பந்தத்தில் உள்ள வாய்ப்புகள் என்ன? என்பதை மலையக நிர்மாண சிற்பி கோ.நடேசய்யர் தனது நூ லின் ஊடாக முன்வைத்துள்ளார்.

அவ்வாறு இலங்கையர்களாகிக் கொள்ளாத பட்சத்தில், ஒன்றில் ‘வெளியேற்றப் படுவீர்கள் அல்லது நிரந்தர கூலிகளாக்கப் படுவீர்கள்‘ என மிகவும் தீர்க்கக் தரிசனமாக குறிப்பிட்டுள்ளார்.

நடேசய்யர் கூறியது போலவே பின்னாளில் இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினர்களின் இலங்கைக் குடியுரிமை பறிக்கப்பட்டது, ஒரு பகுதியினர் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டார்கள். எஞ்சியோர் இலங்கையில் நிரந்தர கூலிகளாக்கப்பட்டு உள்ளனர்.

இந்த நிலையில் 1941 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மனதில் இறுத்தி மலையகத் தமிழர்கள் சமகால விடயம் சார்ந்து புதியதோர் ஒப்பந்தம் செய்யப்படல் வேண்டும். இந்த புதிய சூழல் நடேசய்யர் எதிர்வு கூறிய அந்த விளைவு நிலையில் இருந்து நோக்கப்பட வேண்டியது.

அதாவது இலங்கையில் இருந்து வெளியேற்றப்பட்ட மலையகத் தமிழர்கள் இந்தியாவில் தாயகம் திரும்பிய ‘சிலோன் காரர்களாகவும்‘ அகதி முகாம்களில் அகப்பட்டோர் ‘நாடற்றவர்களாகவும்‘ வாழ்கின்றனர். இலங்கையில் வாழ்வோருக்கு இன்றும் ‘இந்தியத் தமிழர்‘ அடையாளம் வழங்கப்பட்டு இலங்கை யில் இருந்து அந்நியப் படுத்தப்பட்டுள்ளதுடன் இலங்கையில் நிரந்தர கூலிகளாக்கப்பட்டும் உள்ளனர். எனவே இலங்கை - இந்திய நாடுகள் இடையே கூறு போடப்பட்டுள்ள ‘மலையகத் தமிழர் இனம்‘ அந்தந்த நாடுகளில் இன்னும் முழுமையான அர்த்தமுள்ள குடியுரிமையாளர் களாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

எனவே இலங்கையில் வாழும் இந்திய அடையாளம் சுமத்தப்பட்ட மக்கள் முழுமையான இலங்கைப் பிரஜைகளாகவும், இந்தியா ( தாயகம்) திரும்பியவர்களும், அகதி முகாம்களில் வாழும் நாடற்றவர்களாக வாழ்வோரும் முழுமையான இந்திய பிரஜைகளாகவும் அங்கீகரிக்கப்பட்டு, அவர்களது மறுக்கப்பட்ட உரிமைகளை அந்தந்த நாடுகளில் வழங்குவதற்கு உடன்பாடு எட்டப்பட வேண்டும்.



# இருட்டு இரகசியம்

நான் இண்டைக்கு இதாலை வந்தாப்போல சொல்லவாற விசயம் சிலபேருக்கு உப்புச் சப்பில்லாமல் இருக்கலாம். ஆனா, கண்டதையும் கேட்டதையும் குறைஞ்சது செவிவழிக் கதையாகவேணும் பறைஞ்சுபோட்டுப் போயிட வேணும். அப்பத்தான் அது நாலிடமும் போய்ச் சேரும்.

நான் இப்ப இதில என்ன சொல்ல வாறனெண்டால்...

கனநாளைக்குப் பிறகு என்ர கூட்டாளி ஒருத்தன் என்னைத்தேடி யாழ்ப்பாணம் வந்தான். சொல்லாமல் கொள்ளாமல் வந்திட்டானே... எண்டு மனசுக்குள்ள சாடையாக் கடுப்பேறினாலும், வீடுதேடி என்னட்டை வந்தவன்... எண்டிட்டு, அவனை வீட்டுக்குள்ள கூட்டிக்கொண்டுபோய் இருத்தி வைச்சுக் கதைச்சன்.

அவனுக்கும் கனநாளைக்குப்பிறகு என்னைக்கண்டதில வலு புளுகம் பாருங்கோ. சிரிச்ச முகமாயிருந்து என்னோட கதைச்சான். கதையோட கதையா 'எப்படியடா வன்னிப்பக்கம்...?' எண்டு கேட்டன். அதுக்கு அவன், ' ஏதோ இருக்குது...' எண்டு சலிப்போட சொன்னவன், திடீரெண்டு, 'டேய் உனக்குக் கனகலிங்கத்தைத் தெரியுமோடா...' எண்டு கேட்டான்.

எனக்கு ஒரே குழப்பமாக் கிடந்தது. இவன் எந்தக் கனகலிங்கத்தைக் கேட்கிறான்? எண்டு நான் எனக்குள்ள யோசிச்சபடி... 'ஆரடாப்பா அது...?' எண்டு கேட்டன்.

'இஞ்சை பார்! அதுக்கிடையில மறந்து போனியே? சரிதான்! சண்டை முடிஞ்சு கனவருசத்துக்கு மேலாகியிட்டுது. எல்லாரும் அவரவர் பாட்டில போயிட்டினம். ஞாபகம் இருக்காது தானே!' எண்டு சொல்லிப்போட்டு, 'கருவாட்டு வியாபாரி கனகுவடா...' எண்டான்.

அதுக்குப்பிறகுதுதான் எனக்கு மூளையில உறைச்சுது. கருவாட்டு வியாபாரி கனகுவின்ர இண்டைய வாழ்க்கைபற்றி கூட்டாளி சொன்னதைக்கைட்டு, எனக்குச் சரியான கவலையாப் போச்சுது

4

பாருங்கோ.

யாழ்ப்பாணத்தில ஆமியளுக்கும் புலியளுக்கும் சண்டை தொடங்கக்கு முன்னம், இந்தக் கனகெண்டவன் நல்லதொரு உழைப்பாளி கண்டியளே! ஒருநேரம் சும்மாயிருக்க மாட்டான். வியாபாரம்தான் அவன்ர மூச்சு. அதுவும் கருவாட்டு வியாபாரத்தாலை தான் முன்னுக்கு வந்தவன். அதாலை அவனைக் ‘கருவாட்டுக் கனகு‘ எண்டுதான் எல்லாரும் கூப்பிடுகிறவை.

வலிகாமச் சண்டையோட எல்லாரும் வன்னிக்கு அள்ளுப்பட்டு வரேக்கை, கனகுவும் தன்ர குடும்பத்தோடை வந்திட்டான். வந்தவன் வன்னியிலும் சும்மா இருக்கேல்லை. வாழைக்குலை வியாபாரம் செய்யத் தொடங்கினான். உங்காலை விசுவமடு, உடையார்கட்டு, முத்தையன்கட்டுப் பக்கம் போய் அங்கினேக்கை வாழைத்தோட்டக் காரரிட்டை வாழைக்குலையளை வாங்கி, சைக்கிள் கரியலிலையும், காண்டிலிலையும் கட்டிக்கொண்டு, கொளுவிக் கொண்டு பள்ளந்திட்டியளாக் கிடந்த கிறவல்றோட்டில ஓடிக்கொண்டு போய், முல்லைத்தீவு, முள்ளியவளை, வற்றாப்பளைப் பக்கம் வித்துப்போட்டு வருவான். குடிவெறி, பீடி சுருட்டெண்டு எந்தக் கெட்ட பழக்கமும் அவனிட்ட இல்லை. வெத்தில பாக்கு பொயிலையெண்டு போடுவான்.

ஆனா, பாருங்கோ... அவன்ர கடினமான உழைப்பில ஊறிய வருமானத்தில வரி கட்டவேணுமெண்டு சொல்லி, புலியள் காசு வசூலிச்சது வேற விசயம். அது ஊரறிஞ்ச, உலகறிஞ்ச உண்மைதானே. சரி அது கிடக்கட்டும். நான் இப்ப விசயத்துக்கு வாறன்.

வலிகாம இடப்பெயர்வோட வன்னிக்கு வந்த சனங்களுக்கு வன்னியிலையும் இருக்கேலாமல் போச்சுது. கடைசி நேரத்தில முள்ளிவாய்க்காலில் சரிக்குச் சரி அரைவாசிச் சனம் செத்துப்போக, மிச்சச் சனமெல்லாம் ஆமியிட்டை ஓடின கதை உங்களுக்கும் தெரியும்!

இந்தச் செத்த சனங்களுக்கை கனகுவின்ர குடும்பமும் ஒண்டு. அவனைத் தவிர, மற்றவையெல்லாம் ஒரு ஷெல்வெடியோடை சிதறிப் போச்சுதுகள். அதை இவன் நேரடியாகக் கண்டிட்டான். பிறகு வவுனியா இடைத்தங்கல் முகாமில இருந்திட்டு, அவரவர் தங்கட ஊருக்குப்போக, இவன் கனகு யாழ்ப்பாணம் வராமல், ஆரோ தெரிஞ்சவையோட வன்னிக்குப் போயிட்டான். அப்ப அவனுக்கு அங்கை வன்னியில ஒருத்தருமில்லை. சடையும் தாடியும் ஊத்தை உடுப்புகளுமாத் திரிஞ்சவனை, அவனைத் தெரிஞ்ச ஆக்கள்தான் அவனைச் சுத்தப்படுத்தி விதானையாற்ற உதவியோட ஒரு வயோதிபர்மடத்தில கொண்டுபோய்ச் சேர்த்து விட்டவை... எண்டு, என்ர கூட்டாளி சொல்லி முடிச்சான்.

கடைசியா அவன் போகேக்கை இவன் கனகுவை மனசில வைச்சுக்கொண்டு, என்னைப்பார்த்து ஒரு கேள்வி கேட்டான்.

‘கனகுவின்ர இண்டைய இந்த நிலைக்கு ஆர் காரணம்...? புலியள் எண்டு சொல்லப் போறியா?இல்லை ஆமி அடித்த ஆட்டிலறி ஷெல்லெண்டு சொல்லப் போறியா? எங்கட தமிழ்ச்சனத்தின்ர அரசியல் எதிர்காலம் பற்றிய தூரநோக்குச் சிந்தனையற்ற மனிசர்களாலதான் கனகுவுக்கு இண்டைய நிலை. எங்களுக்கு அகிம்சைவழியிலையும் விடிவு கிடைக்கேல்லை. ஆயத வழியிலையும் சுதந்திரம் கிடைக்கேல்லை. கடைசியில கனகுவைப்போல ஆக்களையும் கைகால இல்லாத முன்னாள் போராளிகளையும் தான், வைச்சுப் பராமரிக்கச் சொல்லிப் போட்டுப் போயிருக்குது... எண்டு சொல்லிப்போட்டு அவன் போட்டான்.

சொன்னா நம்பமாட்டியள் பாருங்கோ! கோதாரியில போவான் உந்தக்கதையைச் சொன்ன நாளேலையிருந்து, எனக்கு ஒழுங்கா நித்திரையெண்டது வருகுதில்லை.

**உங்கட குஞ்சியப்பு.**




Life doesn't always give a
#SecondChance.
Insure yourself. Secure your family.
647-868-6475
RAVI
PONNUDURAI
Life Insurance
is your family's umbrella
to life's unexpected showers
647-868-6475





அலெக்ஸ் பரந்தாமன் இறுதியுத்த காலங்களில் வன்னியில் அவலங்களைச் சந்தித்தவர். தன் அனுபவங்களை அபத்தத்தில் தொடர்ந்து எழுதுகிறார். படைப்புகளாக வெளிக்கொணர்ந்திருக்கிறார். புகைப்படவியலில் மிகுந்த ஆர்வம் கொண்ட அவர் போரின் அவலங்களையும், ஆழிப்பேரலையின் அழிவுகளையும் யுத்தத்தின் பின்னான வாழ்வுமுறையையும் போட்டோஜேர்ணலிசப் பார்வையோடு பதிவு செய்து வருகிறார். இந்த மாத அபத்தம் அட்டைப்படமும் அவரது கைவரிசையே.






60
kmph






TATA


Northern Province, Kaively
10/04/2024 5:32:36 PM

# பார்சலோனாவும் பயல்லாவும், சியெஸ்டாவும்!



La Sagrada Familia. Barcelona

## பூங்கோதை

எங்கு போனாலும் அந்த நாட்டின் அல்லது அந்நகரத்தின் உணவு பற்றி அறியாமல் வரக்கூடாது என்ற நல்லெண்ணம் காரணமாக பாசலோனாவின் முக்கிய உணவுகள் குறித்த ஆராய்ச்சி ஒன்று அங்கு போவதற்கு முன்னரே என்னால் திட்டமிடப்பட்டது. கடலும் கடல் சார்ந்த இடங்களும் எப்போதும் என் நினைவுகளில் இதமானவை என்பதால் கடல் உணவுகள் குறித்த ஆர்வமும் அதனோடு இணைந்தே இருந்தது.

அதற்காக சாப்பாடே நினைவெல்லாம் என்கின்ற நிலைப்பாடும் இல்லாதவள் நான். புதிய நாடுகள், இடங்கள், புதிய முகங்கள், அவர்களுடைய கலைகள், உணவுப் பழக்க வழக்கங்கள், கட்டடக்கலைகள், புவியியல் மற்றும் சுற்றுச் சூழல் சார்ந்த விடயங்களோடு, அருங்காட்சியகம் ஏதாவது அருகில் இருந்தால் ஒரு சுற்றுச் சுற்றலாமா எனப் பலவிதமான எண்ணங்கள் மனதில் போட்டி போட்டுக் கொண்டன.

கடந்த பங்குனி மாதத்தில் என் மூத்த மகனார், தான் தாயகத்தில் தன் அம்மம்மாவின் நினைவில் ஆரம்பித்த குழந்தைகளின் உணவு, கல்விக்கான அறக்கட்டளைக்காக ‘ பாசலோனா 2024‘ (Barcelona Marathon 2024) என்கின்ற முழு மரதன் ஓட்டத்தில் (26.2 மைல்கள் அல்லது 42.1 கீலோ மீட்டர்) பங்கு பற்றுவதற்காகச் சென்றபோது என்னையும் தன் குழுவில் இணைத்துக் கொண்டார்- பார்வையாளராக! அவருடைய கடின உழைப்பும் மனத்திடமும் அவருக்கும் அவரோடு சேர்ந்திருந்த ஏனைய ஓட்ட வீரர்களுக்கும் வெற்றி அளித்திருந்தன.

இளைய தலைமுறையின் புதிய சிந்தனைகள், தொலை நோக்குப் பார்வைகள், இன, மத, மொழி வேறுபாடற்ற குழு மன நிலை எனப் பலதும் உடல், உள நிலைகள் கடந்து மழை நீர்த் துளிகள் சிலீரென முகத்தில் விழுந்தது போல ஒரு வித உயிர்ப்பை எனக்குள்ளும் உறுதிப்படுத்தியது. அது மிகவும் கட்டுக் கோப்பான, மிக நேர்த்தியாகத் திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்வு. அதற்கு உடல் உழைப்பை விட மனோதைரியமும், தன்னம்பிக்கையும். மனத்திடமும் இந்த நீண்ட தூர ஓட்டத்தில் பங்கு பற்றிய ஒவ்வொருவரிடமும் இருந்தது. ஆண்கள், பெண்கள், மூன்றாம் பாலினத்தவர், சக்கர நாற்காலியில் வாழ்வைக் கழிப்பவர்கள் எனப் பலரும் பங்கு பற்றியது மிக நெகிழ்ச்சியான சம்பவமாக இருந்ததோடு, ஒவ்வொருவரும் ஏதோ ஒரு நல்ல அறம் சார்ந்த விடயத்திற்குப் பணம் சேர்ப்பது இந்நிகழ்வின் முக்கிய நோக்கமாக இருந்ததை அறியக் கூடியதாய் இருந்தது.




மரதன் ஓட்டத்தில் பங்குபற்றிய வீரர்களை உற்சாகப்படுத்திக் களைத்தது போக, எனக்காக இருந்த மீதி நாட்களை பாசலோனாவைப் பற்றி அறிவதற்கு ஆர்வம் கொண்டேன்.

கட்டலோனியா ஸ்பெயினின் முக்கிய மத்தியதரைக் கடற் துறைமுகம் ஆக இருப்பதோடு, புகழ் பெற்ற வணிக மையமாகவும் காணப்படுகிறது. அதன்

தனித்துவம், கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றிக்குப் பெயர் போன ஒரு நகரம் என்பதையும் நாம் அங்கு சென்ற போது அறிந்து கொள்ள முடிந்தது.

கட்டலோனியா என்பது ஸ்பெயினின் வடகிழக்கு மூலையில் ஒரு முக்கோண பகுதியை ஆக்கிரமித்துள்ளது. இது வடக்கே பிரான்ஸ் மற்றும் அன்டோரா, கிழக்கில் மத்தியதரைக் கடல், தெற்கில் வலென்சியாவின் தன்னாட்சி சமூகம் மற்றும் மேற்கில் அரகோனின் தன்னாட்சி சமூகம் ஆகியவற்றை எல்லையாகக் கொண்டது. இங்கு பேசுகின்ற கற்றலான் மொழி, ஸ்பானிஷ் மொழி போலவே பள்ளிகள், பொது முகவரிகள் மற்றும் ஊடகங்களில் பரவலாக உள்ளது. இது லத்தீன் வேர்களைக் கொண்டிருந்தாலும் பிரெஞ்சு மற்றும் ஸ்பானிஷ் கலவையாகவும் ஒலிக்கிறது.

அது போக, என்னுடைய நிலையில் பயணங்கள் என்னை மிகவும் ஆற்றுப்படுத்தின. ஒன்றரை வருடங்களுக்கும் மேலான புற்றுநோய்ச் சிகிச்சையின் வீரியமான மருந்துகளின் பக்கவிளைவுகளுக்கும் அவ்வப்போது இடம் கொடுத்து, ஈடாட வேண்டியும் இருந்ததில், எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு மகிழ்ச்சியோடு இருப்பதாக எனக்கு நானே உற்சாகம் கொடுத்துக் கொண்டேன்.

பார்சலோனா எதற்காக பிரபலமானது என்பதை அங்கு அடிக்கடி போய் வரும் தோழமைகள், எம்மோடு பணியிலிருந்த ஸ்பானிஷ் மக்கள் வாயிலாக முன்னரே அறிந்திருந்தோம். அவற்றில் முக்கியமானவையாகக் காணப்பட்டவை, அவர்களது கட்டிடக்கலை, பார்சலோனா நகரம், (ஐரோப்பாவின் பாதுகாக்கப்பட்ட சிறந்த இடைக்கால நகரங்களில் ஒன்றாக அடையாளம் காணப்படுகிறது.), பாசலோனாவின் உதைபந்தாட்டக் குழு, பூகோள அமைப்பு, சிறந்த காலநிலை, தெருவோர விழாக்களும் விருந்துகளும், மத்திய தரைக்கடல்-கடற்கரைகள் என்பவற்றோடு அங்குள்ள பிரபல கலைஞர்களும் பார்சலோனாவிற்கு பெருமை சேர்த்தவற்றில் அடங்கினர். என்னுடைய விருப்போடு அவை ஒன்றிப்போனதில் மனது மகிழ்ந்தது.

பார்சிலோனா - மாட்ரிட் என்ற இரண்டு பிரபலமான ஸ்பானிஷ் நகரங்களில் எதைத் தேர்வு செய்வது என்பது ஒருவரது தனிப்பட்ட விருப்பங்கள், ஆர்வங்களைப் பொறுத்தது. ஆனால், பார்சலோனா அதன் தனித்துவமான கட்டிடக்கலை, தலைசிறந்த படைப்புகள் மற்றும் வலுவான கற்றலான் கலாச்சார அடையாளத்திற்காகப் (Catalan cultural identity) பெயர் பெற்றது. இந்த நகரம் அழகான கடற்கரைகள், யுனெஸ்கோவின் பட்டியலிடப்பட்ட அன்டோனி கௌடியின் (Antoni Gaudí) படைப்புகளோடு உற்சாகமான சூழலையும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குகிறது.

அன்டோனி கௌடி (1852-1926)ஒரு கற்றலான் கட்டிடக் கலைஞர். இவர் ஆர்ட் நோவியோ மற்றும் கற்றலான் நவீனத்துவத்தின் (Art Nouveau and modernism) முன்னோடியாக இருந்திருக்கிறார். கௌடியின் பெயர், பார்சிலோனா முழுவதிலும் உள்ள சிக்கலான கட்டட அமைப்புகளிற்கும் மிக நுட்பமான தொழில் நுட்பத்திற்கும் மிகவும் பிரபலமானது.

அவருடைய தனித்துவமான கட்டடப் பாணி, வடிவம், அபாரமான நிறம், அமைப்பு, கரிம ஒற்றுமை ஆகியவற்றால் வகைப்படுத்தப்படுகிறது. அவருடைய கட்டிடங்களின் கட்டுமானம், வடிவம், அலங்காரம் ஆகியவற்றுக்கு இடையேயான நெருக்கமான ஒருங்கிணைப்பு, இயற்கையின் மீதான அவரது ஆர்வத்தையும், இயற்கையான பொருளின் அமைப்பு அதன் வடிவம், அலங்காரம் என்பவற்றையும் பிரதிபலித்து நிற்பதாலேயே கௌடியின் கட்டடக்கலை பிரமிக்கத் தக்க தனித்துவம் கொண்டு இன்றும் மிளிர்கிறது.



Casa Batllo
Antoni Gaudi's Masterpiece Barcelona

கடந்த நூற்றாண்டில் ஐரோப்பாவின் மிக பிரபலமான சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக மாறிய பாசிலிகா டி லா சாக்ரடா ஃபமிலியா ( Basílica de la Sagrada Família ) கௌடியின் கை வண்ணத்தில் ஆரம்பிக்கப்பட்டது தான். அவர் பல கலைகளின் ஒட்டு மொத்தமான கலையாகவிருந்த அவரது கட்டிடக்கலைக்கு முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்டவராக இறுதி வரை தனியாகவே வாழ்ந்து சென்றார். பார்சலோனா எங்கும் காணப்படும் அவரது கலையம்சம் மிகுந்த கட்டட அமைப்புகள் குறித்து தனியான ஒரு கட்டுரையே எழுதலாம் என்பதால் அதை வாசகர்கள் தேடிப் படிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டே அவர்களது உணவுகளில் முக்கிய உணவாகக் கருதப்படும் 'பயெல்லா' குறித்துப் பார்ப்போம்.

பெரும்பாலான மக்கள் ஸ்பெயினுக்கு, முக்கியமாக பார்சலோனாவிற்கு வரும்போது அவர்கள் சாப்பிட விரும்பும் மிகப் பிடித்த உணவொன்று என்னவென்று கேட்டால் அவர்கள் பயெல்லா ( paella) என்பார்கள். இந்த ஒற்றை உணவு மட்டுமே இப்போது ஸ்பானிஷ் உணவு வகைகள் அனைத்துடனும் ஒன்றிப்போயுள்ளது.

பயெல்லா என்பது ஸ்பெயினின் மிகவும் பிரபலமான ஒரு அரிசியினதும் அதனோடு இணைந்து தயாரிக்கக் கூடிய உணவு வகைகளின் சின்னமாகவும் விளங்குகிறது. அரிசியின் சூடான ஆரஞ்சுப் பழங்கள் போன்ற -தங்கப் பளபளப்பு, பசுமையான காய்கறிகளின் கீற்றுகள் மற்றும் சுவை நிறைந்த இறால் அல்லது கோழியோடு சில வகை சுவையூட்டிகளையும் கலந்து இது சமைக்கப்படுகிறது.

ஒரு தட்டையான தாச்சிச் சட்டியில் ஒரு கொத்து அரிசியை வைத்து, அதை உள்ளூர்க் காய்கறிகள் மற்றும் இறைச்சி துண்டுகளால் மூடி, சமையற்காரர்கள் உள்ளூர் ஆரஞ்சுக் கிளைகளைப் பயன்படுத்தி நெருப்பைக் கொளுத்தி, தங்கள் அரிசியை வெப்பத்தின் மேல் சமைப்பார்கள். இதன் உண்மையான தோற்றத்தின் வரலாறு சற்று சர்ச்சைக்குரியதாக இருந்தாலும், ஸ்பெயினின் கிழக்கு கடற்கரையில் உள்ளதொரு நகரத்தில் இது உருவானது என்று பெரும்பாலான மக்கள் ஒப்புக் கொள்கிறார்கள். தெற்கு ஸ்பெயினில் உள்ள மூரிஷ் விருந்துகளில் பரிமாறப்படும் நறுமணமுள்ள, குங்குமப்பூவும் இந்த பயெல்லாவில் பாவிக்கப்படுகிறது. மூர்கள் அரபு கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக இருந்தனர், இது ஸ்பெயினில் இருந்து பெர்சியா வரை நீண்டபடி இந்த அரிசிக் கலாச்சாரத்தைக் காவிச் செல்கிறது. நீங்கள் பயெல்லா தயாரிக்கும் போது, அதற்கான பாவனைப் பொருட்கள் அது எந்த வகையான பயெல்லா என்பதைப் பொறுத்து வேறுபடும். பாரம்பரிய பயெல்லா என்பது வாலென்சியாவின் பதிப்பு நிலத்தில் இருந்து வரும் பொருட்களைப் பாவித்து தயாரிக்கப்படுவது. அதே சமயம் ஸ்பெயினில் பல பயணிகள் தேடும் கடல் உணவு வகைகளில் இறால், கலமாரி, மஸ்ஸல்கள் போன்ற பலவற்றை உள்ளடக்கியது. அதே வேளையில்



புதிய, பல நிறமுள்ள காய்கறிகள் நிறைந்த பயெல்லாவும் உண்டு.

பாயெல்லாவிற்குப் பாவிக்கப்படும் அரிசி சாதாரண அரிசிகள் போல அல்லாது மூன்று மடங்கு அதிகளவு நீர்த்தன்மையை (இயற்கையான சுவையூட்டிகளை) இழுத்து வைத்துக் கொள்ளும் தன்மை கொண்டது. இது போல திறந்த வெளியில் பயெல்லாச் சட்டியில் பயெல்லா சமைக்கப்படுவதை மக்கள் மிகவும் விரும்புகின்றனர். கடல் உணவுகள், பல வகையான மாமிச வகைகள், பச்சைக் காய்கறிகள் என எதைச் சேர்த்து சமைத்தாலும் பயெல்லாவிற்கான சுவை தனித்தன்மை கொண்டது என்பதோடு இது குறித்து இன்னும் ஆழமாக எழுதலாம் என்பதால் இதையும் வாசகர்களின் தேடலுக்கு விட்டுவிடுகிறேன். அடுத்ததாக எனக்கு சிரிப்பூட்டிய, ஆனால் ஸ்பானிஷ் கலாச்சாரம் - பாசலோனா கலாச்சாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் 'சியெஸ்ட்டா' குறித்துப் பார்ப்போம்.

## 'சியஸ்ட்டா'


ஸ்பெயினுடன் நெருங்கிய தொடர்புடைய ஒரு பாரம்பரியம் - மதிய உணவிற்குப் பிந்திய மதியத் தூக்கம். இதை 'சியஸ்ட்டா' என்பார்கள். நாம் இருந்த இடத்திற்கு அருகாமையிலுள்ள கடைகள், வெதுப்பகங்கள் அனைத்தும் பூட்டப்பட்டு அனைவரும் இந்த மதியத் தூக்கத்திற்குப் போய் விட்டனர். மதியம் ஒரு மணியளவில் கடைகள், வேலை இடங்கள் பூட்டப்பட்டு மூன்று மணியளவில் மீண்டும் திறக்கப்படுகின்றன. புத்துணர்ச்சி தரும் சியெஸ்டா எங்கிருந்து வந்தது? மதிய உணவுக்குப் பிறகு வழக்கமாக எடுக்கப்படும் இந்த மதியத் தூக்கம், சுமார் 20 முதல் 30 நிமிடங்கள் வரை நீடிக்கும். 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை, சியஸ்டா பொதுவாக விவசாய வேலைகளில் இருந்த பல ஸ்பானியர்கள் விவசாயத்தில் பணிபுரிந்தவர்கள் ஆதலால் வரலாற்று ரீதியாக, வெப்பமான கால நிலையில் அவர்களால் எடுக்கப்பட்டது. மதிய உணவுக்குப் பிந்தைய இடைவேளை எடுப்பது மதிய வெயிலைத் தவிர்க்க மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டது.

சியெஸ்டா வெறுமனே ஒரு தூக்கம் மட்டுமல்ல நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் ஓய்வெடுக்கவும் தொடர்பு கொள்ளவும் இது ஒரு வாய்ப்பாக மதிக்கப்பட்டது. நிதானமாக உணவை அனுபவிக்க, உலாவ, அல்லது வெதுவெதுப்பான வெயிலின் கீழ் ஓய்வெடுக்க என பல பயன்பாடுகள் கொண்டதெனக் கொள்ளப்பட்டது. இன்றும் கூட, சியெஸ்ட்டா பணி அட்டவணைகள் ஆனது அநேகமான ஸ்பானிஷ் நாடுகளின் சமூக நெறிமுறைகள் மீது தொடர்ந்து செல்வாக்கு செலுத்துகிறது, பல வணிகங்கள் பிற்பகலில் சில மணிநேரங்களுக்கு மூடப்படுவதை அவதானிக்கலாம்.

இது வெறுமனே மதியத் தூக்கம் என்பதாக மட்டுமல்லாது, ஸ்பானிஷ் மக்களின் ஆழமான கலாச்சார விழுமியங்களின் பிரதிபலிப்பாகும். எங்களுக்கும் நாம் வாழுகின்ற நாடுகளில் சியெஸ்டா தந்தால் குதூகலமாக இருக்கும். பாசலோனா பற்றி பேசிக் கொண்டே போகலாம் என்பதால் இத்தோடு இக்கட்டுரைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கப்படுகிறது. அடுத்ததாக எந்த நகரத்தைப் பற்றி எழுதப் போகிறேன் என்பதை நீங்களும் ஊகித்துக் கொள்ளலாம்.



# இருப்பிடங்களை அறிதல்.



1.

யமுனாராணியின் குரல் யாருக்கு வரும்?
யமுனாராணிக்கு!

ரஜனிகாந்தின் நடிப்பு யாருக்கு வரும்?
ரஜனிகாந்திற்கு!

அதுசரி,

ரஜனிகாந்த் போலவும் யமுனாராணி போலவும்
முகமூடி அணிந்திருப்பவரை மட்டும்
தனியே பிரித்தெடுத்து
கட்டாய உழைப்பு முகாம் வாசலில் நிறுத்து.

பின்பு பேசுகிறேன்.

மற்றவர்களைக் கூட்டிவர
இன்னும் சில நாட்கள் இருக்கின்றன.

2.

விக்கிபீடியாச் சாரை
மிக வேகமாக நகரக்கூடியது.
சுறுசுறுப்பாக இயங்கக்கூடியது.
பகலிரவு முழுநேரமும் வேட்டையாடக் கூடியது.
தனது இரையை நெரித்துக் கொல்வதில்லை.
நகர இயலாமல் போகும் வரை இரையை அழுத்திக் கொல்லும்.
பின் அவற்றை முழுதாக விழுங்கி விடும்
பிடிக்க முயன்றால் தப்பித்து விடும் :: அல்லது தப்பிக்க முனையும்.

சுற்றி வளைக்கப்பட்டால்,
கழுத்தையும் உடலின் முன் பகுதியையும்
உப்புமாறு செய்து,
ஒரு வித முனகல் அல்லது சன்னமான
உருமல் சத்தத்தை ஏற்படுத்தும்.

என்ற விக்கிபீடியாச் சாரை போன்றதொரு நாகம்.

நெடுந்துயர் போரில்
உயிர் தப்பி, மரித்தது.

மரித்த தடயத்தை நீ கண்டிருக்கிறாயா?

ஆம் என்றால் மரித்தும்
இல்லையென்றால் உயிர்த்தும் விடும்

ஒரு இடத்தில்
நான் அதனை அடையாளம் காட்டுகிறேன்.
சாரையின் வதிவிடத்திலிருந்து
ஊர்ந்துவரும் சொற்களில்

நீ நாகத்தை அடையாளம் கண்டேன்
என்று சொல்லிக் கத்தாதே!

உன்னைப்போல் இல்லை.

எனக்கும் 'நாள்' செல்லும்.

**கற்சுறா**



அதிகாரம் 9

# 'ஒரு ஏதோ..!'

## அங்கும் இங்கும், எங்கும் ஒரு Novel

சிறினோ சிறி சிறிசு

இங்கு...

'நீங்களா இதைச் சொல்லுறது?! அதுவும் எனக்கு?! அய்ய்ய்;!!!' என்று ஆச்சர்யித்தான், குட்டி 'பீலா'.

அதே bar இல்தான் குந்தியிருந்தார்கள்.

அதே முறி முறி அழகு தளவாடி கண் முன்னே கணக்காக நெடிதுயர்ந்திருக்க, அதன் முன்னான பல்வகை மதுபான போத்தல்கள் பல்வேறுபட்ட உயரங்களில் அழகோ அழகு காட்டும் பன்னிறங்களில், 'என்னைப்பருகு பின், என்னென்னவெல்லாம் வரும், பார்,' என கர்ஜிப்பது மாதிரி கலர் காட்ட, அவை 'குந்தி நிற்கும்' பீதாம்பரம் போலான ஊதா பொன் பளக்கும் தடித்த துணி, கன கனகச்சிதமாக மேலே பரவப்பட்ட கீழிறங்கும் சிறு படிகள் அழகு ஒளியில் அழகு காட்ட, அழகழகான பற்பல வடிவங்களிலான மதுபான கண்ணாடிக் குவளைகள் செம்மையாகச் செய்யப்பட்ட வெள்ளி நிற சட்டகங்களில் மேலே கவிழ்ந்து தொங்க, பரிமாறும் வளை தட்டில் கைகள் பொறுக்க, நாற்காலி போலான முக்காலிகளில் அருகருகே குந்தியிருந்தார்கள இவனும் குட்டி பீலாவும் மட்டும்.

குடி குவளைகள் வித்தியாசமான உருவங்கள், உள்ளிட அமைவுகள் கொண்டவை. அவை ஒவ்வொன்றுக்கும் வித்தியாசமான பெயர்கள் உள.

துளி தண்ணீருக்கே இலட்சோபலட்சம் சனம் தவண்டையடிக்கும் இந்த முக்கால்வாசி நீர் கொண்ட லோகப்பரப்பில் தான் மது பானத்தை நாவூடு உறிஞ்சி, களத்தூடு இறக்கவென நாற்பதற்கும் மேலான வகையான கண்ணாடிக் கோப்பைகள் இருக்கின்றன. Snifter. flute. margarita. martini. sling. tumbler. goblet. grappa. shooter இன்னபிற என்ற பல குடி நீர்க்குவளைகளின் எடுப்பெடுப்பில் உலகின் பாரபட்ஷ வேற்றுமை வெளித்தெரியும். இந்த குறு மதுபான பாத்திரங்களுக்கு அளவுகோல்

வரியறைகள் கூட இருக்கின்றன. வண்டி பருத்து, மேலே சிறிது சிறிதாய் குவியும் ஸினிஃப்ரெர் கிளாஸின் ஒற்றைக்காலை சரித்து, வயிறு கிடையாக தளத்தில் படுமாறு பிடிக்கிற போது, விளிம்பில் தொடாமல் ஒரே மட்டத்துக்கு உள்ளே விட்ட பானம் இருந்தால் ஒரு drink/ ஒன்றரை அவுன்ஸ் தூய மது பானமும் மீத கலவையும். இவனுக்கு ஸ்னிஃப்ரெரில் கொனியாக்கும் உஸோமிக்கு ஃப்லூற்றில் ஷம்பெயினும் பருக பிடிக்கும் என்பதே கூட, ஏன் மனுஷர் ஆளுக்காள் புறத்தியானவர் என்பதற்கு சாட்சி சொல்லுமாக்கும்.

குடிக்கதை போக, அடிக்கதைக்கு வந்தால்...

இவண் மேல் நீளங்கி உள் pocket இலிருந்து மஞ்சல் கடதாசியில் எழுதப்பட்ட அந்தக் கடிதத்தை எடுத்து பக்குவமாக விரித்து, குட்டி பீலாவின் முன் வைத்தான். செம்மஞ்சல் நிறத்தில் கண்ணுக்கு தெரிந்தும் தெரியாமலும் குட்டிப்பாலக வில்லாளி காம மதனப்பாங்கில் இதய வடிவ கோலங்களுக்கு அம்பு விடும் பாங்கில் சூடடிக்கும் உருபுகள் நிறையச் சொரிந்த கடதாசி அது. காதலின் றோமக்கடவுள் அன்பு அம்பு எய்யும் ஒரு குழந்தை என்பது, கரும்பு வில் வளைக்கும் காமக்கடவுளின் கதை போல் இல்லை. எல்லாவற்றையும் எல்லாருக்கும் சொல்ல முடியாதுதான். இன்ன இன்ன விருத்தத்தில், இன்ன இன்னதை, இன்ன இன்னாருக்கு, என்ன நேரகாலத்தில் சொல்ல வேண்டுமென்றும் விதி இல்லை. ஆனாலும், அல்லது அதனால் தானோ, அதை குட்டி பீலாவுக்கு சொல்வதென முடிவு செய்தான் இவண். பீலாதான் மற்றைய விலா, ஒலாக்களிலும் புத்திசாலி என்பது இவண் கணிப்பு. தருணங்களிலெல்லாம் நேர் மட்டத்தில் சிந்திக்கத் தெரிந்தவன். அவன் பல தருணங்களில் 'அவண்' ஆகி, இவணிடம் வினா எழுப்பவும் புத்தி சாதுர்யமாக, சில்லெடுக்கும் சிக்கல்களை ஓரளவேனும் அவிழ்க்கவும் தெரிந்தவன்.

இதயம் சொரிந்த மஞ்சல் கடிதம் கீழ்க்கண்டவாறு தொடங்குகிறது॰

'என்றும் என் மனதை விட்டகலாத என் உயிர்க்குட்டிக்கு எழுதிக் கொள்வது.....!!'

கு.பீலா திருமுகத்தைப் படிக்கத் துவங்க இவண், எப்போதும் இவணைக் கண்டதும் ஒரே தப்படியில் பானப் பகிர்வு வளை தட்டை எட்டிக்கடந்து, சுற்றி வந்து, கன்னத்தில் 'உப்ம்பாஹ்ஹ்' என வஞ்சகமில்லாமல் முத்தமிட்டு, முன்னுரிமை கொடுக்கும், அதே உடம்பு பூரா பச்சை குத்திய, நீலக்கண் வாலை பரிசாரகி சற்றேயான லஜ்ஜையுடன் பரிமாறிய, கலவை ஏதுமற்ற, Hennessy VSOP கொனியாக்கை நாவூடு உறிஞ்சாமல், படக் மடக்கென களத்தூடு இறக்கினான். பொதுவாக அப்படியல்ல. குடிபானம் நாவூடு ருசியுண்டுதான் களத்தில் போர் தொடுக்கும். இன்று நிலபரம் வேறு.

கடிதம் நடுப்பகுதிக்கு போயிருக்க வேண்டும். திரவமும் தான். குட்டி பீலா, வம்புக்கோ, வம்பிழுப்புக்கோ என்று தெரியாத தினுஸூல் முணுமுணுப்பது மாதிரியும் வியப்புகரமாய் இவணுக்கு கேட்க வேண்டும், என்பது போலவும் ஆ-அவ-ரோகணத்தை மாற்றாமல் படித்தான். ஆரோகணமும் அவரோகணமும் இந்தப்பூமிப்பந்தில் ஒரே நேரத்தில், ஒரே சீருக்கு கிளம்பக்கூடிய தருணங்கள் இசையிலும் உண்டு. கதையிலும் உண்டாக்கும். அது உண்டாக்கும் ஒலி நாராஸமாகத்தான் இருக்க வேண்டுமென்று இல்லை. கடிதம் தொடர்ந்தது.

'இதை நான் உங்களுக்கு எப்படிச் சொல்வதென்று தெரியவில்லை. ஆனால், சொல்லியே ஆக வேண்டும். வேறு வழி இல்லை. நான் உங்களை அனுதினமும் நினைக்கும் பலவீனமான பேதை. என் முன்னால் கல்லும் முள்ளும் பரவப்பட்ட பாதை தான் இருக்கிறது. கரையெல்லாம் செண்பகப்பூக்கள் கிடையாது. செருக்களத்தில் செத்துக்கிடக்கும் படை வீரரின் பிணத்தைக் குதற காத்திருக்கும் கழுகுகள் தான் காத்திருக்கின்றன. அதை எப்படிக் கடப்பேன் என்றதெல்லாம் எனக்கு தெரியாது. எங்களுக்கு இடையேயான உறவு சும்மா வெறும் சாதாரண அன்பு சார்ந்ததல்ல, என்பதை நீங்கள் அறிவீர்கள்.

கவிதைகளில் வருகிற கந்தர்வ காதலிலெல்லாம் மேலானது, அது. நீங்கள் எவ்வளவு தூரம் பர தேஸங்களுக்கு விலகிச் சென்றாலும், உங்களது நெருக்கத்தை நான் எப்போதும் உணர்கிறேன். அந்த உணர்ச்சி சாஸ்வதமானது.'

கு.பீலா பரிஹாஸம் பண்ணுகிற தினுஸில் நமட்டுச் சிரிப்பொன்றை கொடுப்பினுள் அமுக்கியவாறு, வாசிப்பதை நிறுத்த, இவண் குடிபான இளஞ் சிப்பந்தினியிடம் டபிள் ட்றிங் கேட்டான். என்றுமில்லாதவாறு, போதை வ்வ்வுவ்வென்று உச்சி மண்டையில் ஏறிப்பரந்து பிறகு, என்ன செய்வதென்று விளங்காமல் குழம்புவது போல தோற்றியது. ஏழு சக்கரங்களில் உச்ச மண்டை சகஸ்ராரத்திலிருந்து தொண்டைக்குழியாகிய விஷுத்தி வழி இறங்கி, மணி பூரகம் என்கிற தொப்புள்மேல் புள்ளியில் தரித்தது மாதிரி, ஒரு தரித்திர உணர்வும் வந்தது. வியப்பு யாதெனில், இதே வழிதான் ஹென்னெஸ்ஸி கொனியாக்கும் இரைப்பை நோக்கி இறங்கியிருந்தது. அடியடி ஏழாஞ் சக்கரமான மூலாதாரத்தை அது அடைய முன், தலையையும் உலகையும் பிரபஞ்சத்தையும் பஞ்சை எரிப்பதாய், தீப்பந்ததாய் கொளுத்தக் கூடியது. மூலாதாரம் என்பது ஒருவகையில் பொய். மூலம் நிஜம். அதற்கெல்லாமான ஆதாரங்கள் ஆளுக்காள் வேறுபடுவதே நிஜம். ஆதாரமே இல்லாத மூலங்களும் உள. ரிஷி மூலம், நதி மூலம், பிரபஞ்ச மூலம், இறை மூலம், மறை மூலம், விந்தணு மூலம், நாத விந்து மூலம், பெண்மை மூலம், உண்மை மூலம்;. இன்ன பிற என்ற பல அடியடி மூலங்களுக்கு மூலமும் கிடையாது ஆதாரமும் கிடையாது! எஃதெப்படியாயினும் பண ஆதாரமிருந்தால் மூல ஆதாரம் தேவையில்லை என்பதாயே மூல

லோகம் நகரும்

‘இங்கு என்னை, கொஞ்சமும் பொருத்தமில்லாத, எனக்கு கொஞ்சமும் பிடிக்காத ஒரு அயோக்கியப் பையனுக்கு கட்டி அடித்துவிட அப்பா கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதை அறிந்திருப்பீர்கள். எல்லாவற்றிற்கும் ‘மூல ஆதாரம்‘ பணம். அந்தப் பையனுடன் வாழ்வதிலும் சுருக்குப் போட்டு தற்கொலை செய்து கொள்ளலாம். எதுவும் இயலாத பட்சத்தில் அதைத்தான் செய்வேன். இப்போது நீங்கள் தான் எனக்கு ஒரே கதி. ஏதாவது வழி பண்ணி, என்னை எப்படியாவது உங்கு கூப்பிடுங்கள். உங்களுடன் வாழ்வதுதான் எனது ஒரே இலட்சியம். காலம் தாழ்த்தாமல் அதைச் செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். ‘

குட்டி பீலா சற்றேயான தன்மன கவலை சேர்ந்த வாஞ்சையுடன் கடித காலட்க்ஷேபத்தை நிறுத்தினான். அவன் நல்ல பையன். சுசிவேணி குறிப்பிட்ட அயோக்கியப் பையனுக்கு எட்டா ஆள். ‘பாவம் பிள்ளை. இடக்கு பிடக்காய் ஏதும் செய்யக்கூடும். பிறகு வாழ் நாள் பூரா கவலைப்பட வேண்டி வரும். இப்ப என்ன செய்யப் போறீங்கள்..?‘

‘இப்ப என்ன செய்ய?‘ என்று கேள்விக்கு கேள்வியால் மறுமொழி சொன்னான் இவண். பீதாம்பரம் போலான தடித்த ஊதாப்பொன் துணிமேல் மூன்றாவது மது கொள்கலய படியில் வைக்கப்பட்டிருந்த, இவணும் பருகியதால் சரியரைவாசி மட்டத்திலிருந்த VSOP Cognac போத்தல் யாரும் தொடாமலேயே தன்பாட்டில் ‘குபுக்கப்படடட‘ என்று இரண்டாம் மூன்றாம் படியில் நழுவி bar இன் வளை தட்டு பின்புற தளத்தில் விழுந்து சில்லுச்சில்லாய் நீலக்கண் சிப்பந்தினியின் குதியுயர குருதி நிற காலணியடியில் சிதறியது. கடிதமும் மதுவும் தந்த வித்தியாசமான போதையில் இவண், வளை தட்டில் உள்ளங்கைகளை பரத்தி எம்பி எழுந்து பார்க்க, சிந்திய குடிபானம், யாரோ ஒரு பெண் ஏதோ ஒரு மரத்தில் தூ க்கிட்டு தொங்குவது போன்ற வடிவில் தெரிந்தது. இவணது கடும் போதையின் எதிர் மறை சக்தி குண்டலினி மூலாதார சக்திக்கு நீரெதிர் மாறாக சகஸ்ராரத்துக்குப் பாய்ந்து மண்டை உச்சியில் பூஜ்ஜம் ஆயிற்று.

‘எப்படியெண்டாவது அவவைக் கூப்பிட்டு கலியாணம் செய்யுங்கோ,‘ என்று குட்டி பீலா தீனக் குரலில் கத்தியது, இவணுக்கு ஈனக் குரலாகக்கூட கேட்கவில்லை.

***

அங்கு..

திடுமென்று சடட்ட்டாரென்று எஃகு அடியாக சசிவாணியின் காதாவடியைப் பொத்தி அறைந்தான், கள்ளையன். Not to be confused with சுசிவேணி அவள் சசிவாணியின் மகள். கள்ளையன் என்கிற முன்னரெல்லாம் கள்ளையனார் என அதிகமாக அழைக்கப்பட்ட ஆசாமி சசிவாணியின் கணவன். சுசிவேணியின் அப்பன். கள்ளக்கலவியில் செங்குப்பு ஐயா, கொடிச்சிவாலிக்கிழவி. ஆவளைப் பிள்ளையார் ஆலய தேர்முட்டி, கருங்கோறை அறை ஏறு மயில் ஏறு வாகன அருகில் நிகழ்ந்த யானைப் பிளிறல். ஜனித்த கள்ளையனின் பெயரானது வெள்ளையன், நல்லையன் என்பது மாதிரியான நற்பெயர்கள் போன்றன அல்ல. பெரு குழப்பமாக மோஹினி வடிவெடுத்த ஹரிப்பிரான் ஏறுமயில்-துதிக்கை தூக்கும் யானை ஏற்ற, குதிரையேற்ற வகையில் லிங்க பிரானுடன் பொருதி பொருந்தியதால் வந்த அர்த்தத்தில் இந்தப் பட்டப்பெயர் வந்ததோவென்றும் தெரியாது. தவிரவும் ஊர் அவ்வளவு விளக்கமானதல்ல. மேலும், அய்யனார் வேறு, அய்யப்பன் வேறு, என்ற கதையும் உண்டு. உபரிமலை ஐயப்ப ஸ்வாமி ஐயப்பனின் மகனெனவும் கதை உண்டு. நைஷ்டிகப் பிரம்மச்சாரி ஐ.ஸ்வாமியின் ஐயன். அப்பன் ஐயப்பனுக்கு பூர்ணா, புஷ்பகலா எனும் இரண்டு பெண்டாட்டிகள் இருக்கிற விவகாரம் இன்னும் குழப்பம் தருவதாம். இந்த கள்ளையன் எந்த வகை கள்ள ஐயன் என்பதை என்றுமே கண்டு பிடிக்க முடியாதென்றதால், அது இப்போதைக்கு தேவையில்லை.

காதாவடி அடியில் இடது கன்னம் சிவப்பு சிறு குறு குழி, குண்டுகளாய் மாற குழறிக்கொண்டு ஓடிப்போய் படுக்கையறையின் கருங்காலி மரத்து செடிவேலை செய்த தலைமாடமைந்த கட்டிலில் விழுந்தாள், சசிவாணி. ஆட்டக்காரத் தேவடியாள் என்று பெயரெடுத்த அவளது நடத்தை மண்டை விறைக்கும் அளவுக்கு இப்போ மாற்றம். அடி மூலத்தில் பூரணமாக அவள் மாறினாளா, என்பதும் தெரியாது. மூலமற்ற ஆதாரமும் ஆதாரமற்ற மூலமும் வெளித்தெரியா. மேலும், பிறப்பிலிருந்து தொட்டில் ஆட்டம்,- ஆட்டமெல்லாம் அடங்கி அமரும் வரைதான் தொடரும் என்ற விருத்தாப்பியக் கதையும் இருப்பதால் இதுவும் அதுபோல் கண்டு பிடிக்க முடியாத ஒன்றுதான். இது பற்றியும் ஊருக்கு விளக்கம் இல்லை. உலை மூடியாலும் கொலை மூடியாலும் மூடப்பட முடியாத இதே ஊர் வாய்தான், இதே சசிவாணியை இப்போ ‘தங்கமான பிள்ளை‘ என்கிறது. இதே ‘ஊ. வா‘தான் அவளை முன்னாளில் ‘பட்டை பறணை வேசி‘ எனவும் திட்டிற்று. யாது ஊரேயாயினும் யாவரும் ‘கீழீர் நீர்‘, என குறிக்கப்பட வாகானவர்களேயாம். எல்லாச் சந்தர்ப்பங்களிலுமாக எல்லோரையுமே இது குறிக்காதென்பதும் மெய். அதி திறமான ஊராட்களும் அம்பாரமாய் உளர் தான். ஊர் கீழ்மைகளில் கோள் சொல்லலும் குரோதமுமே அதி கீழ் சீத்துவக்கேடுகள்.

அறை வாங்கி மோவாய் வீங்கிய மனைவியைத் துரத்திக் கொண்டு கள்ளையன் செடி வேலைக்கட்டில் படுக்கை அறையுள் எகிற, தடுக்கவென சுசிவேணி பாய்ந்து வருவதற்குள் அருகிலிருந்த சாமியறைக்குள் செம்பருத்தி என்கிற இன்னோர் நாமங்கொண்ட ஒரேயொரு செம்பரத்தைப் பூவை

வைத்து ஒரேயொரு ப்ரபஞ்ச மாதாவை தெண்டனிடுமாற்போல் வேண்டுதல் செய்து கொண்டிருந்த தங்கைக்காரி, என்ன ப்ரபஞ்ச சக்தியைக் கொண்டிருந்தாளோ, பறந்து சாமியை விட்டு படுக்கைக்கு வந்து தகப்பன்காரன் கள்ளையன் அடிக்காலில் விழுந்து, ‘ஐயோ.. ஐயையோ அப்பா, அம்மாவை அடிக்காதேங்கோ, ஐயோ.. ஐயையோ,‘ என்று ரொம்பவும் பலம் ஈனமான தொனியில் கதறினாள். சாமி அறையில் ஏலவே, ‘அம்மையே அப்பா;ஒப்பிலா மணியே, என் அம்மைக்கு அப்பா அடிக்கக் கூடாது‘ என்ற வேண்டுதலை செய்திருக்கக் கூடும்.

இதற்குள் சுசிவேணியும் செடி வேலைப்பாட்டு கட்டிலறைக்குள் வந்திருந்தாள். அவள் வாஸ்தவத்தில் காற்றில் பாவி வந்ததாகவே தெரிந்திற்று. அந்த பாவலுக்கும் ப்ரபஞ்ச சர்வாதிகாரினியின் கிருபைக்கும் எந்தச் சம்பந்தமும் இருந்திருக்க முடியாது. அவளும் தமக்கை மாதிரி துவக்கத்தில் தகப்பன் காலில் தெண்டனிட்டு தாயாரை அடிக்க வேண்டாமென்று தான் வேண்டினாள். அந்த மன்றாட்டம் தங்கையினதிலும் வீசுரம் குறைந்ததாக இருந்தது மட்டுமல்ல, ஒரு வகையில் சிற்று சிற்றாக உரம் ஏறி, காட்டம் பெற்று எச்சரிக்கும் தினுஸிற்கு முஸ்தீபு காட்டுவதாய் காட்டிற்று. ‘நீங்கள் நினைச்ச நேரமெல்லாம் நினைச்ச மாதிரி அம்மாவுக்கு அடிக்கேலாது,‘ இப்போது, சுசிவாணி எழுந்து நின்றாள். கள்ளையனின் கழுத்தருகு தோள் மூட்டுப்பட்டைக்கு மேல்ஒன்று, ஒன்றரை அங்குலம் உயரத்தில் அவனது முதலாவது மகள் இருந்தாள். அவனது இரண்டாவது மகள், சு. வேணியின் தங்கச்சி நெடிச்சி. கள்ளையன் சட்ட்ட்டாரெனத் திரும்பி, மகள்காரியை எஃகுப் பார்வை பார்த்தான். மகள் எப்பனும் கிறுங்காமல் நெஞ்சை நிமிர்த்தி ‘ஒரேயடியாய், அர்ர்ரே வா‘ என்கிற பாங்கில் தகப்பன்காரனை எதிர் வெட்டமாய் எஃகுப்பார்வை பார்த்தாள்.

இதெல்லாம் இவ்வாறே துவங்கிற்று. ‘அதுதான் நடக்க வேணும். நடக்கும். அவ்வளவுதான்,‘ கள்ள ஐயனார் என்கிற கள்ள ஐயன்.

‘அதென்னெண்டு;? பிள்ளைக்கு விருப்பமில்லாத ஒண்டை எப்படி செய்து வைக்கிறது?‘ ஒரே ஊர் வாயால் முன்னாளில் ‘ஆட்டக்காற தேவடியாள் வேசை‘ என்று வசைக்கப்பட்டு, பின்னாளில் ‘தங்கமான பிள்ளை‘ என்று தங்கத்தட்டில் வைத்த தரத்தில் விளிக்கப்படும் சசிவாணி.

‘இஞ்சை நான் சொல்லுறது தான் நடக்கும். இந்த வீட்டிலை நான் வைச்சது தான் சட்டம். ஒரு மசிருகளும் ஒண்டும் சொல்லேலாது. ஒரு மயிரும் செய்ய ஏலாது,‘

‘என்ன இருந்தாலும் பிள்ளைக்கு பிடிக்காத ஒண்டை என்னெண்டு செய்து வைக்கிறது? கல்யாணம் ஆயிரங்காலத்துப் பயிரெண்டெல்லோ சொல்லிறவை,‘

‘பயிரும் மயிரும்;! ஊர் சும்மா வெருளித்தனமாய் எல்லாம் சொல்லும். என்னைப் பற்றிக்கூட என்னவெல்லாம் சொல்லிச்சுது. அதின்ரை கதையை விடு,‘

‘எண்டாலும் அவள்தானே வாழப்போறவள். அவளுக்குப் பிடிக்காத ஒருத்தனைக் கட்டி வைச்சு, அவளை வாணாள் முழுக்க உத்தரிக்க வைக்கிறதோ?‘

‘ஏன்;? இந்த மாப்பிளைக்கு என்ன குறை? என்ன வம்பிலை கிம்பிலை பிறந்தவனோ? படிச்ச பெடியன். பணக்காற ஆக்கள். திறமான குடும்பம். இதுக்கு மேலை என்ன வேணும்,?

‘பையனைப் பற்றி ஊரிலை நல்ல அபிப்பிராயம் இல்லையாம். எல்லா வகை குழப்படியும் உண்டாம். குடி, கூத்தியெண்டும் கேள்வி. நல்ல நிரத்தரத் தொழில் கூட இல்லையாம். அவனைக் கட்டி எங்கடை பிள்ளை தினந்தினம் உத்தரிக்கவெல்லோ வேணும்,‘

‘அதுதானே சொன்னனே. ஊர் எல்லாம் சொல்லும். அதின்ரை கதையைக் கேட்டால் ஒண்டுஞ் செய்யேலாது,‘

‘எண்டாலும் சுசியின்ரை விருப்பு வெறுப்புகளையும் கேக்கவெல்லோ வேணும். எங்கடை விருப்பத்துக்கு கொண்டு போய் கட்டைக் கட்டையிலை அடிக்கேலுமே?‘

‘உனக்கென்ன வரவர வாய் நீளுது. நான் தானே சொன்னன். இஞ்சை இந்த வீட்டிலை நான் வைச்சதுதான் றூள். நான் சொல்லுறதைத்தான் செய்ய வேணும். அம்மட்டுத்தான். அவளின்ரை கதையைக் கேட்டுக் கொண்டிருந்தால் ஒண்டுமே செய்யேலாது. ‘ ‘அவனின்ரை‘ கதையை கேட்டுக் கொண்டிருந்த சுசிவேணி, முன்னால் தனித்து அழுதபடி, நெடிதுயர்ந்திருந்த ஒற்றை வேப்பமரம் நீள்நாளாய் வாழ்ந்த, மணல் மேலடுக்குக்கு நிரவப்பட்டதால் நரை மஞ்சல் நிறத்துக்கு மாறிய அரைச்செம்மண் முற்றத்திலிருந்து, வரவேற்பறை படியோரமாய் அரக்கி நகர்ந்தாள்.

அப்போதிருந்து தான் வெக்கை ஏறிய அவளது அப்பனாத்தையின் சம்பாஷணை ஈற்றில் காதாவடி அடியில் முடிந்ததும் சாமியறை ஒற்றைச் செம்பரத்தைப்பூ சாடையாய் வாடியதும்.

அப்போதுந் தான், முன்னாள் ஒருபோது, ஒரு கதையில், ‘இடைப்பட்ட வெளி மற்றும் இடையிடைத்த கொலை‘ இல் சொன்னது போல், குலை குலையாய்க் காய்த்து கயர் முற்றி மாறி இனிப்பு நிறைந்த கனிகள் பழுத்த முற்றத்து ஒற்றை வேம்பின் உச்சாணிக் கொம்பரில் குந்தியிருந்த அண்டங்காக்கா, கக்கா போட காரணமான முற்றிய வேப்பம் பழங்களை விரைந்து ஆராய்ந்து அவுக்கவுக் என்று விழுங்கியதும் ப்ளிச் புளிச் என்று பீய்ச்சியதும் நிகழ்ந்தேறியதும்.

இங்கு…

புதினமாகத்தான் அது நடக்கும்.

விலா, பீலா, ஓலா ஆகிய மூன்று குட்டியன்களாகிய குத்தியன்களும் இவனுடன் இணைந்து யெச இற்கு போவது. நிஜத்தில் இவண் போன

முறை போல குட்டி பீலாவுடன் மட்டுமே போக எண்ணியிருந்தான். அது கடிதக்கதையின் தொடர்ச்சி போலவுமான ஒரு தண்ணியடியில் தண்ணியடித்து, தண்ணி தளும்பலிலும் தத்துவ விசாரம் செய்யும் ஏற்பாடாகவே இருந்திருக்க வேண்டும். ஆனால் ஈற்றில் எல்லாம் குழம்பிப் போயிற்று. மாறியும் போயிற்று. மதுக்குடி கொண்ட மதுவகம் அல்லது குடியகங்களின் நீள் குந்து மேசையை இங்கத்தைய பாவனையாளர், கொச்சை இச்சை பாஷையில், water hole. fountain ring. drink joint என்றெல்லாம் குறிப்பிடுவதாலேயே மேற்படி தண்ணி அடிக்குமிடம் தண்ணியடி ஆயிற்று. பெரு முஸ்பாத்திக் கொட்டையான குட்டி விலாவும் சிறு கொட்டையான கு.ஓலாவும் நெருங்கிய பிறர் பிரசினங்களில் அரையரைவாசியாக மட்டும் நட்புறவு வகையில் அக்கறை கொள்பவர்களாக தோற்றுவார்களென்பது முழு உண்மையோ என்பதிலும் சந்தேகந்தான். வேளைகளில் படு(ஊ) நிதானமாக நெருங்கியோர் மேல் அக்கறை காட்டுவதும் உண்டு. ஓலா கிட்டமட்ட எல்லா வேளைகளிலும் அக்கறைக் கட்டைதான். முறி முறி படி பானத்தட்டுக்கு முன் இருந்த வளை தட்டில் இவணும் குட்டி பீலாவும் அடுத்தடுத்து குந்தியிருக்க, அருகில் ஓரளவான கோடியிலிருந்த சுவரோரமாக ஓலாவும் விலாவும் ஒற்றை மேசையில் எதிரெதிராக உட்கார்ந்திருந்தனர். அவர்களுக்கு அருகாக கழிவறையை நோக்கி நகரும் முடக்கு தொங்கலில் சுவரையண்டி டானாப்பட இருந்த மென்மை மெத்தை வாங்கில் இரண்டு அழகழகான வாலைகள் கொறித்தீனியுடன் வெள்ளை வைன் பருகியபடி சூழ விழி பரப்பி சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மீது ஒற்றைத்தனமாய் கண் எறிந்து கொண்டிருந்தான் குட்டி விலா. அவர்களிருவரும் ரொம்பவும் பலான பதத்துக்கு உடையணிந்திருந்ததும் அவனது எறிகைக்குக் காரணம். ஒருத்தி, இத்தாலிய அடியைக் கொண்டவளாக இருக்க வேண்டும்,- படு சுருள் ஊத்தை மஞ்சள் கேஸங்கொண்டவள், துருத்திய மார்பகங்களுக்கு கீழே படு முடிச்சு போட்டது போலான பளக்கும் எரி மஞ்சல் நிற கச்சையும் நிறமெதுவென்று கண்டு பிடிக்க முடியாத வகைக்கான, கட்டைக் கழிசானோ கட்டைப் பாவாடையோவும் அணிந்திருந்தாள். மற்றவளுக்கு இளங்கறுப்பில் நீள் கூந்தல். அதற்கு மாறி மாறி ஒரு வகையில் பரட்டைத்தனமானதோ அல்லது பரத்தைத்தனமாதோ என அடையாளங்காண முடியாத விருத்தத்துக்கு நீல மற்றும் செவ்வூதா நிறங்களில் மயிர்ப்பூச்சு அடித்திருந்தாள். பிட்ட மட்டத்துக்கு கிட்டமட்ட மூன்றங்குலம் வரை மட்டுமே நீண்ட உள் உள்ள விஷயங்களை அரைகுறையாகக் காட்டும் தந்த நிற பட்டு நைலோன் நீளங்கி, அவளது மார்புக்கச்சை கறுப்பு புள்ளிகள் போட்ட வெள்ளி வண்ணமென்றும் உள் குறாடை சுத்த வான் நீலமென்றும் காட்டிற்று.

குப்பென்று மிக வலிய perfume நெடியொன்று குடிபான வளை தட்டுப்பக்கமாயும் பின்னக கழிவறை ஓடைப்பக்கமாயும் காற்றில் கிளம்பிற்று. வர வர 'கண்டவன் போனவள்' எல்லாம் தமது பிரபல பெயர் பலத்தை மூலதனமாகக் கொண்டு எக்கச்சக்கமாய் நறுவாசனைத் திரவியங்களை உற்பத்திக்கும் நிறுவனங்களை நிறுவுவதால் கங்கு கரையில்லாத வகையறாக்களில் உலகு பூரா 'வாசம்'

*1992* திரைப்படம் Scent of a Woman இல் கண் பார்வை இழந்த Al Pacino [Lt.Colonel Frank Slade] படபடவென்று பெண் புரசுகள் காவி வரும் வாசனை வஸ்துக்களை இம்மியும் பிசகாமல் துல்லியமாக அடையாளங் காண்பது போல் தாங்களும் கண்டு பிடித்தால் எவ்வளவு சுதியாக இருக்கும் என குட்டி விலாவும் குட்டி ஓலாவும் ஒரே கணத்தில் சிந்தித்தார்கள். கூடுதல் வாசனை எரி மஞ்சல் நிற கச்சைக்காரியிடமிருந்து தான் வருவதாக வளை தட்டில் குட்டி பீலாவுடன் குந்தியிருந்த இவண் ஊகித்தான். அந்த நெடியால் அருட்டப்பட்டு, 'ம்ஹீம்' என நாசி வழி வளியை உள்ளிளுத்த போது, காற்றில் பரவி மண்டைக்கு தகவல் வந்தபோது, அது சினிமாப் படத்தில் படு வியப்புகரமாக அல் பச்சினோ அடையாளம் காட்டிய பல்கலைச்சாலை ஒழுக்காற்றுக் குழு விஞ்ஞான விரிவுரையாளப் பெண்மணி சுமந்து வந்த Fleurs de Rocaille (Flowers of Rockery) ஆக இருக்குமோ என்று கூட எண்ணினான். அது வெறும் வாசனை சார் மனப்பிராந்தி ஆகக்கூட இருக்கலாம். மிக இலேசாக வாசனை வஸ்து விசிறியிருந்த பச்சை குத்திய நீலக்கண் பரிசாரகி ஊற்றிய Hennessy VSOP இனை இவன் எடுத்து சடக் மடக்கென்று பருகினான். 'உனக்கென்ன வேணும்,' என்று கேட்டதற்கு குட்டி பீலா, 'கொஞ்சம் பொறுத்து எடுக்கிறேன்,' என்றான். பிறகு என்பது வேறேதோ ஒன்றின் கட்டாயமான கட்டியமாகவும் பட்டது. இவண் மேலங்கி உட்பையில் பக்குவமாகவும் அக்கறையுடனும் மடித்து வைத்திருந்த கடிதத்தை எடுத்து குட்டி பீலா முன் வளை தட்டில் விரித்தான். அது இளஞ்சிவப்பு நிறத்துத் தாளில் கடும் மஞ்சல் நிற பாலக உரினை வில்லாளி கறுப்பு குட்டி வடிவ இதயங்களுக்கு அம்பு விடும் பாங்கில் சிறு சித்திர உருவங்கள் கொண்டதாய் இருந்தது.

அது இவ்வாறு ஆரம்பிக்கிறது° 'அன்புசால் சுசிக்கு எழுதிக்கொள்வது, எடுத்த எடுப்பிலேயே விசயத்துக்கு வருகிறேன். உனது கடிதத்தை பலமுறை படித்தேன். உனது நிலைமையை நன்றாக புரிந்து கொண்டேன். இங்கு உள்ள எனது சகல விசயங்களையும் நீ நன்றாக அறிவாய் என நினைக்கிறேன். நான் உனக்கு என்ன செய்ய முடியுமென்றால்,' கடிதத்தை வாசிக்கத் துவங்கிய கு.பீலா சட்ட்ட்டாரென்று நிறுத்தி தனக்கும் இவண் அருந்தும் கொனியாக்கை கேட்டு மடக்கென்று விழுங்க, குட்டி விலா, என்ன செய்தானோ ஏது செய்தானோ, ஆனந்தமாக விஸிலடித்துக் கொண்டு சென்று, கறுப்புப் புள்ளி கச்சைக்காரியின் அருகில் குந்தினான்....

# ‘சிதைப்பு’

**அல்லது ‘12 ஆனது 15 ஆன கதை’**

அதிகாரம்
11

## Chapter: 11

## “RUIN”

**[OR THR STORY ABOUT HOW 12 BECAME 15.]**

தாங்கள் சொல்வதை மட்டுமே நம்ப வேண்டும் என்றுதான் ‘இவர்கள்’ பொய்களை கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தக் கழிவுக்கு துர்மணம் கிடையாதென்றும் சொல்கிறார்கள்.

‘அவர்களும்‘ கிட்டமட்ட அப்படியே.

இங்கெல்லாம் நறுமணத்தை தேடாதீர்கள்.

ஒப்பீட்டுக்கு எது சகிக்க முடியாத
விதத்தில் நாறுகிறதோ அதை விடுத்து
சற்று துர் நெடி குறைந்த கழிவுகளை
சுவாசிப்பதன்றி உங்களுக்கு வேறு வழியும் இல்லை.

12,00000 எப்படி 15,00000 ஆக முடியும்?

அவர்கள் 12 இல் துவங்கும் எண்தான் சரி, என்கிற போது இவர்கள் 15 இல் நிற்கிறார்கள்.

12 சமமல்ல 15 இற்கு.

ஏதாவது வேகுமென்று
இவர்கள் 20,30 ஆயிரமென்று அப்பாவிகள்
அழிவதைத்தானே அவாவுகிறார்கள்.

அதனூடாக ஏதும் வேகாது, என்பதைத்தானே அவர்கள் தொடர்ந்து இவர்களுக்கு சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள்.

இப்படி,
30, 40, 50, 60;..1000 ஆயிரங்களை சொல்ல முடியும்.

அதிகாரம் வாழ்வையும் மனுஷத்தையும் சிதைப்பதற்காக அல்ல.

கழிவுகளை விடுத்து நறுமணப் பூங்காவுக்கு வாருங்கள்.

சுவாசம் சுகம் பெறும்.

“These” (folks) are excreting the lies insisting only what they say must be believed.

These say that the excreta don’t have bad odor.

Approximately “Those” (folks) are similar too.

Don’t search for sweet scent here.

You don’t have no other way other than to breathe the feces that has lesser dirty order avoiding the one that unbearably stinks.

How ‘come’ 12,00000 would be 15,00000?

When Those say the number that starts with 12 is correct, These stay in ‘15’.

12 is not equal to 15.

These, thinking something would be baked (from it) wish the destruction in 20,30 thousands of innocents.

Those continuously repeating only, through that nothing would be baked.

Such as this,— 30, 40, 50, 60….1000 thousands could be said.

Power is not to RUIN life and Humanity.

Omit the excrement and come to the pleasantly smelling flower-park.

Breath would get glee.

# எக்ஸில்

# புகலிட இலக்கியச் சூழலில் மறந்து போகமுடியாத சில பக்கங்கள்

நாம் தொடங்க இருக்கும் சஞ்சிகைக்கான பெயரைத் தெரிவு செய்ய ஒரு ஞாயிற்றுக்கிழமை ஞானம் வேலை செய்யும் பிட்சாக் கடையில் கூடினோம். நான் ஜெபா ஞானம் மூவரும் கவனி என்ற பெயரையும் கலைச்செல்வன் எக்ஸில் என்ற பெயரையும் லக்ஷ்மி நிகழ் என்ற பெயரையும் விஜி அவர்கள் சரண் என்ற பெயரையும் பரிந்துரைத்து உரையாடல் நிகழ்ந்தது. எனக்கென்னவோ சரண் என்ற பெயர் குடும்பத்தில் ஆண்பிள்ளைகளுக்கு வைக்கும் பெயராக நான் உணர்ந்ததால் எனக்கு அது ஈர்ப்பானதாக இருக்கவில்லை. நிகழ் என்ற பெயருடன் ஓரளவுக்கு ஒத்துப் போக முடிந்தது. ஆனாலும் அதில் ஒரு விருப்பம் இருக்கவில்லை.

ஆனால் கலைச்செல்வன் அடையாளம் காட்டிய எக்ஸில் என்ற பெயர் குறித்து அவர் ஒரு விளக்கம் சொன்னார். அதன் பெயரில் ஏற்கனவே மறையாத மறுபாதி என்ற கவிதைத் தொகுப்பும் -மற்றது சிவசேகரத்தினுடையது என நினைக்கிறேன்- என்ற இரண்டு புத்தகங்களைக் கொண்டு வந்திருப்பதாகவும் ஆனால் அவை பதிவு செய்யப்பட்டவை அல்ல என்றும் தனக்குப் பிடித்த பெயர் அதுதான் எனவும் கலைச்செல்வன் சொன்னார்.

கவனி என்ற பெயர் குறித்து நாம் சொல்லும் பொழுது, நமக்கெனச் சொல்ல வேண்டிய விடயங்கள் இருக்கின்றன. இந்த சமூகத்திலிருந்து சொல்லப்பட வேண்டிய விடயங்கள் இருக்கின்றன.



கவனி என்ற பெயர் குறித்து நாம் சொல்லும் பொழுது, நமக்கெனச் சொல்ல வேண்டிய விடயங்கள் இருக்கின்றன. இந்த சமூகத்திலிருந்து சொல்லப்பட வேண்டிய விடயங்கள் இருக்கின்றன. அதனால் ஒரு கவனத்தை ஏற்படுத்தும் முகமாக அந்தப்பெயர் நல்லது எனத் தெரிவித்தோம். ஆனால் ஒரு சஞ்சிகைக்குப் பெயர் வைப்பது என்பதனை இவ்வளவு சிக்கலாக இருக்கும் என நான் நினைக்கவில்லை.

**கற்சுறா**

அதனால் ஒரு கவனத்தை ஏற்படுத்தும் முகமாக அந்தப்பெயர் நல்லது எனத் தெரிவித்தோம். ஆனால் ஒரு சஞ்சிகைக்குப் பெயர் வைப்பது என்பதனை இவ்வளவு சிக்கலாக இருக்கும் என நான் நினைக்கவில்லை.

ஒரு நீண்ட உரையாடலின் முடிவில் மிகவும் குழந்தைத்தனமாகப் பெயர் எழுதிக் குலுக்கிப் போட்டுத் தேர்வு செய்வது என்று முடிவு செய்தோம். லக்ஷ்மியின் மகனான கபிலன் சிறிய வயதில் இருந்தபடியால் அவனை அந்தக் குலுக்கலில் தெரிவு செய்ய ஒருமனதோடு முடிவு செய்தோம். (இந்த விளையாட்டை இப்பொழுது நினைக்க மிகவும் வேடிக்கையாக இருக்கிறது)

குலுக்கலில் தெரிவான பெயர் எக்ஸில். அதன் பின் கலைச்செல்வன் அவர்கள் எக்ஸில் என்பதன் அர்த்தம் குறித்தும் அது தெரிவு செய்யப்பட்டதற்காக அதனைத்தான் கட்டாயம் பெயராகக் கொள்ள வேண்டும் என்றில்லை. நீங்கள் விரும்பினாலே மட்டும் அதனை ஏற்கலாம் என்றும் சொன்னார். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டதற்கு நாம் எந்த அர்த்தத்தையும் புதிதாகக் கற்பனை பண்ணவில்லை. இந்தப் பெயரை நாங்கள் தொடங்க இருக்கும் சஞ்சிகைக்குப் பெயராக வைக்க முழுமனதுடன் அனைவரும் ஒத்துக் கொண்டோம்.

ஆனால் அந்த நாளே அந்த சஞ்சிகையின் உரையாடற் களத்திற்குக் கவனி என்ற பெயரை அடையாளமாக இடுவோம் எனக் கேட்டு அனைவரது சம்மதத்துடன் சஞ்சிகையின்

மீதான விமர்சனப்பகுதிக்குக் கவனி என அனைவரது ஒப்புதலில் உறுதி செய்யப்பட்டது. கிட்டத்தட்ட அது சஞ்சிகையின் கடிதப்பகுதி. ஒரு சஞ்சிகைக்கு அதன் உரையாடற்களமாக - விமர்சனப் பகுதியாக கடிதப்பகுதி இருப்பது மிக முக்கயமானது. அந்த மிக முக்கியமான பகுதிக்கு 'கவனி' எனப் பெயரிட்டோம்.

அன்றிலிருந்து சஞ்சிகைக் கான ஆக்கங்களைச் சேகரிக்கும் வேலையையும் அதனை உத்தி யோகபூர்வமாகப் பதிவு செய்யும் வேலையையும் ஆரம்பிப்பதாக முடிவு செய்யப்பட்டது.

ஆனால் அன்று மாலை அசோக் அண்ணன் அவர்கள்( யோகன் கண்ணமுத்து) எனக்கு தொலைபேசியில் அழைத்து நீண்ட நேரம் பேசினார். என்னுடன் நீண்ட பழக்கமுள்ளவர். பாரிசில் ஆரம்பத்தில் ஒன்றாக வசித்து வந்தவர்கள் நாங்கள். அதனையும் விட *1992*ம் ஆண்டு பாரிசில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பிற்கு அவருடன் இணைந்தே சென்றிருக்கிறேன். இலக்கிய உரையாடலாக இருந்தாலும் சரி அரசியல் உரையாடலாக இருந்தாலும் சரி நீண்ட நேரம் பேசக் கூடிய உறவிருந்தது எங்களுக்கு. அந்த வகையில் அவர் நாம் தொடங்க இருக்கும் சஞ்சிகை குறித்து உரையாடினார்.

'என்ன கலைச்செல்வனுடன் சேர்ந்து சஞ்சிகை கொண்டுவரப் போறீங்களாம்? உங்களுக்குக் கலைச்செல்வனைப் பற்றி முழுதாகத் தெரியாது. கலைச்செல்வன்தான் புகலிடத்தில் வெளிவந்த அத்தனை சஞ்சிகைகளும் நின்று போவதற்குக் காரணமானவன்' என்று தொடங்கிய பேச்சு, 'பாருங்கள் நான் இப்ப சொல்கிறேன், அவன் தான் வைத்திருந்த எக்ஸில் என்ற பெயரைக் கொண்டுதான் உங்களை வைத்து சஞ்சிகை தொடங்குவான்' என்றார். எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. எங்களுக்கு முன் தொடங்கப்பட்ட புகலிட இலக்கியச் சஞ்சிகைகள் குறித்தான ஒரு அனுபவக் கதை எனக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆதலினால் அவரிடம் வெளிப்படையாகச் சொன்னேன். 'அண்ண! இவ்வளவையும் நான் நாளைக்குக் கலைச்செல்வனிடம் கேட்கிறேன். என்ன பதில் வருகிறது என்பதனைப் பார்த்து மிகுதியைச் செய்வோம்' என்றேன். 'நான் சொல்கிறேன் என்றே சொல்லுங்கள்' என்றார்.

ஆக, அந்த விமர்சனம் குறித்து எந்தக் கூச்சமும் இல்லாமல் மறுநாள் கலைச்செல்வனிடம் தெரிவித்து, அவரது கருத்தினைக் கேட்டேன். கலைச்செல்வன் அவர்கள் பெரிதாகக் கெக்கட்டம் விட்டு சிரித்தார். சிரிப்பினை நிறுத்தியபின், இதற்குத் தன்னிடம் எந்தப் பதிலும் இல்லை என்று சொல்லிவிட்டு, நாம் ஒன்று செய்வோம் எக்ஸில் என்ற பெயரை விட்டுவிடுவோம். கவனி என்றே வைப்போம் என்றார்.

அதன் பின் ஞானத்தின் கடையில் கூடி விவாதித்தோம். கலைச்செல்வன் அவர்கள் எந்த வெட்கமும் படாது, வெளிப்படையாகப் பேசினார். அவரிடம் எந்தக் கள்ளத் தனத்தையும் நாங்கள் பார்க்கவில்லை. எக்ஸில் என்ற பெயரை நீக்கிவிடுவோம் என்று பதிலளித்தார். அசோக் அண்ணனின் தனிப்பட்ட ஒரு குற்றச்சாட்டிற்காக மட்டும் அதனை நீக்கத் தேவையில்லை. எங்களுக்கு பெயரில் எதையும் கருதிக் கொள்ளவில்லை என்பதனையும் அது செயற்படுத்தப்போகும் செயற்பாடுதான் முக்கியம் எனத் தெரிவித்து எக்ஸில் என்ற பெயரையே வைப்பதற்கு அனைவரும் சம்மதம் தெரிவித்து ஒப்புதல் அளித்தோம்.

அடுத்த கட்டமாக எக்ஸில் என்ற சஞ்சிகையின் பெயரை சட்டரீதியாகப் பதிவு செய்யும் வேலையைத் தொடங்கு வதென்று தீர்மானிக்கப்பட்டது.

எக்ஸில் சஞ்சிகைக்குத் தலைவராக ஜெபா அவர்களும் செயலாளராக லக்ஸ்மி அவர்களும் பொருளாளராக விஜி அவர்களும் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் உத்தியோக பூர்வமான செயற்பாட்டாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். அசோக் அண்ணனின் கேள்விதான் இந்தமாதிரியான நியமிப்பினைக் கொண்டு வர வழி செய்தது.

அந்தப் பதிவின் பின்னர் சஞ்சிகைக்கான தொடர்பு முகவரி, இலச்சினை என்பவற்றைத் தீர்மானித்து அதனைச் சீராக்கிய பின் சஞ்சிகையை வெளிக் கொண்டுருவது என முடிவு செய்தோம்.

ஏற்கனவே இனியும் சூல் கொள் தொகுப்பின் மூலமாக எங்களுக்கு அறிமுகமான நண்பர் கிருஷ்ணராசா அவர்கள் லண்டனில் வடிவமைப்பிலும் அச்சாக்கத் துறையிலும் செயற்பட்டுவருவதால் அவரையே நமது சஞ்சிகைக்காகவும் தொடர்பு கொண்டோம். கிருஷ்ணராசா அவர்கள் கலைச்செல்வன்-லக்ஷ்மி இருவருடனும் நீண்டகால நட்பில் இருந்ததால் எமக்கு அது இலகுவாக இருந்தது.

எக்ஸில் சஞ்சிகையை காலாண்டிதழாகக் கொண்டுவரும் நோக்குடன் ஆக்கங்களைச் சேகரிக்கத் தொடங்கினோம்.

ஈழத்துச் சூழலிலும் புகலிடச் சூழுலிலும் ஏன் தமிழ்நாட்டுச் சூழலிலும் ஒரு சஞ்சிகைக்கு எக்ஸில் என்று பெயர் சொல்லத் தொடங்குவது ஆரம்பத்தில் கொஞ்சம் கஸ்டமாகவே இருந்தது. அதற்கான நீண்ட விளக்கத்தையும் விபரணையையும் சொல்ல வேண்டியிருந்தது. ஒரு பெண்ணின் பெயரையோ அல்லது பூவின் பெயரையோ அல்லது ஒரு காற்றின் பெயரையோ கடலின் பெயரையோ, காலத்தின் பெயரையோ சஞ்சிகைகளுக்கு வைத்துப் பழக்கப்பட்ட சூழலுக்குள் எக்ஸில் என்ற பெயரைச் சொல்வது வன்னியில் இருக்கும் ஒரு ஊரின் பெயரைச் சொல்வது போன்று எனக்கு இருந்தது. எக்ஸில் என்று பெயரைச் சொன்னதும், புருவத்தை உயர்த்தி கண்ணை வாயிற்குள் நுழைக்கும் பலரை நான் கண்டிருக்கிறேன்.

எக்ஸில் என்பதனை அதன் எழுத்துக்களால் கணக்கிடும் நிலையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் அந்தச் சந்தர்ப்பங்களில் எப்பொழுதும் தோன்றிக் கொண்டேயிருக்கும்.

தொடரும்



# சொல்ல மறந்த கதை:04

அலெக்ஸ் பரந்தாமன்

அவனுக்கு ஒரே யோசனையாக இருந்தது. போர்க்கள நிலைமைகள் மனதை அழுத்திக் கொண்டிருந்தன. மனதை ஏதோ குடைவது போன்ற உணர்வை உணர்ந்து கொண்டிருந்தான். வெளியே சொல்லமுடியாத வேதனை அது. ஊரின் நினைவுகள் அடிக்கடி வந்து, அவனுக்குள் அலைக்கழித்த வண்ணம் இருந்தன. வீடுவளவு, வயற்காணி, ஆடுகள், கோழிகள், பெறுமதியான தளபாடங்கள்... என அவனுக்கு இருந்தன. பொருளாதாரத் தடைக்குள்ளும் புலிகளுக்கு வரி கட்டியபடி... அவன் ஓரளவு வசதியாகத்தான் வாழ்ந்து கொண்டிருந்தான். ஆனால், இன்று...?

அவன் துணுக்காய் பகுதியைச் சேர்ந்தவன். இராணுவத்தின் நிலம் பிடிக்கும் முன்னேற்றம்... அவரவர் இருப்பிடங்களை விட்டு வெளியேற்றியபோது, அவனும் தனது ஊரை விட்டுப் புறப்பட்டான். புதுக்குடியிருப்பில் உள்ள இரணைப்பாலை வீதியில் ஒருவரது காணியில் வந்து தங்கியிருந்தான். அவனுக்கு அந்த இடம் பிடித்திருந்தது. சுற்றிவர பாலை, முதிரை, வேம்பு, மா, பலா, தென்னை, பனையள்... என ஆங்காங்கே வளர்ந்து நின்றதில், பசுமையாகக் காட்சியளித்தது. வெயிலின் தாக்கம் தெரியவில்லை. அத்தோடு, கிபிர் விமானங்களின் பார்வையும் இலகுவில் படுவதாகவும் இல்லை. அருகருகே குடிமனைகள் இருந்தன. வெற்றுக்காணிகளில் இடம்பெயர்ந்து வந்தவர்கள் குடியிருந்தார்கள். அருகே ஓர் இந்து ஆலயம் இருந்தது. வெள்ளிக்கிழமைகளில் மட்டும் மதிய நேரம் அந்தணரொருவர் வந்து பூசை செய்துவிட்டுப் போய்விடுவார். இயக்கத்தில் உள்ள பிரச்சாரப்பிரிவினரால் அவ்வப்போது நிகழும் 'பிள்ளை பிடிப்பு' சம்பவங்களோடு, இடைக்கிடை கிபிர்விமானங்கள் வந்து பயம் காட்டி விட்டுப் போய்விடும்.

அவன் தங்கியிருந்த காணிக்கு உரித்துடையவர் அக்காணிக்குள்ளே வடகிழக்குத் திசையை அண்டிய பக்கமாக ஒரு கல்வீட்டில் வசித்து வந்தார். அவருக்கு மனைவி மற்றும் பத்து வயதுக்குட்பட்ட இரண்டு சிறு பிள்ளைகள் இருந்தன. அவ்வப்போது, அப்பிள்ளைகள் வீட்டு முற்றத்தில் நின்று, விளையாடுவதும், கிபிர் விமானங்களின் மிகையொலி கேட்டதும், வீட்டிற்கு அருகாமையில் உள்ள மாமரத்தின் கீழுள்ள பங்கருக்குள் சென்று விடுவதுமாக அவர்கள் இருந்தார்கள். 'சிறிய குடும்பம்போல...' என்று அவன் தனக்குள் நினைத்துக்கொண்டு, தன்பாட்டில் இருந்து விட்டான்.

காணி உரிமையாளரும் வசதியாகத்தான் வாழ்ந்து கொண்டிருந்தார். மாலுக்குள் நெல்லுமூடைகள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. எருமைப்பட்டி அவரிடமிருந்தது. நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண நிலைமையின் நிமித்தம், நேரத்தோடு அவற்றை விற்றுவிட்டார். எருமைப்பட்டி தவிர, கறவைமாடுகள் மூன்றும் நான்கு சோடி ஆடுகளும் நின்றன.

அவன் அந்தக்காணிக்குள் இருப்பதற்கு அவரிடம் அனுமதி கேட்டபோது, அவர் சில நிபந்தனைகளை விதித்தார். அதற்கு அவன் சம்மதித்த பிற்பாடுதான், அவனை அவர் அந்தக்காணிக்குள் குடியிருக்க அனுமதித்தார்.

'தம்பி! நீர் இதுக்குள்ள இருக்க வாறீர் சரி... ஆனால், பின்னடிக்கு எனக்கு ஏதாவது கரைச்சல் கிரைச்சல் தாறதுமாதிரி இருக்கக் கூடாது கண்டியோ.'

அவனுக்கு எதுவும் புரியவில்லை. இவர் என்ன நோக்கத்தோடு, இப்படிக் கேட்கிறார்... ? என அவன் குழப்பமடைந்தான்.

'நீர் முன்னம் வவுனியாக்குப்போய் வியாபாரம் செய்தனீரோ?'

'இல்லை அண்ணை! நான் பிறந்து வளர்ந்ததுக்கு இன்னமும் வவுனியாப் பக்கம் போனதில்லை...'

அவர் அவனை ஒருமாதிரியாகப் பார்த்தார். அவனது வார்த்தையை அவர் முற்று முழுதாக நம்பவில்லை.

'ஏன் இப்படிக் கேட்கிறியள்...?' அவன் திருப்பிக் கேட்டான்.

அவனது கேள்வி அவருக்குப் பிடிக்கவில்லை.

'உங்கை வவுனியாக்குப் போய்வந்த ஆக்களாலைதான் இண்டைக்கு இயக்கத்துக்கு இந்த நிலை...'

அவன் அவரை வினாக்குறியோடு நோக்கினான்.

'எளிய கழிசடைகள்... வவுனியாக்கு வியாபாரத்துக்கெண்டு போய், அங்கை ஆமிக்காரன் குடுக்குறதை வேண்டித் திண்டுபோட்டு வந்து, இஞ்சை இயக்கத்தின்ர பேஸுகளைக் காட்டிக் குடுத்திட்டு நிக்குதுகள். இருந்தாலும், எங்கட பொடியள் விடமாட்டாங்கள். உங்கை ஆமியின்ர எத்தனை முகாம்களுக்கை பூந்து விளையாடினவங்களுக்கு, உந்த ஆமியளை அடிச்சுக் கலைக்கிறது ஒரு பெரிய வேலையே! அவங்கள் எப்பவும் உள்ளுக்கை வரவிட்டிட்டு அடிக்கிற ஆக்கள்...' காணிக்காரர் கூறிக்கொண்டே போனார்.

அவரது கூற்று அவனுக்கு சிரிப்புணர்வை ஏற்படுத்தியது. அடக்கிக் கொண்டான். வவுனியாக்கு சிறு வியாபாரத்துக்கெனப் போன ஆக்களாலைதான், ஆமி இவ்வளவு தூரத்துக்கு முன்னேற முடிந்திருக்கு... என்ற அவரது அரசியல் மற்றும் போராட்ட அறிவை நினைத்த அவன், அவரோடு மேற்கொண்டு கதைக்க விரும்பவில்லை. மௌனமானான்.

சுமார் இரண்டு வாரங்களுக்குப் பிறகு, அவனது அத்தான் ஒருவர் அவன் இரணைப்பாலையில் இருப்பதாக அறிந்து, அவனைத்தேடி அந்தக் காணிக்குள் வந்தார். மைத்துனர் இருவரும் குடும்ப விசயங்கள் மற்றும் சமகால

**'எளிய கழிசடைகள்... வவுனியாக்கு வியாபாரத்துக்கெண்டு போய், அங்கை ஆமிக்காரன் குடுக்குறதை வேண்டித் திண்டுபோட்டு வந்து, இஞ்சை இயக்கத்தின்ர பேஸுகளைக் காட்டிக் குடுத்திட்டு நிக்குதுகள். இருந்தாலும், எங்கட பொடியள் விடமாட்டாங்கள். உங்கை ஆமியின்ர எத்தனை முகாம்களுக்கை பூந்து விளையாடினவங்களுக்கு, உந்த ஆமியளை அடிச்சுக் கலைக்கிறது ஒரு பெரிய வேலையே! அவங்கள் எப்பவும் உள்ளுக்கை வரவிட்டிட்டு அடிக்கிற ஆக்கள்...' காணிக்காரர் கூறிக்கொண்டே போனார். அவரது கூற்று அவனுக்கு சிரிப்புணர்வை ஏற்படுத்தியது. அடக்கிக் கொண்டான். வவுனியாக்கு சிறு வியாபாரத்துக்கெனப் போன ஆக்களாலைதான், ஆமி இவ்வளவு தூரத்துக்கு முன்னேற முடிந்திருக்கு... என்ற அவரது அரசியல் மற்றும் போராட்ட அறிவை நினைத்த அவன், அவரோடு மேற்கொண்டு கதைக்க விரும்பவில்லை. மௌனமானான**

போராட்ட நிலைவரங்கள் குறித்துக் கதைத்துக் கொண்டிருந்தனர். காணிக்குள் அவனிடம் புதிதாக வந்த ஒருவரைக் கண்டுவிட்ட காணியின் உரிமையாளர் உடனே அவர்களிடத்துக்கு வந்து, அவனது அத்தானைக் குறித்து அவனிடம் விசாரித்துத் தெரிந்து கொண்டார்.

பின்பு அத்தானும் அவரும் மக்கள் இடம்பெயர்வது குறித்து உரையாடிக் கொண்டிருக்கையில், அத்தான், 'உவங்கள் ஆமிக்காரர் முகாமை விட்டு வெளிக்கிடும் வரைக்கும் என்ன செய்து கொண்டிருந் தவங்கள்...? வீடு வீடாப் போய் பிள்ளையளைப் பிடிச்சாங்கள். அதுகளைக் கொண்டு போய் என்ன செய்யிறாங்கள்...?' என்று கேட்டுவிட்டார்.

அத்தான் எப்போதும் வெளிப்படையான மனிதர். பேச்சிலும், செயலிலும் வெளிப் படுத்தியே விடுவார். இயக்கத்தின் சமகாலப் போக்கோடு உடன்பாடு இல்லாமல் இருந்தது. மக்களைப் பகைத்த எந்தவொரு விடுதலை இயக்கமும் வெற்றி கண்டதில்லை என்பதை அவர் அறிந்திருந்தார். மக்களுக்கு விருப்பமற்ற பிள்ளை பிடிப்பானது, விடுதலை உணர்வை மக்களிடத்திலிருந்து அந்நியப்படுத்தி விடும் என்பதையும் தெரிந்திருந்தார். அவர் இயக்கத்தையும் அதன் செயற்பாடுகளையும் குறித்து விமர்சித்தபோது, பக்கத்தில் நின்ற காணிக்கார உரிமையாளருக்கு கடுப்பேறிக் கொண்டது.

'ஹலோ! இஞ்சை பாரும் காணும்... எங்கட பொடியளைப் பற்றி உதிலை நிண்டு கொண்டு, உப்படிக் கதைக்கப்படாது கண்டியோ! அவங்கள் இப்பவும் ஆமியளோடை அடிபட்டுக் கொண்டுதான் இருக்கிறாங்கள். உங்கை எத்தனையோ தாய், தேப்பன்மார் போராட்டத்துக்கு தங்கட பிள்ளையளை அனுப்பாமல், பொத்திப் பொத்திப் பாதுகாக்கினம் தெரியுமே? ஏன்... அவையள் தங்கட பிள்ளையளில ஒண்டைப் போராட்டத்துக்கு அனுப்பினால் என்ன? 'தூக்குங்கள் துப்பாக்கி! துணிந்துவிட்டால் எவன் பாக்கி... ஆக்குங்கள் தமிழீழம் அனுபவிப்போம் சுதந்திரம்...' எண்டு அவங்கள் பிரச்சாரம் செய்யிறது உங்கை ஒருத்தருக்கும் கேக்கேல்லையோ?! உப்பிடியான ஆக்களாலைதான் பொடியள் ஆமியளோடை அடிபடேலாமல் கிடக்குது...'

'அப்ப அவங்கள் ஆமியளோடை ஈடு குடுத்து அடிபடேலாமல் கிடக்குதெண்டால், நீங்கள் போகலாம்தானே! அல்லது உங்களுக்குப் பிள்ளையள் இருந்தால், அதில ஒண்டை அனுப்பி வைக்கலாம்தானே? ஏன் ஊராக்களின்ர பிள்ளையளைப் போகச் சொல்லுறியள்?'

காணிக்காரர் இதைக் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை சிவந்துவிட்டது

அவரது முகம்.

‘நான் அடிபாட்டுக்குப் போறது கிடக்கட்டும். முதல்ல நீர் போற வழியைப் பாரும்…‘

அத்தானின் முகத்தில் அரும்பியது ஓர் நக்கல் புன்னகை.

‘நான் போகவேண்டிய அவசியமில்லை. என்ர பிள்ளையளில ஒருவன் மாவீரர். மற்றவள் கடைசிப்பெட்டை கடற்கரும்புலி. இளையவன் இப்ப அடிபாட்டில நிக்கிறதாக் கேள்வி. நான் ஒண்டும் சாதாரண ஆள் இல்லை. மாவீரர், போராளி குடும்பம். என்னைப்போல நீரும் மாவீரர் போராளி குடும்பமோ? ஒருக்காச் சொல்லும் பாப்பம்…‘

அத்தான் கேட்ட கேள்வி காணிக்காரரைச் சற்றுத் தடுமாற வைத்தது. அவருக்குப் பக்கத்தில் நின்ற மைத்துனன் மெலிதாகச் சிரித்தான்.

‘போராட்டத்துக்கு என்ர பிள்ளையள் போகவேண்டிய அவசியமில்லை. அதுகள் எல்லாம் சின்னனுகள். எனக்கு இயக்கத்தில இருக்கிற ஆக்களையெல்லாம் தெரியும். இரண்டு நாளைக்கு முன்னம்கூட, அரசியல்துறையில இருக்கிற ரண்டுபேர் என்னட்டை வந்து என்னோடை இருந்து கதைச்சுப் போட்டு, சாப்பிட்டிட்டும் போயிருக்கினம். இயக்கம் நடத்துற ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்… பகிஷ்கரிப்புகள்… உண்ணாவிரதங்களிலையெல்லாம் நான் முதலாம் ஆளா நிண்டிருக்கிறன். நடத்தியுமிருக்கிறன். இயக்கம் உருவான காலம் தொட்டே நான் ஒரு ஆதரவாளன். தலைவர்கூட ஒருவகையில தூரத்து வழிச் சொந்தக்காரர்…‘

‘ஓகோ…! தலைவர் உம்முடைய தூரத்துவழிச் சொந்தக்காரன் எண்டதாலைதான், மற்றவேன்ர பிள்ளையளைப் போராட்டத்துக்குப் போகச்சொல்லி, உம்முடைய நாக்கு உப்புடிப் புளிப்புக் கதையள் கதைக்குதோ?‘ வெளிவந்தன அத்தானிடமிருந்து வார்த்தைகள் கடுமையாக

**‘போராட்டத்துக்கு என்ர பிள்ளையள் போகவேண்டிய அவசியமில்லை. அதுகள் எல்லாம் சின்னனுகள். எனக்கு இயக்கத்தில இருக்கிற ஆக்களையெல்லாம் தெரியும். இரண்டு நாளைக்கு முன்னம்கூட, அரசியல்துறையில இருக்கிற ரண்டுபேர் என்னட்டை வந்து என்னோடை இருந்து கதைச்சுப் போட்டு, சாப்பிட்டிட்டும் போயிருக்கினம். இயக்கம் நடத்துற ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்… பகிஷ்கரிப்புகள்… உண்ணாவிரதங்களிலையெல்லாம் நான் முதலாம் ஆளா நிண்டிருக்கிறன். நடத்தியுமிருக்கிறன். இயக்கம் உருவான காலம் தொட்டே நான் ஒரு ஆதரவாளன். தலைவர்கூட ஒருவகையில தூரத்து வழிச் சொந்தக்காரர்…‘ ‘ஓகோ…! தலைவர் உம்முடைய தூரத்துவழிச் சொந்தக்காரன் எண்டதாலைதான், மற்றவேன்ர பிள்ளையளைப் போராட்டத்துக்குப் போகச்சொல்லி, உம்முடைய நாக்கு உப்புடிப் புளிப்புக் கதையள் கதைக்குதோ?‘ வெளிவந்தன அத்தானிடமிருந்து வார்த்தைகள் கடுமையாக.**

‘ஆரடா… புளிப்புக்கதை கதைக்கிறது? முதல்ல வளவை விட்டு வெளியில போடா…‘ என்று கூறியபடி… காணிக்காரர் அத்தானை நெருங்கினார். நிலைமை மோசமடைவதை அவன் உணர்ந்தான். இருவருக்குமிடையில் நின்று விலக்குப் பிடித்து காணிக்காரரைச் சமாதானப் படுத்தினான். அவரை வீட்டிக்குப் போகும்படி வேண்டினான். அவனது வேண்டுதலை ஏற்று, அத்தானை அவர் பேசியபடி… தனது வீட்டிற்குச் சென்றார். அத்தானும் அவனும் தரப்பாள் கொட்டிலுக்குள் நுழைந்தார்கள்.

‘ஏண்டா தம்பி… அந்தாள், தலைவர் தன்ர சொந்தக்காரர் எண்டெல்லாம் கதைச்சார்! அவற்ர குடும்பத்துக்கை ஆராவது போராடப் போயிருக்கினமே?‘ அத்தான் கேட்டார்.

‘என்னெண்டு தெரியேல்லை அத்தான். நான் வந்ததில இருந்து, பத்து வயதிற்குட்பட்ட ரண்டு பிள்ளையள்தான், உந்த மாமரத்துக்குக் கீழை நிண்டு விளையாடுறதைக் கண்டிருக்கிறன். மற்றும்படி வளர்ந்த பிள்ளையள் ஏதும் இருக்கிறதா நான் காணேல்லை…‘

‘தலைவர் தனக்குச் சொந்தமெண்டாப் போல, ஊராக்களின்ர பிள்ளையளைப் போராட்டத்துக்குப் போ… எண்டு ஆராலும் சொல்ல முடியாது…‘ அத்தானுக்கு இன்னமும் சினம் அடங்கியபாடாக இல்லை.

‘சரி… விடுங்கோ அத்தான். இப்பெல்லாம் தலைவற்ர பேரைப் பயன்படுத்தி எத்தனையோ பிழைப்பு நடத்துதுகள். அதில இதுவும் ஒண்டெண நினைச்சுக்கொண்டு, கடந்து போக வேண்டியதுதான்…‘ என்று அவன் கூறிக்கொண்டிருக்கையில், காணிக்காரர் வீட்டுநாய் பலமாகக் குரைக்கத் தொடங்கியது.

வீட்டுக்குள்ளிருந்த அத்தானும் அவனும் வெளியேவராமல், தரப்பாளில் தென்பட்ட ஒரு துவாரமூடாகப் பார்த்தார்கள்.

காணிக்குள் வந்தவர்கள் இயக்கத்தின் பிரச்சாரப் பிரிவினர். வந்தவர்களில் ஒருசிலரது தோள்களில் ஏ.கே. ரக துவக்குகள் தொங்கியபடி இருந்தன.

‘ஆரிஞ்ச வீட்டுக்காரர்…?‘ வந்தவர்களுக்குப் பொறுப்பானவன் கேட்டான்.

‘ஏன்…? நான்தான்! என்ன விசயம்?‘ கேள்வி கேட்டவன் முன்பாக வந்து நின்று, காணிக்காரர் கூறினார்.

‘பிள்ளைபிடிகாரரர் அடிபாட்டுக்கு ஆள் சேர்க்க வந்து நிக்கினம்…‘ தரப்பாள் வீட்டுக்குள் அத்தானின் அருகே இருந்த அவன் மெதுவாகக்

கூறுகிறான்.

'உங்கட குடும்பத்தில ஆராவது போராளி, மாவீரராகி இருக்கினமோ?'

பொறுப்பாளன் கேட்ட கேள்விக்கு, காணிக்காரர் வலிந்து தன்முகத்தில் ஒரு புன்முறுவலை வெளிப்படுத்தினார்.

'எனக்கு இரண்டு சின்னப் பிள்ளையள்தான் இருக்குதுகள். அதுகள் படிக்குதுகள்'

காணிக்காரரின் மனைவியோடு ஒட்டிக்கொண்டு நின்ற அந்த இரண்டு பிள்ளைகளையும் பார்த்த பொறுப்பாளனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

'உங்கட குடும்ப அட்டையை ஒருக்காத் தாங்கோ...' பொறுப்பாளன் கேட்டான்.

'எதுக்கு...?'

'எத்தனை பேர் இருக்கெண்டதைப் பார்க்கிறதுக்குத்தான்...'

'இதுக்கெல்லாம் குடும்ப அட்டை எதற்கு...? நாங்கள் எல்லாருமா நாலுபேர்தான் இருக்கிறம்...' காணிக்காரரின் குரலில் பதற்றம் தெரிந்ததை பொறுப்பாளன் அவதானித்து விட்டான்.

காணிக்காரர் குடும்ப அட்டையைக் கொடுக்கவில்லை. அதற்கான காரணங்களைப் பலவிதமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். அவரது மனைவியின் முகத்தில் அச்சம் பரவியிருந்தது. குடும்ப அட்டை பொறுப்பாளனின் கைக்கு வரவில்லை. அவனோடு கூடவந்தவர்கள் பொறுமை காத்தபடி... அமைதியாக நின்றார்கள்.

ஒருகட்டத்தில் பொறுப்பாளன் தன் பொறுமையை இழக்க, அவனது வலதுகரம் காணிக்காரரின் கன்னத்தைப் பதம் பார்த்தது. அதன்பின் குடும்ப அட்டை பொறுப்பாளனின் கைக்கு வந்து சேர்ந்தது.

'குடும்ப அட்டையில, மொத்தம் ஐந்து அங்கத்தவர்களின் பெயர்கள் இருக்கு. இப்ப இதில ரண்டு பிள்ளையள்தானே இருக்கு. மற்றைய ஒரு பிள்ளை எங்கே? ஆண்பிள்ளை. வயசு பத்தொன்பது. எங்கை பிள்ளை...?'

**மெதுவாக அலுமாரிக் கதவின் கைப்பிடியில் தன் கையை வைத்து, இலேசாக அதை மறுபக்கமாகத் திருகித் திறந்தபோது... திகைத்தது சகா மட்டுமல்ல, அலுமாரிக்குள் நின்ற வாட்ட சாட்டமான ஓர் இளைஞனும்தான்.**

'இயக்கம் புடிச்சுக்கொண்டு போயிட்டுது...' காணிக்காரரின் மனைவி முந்திக்கொண்டு பதில் கூறினாள். அவளது கண்கள் கலங்கியிருந்தன.

'இயக்கம் எங்கை புடிச்சது? எவடத்தில புடிச்சது? எத்தனையாம் திகதி புடிச்சது? இப்ப புடிச்சு எத்தனை நாள்...?' பொறுப்பாளன் கேட்ட கேள்விகளுக்கு காணிக்காரனின் மனைவியால் பதில்கூற முடியவில்லை. அவள் அழத்தொடங்கினாள். காணிக்காரர் மலாரடித்துப் போனவராய் அப்படியே நின்றார்.

'இஞ்சை பாருங்கோ... நான் என்றைக்குமே இயக்கத்துக்கு ஆதரவாளா...' என்று கூற முயற்சிக்க, பொறுப்பாளனின் குரல் அதனைத் தடுத்தது.

'டேய்... நீயொருக்கா வீட்டுக்குள்ள போய்ச் 'செக்' பண்ணு...' தனது சகாவுக்கு கட்டளையிட்டான் பொறுப்பாளன்.

'ஐயோ... என்ர ஐயோ...' காணிக்காரனின் மனைவி பெருங்குரலெடுத்துக் கத்தினாள். அவளோடு சேர்ந்து அவளது பிள்ளைகளும் விவரம் புரியாது அழத் தொடங்கின.

சகா வீட்டுக்குள் நுழைந்தான். ஒவ்வொரு அறையாகத் துழாவி வந்தவன், குனிக்குள் ஒருபக்கத்தில் இருந்த அலுமாரியொன்றின்மீது சந்தேகம் வர, அலுமாரிக் கதவின்மீது மெதுவாக மூன்று தரம் டொக்... டொக்... டொக்... எனத் தட்டினான். அடுத்த நிமிடம்... அலுமாரியின் உள்ளேயிருந்து 'அப்பா...' என்றொரு குரல் மெதுவாக ஒலித்தது. ஒரு கணம் நிதானித்த சகா, மெதுவாக அலுமாரிக் கதவின் கைப்பிடியில் தன் கையை வைத்து, இலேசாக அதை மறுபக்கமாகத் திருகித் திறந்தபோது... திகைத்தது சகா மட்டுமல்ல, அலுமாரிக்குள் நின்ற வாட்ட சாட்டமான ஓர் இளைஞனும்தான். இளைஞனது முகத்தில் பயங்கரத்திகில். தனக்கு முன்னால் தன் தந்தைக்குப் பதிலாக ஓர் இயக்கப்பொடியன் துவக்கோடு நிற்பான்... என அவன் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை. சகாவின் முகத்தில் மெலிதான ஓர் கேலிப்புன்னகை. அலுமாரிக்குள் நின்ற அந்த இளைஞனின் கையைப்பிடித்த சகா, அவனை வெளியே முற்றத்துக்கு அழைத்து வந்தான்.

தறப்பாள் கொட்டிலுக்குள் இருந்து, துவாரத்தினூடாக இதைக்கண்ணுற்ற அத்தானும் அவனும் ஒருகணம் திகைத்துவிட்டனர். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

'அட நாசமாப்போவன்... வீட்டுக்குள் தன்ர பிள்ளையை ஒளிச்சுவைக்சுக் கொண்டுதானே, ஊரான் பிள்ளையளைப் போராடப் போகவேணுமெண்டு சொன்னவன்...?' அத்தான் கூறியதைக் கேட்டு, அவன் சிரித்தான்.

'இவர்தானே உங்கட மூத்த மகன்?'

பொறுப்பாளனின் கேள்விக்கு, காணிக்காரரின் 'மௌனம்' ஆம்... என்பதாக அமைந்தது. காணிக்காரர், பொறுப்பாளனிடம் எவ்வளவோ கெஞ்சியும் மன்றாடியும், எடுத்துக்கூறியும் பொறுப்பாளன் மசியவில்லை. அந்த இளைஞன் பலவந்தமாக அவர்களது 'பிக்கப்' வாகனத்தில் ஏற்றப்பட்டான். 'பிக்கப்' வெளிக்கிட்டதும், இழவுவீடாக மாறியது அந்த இடம்.

காணிக்காரர் அழுது கொண்டிருந்தார் வெகுநேரமாக... அ

# பதினான்கு 14

# "Fourteen 14

(அ)
1) மாட்டு வண்டிலைக் கட்டினான் சின்னான்.

2) போகப் போக போனது பாதை.

3) இருப்பினும் 'அதை' அடைந்து விடவே உர்ர்ர்றா(ஆ) க்ள்ள்க க்ள்ள்ள்க்க் என காளைகளை விரட்டினான். முள்ளாணி தடியால் குண்டியில் குத்தினான்.

4) பாதை முடிந்து கடல் துவங்க காளைகள் திமிங்கலங்களாய் மாறின.

5) ஓடமாய் மாறிய வண்டிலை நீந்தி இழுத்தன.

6) ஆழியின் ஆழத்தை விரைந்து அடையவும், அங்கு தரையும் வானும் தொடுவது தெரிந்தது.

(ஆ)
7) எல்லை வானது சுவர்க்கத்தின் பிணங்கள் எரிந்த புகையில் நரகம் மறைந்தது. அங்கிருந்தோர் நறுமண வாசனை கமழும் வளத்தில் பாலாழி, தேனாறு பாய வாழ்ந்தனர்.

8) தேவதேவன் ஆண்ட நரகத்தில் அப்ஸரஸ் ஸ்திரீக்களின் கன்னிமை என்றுமே கழிக்கப் படவில்லை அனந்த தடவை புணரப்பட்டும்.

9) தேவதேவனுக்கு பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் கலந்து ஊட்டினர் தேவ ரம்பையர்.

10) இதனால், தேவதேவனின் கழிவுகள் யாவும் சுவர்க்கத்தில் தான் வந்து விழுவன ஆயின.

(இ)
11) சின்னான் கடல் கடந்து விண்ணது சுவர்க்கத்தினை அடைய விரைந்தான்.

12) திமிங்கலங்கள் கழுகுகளாக மாறிப் பறந்தன.

13) புஷ்பக விமானமாய் மாறிய ஓடத்தை, நரகத்திலிருந்து பாய்ந்து வந்து சுவர்க்க வாசலில் மறித்தான், தேவரின் தேவன்.

14) 'சின்னானே, எனது கழிவுகளை நீ பூர்ணமாக துப்புரவாக துப்புரவு செய்த பின்தான், இந்தப்பக்க இன்பம் பெருகும் நரகம் வரலாம்!'

A]
1) Sinnan tied the Bullock cart.

2) The more it goes, it goes, still, the path.

3) However, with the wish to reach THAT, he thrashed the oxen yelling "Urrrrraaah… klhlhk…klhlhlhkk". Stabbed the bullock-buttocks with spike edged stick.

4) Once the path ended and 'sea showed' the oxen metamorphosed into whales.

5) Pulled the cart that modified into a boat, swimming.

6) When reached the depth of the ocean rushing, there it appeared the contact of the land and the sky.

B]
7) The hell disappeared in the smoke of the burnt-out cadavers of the heaven which was at the end of the sky.

8) Apsaras demoiselles were not devirginized even though they had been copulated infinite times, in the Lord of the Lord ruled Hell.

9) Deva Rambhas fed Deva's Deva with the melange of milk, clear honey, molasse and gram.

10) As of this "S--t", all the waste of the Lord of the 'Gods' happened to fall on Heaven.

C]
11) Sinnan crossed the sea and rushed to arrive at the sky's Paradise.

12) Whales metamorphosed into eagles, flew.

13) "God of the Lords" dashed from the Hell and blocked the Pushpaka Spacecraft that modifyed itself from the boat.

14] "Eiii…, Sinnan, you only can enter this side's pleasure flourishing Hell once you completely clean "spick-and-span" my 'S—t".

**சிறினோ சிறி சிறிசு**

# ஓராயிரம் பார்வையிலே, உன் காதலை நான் அறிவேன்!

## ஒரு குழப்பமும், ஓர் அறிவுபூர்வமான விளக்கமும்

சத்திய மனை இலங்கையில் வெளியிடும் சிறார்களுக்கான சஞ்சிகையான சிறுபொறியின் கடந்த இதழ்களில் எழுதப்பட்ட கட்டுரைகள் இவை.

சிறார்களுக்காக எழுதப்பட்டதாக இருந்தாலும், புல்லுக்கும் ஆங்கே பொசிந்து, இலக்கியர்களுக்கும் பயன்படக் கூடும் என்பதனால், இந்த இரண்டு கட்டுரைகளும் நன்றியுடன் மறுபிரசுரமாகின்றன.

ஓராயிரம் விடயங்களைச் சொல்லி உங்களைக் குழப்பக் கூடாது. ஒரே ஒரு விடயம் உங்களுக்குச் சொல்ல வேண்டும்! ஆலயம் பதினாயிரம் நாட்டலை விட, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்பதால் புண்ணியம் கோடி என்று பாரதியார் சொல்லியிருக்கிறார். ஊருக்குள்ள உந்த வெளிநாட்டுக்காரர், ஒழுங்கைக்கு ஒழுங்கை பதினாயிரம் கால் மண்டபக் கோயில் கட்டி, கும்பாபிசேகம் செய்யிறதை நீங்களும் தான் கண்டிருப்பியள். அதை விட, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்திருந்தால், புண்ணியம் நிறையச் சேர்ந்திருக்கும். அது கிடக்கட்டும்.

நான் சொல்ல வந்த அந்த ஒரு விடயம்... 'ஒரு' விடயம் தான். தமிழில் ஒன்று என்ற கருத்தைத் தரும் ஒரு, ஓர் என்ற இரண்டு சொற்களையும் எங்கே பயன்படுத்துவது என்பது பற்றிப் பெரும் மயக்கங்கள் உண்டு. இந்த ஒரு, ஓர் இரண்டையும் பயன்படுத்துவது பற்றி இலக்கண விதிகள் இருக்கின்றன. தமிழில் பன்னிரண்டு உயிர் எழுத்துக்கள் உள்ளன. அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

இந்த எழுத்துக்களில் தொடங்கும், எண்ணக் கூடிய பொருட்களைக் குறிக்கும் பெயர்ச்சொற்களின் (Countable nouns என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள்) முன்னால், ஒன்று என்பதைக் குறிப்பிட, ஓர் பயன்படுத்தப்படுகிறது.

ஓரங்க நாடகம். ஓராயிரம் சிந்தனை, ஓரிரவு. ஓர் ஈட்டி.

ஆங்கோர் ஏழை. ஆங்கு ஓர் ஏழை.

இப்படி உயிர் எழுத்தில் தொடங்கும் எண்ணக்கூடிய பெயர்ச்சொற்களின் முன்னால் ஓர் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், மெய்யெழுத்துக் களில் தொடங்கும் எண்ணக்கூடிய பெயர்ச் சொற்களின் முன்னால் ஒரு என்பது வரும். ஒரு வானவில் போலே, என் வாழ்விலே வந்தாய். ஒரு பெண்ணைப் பார்த்து நிலவைப் பார்த்தேன், நிலவில் ஒளியில்லை.

ஹ்ம்.. அதெல்லாம் ஒரு கனாக்காலம்! ஓர் என்பது கூட வெறும் எண்ணக் கூடிய பெயர்ச் சொற்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப் பட்டதில்லை.

**ஜோர்ஜ் இ.**

ஒரு பெண்.

ஆனால், அந்த பெண் என்ற பெயர்ச்சொல்லின் முன்னால், அறிவான என்ற பெயரெச்சம் வந்தால், ஓரறிவான பெண் என்று தான் சொல்ல வேண்டும். எனவே ஒரு என்பதற்கு அடுத்ததாக வருவது பெயரோ, பெயரெச்சமோ அதன் ஓசையின் அடிப்படையில் தான் ஒரு அல்லது ஓர் என்பது வரும் என்பது தீர்மானிக்கப்படுகிறது.

இதென்ன புது விதி என்று நீங்கள் எரிச்சல் அடையக் கூடும். அதுவும் சட்டங்கள், விதிகள் என்றவுடனேயே, அதை எப்படி மீறுவது என்பதில் சிந்திக்கத் தொடங்கும் யாழ்ப்பாணிகள் மாதிரி நீங்களும் இருந்தால், உங்களுக்கும் அந்தச் சிந்தனை தான் வரும். 'உங்க எல்லாரும் செய்யினம் தானே, நாங்களும் அப்படித் தானே செய்ய வேணும்!?' என்று, ஊரோடு ஒத்தோடும் பழக்கம் உடனே தோன்றும். சட்டங்கள், விதிகள் எல்லாமே நாங்கள் சமூகமாக உரிமைகளோடு வாழ இயற்றப்படுகிறவை. அவற்றை நாங்கள் கடைப்பிடித்தால் தான் எல்லாருக்கும் சமமான சமூக நீதி கிடைக்கும். 'எல்லாரும் செய்யினம் தானே!?' என்று நாங்களும் செய்தால் அது ஒரு மந்தைச் சிந்தனை. எல்லாரும் எப்போதும் உயிர் எழுத்துக்களில் தொடங்கும் பெயர்ச்சொற்களின் முன்னால் ஓர் பயன்படுத்துவதில்லை. அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

எல்லாருக்கும் விதி தெரிந்திருப்பதில்லை என்பதை விட!

விதியை மீறுவதற்கு முன்னால், விதியின் நோக்கத்தை அறிந்து கொண்டோம் என்றால், மீறுவதற்கான நியாயங்கள் வரும்போது அதை மீற முடியும்.

இதனால் ஒரு, ஓர் வித்தியாசம் கூட எப்போதும் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

பலர் 'ஓர்' என்பதைப் பயன்படுத்தாமல், எல்லாவற்றுக்கும் அந்த 'ஒரு'வை வைத்தே சிலாவி அடிப்பார்கள்.

அதற்கு காரணம் உண்டு.

மொழி முதலில் பேச்சுவழக்காகத் தான் ஆரம்பித்தது.

எழுத்து வடிவம் பின்னால் வந்தது.

பேசும்போது எவ்வாறு பேசுகிறோமோ, அதை எழுத்தில் பதிவு செய்கிறோம்.

எழுத்தை விட, ஓசை தான் முக்கியமாக இந்த வேறுபாட்டை முடிவு செய்கிறது.

வேகமாகப் பேசும்போது, ஒரு ஆயிரம் என்பதை விட, ஓராயிரம் இலகுவானது.

ஓர் கனாக்காலம் என்பதைவிட, ஒரு கனாக்காலம் சொல்வதற்கு இலகுவானது.

மெய்யெழுத்துப் பெயர்ச் சொற்களுக்கு முன்னால் 'ஒரு' பயன்படுத்துவது சொல்ல இலகுவானது. அவற்றின் முன் 'ஓர்' பயன்படுத்துவதில்லை.

உயிர் எழுத்துப் பெயர்ச் சொற்களின் முன்னால் தான் இத்தனை குழப்பமும்.

அவற்றின் முன்னால், 'ஓர்' பயன்படுத்தப்பட வேண்டும் என்றாலும், சில நேரங்களில் ஒலியின் அடிப்படையில் அது பொருத்தமானதாகவும் இருப்பது இல்லை.

ஒரு ஆயிரம் ரூபா கடனா எடுக்கலாமோ? என்பதற்குப் பதிலாக 'ஓராயிரம் ரூபா' என்று சொன்னால் தான் கடன் தருவோம் என்று யாரும் சொல்வதில்லை.

அதிலும் திருப்பிக் கொடுக்க மாட்டோம் என்று தெரிந்தும் கடன் வாங்குகிற யாழ்ப்பாணத்தவர்கள் அதிகம்.

**ஓர் பாவிக்க வேண்டிய இடத்தில் ஒரு பாவிப்பதில் பெரும் ஆட்சேபனைகள் இருப்பதில்லை. இலக்கணக் காவலர்கள் உங்களை இழுத்துச் செல்ல மாட்டார்கள்.**

**ஆனால், ஒரு பாவிக்க வேண்டிய இடத்தில் ஓர் பாவித்தால் செவிக்கும் சிந்தைக்கும் இன்பம் தராது.**

வட்டிக்கு கொடுப்பவர்களுக்கு அதெல்லாம் பிரச்சனை இல்லை என்பது வேறு கதை.

எனவே, உயிர் எழுத்து என்பதை விட, உயிர் ஓசை என்பது தான் இங்கே முக்கியமானது.

அதை இலகுவாகக் கண்டுபிடிப்பதற்கான வழி, அதை வேகமாகச் சொல்வதோ, பாட்டாகப் பாட முயற்சிப்பதோ தான்.

பேசும் போது 'ஒரு ஆயிரம் ரூபா' என்று சொல்வதும், பாடும் போது 'ஓராயிரம் பார்வையிலே' என்று பாடுவதும் சொல்வதற்கும் பாடுவதற்கும் இலகுவாக இருப்பது தான்.

'இன்னொரு உயிரை தன்னுடன் சேர்த்தால் என்றும் தொல்லையடா' என்று பாடும் போது, ஓர் என்பதை விட, ஒரு என்பது இலகுவாக இருக்கிறது.

ஜெயகாந்தன் தன்னுடைய 'ஒரு மனிதன், ஒரு வீடு, ஒரு உலகம்' என்ற புத்தகத்தை வெளியிட்ட போது, இலக்கணக்காவலர்கள் பொங்கி எழுந்தார்கள். ஆனால் அவர் அதற்கு விளக்கமும் சொல்லியிருந்தார்.

இப்படி, விதிகளை மீறி எழுதினால் யாரும் உங்களைப் பிடித்துக் கொண்டு போய், மின்கம்பத்தில் கட்டி மரண தண்டனை தரப் போவதில்லை.

அந்தக் காலம் எல்லாம் முடிந்து விட்டது.

இது சுதந்திரமாகச் சிந்திக்கும் காலம்.

விதிகள் வழி காட்டத்தான். அவை கை விலங்குகளாக இருக்கக் கூடாது.

அந்த 'ஒரு', 'ஓர்' போலத் தான், தமிழில் இரண்டு என்பதற்குப் பயன்படுத்தும் 'இரு', 'ஈர்' என்ற சொற்களும்.

அவையும் இதே உயிர் எழுத்து, மெய் எழுத்துகள் பற்றிய விதிகளில் அடங்குகிறவை.

இரு புறமும்.

ஈர் உருளி. இரண்டு சக்கரம் கொண்ட சைக்கிள்.

இங்கேயும் பேசுவதற்கும் பாடுவதற்கும் எது இலகுவானதோ அதைப் பயன்படுத்தலாம்.

தமிழ் ஓரளவுக்கு இந்த ஒரு, ஓர் என்பதைத் தவறாக எழுதினால் பெரிதாக 'கண்டுக்க' மாட்டாது.

ஓர் பாவிக்க வேண்டிய இடத்தில் ஒரு பாவிப்பதில் பெரும் ஆட்சேபனைகள் இருப்பதில்லை. இலக்கணக் காவலர்கள் உங்களை இழுத்துச் செல்ல மாட்டார்கள்.

ஆனால், ஒரு பாவிக்க வேண்டிய இடத்தில் ஓர் பாவித்தால் செவிக்கும் சிந்தைக்கும் இன்பம் தராது.

விதிகளைத் தெரிந்து கொண்டால், அவற்றை மீறுவதில் குழப்பம் இருக்காது.

இந்த வேறுபாடுகள் பழங்காலத்தில் வெண்பாக் கவிஞர்கள் ஓசை நயம் கருதிப் பயன்படுத்தியவை. பழைய சங்க காலப் பாடல்களை அவதானித்தால் இந்த வேறுபாடுகளை எப்போதும் காண முடியும்.

தற்போதைய கவிஞர்களுக்கு இலக்கணம் பற்றிய அறிவு தேவைப்படாததால், அவர்களுக்கு இதெல்லாம் தெரிந்திருப்பதில்லை.

மொழியின் விதிகள் இறுக்கமானவை என்றாலும், பேச்சுவழக்குத் தான் எப்போதும் முதன்மை பெறும். சிறுகதை எழுதும்போது, கதாபாத்திரங்கள் உரையாடும்போது, அவர்கள் பேச்சுவழக்கில் பேசுவதைத் தான் எழுத வேண்டும். இலக்கணப்படி எழுத முடியாது.

மொழி மனிதர்களுக்காகவே அன்றி, மொழிக்காக மனிதர்கள் இல்லை.

மதங்களும் அப்படித் தான் இருக்க வேண்டும்.

# இன்னொரு உயிரைத் தன்னுடன் சேர்ந்தால் என்றும் தொல்லையடா!

கடந்து சென்ற சிறு பொறியில், உயிர் எழுத்துக்களில் தொடங்கும் பெயர்ச்சொற்களில், ஒரு என்பதற்கும் ஓர் என்பதற்குமான பயன்பாடுகள் பற்றித் தெரிந்திருப்பீர்கள்.

பேச்சு முதலிலும் அதை எழுத்தில் பதிவு செய்வது பின்னாலும் வந்தபடியால், பேச்சுவழக்கில் எது உள்ளதோ அதுவே எழுத்தாக வந்திருக்கும். பேச்சுவழக்கு சொல்வதற்கு வசதியானதாக, இலகுவானதாக இருப்பது பற்றியது. அது எந்த எல்லைகளும் விதிகளும் கடந்தது.

ஒரே மொழியாக இருந்தாலும், பேச்சுவழக்கு பிரதேசத்திற்கு பிரதேசம் மாறுபடும். ஆனால், எழுத்து மொழி எல்லாருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும், அதற்கு இலக்கணங்கள் எனப்படும் விதிகள் இருக்க வேண்டும்.

பேச்சுவழக்கில் ஒரு ஆயிரம் பார்வையிலே என்பதை விட, ஓராயிரம் என்பது சொல்வதற்கு இலகுவானது. இதன் அடிப்படையில் பெயர்ச்சொற்களின் முன்னால் ஒரு என்பதைப் பயன்படுத்தும்போது, உயிர் எழுத்துக்களின் முன்னால் பயன்படுத்தும்போது ஓர் என்பதும், மெய்யெழுத்துக்களின் முன்னால் பயன்படுத்தும்போது ஒரு என்பதும் பயன்படுத்தப்படுத்தப்படும் என்று சொல்லியிருந்தேன்.

இதெல்லாம் உச்சரிப்பு இலகுவானதாக இருப்பதற்காகத் தான். இலக்கண விதிகள் என்பதால் மீறப்படக் கூடாது என்று கட்டாயம் எதுவும் இல்லை.

**ஒரு என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்படுவது, a யா, அல்லது an ஆ என்பதைத் தீர்மானிப்பது முன்னால் உள்ள பெயரெச்சத்தின் முதல் எழுத்து எப்படி உச்சரிக்கப்படுகிறது என்பதே அன்றி, அந்தப் பெயர்ச் சொல்லின் முதல் எழுத்து அல்ல.**

தமிழில் இதெல்லாம் பெரிய பிரச்சனை இல்லை. பேச்சுவழக்கில் உச்சரிப்பது போலவே, சொற்களும் எழுதப்படுகின்றன.

ஆங்கிலம் அப்படியல்ல.

ஆங்கிலத்தில் உயிர் எழுத்துக்களை Vowels என்றும், மெய்யெழுத்துக்களை Consonants என்றும் சொல்கிறோம்.

A,E,I,O,U ஆகியவையே அந்த உயிர் எழுத்துக்கள். எனவே, இந்த எழுத்துக்களுடன் ஒரு பெயர்ச்சொல் வந்தால் அதன் முன்னால் an என்பதும், இவை தவிர்ந்த மற்ற மெய்யெழுத்துக்களில் தொடங்கும் பெயர்ச்சொற்களின் முன்னால் a என்பதும், ஒரு என்ற கருத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

ஆங்கிலத்தில் இந்த a, an இரண்டையும், indefinite article என்பார்கள். எதையும் குறிப்பாகச் சொல்லாமல் ஒரு பெயர்ச்சொல்லைச் சொல்வதால், அதற்கு அந்தப் பெயர்.

A book என்பது எந்தப் புத்தகத்தையும் குறிப்பிடாமல், வெறுமனே ஒரு புத்தகத்தைப் பற்றிச் சொல்கிறது. ஆனால் ஒரு குறிப்பிட்ட புத்தகம் பற்றிச் சொல்லும்போது, அதை மட்டும் குறிப்பிட்டுச் சொல்வதால் அதற்கு The book என்போம். இங்கே ஒரு என்பதைக் குறிப்பிடப் பயன்படும் The வை, குறிப்பிட்ட ஒரு புத்தகத்தைப் பற்றி உறுதியாகச் சொல்வதால் definite article என்போம். அந்த The பற்றி அடுத்த முறை பார்ப்போம்.

ஆனால், பிரச்சனை என்னவென்றால் இதில் உள்ள U, உ, அ என்ற ஒலிகளை மட்டுமன்றி, யு என்ற ஒலியையும் சில நேரங்களில் தருகிறது.

Uncle, full இரண்டிலும் அ, உ என்ற ஒலிகளை மட்டுமன்றி, University, future என்பதில் யூ என்ற ஒலிக்கும் பயன்படுகிறது.

இதைவிட, ஆங்கில மெய்யெழுத்துக்களில் தொடங்கும் சில பெயர்ச்சொற்கள் உச்சரிக்கப்படும் போது, உயிர் ஓசையுடன் தான் உச்சரிக்கப்படுகின்றன.

Hour என்னும் சொல், 'அவ' என்றே உச்சரிக்கப்படுகிறது. ('அவ கிடக்கிறா!'வில வருகிற அவ இல்லை!) அதற்கு an hour என்றே பயன்படுத்தப்படுகிறது.

இங்கே நீங்கள் கவனிக்க வேண்டியது உச்சரிப்பே அன்றி, எழுத்து இல்லை.

எனவே, பெயர்ச்சொல்லின் முன்னால் வருவது an ஆ, இல்லை a ஆ என்பதைத் தீர்மானிப்பது ஓசை மட்டும் தான், எழுத்து இல்லை.

உதாரணங்களாக,

an apple, an elephant, an island, an orange, an uncle.

இதைவிட, an hour, a university.

இது உச்சரிப்புக் காரணமாக பயன்படுத்தப்படுவது.

அதைப் போல, Hotel என்பதை சிலர் ஹோட்டல் என்பார்கள். சிலர் ஓட்டல் என்பார்கள். எனவே இதைப் பேச்சுவழக்கில் பயன்படுத்தும்போது, H என்பது உச்சரிக்கப்படுகிறதா என்பதைப் பொறுத்தே ஒரு ஹோட்டல் என்பதற்கு முன் a, an பாவனை முடிவு செய்யப்படுகிறது.

எனவே, எண்ணக்கூடிய பொருட்களுக்கு ஒரு என்ற சொல்லை முன்னால் பயன்படுத்தும்போது பயன்படுத்தும் a, an இரண்டினதும் வேறுபாடுகளைப் பார்த்தோம். இப்படி a, an இரண்டும் இவ்வாறான ஒருமைச் சொற்களுக்குத் தான் பயன்படுகின்றன. பன்மைகளுக்குப் பயன்படுவதில்லை.

இதைவிட, பல தடவைகளில் பெயர்ச்சொற்களுக்கு முன்னால், பெயரைப் பற்றிக் குறிப்பிடும் பெயரெச்சம் பெயர்களுக்கு முன்னால் பயன்படுத்தப்படும்.

interesting book, useful chair, unlucky person, red apple,

**ஆங்கில மெய்யெழுத்துக்களில் தொடங்கும் சில பெயர்ச்சொற்கள் உச்சரிக்கப்படும் போது, உயிர் ஓசையுடன் தான் உச்சரிக்கப்படுகின்றன. Hour என்னும் சொல், 'அவ' என்றே உச்சரிக்கப்படுகிறது.**

**('அவ கிடக்கிறா!'வில வருகிற அவ இல்லை!) அதற்கு an hour என்றே பயன்படுத்தப்படுகிறது. இங்கே நீங்கள் கவனிக்க வேண்டியது உச்சரிப்பே அன்றி, எழுத்து இல்லை.**

honorable person என்பவற்றுக்கு முன்னால் ஒரு என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்படுவது, a யா, அல்லது an ஆ என்பதைத் தீர்மானிப்பது முன்னால் உள்ள பெயரெச்சத்தின் முதல் எழுத்து எப்படி உச்சரிக்கப்படுகிறது என்பதே அன்றி, அந்தப் பெயர்ச் சொல்லின் முதல் எழுத்து அல்ல.

An interesting book

A useful chair

An unlucky person

A red apple

An honorable man

எண்ண முடியாத பொருட்களுக்கும், அவை ஒருமையாக இருந்தாலும் பயன்படுத்தப் படுவதில்லை. உதாரணமாக advice, news, information, luggage, furniture, beauty, happiness, fear, hope போன்ற சொற்கள் ஒருமையாக இருந்தாலும் அவற்றின் முன் a, an இரண்டும் பயன்படுத்தப்படுவதில்லை.

அதைப் போல, glass, wood, stone, paper, cloth, coffee, tea, water போன்ற எண்ண முடியாதவைக்கு முன்னும், அவை பொதுவாகக் குறிப்பிடப்படும்போது பயன்படுத்தப்படுவதில்லை.

ஆனால் குடிக்கிற கிளாஸ், வாசிக்கிற செய்திப்பத்திரிகை என்னும் கருத்தில் வந்தால் பயன்படுத்தலாம்.

There is water on the ground.

There is a water bottle.

Give me a glass of water.

a cup of coffee/tea.

a coffee mug/ tea cup.

We write on paper.

I am reading a paper.

angry, smart இரண்டும் எண்ணப்பட முடியாதவை. எனவே அவற்றின் முன்னால் ஒரு பயன்படுத்தப்பட முடியாது. ஆனால் அவை பெயரெச்சமாகப் பயன்படுத்தும்போது a, an பயன்படுத்தப்படும்.

**ஆங்கிலம் தமிழைப் போலக் கண்டுக்காமல் விடுவதில்லை. எனவே சரியான இடத்தில் எதைப் பயன்படுத்துவது என்பதைச் சரியாக புரிந்து கொண்டு பயன்படுத்துங்கள். இப்படி விதிகள், விதிவிலக்குகள், பயன்பாடுகள் என்பவற்றை சரியாக அறிந்து கொள்ளாமல், மொட்டையாக விளங்கிக் கொண்டால், பிறகு வேறு யாராவது பயன்படுத்தும்போது, விசயம் தெரியாமல், விசயம் தெரிஞ்ச மாதிரி 'பிழை பிடித்துப் பெயர் வாங்கலாம்' என்று போய் மாட்டிக் கொள்ள வேண்டி வரும்.**

She is angry.
She is an angry woman.

He is smart.
He is a smart boy.

ஆங்கிலம் தமிழைப் போலக் கண்டுக்காமல் விடுவதில்லை. எனவே சரியான இடத்தில் எதைப் பயன்படுத்துவது என்பதைச் சரியாக புரிந்து கொண்டு பயன்படுத்துங்கள். இப்படி விதிகள், விதிவிலக்குகள், பயன்பாடுகள் என்பவற்றை சரியாக அறிந்து கொள்ளாமல், மொட்டையாக விளங்கிக் கொண்டால், பிறகு வேறு யாராவது பயன்படுத்தும்போது, விசயம் தெரியாமல், விசயம் தெரிஞ்ச மாதிரி 'பிழை பிடித்துப் பெயர் வாங்கலாம்' என்று போய் மாட்டிக் கொள்ள வேண்டி வரும்.

இப்படியாகத் தானே, சொற்களில் உயிரைச் சேர்த்துக் கொள்வதில் உள்ள சிக்கல்களைத் தெரிந்து கொண்டால், வாழ்வில் என்றும் தொல்லையில்லை.




# ‘இமிழ்’

## 51வது இலக்கியச் சந்திப்பில்

# சோபாசக்தி இட்ட இன்னொரு நஞ்சு!

**EXTRA றிப்போட்**

என்னுடைய எழுத்து முறை அல்லது நான் முன்வைக்கும் விமர்சன வெளிப்பாடு பற்றி பலருக்கும் அதிருப்தி உள்ளதனை நான் நன்றாகவே புரிந்து கொள்கிறேன். நான் உங்களைப் போன்று எழுத்தாளனாக வரவேண்டும் என எண்ணி ஒருபொழுதும் எண்ணியதில்லை. எழுத்தின் தர்க்கங்களைக் கூட நான் என்றுமே கைக் கொள்ளவும் இல்லை. நான் வாழும் காலத்தில் என்னைச் சூழ்ந்திருக்கும் விடயங்களில் சமூகநீதிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் எதிராக இருக்கும் பல விடயங்களை அறிந்ததும், வெளிப்படையாக அவற்றைத் தோலுரித்துக் காட்ட வேண்டும் என நினைக்கிறேன்.

என் சுய அறிவுக்கும் என்னுடைய தேடலுக்கும் உட்பட்டு சமூகத்திற்கு எதிராகச் செயற்படும் எவர் மீதும் கோபம் கொள்கிறேன். அதில் சிலவேளைகளில் என்னுடைய நண்பர்களாக இருந்து விடும் நீங்களும் சேர்ந்து விடுகிறீர்கள் என்பதும் உண்மைதான். ஆனாலும் அவற்றை வெளிப்படையாகப் பேசவேண்டும் என்பதே எனது தெரிவு. நமது சுற்றுவட்டாரத்தில் அதிகம் பேர் தெரிந்தும் இதனைச் செய்துவிட விரும்புவதில்லை. யாருடைய மனதையும் புண்படுத்திவிடக் கூடாது என நினைப்பது ஒரு காரணமாக இருந்தாலும், தங்களுடைய கருத்துக்களிலும் தங்களுடைய செயற்பாடுகளிலும் இருக்கும் ஒரு தன்னம்பிக்கையற்ற தனம் இதற்கு இன்னொரு முக்கிய காரணமாக இருந்துவிடுகிறது. அதனாலேயே ஒரு விடயம் தவறாக நடைபெறுகிறது என அறிந்தாலும் அதனை அப்படியே ஆதரித்தும் இல்லையேல் மவுனமாக அதனைக் கடந்தும் இவர்களால் சென்றுவிட முடிகிறது. அந்த ஒரு விடயத்தை மட்டும் நான் ஒருபொழுதும் செய்வதில்லை. அதுவே உங்களுக்கு என்மீதான அதீத அதிருப்தியைத் தந்துவிடுவதற்கு முக்கியகாரணம் என்பது எனது கணிப்பு.

> **கடந்த காலங்களில் மக்கள் கலைஞனென்றும் மாபெரும் கவிஞனென்றும் ஆடியும் பாடியும் திரிந்த பலர் மக்களுக்கெதிரான கருத்தைக் கொண்டிருந்ததோடு மட்டுமல்லாது, தனியே யுத்தவிசுவாசிகளாக இருந்தார்கள் என்றும், வெளிப்படையாக ஆராய்ந்து ஆதாரத்துடன் உண்மை முகத்தை அம்பலப்படுத்தி எழுதிவிடவும் வேண்டியிருந்தது. அதனால் என்மீது அவர்கள் கோபம் கொண்டுதான் ஆகவேண்டும்.**

கடந்த காலங்களில் மக்கள் கலைஞனென்றும் மாபெரும் கவிஞனென்றும் ஆடியும் பாடியும் திரிந்த பலர் மக்களுக்கெதிரான கருத்தைக் கொண்டிருந்ததோடு மட்டுமல்லாது, தனியே யுத்தவிசுவாசிகளாக இருந்தார்கள் என்றும், வெளிப்படையாக ஆராய்ந்து ஆதாரத்துடன் உண்மை முகத்தை அம்பலப்படுத்தி எழுதிவிடவும் வேண்டியிருந்தது. அதனால் என்மீது அவர்கள் கோபம் கொண்டுதான் ஆகவேண்டும்.

அவர்களிடம் இருந்து ஒரு மதிப்பினையோ அல்லது நற்பெயரினையோ- ஆகக் குறைந்தது

**கற்சுறா**

அவர்களின் புன்சிரிப்பினையோ நான் பெறவேண்டும் என நினைத்திருந்தால், எனக்கு அது மிக இலகுவான காரியம். 'இந்த இலக்கியச் சூழலின் ராஜாவும் நீங்களே மந்திரியும் நீங்களே' என்று புகழ்ந்தோதியோ - எழுதியோ விடவேண்டியதில்லை. அல்லது அவர்கள் வெளியிட்ட புத்தகம் ஒன்றினை அவர்களுடன் கூட நின்று நெஞ்சில் பிடித்தபடி எடுத்த ஒரு புகைப்படத்தினையோ பதிவிட்டு அனைவரையும் நல்லபடி மகிழ்வித்திருக்க வேண்டிய தேவையும் கூட இல்லை. அவர்கள் செய்யும் எந்த நாச வேலைகளையும் பார்த்தும், பார்க்காதிருப்பது போல் அமைதியாக இருந்தாலே போதும் அனைவரும் தங்கள் புன்சிரிப்போடு என்னைக் கட்டியணைத்து முத்தமிட்டபடி இருப்பார்கள். நான் ஒரு நல்ல எழுத்தாளன் என்றிருப்பார்கள். நல்ல கவிஞன் என்றிருப்பார்கள். இன்னும் மேலே ஒருதளம் சென்று நான்தான் நல்ல கதைசொல்லி என்றிருப்பார்கள்.

அப்படிச் செய்யாது, அவர்களின் பெயர்களைத் தனியே பிரித்தெடுத்து அடுக்கடுக்காய் அடையாளம் காட்டி எவ்வாறு இந்த சமூகத்தை நாசமாக்குகிறார்கள் என்றும் எழுதுகிறேன். இன்னொரு புறம் அவர்கள் தங்களது அடையாளத்தை மட்டும் முன்நிறுத்தி தன்னில் மட்டும் குறியாய் இருக்கும் ஒரு தற்குறியாய் இருந்துவிடுகிறார்கள் என்றும், ஒரு உரையாடலின் தேவையை மறுதலித்து மிகவும் கவனமாக அனைத்துப் பொது அடையாளங்களையும் தங்களுக்குள் மட்டும் குறுக்கிவிட முனைகிறார்கள் என்று நானாவது எழுதிவிட வேண்டும் என எண்ணுகிறேன். அதுமட்டுமல்லாது என்னைப் போல் எழுதுபவர்களோடும், செயற்படுபவர்களோடும், என்னைப் புறக்கணித்தாலும் அவர்களுடன் என்றும் என்னை இணைத்தே வந்திருக்கிறேன்.

எனது கருத்துக்களை, உங்களின் மொழி மாதிரியோ நீங்கள் எழுதும் வார்த்தைகளைக் கொண்டோ என்னால் எழுதிவிட

**எனக்கு உங்களைப் போன்று எழுத்தாளன் என்ற அடையாளமோ அங்கீகாரமோ ஒருபோதும் தேவையேயில்லை. அந்தத் தேவையைப் பொருட்படுத்தி எழுத்துக்களை எழுதிவிடவும் என்னால் முடியாது, மாற்றிவிடவும் முடியாது. அதனால் என்னுடைய எழுத்துக்கள் உங்களுக்குக் கோபத்தையும் சலிப்பையும் அடிக்கடி ஏற்படுத்துந்தான். அதற்கு நான் என்னதான் செய்வது?**

முடியாதிருந்தது என்பது என்னவோ உண்மைதான். அங்கே என் கோபம் தீரும் வரை அதிகமான வசைச் சொற்களைப் பாவிக்க வேண்டியும் இருந்தது. உங்கள் மொழியையும் உங்கள் வார்த்தைகளையுந்தான் நான் பாவிக்க வேண்டும் என்றால் அதற்கு நான் எதற்கு? நீங்களே போதுமல்லவா?

என்ன ஒரு சிக்கல் என்றால் கவிதை என்று வரும் பொழுது இந்த வசைச் சொற்களுக்கு அதிகம் வேலை இருப்பதில்லை. எனது கவிதைகள் கூட அதிகமானவை கோபத்தில் எழுதியவைதான். அது பலரைப் பழிவாங்கும் எழுத்துக்கள்தான். எனக்கு உங்களைப் போன்று எழுத்தாளன் என்ற அடையாளமோ அங்கீகாரமோ ஒருபோதும் தேவையேயில்லை. அந்தத் தேவையைப் பொருட்படுத்தி எழுத்துக்களை எழுதிவிடவும் என்னால் முடியாது, மாற்றிவிடவும் முடியாது. அதனால் என்னுடைய எழுத்துக்கள் உங்களுக்குக் கோபத்தையும் சலிப்பையும் அடிக்கடி ஏற்படுத்துந்தான். அதற்கு நான் என்னதான் செய்வது? நான்தானே கவிஞனுமல்ல கதை சொல்லியுமல்ல எழுத்தாளனுமல்ல என்று திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதனை இனிமேலாவது நீங்கள் அனைவரும் கவனத்திற் கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

•••

மேலே நான் இதுவரை சொன்னது, மிக அண்மைக் காலமாக நான் எழுதும் எழுத்துக்கள் தொடர்பான சில வியாக்கியானங்கள்.

இனி விடயத்திற்கு வருகிறேன்.


பாரீசில் நடைபெற்ற 51வது இலக்கியச் சந்திப்பில் அதன் பெயரில் வெளியிடப்பட்ட 'இமிழ்' என்ற சிறுகதைத் தொகுதி குறித்து என்னுடைய கருத்தினை அபத்தம் இதழிலும் என்னுடைய முகநூலிலும் வெளிப்படையாகத் தெரிவித்திருந்தேன். அவை இன்னமும் பொதுவெளியில் இருக்கின்றன.

'இமிழ்' என்ற சிறுகதைத் தொகுதி மீதாக வெளிப்பட்ட பலரது விமர்சனத்தை மறுதலிப்பதாகச் சொல்லிக் கொண்டு சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வந்த பதில்கள் எதுவுமே என்னளவில் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. அதனால் மீண்டும் இங்கே சுருக்கமாக எனது கருத்தினை முன்வைக்கிறேன்.

51வது இலக்கியச் சந்திப்பின் அடையாளத்துடன் வெளிக் கொண்டுவரப்பட்ட அந்த இலக்கிய மலர், 'இன்றைய ஈழ - புலம்பெயர் சிறுகதைகள்' என்ற அடையாளத்துடன் வெளிவந்திருக்கிறது என்றாலும் சிறுகதைப் பரப்பில் அது சோபாசக்தி அவர்களால் தனக்குரியவர்களிடமும் தனக்கு தீங்கற்றவர்களிடமும் தன்னை ஆதரித்துக் கரையேற்றிவிட நிற்பவர்களிடம் இருந்து மிகவும் திட்டமிட்ட முறையில் சேகரிக்கப்பட்டு வெளிவந்த தொகுப்பாக இருக்கிறது என்பதனை நான் அடையாளம் கண்டேன்.

சோபாசக்தி அவர்கள் தன்னுடைய கட்டுப்பாட்டில் இயக்கும் தமிழ்நாட்டுக் 'கருப்புப் பிரதிகள்' என்ற பதிப்பகத்தின் மூலம் அதனை வெளியிட்டிருக்கிறார். பிரான்சில் ஆக்காட்டி என்ற ஒரு சஞ்சிகையை தன்னுடைய கட்டுப்பாட்டில் தனக்காக உருவாக்கி வைத்திருப்பதைப் போல் 'கருப்புப்பிரதி' என்ற பதிப்பகத்தையும்

வைத்துக் கொண்டு ஈழ புலம்பெயர் இலக்கிய அடையாளங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்காக எப்படியெல்லாம் வரையறுக்க முயற்சிக்கிறார் என்பதனை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அதனையே பொதுவான அடையாளமாக வெளிக்காட்டி அடையாளப்படுத்த நினைக்கிறார் அவர் என்றும் சொல்லியிருக்கிறேன். அதற்கூடாக எந்தப் புத்தகங்கள் வெளியிடப்படவேண்டும், எவை அடையாளம் காட்டிப் பேசப்பட வேண்டும், எவை புறக்கணிக்கப்பட வேண்டும் என்பதனைக்கூட கடந்த சிலகாலமாகக் கருப்புப் பிரதிகளுக்கூடாக அவர் தொடர்ந்தும் செயற்படுத்தி வருகிறார் என்பதுடன் அதன் தொடர்ச்சியான செயற்பாட்டுவடிவந்தான் இந்த, இன்றைய ‘இமிழ்’ என்ற சிறுகதைத் தொகுதி எனவும் நான் அடையாளம் காண்கிறேன்.




தமிழ்நாட்டில் மாற்றுக் கருத்துக்காக இயங்குவதாகத்தன்னை அடையாளம் சொல்லும் கருப்புப் பிரதிகள் என்ற பதிப்பகமும் தன்னுடைய செம்மறியாட்டு மனநிலையில் சோபாசக்தி பின்னால் தலையாட்டிச் செல்கிறது. எப்படி ஆக்காட்டி என்ற சஞ்சிகையின் ஆசிரியர் தர்முபிரசாத் அவர்கள் சோபாவின் பின்னால் ஒரு செம்மறி மனநிலையில் இருக்கிறாரோ அதே போன்று கருப்புப் பிரதிகள் பதிப்பகமும் இருக்கிறது என்பதனை அடையாளம் காட்டிச் சொல்லியிருக்கிறேன்.

ஆனால் அதையும் தாண்டி, புகலிடச் சூழலில் நீண்டதொரு செயற்பாட்டுத்தளமாக இயங்கி வந்த புகலிட இலக்கியச் சந்திப்பினையும் இன்று தன்னுடைய அடையாளத்துடன் வெளிக்காட்ட அவர் செய்யும் முயற்சியின் முதல் செயற்பாடுதான் இந்த ‘ இமிழ்‘ என்ற சிறுகதைத் தொகுதி. இது முழுக்க முழுக்க சோபாசக்தியின் தெரிவும் முடிவும். ஆனால் அது ‘இலக்கியச் சந்திப்பு‘ என்ற ஒரு பொது அமைப்பின் பெயரில் அடையாளம் காட்டப்படுகிறது என்பதுதான் அவலமானது. அந்தக் கவனக் குறைவை இனியும் தொடரவிடக் கூடாது என்ற கரிசனையில் எழுதும் எழுத்துக்கள் தான் இதுவேயன்றி வேறு அல்ல.

இந்த 51வது இலக்கியச் சந்திப்புக் குழுவில் இருந்ததாகச் சொல்லப்படும் 18 பெயரில் சோபாசக்தியையும் அவரது ‘அல்லக்கைகள்‘ இரண்டு மூன்று பெயரையும் தவிர மற்றயவர்கள் யாரும் ‘இமிழ்‘ சிறுகதைத் தொகுப்புக் குறித்துக் குறைந்தது முகநூலில் ஒரு விருப்புக்குறிகூட இடமுடியாது இருக்கிறார்கள். அந்தளவிற்கு அந்தக் குழுவில் இருந்தவர்களையும் ஏமாற்றி விட்டிருக்கிறார் சோபாசக்தி.

சோபாசக்தியின் இந்த அயோக்கியத் தனத்தை நான் வெளிப்படையாகவே அம்பலப்படுத்தி நிற்கிறேன். ஏனெனில் கடந்த சில காலமாக அவருடைய எழுத்துக்களிலும் அவரது செயற்பாடுகளிலும் அதிகூடிய நஞ்சொன்று இருப்பதாக நான் உணருகிறேன். தமிழ் நாட்டு அண்ணா நூறு விழாவில் அவரது உரையைத் தொடர்ந்து பல்வேறு இடங்களில் அவர் பேசிய பேச்சுக்களில் தன்முனைப்பாகவும் தன்னடையாளமாகவும் அனைத்துச் செயற்பாட்டையும் குறுக்கிவிடும் எத்தனத்தோடு இருந்த நஞ்சுத்தனத்தை சிலகாலத்தின் முன் விபரமாக எழுதியிருந்தேன். ஆனால் அவருக்குள் இருக்கும் மிகப்பெரிய நஞ்சுமனத்தை நான் இந்த ‘இமிழ்‘ என்ற கதைத் தொகுப்புச் செயற்பாட்டில் முழுமையாகக் கண்டதனால் என்னால் உங்களைப் போன்று அமைதியாகவோ பொறுமையாகவோ இருக்க முடியவில்லை. அதனால் எனது கருத்தினைத் தொடர்ந்து முன்வைக்கத் தயாரானேன்.

51வது இலக்கியச் சந்திப்பின் நிகழ்ச்சி நிரல் வெளியான அன்றே அந்த நிகழ்ச்சி நிரலிலிருந்த அறிவிப்பினைப் பார்த்து விட்டு அதனைக் கோடிட்டு இது என்ன என்று இலக்கியச் சந்திப்புச் சார்ந்த சிலரிடம் கேட்டிருந்தேன். அவர்களுக்குச் சரியாக எதுவும் தெரிந்திருக்கவில்லை. குழுவிலிருந்தவர்களுக்கும் அதே மனநிலையாகத்தான் இருந்தது. என்ன எதுவென்று தெரியாத நிலை. ஆனால் இலக்கியச் சந்திப்பில் புத்தகம் அறிமுகப்படுத்தி வெளியிடப்பட்டபோது அந்தக் குழுவில் இருந்தோராலேயே அதன் பக்கங்கள் கிழிக்கப்பட்டதும்,

புத்தகத்தின் வெளிவருகை குறித்து முரண்பட்டதும் அனைவரும் அறிந்த கதைதான்.

நான் இங்கே மேலும் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், இலக்கியச் சந்திப்பின் பின்னர் சோபாசக்தி அவர்களும் அவர் வளர்க்கும் செம்மறிகளும் எழுதிய எழுத்துக்கள் குறித்ததுதான்.

முதலில் அந்தப் புத்தகம் குறித்து வந்த எதிர்வினைக்கு முதலாவது தர்முபிரசாத் என்ற 'செம்மறி' எழுதிய கருத்தினை இங்கு சொல்கிறேன்.

ஓர் அறிவிப்பு என்ற பெயரில் எழுதப்பட்ட அந்தக் குறிப்பின் முக்கிய பகுதிகளைச் சுட்டிக் காட்டுகிறேன்.

•••

*52 வது சுவிஸ் இலக்கியச்சந்திப்பைத் தொடர்ந்து 53வது இலக்கியச் சந்திப்பை இத்தாலியின் சிசிலித்தீவில் நடத்தலாம் என இருக்கிறேன். என்று தொடங்கி; அந்த இலக்கியச் சந்திப்பை ஒட்டியும் ஒரு தொகுப்பு வெளியிடலாம் என வேலைகளை ஆரம்பித்திருக்கிறேன். அதனைக் கழிவறையில் வைத்துப் பாதுகாக்க வேண்டும் என்று நளினம் பணணுகிறார்.*

*இம்முறை கவிதைத்தொகுப்பு. யாரையும் புண்படுத்தாத, விடுபடல்களே இல்லாத பெருந்தொகுப்பு திட்டம். முதலில் 5 இலட்சம் ஈழப் புலம்பெயர் கவிஞர்களின் 5 இலட்சம் கவிதைகள்.*

*கவிதைகளை பட்டியலிட்ட போதுதான் ஒன்றைக் கவனித்தேன். முக்கியமான இரண்டு விடுபடல்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஒன்று றியாஸ் குரானா, மற்றது கற்சுறா. முக்கியமான அவர்கள் இருவரையும் தவிர்த்துவிட்டு ஒரு கவிதைத் தொகுப்பு கொண்டு வருவதில் அறப்பிழை இருப்பதால் அய்ந்துலட்சம் என்ற குறைந்தபட்ச எல்லையை விரிவாக்கி பத்துலட்சம் கவிஞர்கள், பத்து லட்சம் கவிதைகள் என்று தீர்மனித்தேன்.*



*மேற் குறிப்பிட்டவர்களுள் ஒருவருக்கே அந்தப் பத்துலட்சத்தில் இடம் கிடைத்திருக்கிறது. அது யார் என்பது இப்போதைக்கு ரகசியம். விடுபட்ட கவிஞரை சரியாக ஊகித்து மின்னஞ்சல் செய்யும் வாசகர்களுக்கு பெரும் தொகுப்பு இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இலகுவான, மென்மையான் தண்ணீரில் கரையக்கூடிய எடை குறைந்த தாளில் கவிதைத் தொகுப்பை அச்சடித்துக் கொடுக்க நீலண்டன் தோழர் சம்மதம் தெரிவித்திருக்கிறார்.*

*இவைதான் அதிலுள்ள முக்கியமான தரவுகள்.*

•••

நான் தொடர்ந்தும் பேசிவரும் விடயம் ஒன்றுதான். இலக்கியச் சந்திப்பு உங்களது தனிப்பட்ட ஒரு சொத்து அல்ல. இங்கே இந்தச் செம்மறி எழுதியதை ஒரு நகைச்சுவை என்று லண்டனில் வசிக்கும் ராகவனைப் போன்று கணக்கிடுவோரும் உள்ளார்கள்தான். ஆனால் நான் அப்படி எண்ணவில்லை. ஒரு ரவுடியினதும் ரவுடியின் பின்னால் இயங்கும் 'அல்லக்கை' களுக்குமான மனோபாவமே இது. இமிழ் குறித்து உரையாடப்படும் கவனத்தைத் திருப்பி கற்சுறா என்றவர் தன்னுடைய படைப்பு அதில் வராததால் கோபப்படுகிறார் என்று குறுக்கிவிடும் எண்ணம் மிகவும் அயோக்கியத் தனமானது. மிகவும் நஞ்சு செறிந்தது.

முதலில் நான் ஒரு சிறுகதையாளனல்ல. சிறுகதை எழுதிவிட வேண்டும் எனவும் அலைந்து திரிபவனுமல்ல. சில விடயங்களில் கவிதைகளின் ஊடாக என்னால் சொல்ல முடியாத விடயத்தை விரித்து எழுத முயற்சித்திருக்கிறேன். அதற்காக நான் கவிஞன் என்றும் சொன்னதில்லை. கவிதைதான் எழுத வேண்டும் என்று கூட எண்ணியதில்லை. கோபத்தில் எழுதிய சில கவிதைகள் உண்டு. மீண்டும் சொல்கிறேன், அது பழிவாங்கும் கவிதைகள். ஆனால் என் முன்னால் கவிதை எழுதிக் கொண்டிருக்கும் பலர் எழுதும் கவிதைகள் கவிதைகளேயில்லை என்று சொல்லிவிடும் அறிவு எனக்கிருக்கிறது. அதில் நான் தெளிவாக இருக்கிறேன். அதே போல் சிறுகதைகளையும் என்னால் தரம் பிரித்து அறிந்து விடும் அறிவு இருக்கிறது. சிறுகதையாளர்களையும் கூடப் பிரித்து அறிந்துவிட அதிகம் தெரிகிறது. அதனால்த்தான் உங்களைப் போன்றவர்களின் கதைகளையும் அவற்றின் கருத்துக்களையும், கழுத்தில் பிடித்து ஆட்டிவிட முயற்சி செய்கிறேன்.

> ஒரு சஞ்சிகையின் ஆசிரியர் என்ற பெயருக்காவது உங்களுக்கு ஒரு பதில் எழுதத் தெரிந்திருக்க வேண்டும் என்ற கவலை எனக்குத் தோன்றாமலும் இல்லை. என்ன செய்வது? தர்மு பிரசாத்! நீங்கள்தான் செயற்பட்டுக் கொண்டு இருக்கிறீர்கள். ஒரு இலக்கியத் தேடலுடன் உங்கள் சுயத்தை இழந்து உங்களுக்கான மொழியையும் இழந்து ஒரு இலக்கிய அடியாளாகச் செயற்படுவதில் உங்களுக்குச் சந்தோசந்தானென்றால் யாரும் உங்களைக் காப்பாற்ற முடியாது. காப்பாற்றவும் வரமாட்டார்கள்.

இல்லையேல் அனைத்திலும் நாங்களே ராசா! நாங்களே மந்திரி! என்பதுபோல் நீங்கள் அனைவரும் நடமாடிக் கொண்டிருப்பீர்கள் என்பதனை நன்கு அறிவேன். ஆக, அதனை மறித்துக் கேள்வி கேட்டிருக்கிறேன். இந்தக் கேள்விகள் உங்களுக்குக் கொஞ்சம் வருத்தமாகத்தான் இருக்கும். ஆனால் ஒரு சஞ்சிகையின் ஆசிரியர் என்ற பெயருக்காவது உங்களுக்கு ஒரு பதில் எழுதத் தெரிந்திருக்க வேண்டும் என்ற கவலை எனக்குத் தோன்றாமலும் இல்லை. என்ன

*செய்வது? தர்மு பிரசாத்! நீங்கள்தான் செயற்பட்டுக் கொண்டு இருக்கிறீர்கள். ஒரு இலக்கியத் தேடலுடன் உங்கள் சுயத்தை இழந்து உங்களுக்கான மொழியையும் இழந்து ஒரு இலக்கிய அடியாளாகச் செயற்படுவதில் உங்களுக்குச் சந்தோசந்தானென்றால் யாரும் உங்களைக் காப்பாற்ற முடியாது. காப்பாற்றவும் வரமாட்டார்கள். இவை மட்டுமே உங்களுடைய பதிவுக்கான எனது விளக்கம்.*

•••

அடுத்தது சோபாசக்தி எழுதிய குறிப்பின் முக்கிய சில விடயங்கள்.

*1997-ம் வருடம் பாரிஸில் நிகழ்ந்த 23-வது இலக்கியச் சந்திப்பிலிருந்து இன்றுவரை இலக்கியச் சந்திப்புத் தொடரில் நான் ஈடுபாட்டோடு கலந்துகொள்கிறேன். இந்த 27 வருட காலத்தில், 27 இலக்கியச் சந்திப்புகள் நடந்திருக்கின்றன. இந்தக் கால இடைவெளியில் நான்கு இலக்கியச் சந்திப்புகளில் மட்டுமே மலர்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இனியும் சூல் கொள் (1997), இருள்வெளி (1998), குவர்னிகா (2013), இமிழ் (2024) ஆகியவையே அந்த மலர்கள். இந்த நான்கு மலர்களிலுமே நான் எழுதியிருக்கிறேன். இந்த நான்கு மலர்களிலும் 'குவர்னிகா'வைத் தவிர வேறு எந்த இலக்கியச் சந்திப்பு மலருக்கும் ஆக்கங்களைக் கேட்டு 'பொது அறிவித்தல்' கொடுக்கப்பட்டதில்லை. 'இனியும் சூல் கொள்' தொகுப்பைப் பொறுத்தவரை, ஒருங்கிணைப்புக் குழுவிலிருந்த எம்.ஆர்.ஸ்டாலின் என்னைத் தொடர்பு கொண்டு சிறுகதை கேட்டார். 'இருள்வெளி' மலருக்காக அதன் தொகுப்பாசிரியர் சுகன் என்னிடம் நேரில் சிறுகதை கேட்டார். இதேவழியில்தான் ஏனைய எழுத்தாளர்களிடமும் நேரிலோ, தொலைபேசி வழியாகவே, கடிதம் மூலமோ அணுகிப் படைப்புகள் பெறப்பட்டன.*

*இலக்கியத்தை அளவிடுவதற்குப் பொதுவான - எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுகோல் என்று எதுவுமே கிடையாது.*

**இன்னொரு இலக்கியச் சந்திப்பில், இன்னொரு இலக்கிய மலரோடு உங்களை மீண்டும் சந்திக்கிறேன் தோழர்களே!**

**இவைதான் சோபாசக்தி எழுதிய மறுப்பு.**

*ஒவ்வொருவருடைய வாசகத் தன்னிலையைப் பொறுத்தும் மதிப்பீடுகள் நிச்சயமாகவே வேறுபடும். அவருடைய சமூகப் பின்னணி, பாலினம், அரசியல் பார்வை போன்ற பல்வேறு காரணிகள் மதிப்பீடுகளை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்தும். 'இமிழ்' தொகுப்பைப் பொறுத்தவரை நானும் தர்மு பிரசாத்தும் உரையாடி, விவாதித்து ஒரு மதிப்பீட்டு முறையையும் அளவுகோலையும் உருவாக்கிக்கொண்டு, அதன் அடிப்படையில் எழுத்தாளர்களைத் தேர்வு செய்தோம். இதைச் செய்வதற்கான அனுபவத்தையும் பார்வையையும் தர்மு பிரசாத்தின் பத்து வருடகால இலக்கிய எழுத்துகளும் 'ஆக்காட்டி' இதழை*




*நடத்தும் அனுபவமும் அவருக்கு வழங்கியிருப்பதாகவும், என்னுடைய முப்பது வருடகால இலக்கிய வாழ்க்கையும் ஏற்கனவே மூன்று தொகுப்புகளுக்கும் மூன்று நூல்களுக்கும் பதிப்பாசிரியராக இருந்த அனுபவமும் எனக்கு வழங்கியிருப்பதாகவும் நான் கருதுகிறேன்.*

*'இமிழ்' தொகுப்பைப் பொறுத்தவரை ஆசிரியர் குழு உருவாக்கிக்கொண்ட இலக்கிய அளவுகோலின் அடிப்படையிலேயே எழுத்தாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அந்த அளவுகோலை உபயோகிக்கும் சுயாதீனத்தை ஆசிரியர் குழுவுக்கு 51-வது இலக்கியச் சந்திப்பு ஒருங்கிணைப்புக் குழு ஒருமனதாக வழங்கியிருந்தது.*

*இன்னொரு இலக்கியச் சந்திப்பில், இன்னொரு இலக்கிய மலரோடு உங்களை மீண்டும் சந்திக்கிறேன் தோழர்களே!*

இவைதான் சோபாசக்தி எழுதிய மறுப்பு.

•••


இந்த எழுத்து முறைக்குப் பின்னாலுள்ள தடித்தனம் பற்றியது தான் எனது வெளிப்பாடேயன்றி வேறு எதுவுமில்லை. சோபாசக்தி வளர்க்கும் செம்மறியான தர்மு பிரசாத் அவர்கள் எழுதியிருக்கும் குறிப்பிற்கும் தர்மு பிரசாத்திற்கு அண்ணனான சோபாசக்தி எழுதியதற்கும் எந்தப் பெரிய வேறுபாடுகளும் இல்லை.

53வது இலக்கியச் சந்திப்பினை தானே நடத்தப் போவதாக அறிவித்தும் தானே ஒரு இலக்கியத் தொகுப்புக் கொண்டுவர இருப்பதாக அறிவித்தும் தர்முப் பிரசாத்தினால் ஒரு (பகிடி) கதை எழுத முடிகிறது. ஆனால் அதனையே இன்னொரு மாதிரியாக 'அடுத்த இலக்கியச் சந்திப்பிலும் இலக்கியச் சந்திப்பு மலரிலும் சந்திப்போம்' என்று அந்தச் செம்மறியின் அண்ணன் எழுதுகிறார். இந்த இரண்டிற்குமான வேறுபாடு என எதுவுமே இல்லை. ஒரேமாதிரியான தடித்தனந்தான். இது குறித்த கோபந்தான்

என்னுடையதேயொழிய நான்உங்கள் தொகுப்பில் எழுதவேண்டும் என்ற ஆசையினால் முன்தோன்றியதல்ல. ஆனால் கேட்கப்பட்ட கேள்விகளை மழுங்கடித்து நீங்களோ நான் உங்களின் தொகுப்பில் எழுதாததுதான் எனது கோபம் என்று திரித்துக் கதை சொல்ல வருகிறீர்கள். அதனையும் உங்களால் ஆதாரத்துடன் சொல்லமுடியாது நகைச்சுவையாகவும் திமிர்த்தனமாகவும் கடந்து செல்ல முனைகிறீர்கள்.

இதனையும் தாண்டி சோபாசக்தி தன்னுடைய தடித்தனத் தவறை மறைக்க முழுப் பொய் சொல்கிறார். 'நான்கு இலக்கியச் சந்திப்புகளில் மட்டுமே மலர்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இனியும் சூல் கொள் (1997), இருள்வெளி (1998), குவர்னிகா (2013), இமிழ் (2024) ஆகியவையே அந்த மலர்கள். இந்த நான்கு மலர்களிலுமே நான் எழுதியிருக்கிறேன்.' என்கிறார்.

இந்த நான்கு மலர்களிலும் 'நான் எழுதியிருக்கிறேன்' என்று அவர் குறிப்பிடும் அடையாளத்தை விட மிக முக்கியமானது, முதல் மூன்றிலும் பல நூறுபேர் எழுதியிருக்கிறார்கள் என்பதுதான். மிகக் குறைந்தளவு தொடர்பு வசதிகள் கூட இல்லாத காலத்தில், மிகவும் கோரமாக யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் வெளிவந்த தொகுப்புக்களான இனியும் சூல் கொள் மற்றும் இருள்வெளி என்பன அவற்றுள்




மிக முக்கியமானவை. அவை வெளிப்படுத்த முனைந்த பதிவுகள் அதனை விட முக்கியமானது. ஆனால் 'இமிழ்' என்ற தொகுப்பு அப்படியானதல்ல.

'தமக்குக் கிடைத்த கதைகளில் மெல்லிதாகவேனும் யுத்தத்தின் அடையாளம் சொல்லிய கதைகளையே தெரிவு செய்தோம்' என்று அதன் வெளியீட்டாளர்களில் ஒருவரான தர்முபிரசாத் சொல்கிறார். சோபாசக்தியோ எழுத்தாளர்களைத் தாம் உருவாக்கிக் கொண்ட அளவுகோலின் அடிப்படையில் தெரிவு செய்தோம் என்கிறார். இவர்கள் இருவருமே சொல்வதிலிருந்து அது வெறுமனே தமிழ்நாட்டவர்களை முன்நிறுத்திக் கதைசொல்ல முனைந்த கதை வெளிப்பாடு என்றுதான் என்னால் அடையாளம் சொல்ல முடிகிறது. அந்தத் தெரிவின் சிந்தனையில் மட்டுமே தொடர்ந்து பணியாற்றுபவர்கள் இவர்கள். தங்களது இவ்வாறான ஒரு புத்தகத்தின் தெரிவை இலக்கியச் சந்திப்பின் பெயரில் வெளிக்கொண்டு வந்ததும் அதனை இன்றைய ஈழ- புலம்பெயர் சிறுகதைகள் என அடையாளம் காட்டியதும் பற்றியதுமான கரிசனையே என்னுடையது. மிகுதி புத்தகம் வாசித்த பின்பே மிகுதி பற்றி பேசமுடியும்.

தொடர்ந்து,

'இந்த நான்கு மலர்களிலும் 'குவர்னிகா'வைத் தவிர வேறு எந்த இலக்கியச் சந்திப்பு மலருக்கும் ஆக்கங்களைக் கேட்டு 'பொது அறிவித்தல்' கொடுக்கப்பட்டதில்லை' என்கிறார் சோபாசக்தி.

இனியும் சூல் கொள் வெளிவந்த காலமோ, இருள்வெளி வெளிவந்த காலமோ பொது அறிவித்தல் விடக் கூடிய காலமல்ல என்பது நன்றாக நம்மில் அனைவருக்கும் தெரியும். அது சோபாசக்திக்கும் கூடத் தெரியாமலில்லை.

ஆனால் தமிழ்நாட்டவர்களால் அந்தக் காலத்தைப் புரிந்து கொள்ள முடியாது என்பது உண்மைதான். ஆனபடியால்த்தான் அவர்களை நோக்கி எழுதும் அவர் இந்தமாதிரியான தந்திர வார்த்தைகளைப் பயன்படுத்த முனைகிறார். இனியும் சூல் கொள்,

இனியும் சூல் கொள் வெளிவந்த காலமோ, இருள்வெளி வெளிவந்த காலமோ பொது அறிவித்தல் விடக் கூடிய காலமல்ல என்பது நன்றாக நம்மில் அனைவருக்கும் தெரியும். அது சோபாசக்திக்கும் கூடத் தெரியாமலில்லை.

ஆனால் தமிழ்நாட்டவர்களால் அந்தக் காலத்தைப் புரிந்து கொள்ள முடியாது என்பது உண்மைதான். ஆனபடியால் தான் அவர்களை நோக்கி எழுதும் அவர் இந்தமாதிரியான தந்திர வார்த்தைகளைப் பயன்படுத்த முனைகிறார். இனியும் சூல் கொள், மற்றும் இருள் வெளி என்ற இந்த இரண்டு தொகுப்புக்களும் வெளிவந்த பின்னால் நம்மில் பலருக்கு மனதளவில் இருந்த பதட்டமும் அச்சமும் இன்றுவரை மறக்க முடியாதிருப்பது.

'இருள்வெளி' என்ற தொகுப்பின் வருகைக்குப் பின் எவ்வளவு காலம் சுகன் அவர்கள் லாச்சப்பல் என்ற தமிழர்கள் நெருங்கிய பகுதிக்குச் செல்லாதிருந்தார் என்பது எனக்குத் தெரியும்.
ஆனால் சோபாசக்திக்கு இந்தக் காலங்கள் எது குறித்தும் பொருட்டேயல்ல.
அனைத்திலும் தன்னை முன்னிலைப்படுத்தி அதனையே விற்றுவிடத் துடிப்பவர். அதனால் தான் இனியும் சூல் கொள் : மற்றும் இருள்வெளி பற்றியெல்லாம் எந்தக் கூச்சமும் இல்லாமல் தன்னோடு இணைத்துக் கதை சொல்லிவிடத் தோன்றுகிறது. சமூகப் பொதுச்சிந்தனை என்பது அவருக்குள் இல்லவேயில்லை.

மற்றும் இருள் வெளி என்ற இந்த இரண்டு தொகுப்புக்களும் வெளிவந்த பின்னால் நம்மில் பலருக்கு மனதளவில் இருந்த பதட்டமும் அச்சமும் இன்றுவரை மறக்க முடியாதிருப்பது. ‘இருள்வெளி’ என்ற தொகுப்பின் வருகைக்குப் பின் எவ்வளவு காலம் சுகன் அவர்கள் லாச்சப்பல் என்ற தமிழர்கள் நெருங்கிய பகுதிக்குச் செல்லாதிருந்தார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் சோபாசக்திக்கு இந்தக் காலங்கள் எது குறித்தும் பொருட்டேயல்ல. அனைத்திலும் தன்னை முன்னிலைப்படுத்தி அதனையே விற்றுவிடத் துடிப்பவர். அதனால் தான் இனியும் சூல் கொள் - மற்றும் இருள்வெளி பற்றியெல்லாம் எந்தக் கூச்சமும் இல்லாமல் தன்னோடு இணைத்துக் கதை சொல்லிவிடத் தோன்றுகிறது. சமூகப் பொதுச்சிந்தனை என்பது அவருக்குள் இல்லவேயில்லை.

அதனால் தான் யுத்தம் பற்றிய தமிழ்நாட்டு அறிவுசார் முட்டாள்களுக்கு இருக்கும் அறிவைக் குழப்பிவிடக் கூடாது என்பதற்காக கருப்புப்பிரதிகள் மூலம் செயற்படுத்தப்பட்ட இமிழ் என்ற ஒரு செயலை இனியும் சூல் கொள் மற்றும் இருள் வெளியுடன் பொருத்த நினைப்பதும் அதற்குள் ஒளிய நினைப்பதும்.

தமிழ்நாட்டவர்களுக்கு எவ்வாறு தன்னையும் தன் எழுத்தையும் வியாபாரம் பண்ணுவதற்காக கதைகளை சோபாசக்தி எழுத முனைகிறாரோ அதேபோல் மற்றவர்களையும் அப்படியே எழுதத் தூண்டுகிறார். அவர் பின்னால் எழுதும் சிறுகதையாளர்களுக்கும் அவர் போன்று எழுதித் தமிழ் நாட்டில் பெயரெடுத்துவிட வேண்டும் என்ற ஆசைதான் முக்கியமாக இருக்கிறது. தன்னுடைய இயல்பான தேடலுடன் தனக்குரிய கதை சொல்லும் போக்குடன் எழுதத் தொடங்கும் ஒரு கதை சொல்லியைத் தன்போல் ‘கோர்த்துக்கட்டி‘ மனநிலைக்குள் தள்ளி அவர்களின் சுயத்தையே அழித்துவிடும் வல்லமை கொண்டவராக இன்று இருக்கிறார் சோபாசக்தி. அதுதான் என்னுடைய மிகப்பெரிய கவலை.

தமிழ்நாட்டவர்களுக்கு எவ்வாறு தன்னையும் தன் எழுத்தையும் வியாபாரம் பண்ணுவதற்காக கதைகளை சோபாசக்தி எழுத முனைகிறாரோ அதேபோல் மற்றவர்களையும் அப்படியே எழுதத் தூண்டுகிறார். அவர் பின்னால் எழுதும் சிறுகதையாளர்களுக்கும் அவர் போன்று எழுதித் தமிழ் நாட்டில் பெயரெடுத்துவிட வேண்டும் என்ற ஆசைதான் முக்கியமாக இருக்கிறது. தன்னுடைய இயல்பான தேடலுடன் தனக்குரிய கதை சொல்லும் போக்குடன் எழுதத் தொடங்கும் ஒரு கதை சொல்லியைத் தன்போல் ‘கோர்த்துக்கட்டி‘ மனநிலைக்குள் தள்ளி அவர்களின் சுயத்தையே அழித்துவிடும் வல்லமை கொண்டவராக இன்று இருக்கிறார் சோபாசக்தி. அதுதான் என்னுடைய மிகப்பெரிய கவலை.
தன்னியல்பாக எழுத்தாற்றலுடன் வந்த யோ.கர்ணனுக்கும் சயந்தனுக்கும் நடந்த கதி இதுதான். இன்று தர்மு பிரசாத்திற்கும் ஜெயந்தனுக்கும் நடப்பதும் அதுதான். இவர்கள் தங்களது சுயத்தை இழந்து நிற்பவர்கள். தமிழ்நாட்டிற்குக் கதை சொல்வதற்காகத் தங்களால் சொல்லவேண்டிய கதையையும் சொந்த மொழிநடையையும் மறந்தவர்கள்.

தன்னியல்பாக எழுத்தாற்றலுடன் வந்த யோ.கர்ணனுக்கும் சயந்தனுக்கும் நடந்த கதி இதுதான். இன்று தர்மு பிரசாத்திற்கும் ஜெயந்தனுக்கும் நடப்பதும் அதுதான். இவர்கள் தங்களது சுயத்தை இழந்து நிற்பவர்கள். தமிழ்நாட்டிற்குக் கதை சொல்வதற்காகத் தங்களால் சொல்லவேண்டிய கதையையும் சொந்த மொழிநடையையும் மறந்தவர்கள். சயந்தன் அவர்களுடைய கடைசி நாவலில் ஈழப் போர் குறித்த அவலம் போதாது இருக்கிறது எனத் தமிழ்நாட்டிலிருந்து தமிழினிப் பதிப்பகத்தினர் கேட்டதற்காகத் மீளவும் திருத்திச் சேர்த்து எழுதிக் கொடுத்தவர் என்பதனை நண்பர்கள் ஊடாக அறிந்த போது அவர் தன்னுடைய சுயம் இழந்து நிற்பது தெரிந்தது. இதுதான் தீபச்செல்வனுக்குள்ளும் இன்று நடைபெறுவது. தமிழ் நாட்டு முட்டாள் வாசகர்களை நம்பிக் காவடி எடுக்கும் கூட்டம் இது. இது இப்படியே அழிந்துதான் போகும். அழிந்துதான் போகவும் வேண்டும்.

தனது குறிப்பில் சோபாசக்தி அவர்கள், தன்னுடைய ஆதாரக் கதை சொல்லலுக்கு இருள்வெளி என்ற தொகுப்பினையும் இலக்கியச் சந்திப்பு மலராக இங்கே அடையாளம் காட்டுகிறார். அது முழுக்க முழுக்கப் பொய்யான தகவல். இருள் வெளி என்ற மலர் தனியே சுகன் என்ற தோழரால் வெளிக்கொண்டு வரப்பட்ட தொகுப்பு. அது இனியும் சூல் கொள் போன்று இலக்கியச் சந்திப்பின் அடையாளத்துடன் வந்ததல்ல. 24வது இலக்கியச் சந்திப்பினையொட்டி இலக்கியச் சந்திப்பிற்காக என்ற அடையாளத்துடன் பிரான்சிலிருந்து சுகனால் கொண்டுவரப்பட்ட தொகுப்பு அது. அந்த 24வது இலக்கியச் சந்திப்பு பிராங்போர்ட்டில் நடைபெற்றது. அந்த இலக்கியச் சந்திப்புக்குழுவால் தொகுக்கப்பட்ட தொகுப்புமல்ல இருள்வெளி. தொகுத்ததும் தவிர்த்ததும் சுகன் என அது வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறது. 1997 இல் தொகுக்கப்பட்ட இனியும் சூல் கொள் தொகுப்பின் பின் எழுந்த ஒரு நம்பிக்கையில் வெளிவந்த தொகுப்பு அது. இனியும் சூல் கொள் என்ற தொகுப்பிற்கு கூட எத்தனையோ தோழர்கள் இணைந்து பணியாற்றியிருந்தாலும் அதனை இன்றுவரை யாருமே தன்னுடைய தனி அடையாளத்தைத் தனிப்பட அதற்குக் காட்டுவதில்லை. அது ஒரு கூட்டு உழைப்பு. அந்தக் கூட்டு உழைப்பிற்குள் சோபாசக்தி இல்லவேயில்லை. இருந்ததுமில்லை. தான் ஒரு கதை எழுதியதை மட்டும் வைத்து தனக்குள்ளால் அதனை அடையாளம் காட்டிவிட முனைகிறார் இப்பொழுது. இந்தத் தற்குறித்தனம் பற்றித்தான் நான் அதிகம் பேசுகிறேன்.

இங்கே சோபாசக்தி குறிப்பிட்டுள்ள முதல் மூன்று தொகுப்புக்களிலும் எழுதியவர்களைக் கணக்கிட்டுப் பாருங்கள். அவை ஒரு கூட்டு உழைப்பின் வெளிப்பாடு. தனியே சுகன் மட்டும் தொகுத்த தொகுப்பு எனினும் அந்தத் தொகுப்புப் பேசிய விடயங்களையும் அது வெளிவந்த காலத்தையும் கணக்கிட்டுப் பாருங்கள். இன்று கூட சாத்தியமற்ற செயல் அது. ஆனால் நீங்கள் தொகுத்த இமிழ் என்பதன் அடையாளம் அப்படியானதல்ல. இது தனியே உங்களது தடித்தனத்தினதும் தற்குறித் தனத்தினதும் மொத்த வெளிப்பாடு. அது குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு நீங்கள் சொல்லும் பதில் இந்தவகைத் தற்குறியாளன் மிகச் சிறந்த அயோக்கியனே! என்று சொல்லுமளவிற்குத்தான் இருக்கிறது.

மேலும், இருள்வெளி என்ற தொகுப்பு பாரீஸ் சார்சலில்-சபாலிங்கம் மண்டபத்தில் சுகனால் வெளியிடப்பட்டதனை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். இனியும் சூல்கொள் வருகையின் பின் பாரீசில் மெல்லத் துளிர்த்தது துணிவு. சபாலிங்கம் அவர்களது கொலையின் பின் உறைந்து கிடந்த அச்சத்திலிருந்து விடுபடும் துணிவு, பெருந்துணிவே! அப்பொழுது லண்டனில் பத்மநாப ஐயர் அவர்கள் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டை மெல்லத் தழுவியது போல் இன்னுமொரு காலடி- யுகம் மாறும்- எனத் தொகுப்புக்கள் வெளிக் கொண்டு வந்திருந்தார். அந்தக் கருத்தியலின் எதிர்த் திசையிலிருந்து வெளிக் கொண்டுவரப்பட்ட ஒரு தொகுப்பே இருள்வெளி. அது பேசிய விடயங்கள் பற்பல. ஆனால் இன்று சோபாசக்தி அவர்கள் தனது தடித்தனத்தை மறைக்கப் பச்சைப் பொய் சொல்லிவிடுகிறார். இமிழ் பற்றிய தன்மீதான குற்றச் சாட்டுக்களை மழுங்கடிப்பதற்காக இருள்வெளியைத் துணைக்கு அழைக்கிறார். தமிழ்நாட்டு முட்டாள்கள் பலருக்கு இருள்வெளியும் தெரியாது. இனியும் சூல் கொள் தொகுப்பும் தெரியாது. தெரியாததைத் தேடவேண்டும் எனவும் தெரியாது. அவர்களுக்குத் தெரிந்தது சோபாசக்தி மட்டுந்தான். சோபாசக்தி சொல்வது மட்டுந்தான் உண்மை என்று சொல்லக் கூடியவர்கள் இன்னும் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்குள் ஒரு தேடலும் வந்து விடக் கூடாது என்று சோபாசக்திக்காக வேலை செய்யும் ஒரு பெருங்கூட்டமும் கருப்புப் பிரதிகள் போன்று செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

தமிழ்நாட்டு முட்டாள்கள் பலருக்கு இருள்வெளியும் தெரியாது. இனியும் சூல் கொள் தொகுப்பும் தெரியாது. தெரியாததைத் தேடவேண்டும் எனவும் தெரியாது. அவர்களுக்குத் தெரிந்தது சோபாசக்தி மட்டுந்தான். சோபாசக்தி சொல்வது மட்டுந்தான் உண்மை என்று சொல்லக் கூடியவர்கள் இன்னும் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்குள் ஒரு தேடலும் வந்து விடக் கூடாது என்று சோபாசக்திக்காக வேலை செய்யும் ஒரு பெருங்கூட்டமும் கருப்புப் பிரதிகள் போன்று செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

•••

51வது இலக்கியச் சந்திப்பின் நிகழ்ச்சிநிரல் அறிவிக்கப்பட்டு சில நாட்களில் இமிழ் தொகுப்பின் அட்டைப்படம் வெளியாகிறது. அட்டைப்படம் வெளியாகிய உடன் தமிழ்நாட்டில் கருப்புப் பிரதிகள் பதிப்பகத்தினர் அதனை சோபாசக்தியிடம் கையளித்த படம், அந்தப் பதிப்பகத்தின் பொறுப்பாளர் நீலகண்டன் அவர்களால் பொதுவெளியில் பகிரப்பட்டதை நீங்கள் அனைவரும் கவனித்திருப்பீர்கள்.

இப்படித்தான் ஒரு பொதுச் செயற்பாட்டை தன்னுடையதாக மட்டும் மாற்றி தன் அடையாளத்தை முன்நிறுத்தும் செயலில் அவர் தொடர்ந்தும் பயணித்துக் கொண்டிருக்கிறார். அதற்கு என்றும் தூணாக இருந்து கொண்டிருப்பது தமிழ்நாட்டுக் கருப்புப்பிரதிகள் என்ற பதிப்பகம் என்று நான் அடையாளம் காட்டியிருக்கிறேன். அதனால் அவர்களை அந்த இடத்திலேயே இடைமறித்து விடவேண்டும் என நான் நினைத்தேன். அதனாலேதான் இவ்வளவுதூரம் நேரத்தை இதற்குள் செலவிட வேண்டியுமிருக்கிறது. இந்தச் செயற்பாட்டை இப்படியே பாராது விட்டுச் செல்வோமானால் கடந்தகாலச் செயற்பாடுகளை மறைத்து அதற்காக உழைத்த அத்தனைபேரது உழைப்பிலும் மண் அள்ளிப் போட்டு தன்னுடைய தற்குறித் தனத்தால் மூடிவிடுவார் சோபாசக்தி என்று நான் நம்புகிறேன். நாம் மவுனமாக இருந்தால், அதற்கு ஒருவகையில் நாமும் பொறுப்பாளர்களாவோம் என்று உணருகிறேன். அதனாலேதான் 51வது இலக்கியச்சந்திப்பில் வெளியிடப்பட்ட இமிழ் என்ற தொகுப்பின் அரசியலும், அதன்பின் எழுதப்பட்ட விடயங்கள் குறித்தும் பேசிக் கொண்டேயிருக்க வேண்டியிருக்கிறது.

ஒரு கூட்டு உழைப்பு செயற்பாட்டினை தன்னுடைய அடையாளத்தை முன்நிறுத்தி மட்டுமே குறுக்கி நடைமுறைப் படுத்தும் செயற்பாடானது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதும் இனியும் தொடரவிடாது பார்க்க வேண்டியதும். உண்மையில் இந்தக் கவனக் குறைவிற்கு முழுக்க முழுக்க அந்த 51வது இலக்கியச் சந்திப்புக் குழுவினரே பொறுப்பானவர்கள். அவர்களுக்குள் இருக்கும் அசண்டைத்தனமே இத்தனைக்கும் காரணம். இன்று அவர்களில் பலர் அதனை உணர்ந்து கொண்டாலும் இனி வருங்காலங்களில் இந்தத் தவறு நடந்துவிடக்கூடாது- நடக்கவும்விடக் கூடாது என எண்ணுவதற்கு ஒரு நம்பிக்கையும் இல்லை. ஏனெனில் ஒரு சமூகச் செயற்பாட்டைப் பொதுமைப்படுத்திச் செயற்படுத்த இவர்களால் இன்றளவும் முடியாதுதானிருக்கிறது.

குறைந்தபட்சம் 51வது இலக்கியச் சந்திப்பு நிகழ்ச்சிகளை சோபாசக்தியின் முகநூலிற்கு ஊடாகவேதான் நேரலையாகப் பார்க்கமுடியும் எனத் தயார் செய்து வைக்கப்பட்ட செயலானது மிகவும் முட்டாள் தனமானது என்பதனை செயற்பாட்டுக்

குழுவினர் இப்பொழுதாவது புரிந்து கொள்ள வேண்டும். அந்த இலக்கியச் சந்திப்பிற்கான தனியான முகநூல் கணக்கையோ அல்லது தொடர்பிற்கான தனியான ஈமெயில் முகவரியையோ வைத்துக் கொள்ள வழியற்ற சோம்பேறிகளாக அந்தக் குழுவினரில் பலர் இருந்திருக்கிறார்கள். அந்த சோம்பேறித் தனத்திற்குத்தான் இந்தத் தற்குறிகள் தக்கபடி கணக்குக் காட்டியிருக்கிறார்கள்.

இந்த நிலையைத்தான் நாம் விரைந்து அகற்றியாக வேண்டும். இதனை அகற்ற முனையும் போது, ஐயோ பாவம் என்று சொல்லி அவரின் முன்னாலும் பின்னாலும் இருக்கும் பல அல்லக்கைகள் ஓடிவந்து அழுவார்கள்தான். நீ எப்படித் தற்குறி என்று சொல்லலாம் என்று எங்களை நோக்கிக் கேள்வி எழுப்புவார்கள். அவர்களையும் பாவங்கள் என்று நாம் சொல்லி விட்டுக் கடந்து போகவே முடியாது. ஏனெனில் இந்தவகை நோயைத் தொடர்ந்தும் கொண்டு காவும் நுளம்புகள் அவர்கள். அதனால் இனிவருங்காலங்களில் அவர்களையும் சேர்த்து அம்பலப்படுத்திக் கொண்டுதான் செல்ல வேண்டியிருக்கும்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். கடந்த அபத்தம் இதழில் எனது எழுத்துக்களை வாசித்துவிட்டு உடனடியாகத் தமிழ் நாட்டிலிருந்து தோழர் ம.மதிவண்ணன் அவர்கள் தொலைபேசியில் அழைத்தார். நடக்கும் சிக்கல்கள் குறித்தும் இணைந்து செய்யும் இலக்கியத் தடித்தனங்கள் குறித்தும் வெளிப்படையாகச் சொல்லி விளங்கப்படுத்தினேன். தோழர் மதிவண்ணன் அவர்கள் தமிழ்நாட்டில் தலித் இலக்கியம் தலித் அரசியல் சார்ந்து தீவிரமாக எழுதிக் கொண்டிருப்பவர். ஆனால் அவருக்கே சோபாசக்தியின் 'தில்லுமுல்லு' ஐப் புரிந்து கொள்ள முடியவில்லை. மிகவும் அப்பாவித்தனமாகப் பேசினார். உங்களுக்கே 'கம்பு சுத்தின' கதை சொல்ல முனைகிறார் சோபாசக்தி அதனைக் கூடவா உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று கேட்டேன். அவரிடம் இருந்து மேலும் சிரிப்புத்தான் பதிலாக வந்தது. அவருடனான தொடர் உரையாடலில், 'இங்கே ஜெயமோகன் போன்றவர்களது எழுத்துத்தானே பெரும்பாலும் பெரிதாகப் பேசப்படுகிறது. அதுதானே எங்களுக்குக் கிடைக்கிறது. அதற்குள் சோபாசக்தி போன்றவர்களது எழுத்து எமக்கு வேறு கதை சொல்கிறது' என்றார்.

எனக்குக் கோபம் வந்தது.

'இதனைப்போல்த்தானே உங்களுக்கு மணிரத்தினம் அவர்கள் சினிமாவில் செய்கிறார்' என்று உடனேயே கேட்டேன். அவர் சிரித்தார். தோழர் மணிவண்ணன் அவர்களிடம் இப்போதும் கேட்கிறேன். பாலச்சந்தர் போன்றவர்கள் சொல்லிக் கொண்டிருந்த கதை முறைக்கு மாற்றாக மணிரத்தனம் அவர்கள் ஒரு புதிய கதை சொல்லல் முறையைச் சினிமாவில் காட்டினார் அல்லவா? அதனை நாம் எவ்வாறு புரிந்து கொள்வது? அதற்குள்ளால் அவர் சொல்லிக் கொண்டிருந்த அரசியல் சரியென்று ஏற்றுக் கொள்ள முடியுமா? அவரின் ஒவ்வொரு கதைக்குள்ளும் இருக்கும் நஞ்சை நாம் கண்டறிந்து விட வேண்டாமா? புதியதொரு முறையில் கதை சொல்கிறார் என நினைத்து சமூகத்திற்குள் விதைக்கும் நஞ்சை நீங்களே கவனியாது விடலாமா?

தொடர்ந்து கருப்புப் பிரதிகளின் பல செயற்பாடுகளை நான் உதாரணமாகச் சொல்ல முடியும். எனச் சொல்லி 'லெனின் சின்னத்தம்பி' என்ற ஜீவமுரளியின் நாவல் குறித்து அவருடன் பேசியபோது, 'அது ஒரு நாவலாக எழுதப்படவில்லை. இன்னும் அது திருத்தப்பட்டிருக்க வேண்டும்' என்றார். அந்த வார்த்தை எனக்கு அதிக கோபத்தை ஊட்டியது. உங்களது அறிவின்மையே அது. உங்களுக்கு அது நாவலாகத் தெரியவில்லை என்றால் நாம் என்ன தான் செய்வது? உங்களுக்குரிய வகையில் நாவல் எழுதவேண்டும் என்பதெல்லாம் என்ன கணக்கு? யார் சொன்ன கணக்கு? உங்களுக்குரிய வகையில் கதை சொல்ல வந்த ஒரு சோபாசக்தி போதாதா உங்களுக்கு? இப்படித்தான் ப.சிங்காரம் அவர்கள் 'புயலிலே ஒரு தோணி' என்ற நாவலை எழுதியபொழுது அது நாவலாக இல்லை என உங்கள் சுந்தர ராமசாமி அவர்கள் திருப்பி அனுப்பினாராம் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதே போன்ற கதைதானே இன்று நீங்கள் லெனின் சின்னத்தம்பி என்ற நாவல் குறித்துச் சொல்வதும்?

ஆனால் உங்கள் நீலகண்டன் அவர்கள் 'கருப்புப் பிரதிகள்' வெளியீடாக அதனை வெளியிட மாட்டேன் என மறுத்துவிட்டு, அதனை இன்றும் தனது விற்பனைத் தளத்தில் அடையாளம் காட்டி விற்று வருகிறார் என்பதாவது உங்களுக்குத் தெரியுமா? ஆக, காலச்சுவட்டுக் கண்ணனைக் காசுக் கண்ணன் என உங்கள் நீலகண்டன் விழிப்பதுபோல் நீலகண்டனையும் 'காசுப்பிரதிகள்' என அடையாளச் சொல் கொண்டு நாம் இனி அழைக்கலாமா?

'கருப்புப் பிரதிகள் ஊடாக நானும் புத்தகம் போட்டிருக்கிறேன். எனக்கு ஒரு சிக்கலும் இல்லை. நான் றோயல்டி எதிர்பார்ப்பதில்லை.' என்கிறீர்கள். தனுஜா சிங்கம் அவர்கள் கருப்புப் பிரதிகள் பற்றிக் கேட்டிருந்தது அது அல்ல என்பதனை நீங்கள் விளங்கியிருப்பீர்கள் என்றுதான் நினைக்கிறேன்.

தனுஜா சிங்கம் அவர்கள் ஒரு திருநங்கை. ஆனால் அவரது கதையைக் கூட உங்கள் சோபாசக்தி அவர்கள் கருப்புப் பிரதிகளுக்குக் காசாக்கிவிட்டு தனுஜா சிங்கம் அவர்களுக்கு எந்தப் பதிலும் சொல்லத் தேவையில்லை என்று கடந்து செல்வது எப்படி முடிகிறது? இதுவா உங்கள் சமூகப் பொறுப்புணர்வு? நமது சமூகத்தில் ஒரு திருநங்கையாக வாழ்வதென்பது நீங்கள் நினைப்பதுபோல் விளையாட்டானதல்ல. கருப்புப் பிரதிகள் குறித்து தனுஜாசிங்கம் அவர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தக்க பதில் ஒன்று நீலகண்டனால் சொல்லப்பட வேண்டும் அல்லவா? அவர் ஒரு

பதிலும் சொல்லாது ஓடி ஒழிவது எந்த விதத்தில் நியாயம்? அதனையும் அவதூறு என்று சொல்லி ஓடி ஒளிவாரா அவர்?

இதேபோன்றுதான் நான் கேட்ட கேள்விக்குக் கூட அதனை அவதூறு என ஒற்றைச் சொல்லில் சொல்லி என்னை முகநூலில் தடை செய்து விட்டு ஓடிவிட்டார் உங்கள் கருப்புப் பிரதிகள் நீலகண்டன். இவரை நாம் ஒரு சமூகப் பொறுப்புள்ளவர் என்றோ, அல்லது நல்லதொரு பதிப்பகத்தை நடத்துபவர் என்றோ எப்படி அடையாளம் கொள்வது? ஒரு பதிப்பகத்திற்கு இருக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பில் அவர் என்ன கவனம் செலுத்துகிறார்? புலம்பெயர் தமிழர்களின் எந்தப் புத்தகத்தைப் போட்டாலும் அவருக்குப் பணம் கிடைக்கிறது. அந்தப் பணத்தைத் தாண்டி அவரது கவனம் எதுவும் அந்தப் புத்தகங்களில் இருக்கிறதா? அந்தப் புத்தகங்கள் பேசும் கருத்தியலில் இருக்கிறதா? எதுவுமில்லை. நமது சமூகத்தில் mould பிடித்த உணவுகளைக் கூட விற்றுவிட எண்ணும் மளிகைக் கடை வியாபாரி போலவும் இடியப்பக் கடை வியாபாரி போலவும் ஒரு பதிப்பகம் நடத்துபவரை நாம் எந்தவகையில் அடையாளமிடுவது? அதற்கு ஒரு புதிய பெயரைத் தெரிவு செய்ய வேண்டும் அல்லவா?

நான் ஏற்கனவே சொல்லி வந்ததைப் போலவே கருப்புப் பிரதிகளும் சோபாசக்தி அவர்களும் வெளியிட்ட ஈழத்து எழுத்தாளர் ‘டானியல் அன்ரனி’ அவர்களது சிறுகதைகள்- அதிர்வுகள்- கவிதைகள் என்ற புத்தகம் பற்றிய பிறழ்வு ஒன்றை அருண்மொழிவர்மன் அவர்கள் தனது முகநூலில் பதிவு செய்திருந்தார். புத்தகத்தில் பிரதிகளின் பக்கங்கள் மாறியும் எழுதியவர்களது பெயர்கள் தவறியும் அச்சாக்கப்பட்டிருக்கிறது. ஒரு சஞ்சிகையில் எழுதிய இருவரது வேறு வேறு கட்டுரைகளை ஒன்றாக்கி ஒருவர் எழுதியதுபோல் புத்தகம் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. அப்படித் தவறாக அச்சாக்கப்பட்ட நூலுக்கு அடிப்படை அறிவு எதுவுமற்று அதனை உண்மை என நம்பி முன்னுரை எழுதியிருக்கிறார் சோபாசக்தி. இந்த நூலை அச்சாக்கத்திற்காகக் கொடுத்த டானியல் அன்ரனி அவர்களது மகனோ அல்லது அதனைப் பதிப்பித்த கருப்புப் பிரதிகள் பதிப்பகமோ ஏன் தெரியாத விடயத்திற்கு முன்னுரை எழுத சோபாசக்தியைப் பணித்தார்கள் என்று நன்றாகவே தெரியும். கருப்புப் பிரதிகளுக்கு சோபாசக்தி ஒரு விற்பனை அடையாளம். அந்த அடையாளம் சொல்வதுதான் உண்மை என நம்புவதற்குத் தமிழ் நாட்டில் ஒரு முட்டாள் கூட்டம். இலக்கிய அராத்துக்கள். எழுதிக் கொடுத்த முன்னுரையை கருப்புப்பிரதிகள் பதிப்பகமும் டானியல் அன்ரனி அவர்களது மகனும் வாசிக்காமலா அதனைப் பிரசுரத்திற்குக் கொடுத்தார்கள்? அவர்களுக்கும் கூட டானியல் அன்ரனி அவர்களது கருத்தியல் தெரிந்திருக்கவில்லையா? அப்படித் தெரியாதாயின் பிறகென்னத்திற்கு இந்தப் பதிப்பினைக் கொண்டுவருவான் அந்தப் பதிப்பகம்? தாங்கள் சொல்வதுதான் ஈழ இலக்கியம். தாங்கள் அடையாளம் காட்டுபவர்கள்தான் ஈழ இலக்கியவாதிகள். என்று ஒரு புதிய அடையாளம் காட்டி அதனையே உண்மை என்று சொல்ல முனைந்த செயலுக்கு விழுந்த பேரடி இது. அம்பலமாகி நிற்கும் ஒரு முட்டாள்த்தனத்தின் சொர்க்கவாசல். இதுமாதிரியான செயற்பாடுகளுக்கு தமிழ் நாட்டில் பொய் முகமூடி தரித்து நிற்கும் கருப்புப் பிரதிகளே மூல காரணம்.

ஒரு பதிப்பகத்திற்கு இருக்க வேண்டிய தார்மீகமான ஒரு செயற்பாட்டினை மறுதலித்து போலி வேலைகளில் வேறு ஒரு அடையாளத்தைக் காட்ட முனைவதுதான் கருப்புப் பிரதிகளது இன்றைய வேலை. இது முழுக்க முழுக்க சோபாசக்தியின் தடித்தனத்தின் மூலம் விளைவிக்கப்பட்டது. கொண்டு நடத்தப்படுவது.

இதனைப் பூரணமாக விளங்கிக் கொண்டதனால் தான் ‘ஒரு ஈழத்து இயக்கக்காரன் போலவும், தமிழ்நாட்டு அரசியல்வாதி போலவும் இலக்கியத்தைக் கையாளுகிறார் சோபாசக்தி என்றும், கருப்புப்பிரதிகளை வைத்துக் கொண்டு தன்னுடைய அடையாளத்தைக் காப்பாற்றும் படியாக எதனைப்பிரசுரத்திற்கு கொண்டுவரவேண்டும் எனவும் யாரை அடையாளம் காட்ட வேண்டும் எனவும் திட்டமிடுகிறார். அதேபோல் தன்னுடைய ஆதிக்கத்தில் ஆக்காட்டி என்ற சஞ்சிகையை வைத்துக் கொண்டு இலக்கியத்தைக் கையாள முனைகிறார். அதே போல் எத்தனையோ பேரது உழைப்பில் மண்ணைப் போட்டுவிட்டு இன்று புகலிட இலக்கியச் சந்திப்பினையும் தனது ஆட்டத்திற்குள் கொண்டு வருகிறார். இது மிகவும் மோசமான ஒரு செயல்முறை. இதனை அடியோடு கிள்ளி எறிய வேண்டும் என்று தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இந்தக் கருப்புப்பிரதிகளது அயோக்கியத் தனத்தையும் அதற்குள்ளிருக்கும் சோபாசக்தியின் தடித்தனத்தையும் அவரோடு இன்று சேர்ந்தியங்கும் செம்மறிகளையும் காலவதியாக்குவதோடல்லாது, இதன் உண்மைகளை விளங்கியும் விளங்காததுபோல் இருக்கும் கருணாகரன், ராகவன் போன்றவர்களினது செயற்பாடுகளையும் நாம் இனங் கண்டு பிரித்தறிய வேண்டும்.

இல்லையேல், இவர்களோடு சேர்ந்து நாங்களும் ஒரு செம்மிலிகள்தான் என்று சொல்லிவிட்டு மற்றய செம்மிலிகள் போலல்லாது மட்டை கட்டிய செம்மிலிகளாக அவர்கள் பின்னாலேயே நின்று கொள்வது மிகவும் மிகவும் நல்லது.

எல்லாம் நல்லபடி அழிந்து போகும்.

52 வது இலக்கியச் சந்திப்புக்கு இருக்கும் முக்கியதொரு பொறுப்பும் கடமையும், உங்கள் குழுவில் கிறீஸ் பூதம் போல் முகமூடி அணிந்தபடி சோபாசக்தி அவர்கள் உள்ளே வந்துவிடாது கவனிக்கவேண்டிய பொறுப்பு உங்களுக்கு உள்ளது. அந்தப் பொறுப்பிலிருந்து தவறிப் போகாதீர்கள். அதனைத் தற்குறித் தனத்திலிருந்து மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு மிக அருகில் உங்களிடமேயுள்ளது. அ



# Shelf life காலாவதியாகும் தலைமை

ஜோர்ஜ் இ.

ஒரு சமூகம் எப்போதும் ஒரு தலைவனைத் தேடியபடியே இருக்கும். தனிமனிதர்களான பிரஜைகளுக்கு, இலக்கிய மொழியில் சொல்வதாயின், 'சராசரிகளுக்கும், சாமான்யர்களுக்கும், காமன் மேன்களுக்கும்', 'அற்பர்களுக்கும் தான்', தலைமை தாங்குவதற்கான திறமையோ, ஆர்வமோ, தேவையோ இருப்பதில்லை. தன் நாளாந்த வாழ்வைக் கொண்டு செல்வதற்கான பொருளாதாரம் என்பது ஒவ்வொரு மனிதருக்குமான தவிர்க்க முடியாத அடிப்படைத் தேவை. அதைப் பெற்றுக் கொள்வதற்கான உழைப்பிலும் அது சார்ந்த கவலையிலும் சாதாரண மனிதர்களின் காலம் கழிந்து விடுகிறது.

இந்தத் தனிமனிதர்கள் சமூகமாக வாழும் போது, ஒரு தலைமை இல்லாத பட்சத்தில், 'வலியார் மெலியாரை' அடக்கியாளும் காட்டுத் தர்பார் (Law of the jungle) தான் ஆட்சியாக முடியும். இதனால், சமூகத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட தனிமனிதத் தலைமையோ, ஜனநாயகத் தலைமையோ தேவை என்பது சாதாரண மனிதர்களுக்குத் தெரியும். தனது இயலாமையை உணர்ந்து கொண்டதால் வரும் நிலை அது.

மன்னர் ஆட்சிகள் போய் ஜனநாயக ஆட்சிகள் வந்தாலும், ஒவ்வொரு காலங்களிலும் எங்களுக்கான தலைவர்கள் தோன்றிக்கொண்டே இருக்கிறார்கள். குடும்ப ஆட்சிகளும், வாழ்நாள் ஜனாதிபதிகளும் நிலவும் எங்கள் நாடுகள் போலன்றி, ஜனநாயகம் நிலவும் மேற்குலக ஆட்சிகளில் தற்போது நாங்கள் தலைவர்களாகக் காண்பவர்கள், சில வருடங்களுக்கு முன்னால் கூட யாருமே அறிந்திராத அனாமதேயங்களாக இருந்திருப்பார்கள்.

கிட்டத்தட்ட யானை மாலை போட்டு மன்னரானவர்கள் மாதிரித் தான் இந்தக் குடியானவர்கள் போட்ட வாக்குகளால், அல்லது ஊடகங்களால் ஊதிப் பெருப்பிக்கப்பட்டதால் தலைவர்களாகியிருப்பார்கள்.

ஜனநாயக முறையில் ஆட்சி அதிகாரத்திற்கான பொறிமுறை (Bureaucracy) ஏற்கனவே இருப்பதால், ஆட்சி மாற்றம் என்பது பெரும் மாற்றங்களை வேண்டி நிற்பதில்லை. தலைமை மாற்றம் என்பது கூட, வெறுமனே change of the guard என்ற அளவில் தான் இருக்கும். அங்கே தலைவர் என்பவர் கட்சித் தலைவராக இருந்தாலேயே போதும்.

புரட்சிகளுக்கான தலைமைகள் அவ்வாறானவை இல்லை. சாதாரண மக்கள் அந்தத் தலைமைகளிடம் எதிர்பார்க்கும், கோரும் தகைமைகளும் திறன்களும் வேறானவை. மக்களை ஒருங்கிணைத்து, பெரிய அதிகாரம் ஒன்றுக்கு எதிராகப் போராடுவது என்பது வெறும் 'புரட்சித் தலைவர்களால்' சினிமாத்தனமாக முடியக் கூடிய விடயம் இல்லை. அதற்கான ஆளுமை வெறும் கவர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டது. அந்தத் தலைவர்கள்

**புரட்சிகளுக்கான தலைமைகள் அவ்வாறானவை இல்லை. சாதாரண மக்கள் அந்தத் தலைமைகளிடம் எதிர்பார்க்கும், கோரும் தகைமைகளும் திறன்களும் வேறானவை. மக்களை ஒருங்கிணைத்து, பெரிய அதிகாரம் ஒன்றுக்கு எதிராகப் போராடுவது என்பது வெறும் 'புரட்சித் தலைவர்களால்' சினிமாத்தனமாக முடியக் கூடிய விடயம் இல்லை. அதற்கான ஆளுமை வெறும் கவர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டது.**
**அந்தத் தலைவர்கள் எல்லாம் தலைமுறைகள் கடந்த பின்னாலும், தலைவர்களாகவும், Statesman களாகவும் கொண்டாடப்படுவதற்கான காரணம், அவர்கள் மக்கள் நெருக்கடிகளை எதிர்கொள்ளும்போது வழங்கிய தலைமை தான். அது வெறும் உணர்ச்சிகர உசுப்பேத்தல்களால் நடந்து முடியக் கூடியவையும் இல்லை. அடிச்சுப் பறிக்கலாம் என்ற முட்டாள் தனமான நம்பிக்கையால் ஆனதும் இல்லை. புத்திசாதுரியமான செயற்பாடுகளை வேண்டி நிற்பது.**

எல்லாம் தலைமுறைகள் கடந்த பின்னாலும், தலைவர்களாகவும், Statesman களாகவும் கொண்டாடப் படுவதற்கான காரணம், அவர்கள் மக்கள் நெருக்கடிகளை எதிர்கொள்ளும்போது வழங்கிய தலைமை தான். அது வெறும் உணர்ச்சிகர உசுப்பேத்தல்களால் நடந்து முடியக் கூடியவையும் இல்லை. அடிச்சுப் பறிக்கலாம் என்ற முட்டாள் தனமான நம்பிக்கையால் ஆனதும் இல்லை.

புத்திசாதுரியமான செயற் பாடுகளை வேண்டி நிற்பது.

புரட்சிகளின் வெற்றியின் பின்னால், அந்தத் தலைமையில் அதிகாரத்தை நடத்திச் செல்ல முயலும்போது, ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் முழுமையாக வித்தியாசமானவை.

ஜனநாயக அமைப்பில் உள்ள அரசுகளில் கூட, நீண்ட நாட்களாக ஆட்சியில் உள்ள அரசு ஊழல்களில் ஈடுபடுவதாலோ, பொருளாதாரம் சீரழிந்து மக்கள் அவலப்படும் நிலை வரும்போதோ, ஏன் வெறுமனே மக்கள் கூட்டம் சலிப்புற்றோ போகும் நிலையில் இன்னொரு தலைமையைத் தேட வேண்டிய நிலை வருகிறது.

கனடாவில் கூட, சமீப காலங்களில் ஆட்சிக்கு வருவோர் இரண்டு தடவைகளுக்கு மேல் ஆட்சிக்கு வருவதும், பின்னர் அவர்கள் மேல் சலிப்புற்றதால் எதிர்க்கட்சி ஆட்சிக்கு வருவதும் ஒரு வழக்கமாகத் தான் இருக்கிறது. பெரும்பாலும் இந்த ஆட்சி மாற்றமும் தலைமை மாற்றமும் ஆளும் கட்சியின் மீதான சலிப்பினாலேயே அன்றி, எதிர்க்கட்சியை மீட்பர்களாக நினைக்கும் நிலையினால் வருவதில்லை. கனடியர்களின் மனநிலையும் அதற்குக் காரணம். We simply vote them out.

தற்போதைய காலங்களில் தோன்றும் ஜனநாயகத் தலைமைகள் ஒரு புதிய பண்பைக் கொண்டிருக்கின்றன. தீவிரவாத உணர்வுகளைக் கிளப்பி, மக்களைப் பிரிப்பதன் மூலமாக ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சி கிட்டத்தட்ட உலகெங்கும் நடந்து கொண்டிருக்கின்றன. இது எண்பதுகளில் றீகன், தட்சர் காலத்தில் தொடங்கியது என்று நினைக்கிறேன்.

இந்தப் பண்பு நடுநிலை முதல் இடதுசாரியம் வரையான left of center தலைமைகளில் இருப்பதில்லை. இந்தத் தலைமைகள் பெரும்பாலும் சமூகத்தின் வளர்ச்சியில் விடுபட்டுப் போவோரையும் அணைத்துக் கொண்டு, அவர்களுக்கான நீதியை உறுதி செய்யும் இயல்புகளைக் கொண்டனவாக இருக்கும். வளர்ந்த நாடுகளில் இருக்கும் ஜனநாயக, தொழில், தாராளவாதக் கட்சிகள் (Democratic, labor, liberal parties) இவ்வாறான சமூக நீதிக்கான இயல்புகளைக் கொண்டன.

வலதுசாரிக் கட்சிகள் தான் இந்த உசுப்பேத்தல் அரசியலைச் செய்தவாறுள்ளன. அமெரிக்காவில் குடியேற்றவாசிகளுக்கு எதிராக மதில் கட்டும் முயற்சியை முன்நிறுத்தி ட்ரம்ப் வெற்றி பெற்றது அவ்வாறு தான். பிரிட்டனில் அகதிகளுக்கு எதிரான மனநிலையை அதிகரிப்பதும் அதனால் தான். இவை பழமைவாதச் சிந்தனையுள்ளோரைக் கவர்வதற்காக, சமூகத்தின் பல்வேறு பிரச்சனைகளுக்கும் ஒரு கூட்டத்தினரைக் காரணம் காட்டி ஆட்சியைப் பிடிக்க முயல்கின்றன.

இந்தப் பழமைவாதம் பெரும்பாலும் முதலாளித்துவம் சார்ந்ததாகவே இருக்கின்றது. அது ஆட்சியைக் கைப்பற்றி, சாதாரண மக்களின் நலன்களை விட, முதலாளித்துவத்தின் நலன்களைக் காக்கவே முயல்கிறது. வரிக்குறைப்பு முதல் வர்த்தக நிறுவனங்கள் மீதான விதிகளைத் தளர்த்துவது வரைக்கும் முதலாளித்துவத்தின் நலன்களைப் பாதுகாக்கும் என்பதால், பழமைவாதக் கட்சிகளை ஆட்சிக்கு அமர்த்துவதற்கு முதலாளித்துவம் தன் கையில் உள்ள பணம் முதல் ஊடகங்கள் வரை பயன்படுத்துகின்றது.

தலைமை என்பது மக்களை ஒன்று திரட்டி வழிநடத்துவது. அதன் தலைமை சமூக உணர்வு மிக்கதாகவும், அறிவும் புத்திசாதுரியமும் உள்ளதாகவும் இருக்க வேண்டும். இடதுசார்ந்த தலைமைகளில் பெரும்பாலானவை இவ்வாறானவை தான். அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சி மூலமாக ஜனாதிபதியானவர்களான

ஜிம்மி கார்ட்டர் முதல் ஒபாமா வரைக்கும் உண்மையிலேயே அறிவு மிக்கவர்கள். இடதுசார்ந்த தலைமைகள் எப்போதும் தர்க்கரீதியாகத் தான் தங்கள் நியாயங்களை முன்வைக்கின்றன. அவை வாக்காளர்களின் புத்திசாலித்தனத்தைக் குறி வைப்பனவாகத்தான் இருக்கின்றன.

வலதுசாரியம் அவ்வாறானதில்லை. வலதுசாரியம் உணர்வுகளைத் தான் குறி வைக்கிறது. அதற்கு வாக்காளர்கள் புத்திசாலிகளாக இருப்பதில் உடன்பாடு கிடையாது. அவர்கள் புத்திசாலிகளாக இருந்தால் அவர்களிடம் பொய் சொல்ல முடியாது. வரிக்குறைப்பு என்பது பணக்காரர்களுக்குத் தான் லட்சக்கணக்கில் வரியைக் குறைக்கப் பயன்படும், ஏழைகளுக்கு அதனால் வருடாந்தம் ஒரு இருபது டொலர் தான் கிடைக்கும் என்றாலும், We are putting money in taxpayers' pockets என்பார்கள். புத்திசாலித்தனமான பிரஜைகள் அந்த இருபது டொலரையும் நீயே வைத்துக் கொள், எங்களுக்கான சேவைகளை விஸ்தரி என்று சொல்லி விடுவார்கள். ஆனால் சாதாரண உசுப்பேத்தப்பட்ட குடிமக்கள் அந்த இருபது டொலருக்காக மீண்டும் அதே கட்சியை அதிகாரத்தில் அமர்த்துவதற்குள் முதலாளித்துவம் பாணின் விலையைக் கூட்டி, அந்த இருபது டொலருக்கு மேலால் கறந்து விடும்.

பழமைவாதப் பத்திரிகைகள் பிரஜைகளை ‘வரியிறுப்பாளர்கள்’ என்று வகைப்படுத்துவது கூட, அரசாங்கம் அநியாயமாக வரியைப் பறிக்கிறது என்ற எண்ணத்தை ஏற்படுத்தவே. இதைப் பற்றி அபத்தத்தில் ஏற்கனவே எழுதியிருக்கிறேன்.

முதலாளித்துவம் இந்தப் பழமைவாத கட்சிகள், அரசுகள், ஆட்சிகளின் பின்னால் நிற்பதற்கான காரணம் தனது நலன்களைப் பாதுகாத்து விஸ்தரிக்கவே.

இதற்கு புத்திசாலித்தனமான தலைமை தேவையில்லை. கவர்ச்சிகரமான தலைமை மட்டுமே தேவை. ஏனெனில் அந்த ஆட்சியை உண்மையில் நடத்திச் செல்வது முதலாளித்துவத்தின் கையாட்களான புத்திசாலித்தனமான பழமைவாதிகளே.

இதை அமெரிக்காவில் குடியரசுக் கட்சி மூலமாகத் தெரிவு செய்யப்படும் அனைத்து ஜனாதிபதிகளிலும் காணலாம். றொனால்ட் றீகன், இரண்டு ஜோர்ஜ் புஷ்கள், டொனால்ட் ட்ரம்ப் எல்லோருமே அறிவாளிகளோ, புத்திசாலிகளோ இல்லை. ட்ரம்ப் போன்றவர்கள் கோமாளித் தனமானவர்களாகக் கூட இருப்பார்கள். இவர்களுக்குப் பொருளாதாரம், வெளிநாட்டு உறவுகள் பற்றிய அடிப்படை அறிவு கூட இருக்காது.

இவர்களை தங்கள் கையிலுள்ள ஊடகங்கள் மூலமாக முதலாளித்துவம் ஊதிப் பெருப்பிக்கும். இவர்களுக்கு ஏற்கனவே இருக்கும் கவர்ச்சியைப் பயன்படுத்தும். இவர்களின் உரைகள் பெரும்பாலும் எந்த விதமான சாரமும் இல்லாத வெறும் கவர்ச்சிப் பதங்களைக் கொண்ட சுலோகங்களாகவே இருக்கும். டொனால்ட் ட்ரம்பின் Make America Great Again என்ற சுலோகம் பழமைவாதிகளின் உணர்வுகளுக்குக் குறிவைத்த வெற்று வேட்டு மட்டுமே அன்றி, எந்த விதமான அர்த்தமும் கொண்டதில்லை. இது அகதிகள், குடியேற்ற வாதிகள், கறுப்பின மக்கள் மீதான இனவெறித்தன்மையை உள்ளூரக் கொண்டது. அவர்களால் தான் அமெரிக்கா சீரழிந்திருக்கிறது என்ற எண்ணப்பாட்டை மனதில் இருத்துவது.

இரண்டாம் ஜோர்ஜ் புஷ்ஷின் ஆட்சியின் போது, ஆட்சியின் சகல நடவடிக்கைகளும் அவருக்குக் கீழ் இருந்த Dick Cheney போன்ற மூலோபாயவாதிகளால் நடத்தப்பட்டவையே.

இந்தத் தலைவர்கள் காட்டிய இடத்தில் கையெழுத்துப் போடும் வெறும் குறியீட்டுத் தலைவர்கள் (figureheads) மட்டுமே.

முதலாளித்துவமும் பழமைவாதிகளும் இவ்வாறான குறியீட்டுத் தலைவர்களை விரும்புவதற்கான காரணமும் உண்டு.

ஏதோ ஒரு கட்டத்தில் பொதுப்பரப்பில் இந்தத் தலைவர்களுக்கான ஆதரவு குறைந்தோ, எதிர்ப்பு அதிகரித்தோ வரும் நிலை ஏற்படும். சில நேரங்களில் தவறான பொருளாதாரக் கொள்கைகளால் நாட்டின் வாழ்க்கைத் தரம் குறைந்து போயிருக்கலாம். இவர்களின்

> தலைமை என்பது மக்களை ஒன்று திரட்டி வழிநடத்துவது. அதன் தலைமை சமூக உணர்வு மிக்கதாகவும், அறிவும் புத்திசாதுரியமும் உள்ளதாகவும் இருக்க வேண்டும். இடதுசார்ந்த தலைமைகளில் பெரும்பாலானவை இவ்வாறானவை தான். இடதுசார்ந்த தலைமைகள் எப்போதும் தர்க்கரீதியாகத் தான் தங்கள் நியாயங்களை முன்வைக்கின்றன. அவை வாக்காளர்களின் புத்திசாலித்தனத்தைக் குறி வைப்பனவாகத்தான் இருக்கின்றன. வலதுசாரியம் அவ்வாறானதில்லை.
>
> வலதுசாரியம் உணர்வுகளைத் தான் குறி வைக்கிறது. அதற்கு வாக்காளர்கள் புத்திசாலிகளாக இருப்பதில் உடன்பாடு கிடையாது. அவர்கள் புத்திசாலிகளாக இருந்தால் அவர்களிடம் பொய் சொல்ல முடியாது.



கோமாளித்தனங்கள் மீதான சலிப்பு ஏற்படலாம்.

அந்த நேரத்தில், சகல தவறுகளுக்கான முழுப்பழியையும் இவர்களின் தலையில் கட்டுவதற்கு இது வசதியாகி விடுகிறது. அந்த நேரமாகப் பார்த்து, இவர்களை இதுவரை நாளும் ஆதரித்த ஊடகங்கள் இறந்த நாயில் இருந்து உண்ணிகள் கழருவது போல, கழன்று கொள்ள ஆரம்பிக்கின்றன. பகிரங்கமாகவே அவர்கள் மீதான மக்களின் வெறுப்பை வெளியிடத் தொடங்குகின்றன.

இங்கே முதலாளித்துவம் செய்யும் அடுத்த நடவடிக்கை பழைய ஆட்சியுடன் சம்பந்தம் இல்லாத புதிய ஒருவரை முன்நிறுத்தி, அவருக்கும் இந்த சீரழிவுக்கும் சம்பந்தம் இல்லாதவர் (Outsider) மாதிரி,அவரை ஒரு புனிதராகக் காட்டுவதே. இது பெரும்பாலும் தேர்தலுக்கு முன்பாக, கருத்துக் கணிப்புகள் தோல்வியை உறுதி செய்யத் தொடங்கியவுடன் நடக்கின்ற விடயங்கள். இது இங்கே மத்திய அரசில் மல்றோனி பிரதமராக இருந்தபோதும், மாகாண அரசில் மைக் ஹறிஸ் இருந்தபோதும் நடந்த விடயங்கள். இங்கிலாந்தில் போரிஸ் ஜோன்சனுக்குப் பின்னால் ரிஷி சுனானக் பிரதமராக்கப்பட்டதும் இவ்வாறு தான்.

இப்படி பழமைவாதத்தின் தலைவர்களின் அரசியல் வாழ்வு காலாவதியாகின்ற போது, அவர்கள் சந்தைப்படுத்தப்பட முடியாத அளவுக்கு அவர்களின் shelf life முடிகின்ற போது, அவர்கள் அவர்களை ஆட்சியில் அமர்த்தியவர்களாலேயே கைவிடப்படுகிறார்கள்.

இத்தனையையும் சொல்ல வேண்டி நேரிட்டதற்கான காரணம் உண்டு.

இந்தியத் தேர்தலில் மோடி தோல்வியடையும் சந்தர்ப்பங்கள் அதிகரித்திருப்பதையும், அவரைத் தூக்கிப் பிடித்த ஊடகங்களே இன்றைக்கு அவரைக் கைவிட்டிருப்பதையும் இன்றைக்கு காண முடிகிறது. வாக்குப் பதிவு இயந்திரத்தின் மூலமாக மோசடி செய்தாலே அன்றி, மோடி மீண்டும் ஆட்சிக்கு வர முடியாது என்பது போலவே படுகிறது. மோடி பிரசாரங்களின் போது அடையும் பதட்டம் கூட, வெற்றி அலையில் நீந்தும் ஒருவர் செய்யக் கூடியதாகக் கூடத் தெரியவில்லை. அவருக்குக் கூட தனது வெற்றியில் சந்தேகம் இருப்பதால் தான் அவ்வாறாக அவர் நடந்து கொள்வதாக இருக்கக் கூடும்.

ஊடகங்களை விலைக்கு வாங்குவதன் மூலமாகவோ, மிரட்டுவதன் மூலமாகவோ கருத்துக் கணிப்புகளை திரித்தாலும் திணித்தாலும், ஆளும் கட்சி தானாக நடத்தும் கருத்துக் கணிப்புகள் மூலமாக உண்மையான களநிலைமையை அறிந்திருக்கவும் கூடும்.

ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரைக்கும் இரண்டு பிரச்சனைகள் உள்ளன. இதுவரைக்கும் வெறும் குறியீட்டுத் தலைவராக இருந்தாலும், மோடி தான் ஏக தலைவராக முன் வைக்கப்பட்டிருந்தார். யோகி ஆதித்யநாத் கூட, மோடியைப் பிரதியீடு செய்யக் கூடிய வாரிசாகக் கூட முன்வைக்கப்படாதபடிக்குத் தான் மோடி தனிப்பெரும் தலைவராகக் குறி காட்டப்பட்டிருந்தார். இந்தியப் பாரம்பரியத்தில் தேர்தலுக்கு முன்னால் தலைமையை மாற்றும் வழமையும் இருப்பதில்லை. தோற்றாலும் அரசியலை விட்டு விலகாமல் எதிர்க்கட்சியில் இருந்து அடுத்த தேர்தலில் வெல்லலாம் என்ற நம்பிக்கையோடு தான் இந்திய ஜனநாயகம் இருக்கிறது. அதிகாரம் குடும்பங்களிடமும் கவர்ச்சிகரமான தலைவர்கள் கையிலும் இருப்பதால் வரும் வழிமுறை அது. இதனால் தற்போதைக்கு மோடிக்குப் பதிலாக முன்நிறுத்தக் கூடிய கவர்ச்சிகரமான தலைவர்கள் யாரும் இல்லை. ஆம் ஆத்மி தலைவர் அர்விந்த் கேஜ்ரிவால் சொல்வது போல, மோடியே தனது கட்சியில் தனக்குப் போட்டியாக இருக்கக் கூடியவர்களை செயலிழக்கப் பண்ணியிருக்கிறார். வெற்றி பெற்றால், மோடியின் அடுத்த இலக்கு யோகி ஆதித்யநாத் தான் என்கிறார் கேஜ்ரிவால்.

அடுத்தது, மோடியைப் பிரதியீடு செய்யக் கூடிய அளவில் எதிர்த்தரப்பில் கவர்ச்சிகரமான தலைமை இல்லை. ராகுல் காந்தி கூட also ran நிலையில் தான் உள்ளாரே அன்றி, தலைமைத்துவம் மிகுந்த ஒருவராக, ஒரு ‘புரட்சித் தலைவராக்’ குறிப்பிடக் கூடிய ஆளுமை உள்ளவராக தன்னை நிலைநாட்டிக் கொள்ளவில்லை. கேஜ்ரிவால் கூட lost his steam.

எப்படித் தான் பெரும் ஆதரவைக் கொண்டிருந்தாலும், எல்லா தற்காலத்திய தலைவர்களுமே ஒரு கட்டத்தில் சலிப்படைய வைத்து விடுகிறார்கள். சில நேரங்களில் அவர்களின் கட்டுப்பாட்டை மீறி பொருளாதாரமோ, யுத்தமோ, யுத்த நிறுத்தமோ வந்து, அவர்களுக்கான தேவையை இல்லாமலாக்கி விடுகிறது. அல்லது அவர்களது இயலாமையை வெளிக்காட்டி விடுகிறது.

எப்படித் தான் பெரும் ஆதரவைக் கொண்டிருந்தாலும், எல்லா தற்காலத்திய தலைவர்களுமே ஒரு கட்டத்தில் சலிப்படைய வைத்து விடுகிறார்கள். சில நேரங்களில் அவர்களின் கட்டுப்பாட்டை மீறி பொருளாதாரமோ, யுத்தமோ, யுத்த நிறுத்தமோ வந்து, அவர்களுக்கான தேவையை இல்லாமலாக்கி விடுகிறது. அல்லது அவர்களது இயலாமையை வெளிக்காட்டி விடுகிறது.

யுத்தத்தை வென்ற வின்ஸ்டன் சேர்ச்சில் யுத்தம் முடிந்த பின்னால் தோல்வியடைந்த அதே நிலைமை தான் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இருந்தது. இன்றைக்கு எந்தச் கவர்ச்சியும் இல்லாத ரணில் விக்கிரமசிங்க ஆட்சியைத் தொடரக் கூடிய நிலை இருக்கிறது.

அரசியல்வாதிகளின் கவர்ச்சி கூட, நடிகர், நடிகைகளின் கவர்ச்சி மாதிரித் தான். தலைமுறை மாற்றங்களும் புதியவர்களின் வருகையும் பழைய ஹீரோக்களை அப்பா வேடத்திலும் கனவுக்கன்னிகளை அம்மா வேடத்திலும் கூட நடிக்க வைப்பது போல!

குஜராத்தில் இனக்கலவரத்தின் சூத்திரதாரியாக இருந்து தனது ஆட்சியை நீடிக்க வைத்த மோடி மத்திய அரசில் பிரதமராக வந்ததற்கானதும்,

நீடித்ததற்கானதுமான காரணங்கள் உண்டு.

முக்கியமானது, உசுப்பேத்தப்பட்ட இந்துத்துவ உணர்வு. வெறும் இரண்டு ஆசனங்களுடன் ஆரம்பித்த பாஜக ஆட்சியைப் பிடிக்கக் காரணமாக இருந்தது பாபர் மசூதி இடிப்பு. அத்வானியைப் புறம் தள்ளி மோடியை முன்னால் நிறுத்தியதற்கான காரணம், மோடிக்கு இருந்த கவர்ச்சி.

இந்துத்துவப் பார்ப்பனியம் தனது ஆதிக்கத்தை முன்னெடுக்க சரியான பிம்பமாக இருந்தவர் மோடி மட்டும் தான். ஏற்கனவே குஜராத்தில் வெற்றி பெற்றிருக்கிறார். மதக்கலவரங்களுக்கும் அழிவுக்கும் காரணமாக இருந்தாலும், மீண்டும் வெற்றி பெற்றவராக இருந்திருக்கிறார். குஜராத்தில் பொருளாதாரம் 'வளர்ந்திருக்கிறது'.

தனது நலன்களை முன்னெடுக்க, பார்ப்பனிய இந்துத்துவம் பார்ப்பனர் அல்லாத மோடியைத் தெரிவு செய்ததற்கான காரணம் அவரை வைத்து ஆட்சியைப் பிடிக்கலாம் என்ற நம்பிக்கையில் தான். அத்வானிக்கு அவ்வாறான ஆளுமையோ, வெளியே காட்டி வாக்குப் பெறக் கூடிய அளவுக்கு track record ஓ, இருக்கவில்லை. அவர் ஓரம் கட்டப்பட்ட பின்னால், மோடியால் அவமதிக்கவும் பட்டார். ரத யாத்திரையும் மசூதி இடிப்பும் அவருக்குத் தலைமைத்துவத்தை வழங்க முடியவில்லை. அதற்கான கவர்ச்சி அவருக்கு இல்லை என்பதை பார்ப்பனியம் உணர்ந்திருக்கிறது.

மற்றது, பொருளாதார வளர்ச்சி எனப்படுவது. இதை நான் முழுமையாக ஏற்றுக் கொள்வதற்கில்லை. பொருளாதார வளர்ச்சி என்பது வெறுமனே பங்குச்சந்தைச் சுட்டெண் பற்றியதில்லை. இதைப் பற்றி பின்னர் விபரமாக எழுத வேண்டும். பொருளாதார வளர்ச்சி என்பது சில செல்வந்தவர்கள் தங்கள் சொத்துக்களை அதிகரிப்பதும் இல்லை.

ஆந்திராவில் சந்திரபாபு நாயுடுவின் தலைமையில் பொருளாதாரம் வளர்ந்தது என்பதெல்லாம், நகர மையங்களில்

**அரசியல்வாதிகளின் கவர்ச்சி கூட, நடிகர், நடிகை களின் கவர்ச்சி மாதிரித் தான்.**

**தலைமுறை மாற்றங்களும் புதியவர்களின் வருகையும் பழைய ஹீரோக்களை அப்பா வேடத்திலும் கனவுக்கன்னிகளை அம்மா வேடத் திலும் கூட நடிக்க வைப்பது போல!**

நடந்த கட்டடங்களில் எண்ணிக்கை வளர்ச்சியாகத் தான் இருந்தது. அந்த வளர்ச்சி மாநிலம் முழுவதும் சென்றதில்லை. மோடியின் குஜராத் பொருளாதார வளர்ச்சியும் அவ்வாறானது தான். குஜராத் வாழ்க்கைத் தரத்தின் அடிப்படையில் முன்னணியில் நிற்கும் மாநிலமும் இல்லை. பொருளாதார வளர்ச்சி மூலை முடுக்குகளுக்குச் சென்றதில்லை.

அதைப் போல, இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சியும் மோடியின் பொருளாதாரக் கொள்கைகளால் தான் ஏற்பட்டது என்று சொல்வதற்கில்லை. அம்பானியும் அதானியும் வங்கிகளில் கடன்களை வாங்கி, அரச சொத்துக்களை தங்கள் வசமாக்கிக் கொண்டதும், அந்தக் கடன்களை அரசு அறவிட முடியாக் கடனாக்கி, பிரஜைகளின் தலையில் கட்டியதையும் தவிர, பொருளாதார வளர்ச்சி என்பது தற்போதைய உலக மயமாக்கலின் பயனாக, வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசிந்தது தான்.

சீனா மீதான மேற்குலக வெறுப்பைத் தனக்குச் சாதகமாக்கி பொருளாதாரத்தை வளர்க்க முடியாத நிலையில் தான் இந்தியப் பொருளாதாரக் கொள்கை இருக்கிறது. அமெரிக்க நிறுவனங்கள் வியட்னாம், இந்தோனேசியா என்று செல்லும் அளவில் தான் இருக்கின்றன. அந்த நிறுவனங்களின் தலைவர்கள் இந்த நாடுகளுக்குத்தான் செல்கிறார்கள். அங்கே முதலீடுவது பற்றி அக்கறை கொள்வது போல, இந்தியாவுக்கு வருவதில்லை. அவர்களை ஊக்குவிப்பதற்கான பொருளாதாரக் கொள்கையை மோடி அரசு தேசிய அளவில் முன்னெடுக்கவில்லை. பெருநிறுவனங்களின் வருகை அதானி, அம்பானியின் அடிமடியில் கை வைக்கக் கூடும், ஏகபோகத்தை உடைக்கக் கூடும் என்ற பயம் கூடக் காரணமாக இருக்கலாம்.

மோடியின் கவர்ச்சியின் ஆயுட்காலம் முடிகிறது என நினைக்கிறேன். தன்னை Fighter pilot, Scuba diver, யோகா கலைஞர் என்றெல்லாம் படம் காட்டி 'புர்ச்சித் தலைவர்' வேசம் போட்டாலும், அது எடுபடாத நிலை ஏற்படுகிறது. மோடியின் Shelf life expired ஆன நிலையில் வழமை போல, பார்ப்பனியம் அவரையும் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. நாடு முழுவதுமான பரவலான எதிர்ப்பை பார்ப்பனியம் உணர்ந்திருக்கக் கூடும்.

தமிழ்நாட்டின் பார்ப்பனிய இந்துத்துவ வாதிகள் கூட பிளேட்டை மாற்றி புதுப்பாட்டுப் பாடுவது கூட இந்த அடிப்படையில் தான். மோடியின் அரசியல் ஆயுளின் நாட்கள் எண்ணப்படுகின்றன என்று சொல்ல முடிந்தாலும்…

இந்தியத் தேர்தலில் நான் ஆரூடம் எதுவும் சொல்வதற்கில்லை. அதிகாரங்கள் சகல விதமான உத்திகளையும் பயன்படுத்தி, அதிகாரத்தில் ஒட்டிக் கொள்ளவே விரும்பும். அதிலும் வாக்கு இயந்திரத்தில் மோசடி செய்தாவது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்கு பார்ப்பனியம் முயலும். மோடியின் வீழ்ச்சி அவரோடு ஒட்டிக் கொண்டு பயன்பெறும் அதானி, அம்பானி மட்டுமன்றி, பலரின் வீழ்ச்சிக்கும் காரணமாக இருக்கும். அதை அவர்கள் விரும்பப் போவதும் இல்லை.

பலர் மோடிக்கு முடிவு நெருங்கி விட்டது என்று, குறிப்பாக திமுக உடன்பிறப்புகள் பலர் பேஸ்புக்கில் குதூகலிப்பதைக் காண முடிகிறது.

It is not over until it is over என்ற ஆங்கிலப் பதம் ஒன்றுண்டு. So, I am not holding my breath!



# பாலியல் சுரண்டல் ஒரு பார்வை

**பாலியல் சுரண்டல் என்பது இலக்கியவட்டங்களுக்குள் குற்றச்சாட்டுகளுக்கும், சர்ச்சைகளுக்கும், விவாதங்களுக்கும் உரிய விடயமாக எழுந்துள்ளது. அவ்வப்போது பேஸ்புக்கில் சூடுபிடித்து, தனிநபர்களும் அமைப்புகளும் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள நிலையில், இது பற்றி அரங்கம் இணையத்தளத்தில் ராகவன் எழுதிய கட்டுரையும், அது குறித்து சிவா மாலதியின் பார்வையும் இங்கே அரங்கம் தளத்திற்கான நன்றியுடன் பிரசுரமாகிறது.**

சமீப காலங்களில் தமிழ்ப் பரப்பில் பாலியல் சுரண்டல் பற்றிய உரையாடல்கள், விவாதங்கள் தொடர்கின்றன. முக்கியமாக முற்போக்கு பொது தளங்களில் பெண்களின் பிரச்சினைகள், ஆணாதிக்க மன நிலை, பெண்கள் பாலியல் ரீதியாக பயன்படுத்தப்படுவது போன்ற விடயங்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த பிரச்சினை உலகளாவியது. ஆனால் சமகாலத்தில் தமிழ் பரப்பில் பொதுத்தளங்களில் பணி புரியும் ஆர்வம் பெண்களிடையே அதிகரித்து வரும் நிலையில் இது முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த கட்டுரையின் நோக்கம் பெண்ணிய வாதிகளுக்கு ஆலோசனை வழங்கும் நோக்கிலல்ல. மாறாக கட்டுரையாளரின் நோக்கில் எழுந்த சில வினாக்கள் மட்டுமே. கட்டுரையாளர் ஒரு ஆணாக இருப்பதால் அவரது சிந்தனை முறை ஆணின் பார்வையால்

பாதிக்கப்பட்டிருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை.

ஆணின் அந்தஸ்து, ஆதிக்கம் சமூகத்தில் பல தளங்களிலும் நிலவுகிறது என்ற நியாயப்பாடு ஏற்றுக்கொள்ளக்கூடியதே.

**ராகவன்**

கற்றது கைம்மண்ணளவு என்ற வரையறைக்குள் இருந்து கட்டுரையாளரின் சிற்றறிவுக்கும் சமூக அனுபவத்துக்குமான ஊடாட்டத்தில் இருந்தே இந்த கட்டுரை எழுதப்படுகிறது.

ஒரு ஆணில் பெண் மையல் கொள்வதோ பெண் ஆணில் மையல் கொள்வதோ பாலியல் உறவு கொள்வதோ இயல்பான விடயம். அதே போல் ஆண் , ஆணின் மீதோ பெண் , பெண்ணின் மீதோ மையல் கொள்வதும் பாலியல் உறவு கொள்வதும் இயல்பான விடயமே. மனித குலம் தோன்றிய காலத்திலிருந்து மையல் கொள்வதென்பது நிகழ்கிறது.

பரிணாம உயிரியல் ஆய்வாளர்களின் கருத்தின் படி இயற்கைத் தேர்வின் அடிப்படையில் மனித இருப்பின் தொடர்ச்சிக்காக பாலியல் தேர்வு நிகழ்கிறது. இவ்வகையில் மரபணுக்களின் செயல்பாடு பாலியல் உந்துதலுக்கு காரணமாக இருப்பதாக சொல்லப்படுகிறது. பாலியல் உந்துதல் பாலியல்

உறவுக்கான ஒரு செயலியாக தொழிற்படுகிறது. பாலியல் உறவுகளை தேர்ந்தெடுத்தலும் இதன் ஒரு பகுதியே.

ஆனால் மனித வளர்ச்சிப்போக்கில் உருவான குடும்ப அமைப்பு, சமூக பொருளாதார கலாசார மாற்றங்கள் இந்த உறவு நிலை சம்பந்தமான சில வரைமுறைகளை ஏற்படுத்தின.

இந்த வளர்ச்சிப்போக்கில் ஒரு குறிப்பிட்ட ஒரு சமூகக்கட்டமைப்பில் கைக்கொள்ளப்படும் சமூக, பொருளாதார, குடும்ப அமைப்பு முறையில் பாலியல் உறவை யாருடன் வைத்துக்கொள்ளலாம். அதற்கான அமைப்பு முறை எவ்வாறு அமைதல் வேண்டும் என சில விதி முறைகள் ஏற்படுகின்றன. சில சமூகங்களில் ஆண்கள் பல பெண்களுடனான உறவு வைத்திருப்பது பிரச்சினை ஆகப்பார்க்கப்படிவதில்லை.

அதே போல் சில சமூகங்களில் பெண்கள் பல ஆண்களுடன் உறவு கொள்வதையும் பிரச்சனையாக பார்ப்பதில்லை.

எனவே ஒரு குறிப்பிட்ட சமூகக்கட்டமைப்பில் பாலியல் உறவு சம்பந்தமான உரையாடல்களின் (னளைஉடிரசளந) திரட்சியால் எழுந்த கருத்தியல் பரிமாணத்தை கொண்டே பாலியல் உறவுகள் பற்றிய பார்வை எம்மிடம் உள்மனக் கிடக்கையில் இருந்து எழுகிறது. இந்த ஒழுங்குபடுத்தப்பட்ட சிந்தனை முறையை கேள்விக்குட்படுத்தா விட்டால் நமது பார்வை ஒரு குறிப்பிட்ட ஒழுக்க நெறி என்ற வரையறைக்குள் சிக்கிக்கொள்ளும்.

ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் குடும்ப அலகே ஒழுங்கான, ஒழுக்கமான அமைப்புமுறை என்ற தற்கால உரையாடலில் இருந்தே பாலியல் உறவுகள் குறித்த எமது பார்வை இருக்கின்றதா என்ற கேள்வியை முன்வைப்பது அவசியமெனப்படுகிறது.

ரோம சாம்ராஜ்ய காலகட்டத்தில் பாலியல் உறவு என்பது வெளிப் படையானதாகவும் ஓரளவு பாலியல் சுதந்திரம் கொண்டதாகவும் இருந்தது. அத்துடன் ஓரினச்சேர்க்கையும் வெளிப்படையாக இருந்தது.

ஆனால் கிறிஸ்தவ மத வருகைக்கு பின் பாலியல் ஒழுக்கம் என்பது போதிக்கப்பட்டது. அத்துடன் ஓரினச்சேர்க்கை குற்றமாக கருதப்பட்டது. கிறீஸ்தவத்தில் பாலியல் உறவு பற்றிய ஒழுக்கங்கள் வரையறுக்கப்பட்டது மட்டுமல்லாமல் பாலுறவில் மகிழ்வுற்றிருத்தல் பாவமாக கருதப்பட்டது. இந்த கிறீஸ்தவ குற்ற உணர்வு என்பது பாலியல் உறவுகள் சம்பந்தமான பார்வைகளில் தாக்கம் செலுத்தியிருக்கிறது எனலாம்.

மேற்குலகில் கிறீஸ்தவ ஒழுக்க கலாசாரம் நீண்ட காலமாக பாலியல் உறவுகள் சம்பந்தமான கருத்துருக்களை உருவாக்கியது. இதன் தொடர்ச்சி, பெண்களுக்கான வகிபாகம் குடும்ப நலனைப் பேணுவது, பிள்ளைகளை பராமரிப்பது. கணவனின் நன்மதிப்பைப் பெற்று அவன் மனம்கோணாமல் நடப்பது என்ற ஒழுங்கமைப்புக்குள் வந்தது.

ஆண் பெண் உறவு மூலம் பெண்கள் குழந்தைகளை பெறுதல் உயிரியல் விடயம் என்பதால் ஒரு தனிக்குடும்ப நடைமுறையில் பெண்கள் தமது கணவனின் உழைப்பு ,உதவிகளே குழந்தை வளர்ப்புக்கான நீண்டகால முதலீடாயின. ஆனால் ஆசியா, ஆபிரிக்காவில் உள்ள பல சமூகங்களில் கணவனின் பாத்திரம் தனிக்குடும்ப பாத்திரம் போல் இருக்கவில்லை. உதாரணமாக தாய் வழி கூட்டுக்குடும்ப சமூக அமைப்புகளில் பெண்கள் தமது குழந்தைகளை வளர்க்கவோ அல்லது தமது வாழ்க்கைக்கான பொருளாதாரத்தையோ கணவ னிடம் எதிர்பார்க்கவில்லை. கணவன் பொதுவாக தனது தாய் சகோதரருடன் வாழ்வதும் அவர்களின் பொருளாதார தளங்களில் தனது உழைப்பை செலுத்துவதும் நிகழ்ந்தது. அத்துடன் தனது மனைவி வேறு ஆண்களுடன் தொடர்பில் இருக்கிறாரா என்ற பிரச்சனைகளும் எழுவதில்லை. அதேபோல் தனது கணவனுக்கு வேறு தொடர்புகள் இருக்கின்றதா என்று மனைவி பார்ப்பதும் இல்லை.

இந்த நிலை நவீன தனிக்குடும்ப அலகில் இல்லா நிலையில், பெண்கள் தமது பாலியல் உறவுகளை ஆண்களுடன் கொள்வதால் ஏற்படும் சமூக பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டது. ஒரு தனிக்குடும்ப கலாசார ஒழுக்க நெறியை அவர்கள் பேண நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

கருத்தடை மாத்திரை கண்டு பிடிக்கப்பட்டதும் மேற்கு நாடுகளில் இன்னிலை மாறியது. எமது உடலை நாமே கட்டுப்படுத்துவோம். நாம் குழந்தை பெறும் இயந்திரமல்ல என்ற பதாகையில் பாலியல் சுதந்திரத்தை மேற்கத்திய முதல் அலை பெண்ணியவாத சிந்தனைமுறை வலியுறித்தியது.

பாலியல் சுதந்திரம் என்பது எமது உறவை நாமே தீர்மானிப்போம் என்பதே. உடல் எனது அதனை எப்படி பயன்படுத்துவது என்பது எனது உரிமை சார்ந்த விடயம் என்பதே அதன் சாராம்சம். இதனை சிலர் கட்டற்ற பாலியல் உறவு என தவறாக வியாக்கியானம் செய்வர்.

பாலியல் சுதந்திரம் ஆண்கள் அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்தும் நிலையை தோற்றுவிக்கிறது என்ற பெண்ணியவாத பார்வையும் இருக்கிறது.

மேற்கு நாடுகளில் இப்போதும் தனிக்குடும்ப அலகே அடிப்படையாக கருதப்படுகிற்து. ஆனால் திருமணம் ஆக முன் பாலியல் உறவுகளை ஆண்களோ பெண்களோ மேற்கொள்வது பற்றிய பிரச்சினைகள் தற்போது இருப்பதில்லை. எனினும் திருமணம் ஆன பின் ஆணோ பெண்ணோ திருமணத்துக்கு வெளியே பாலுறவு கொண்டால் அது ஒரு நம்பிக்கைத்துரோகமாக பார்க்கப்படுகிறது. அது பெரும்பாலும் விவாகரத்தில் முடியும்.

மேற்கு நாடுகளில் வசதி குறைந்த சமூக வர்க்கத்தில் பிறக்கும் பெண்கள் பெரும்பாலும் தமது பதின்ம வயதுகளில் கர்ப்பம் தரிப்பதும் குழந்தை பெறுவதும் நிகழ்கிறது.

கருத்தடை மாத்திரைகள் இலகுவாக பெற்றுக்கொள்ள முடிந்தபோதும் பெரும்பாலும் நடுத்தர, பணக்கார வர்க்கமே தமது நீண்டகால திட்டங்களை கருத்தில் கொண்டு கருத்தடை மாத்திரைகள், உறைகள் போன்றவற்றை பயன்படுத்துகின்றனர். நலிந்த வர்க்கத்திலிருந்து வரும் பெண்கள் கருத்தரிப்பதற்கான ஒரு காரணம் பாலியல் துஸ்பிரயோகம் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தனிக்குடும்பமே சமூகத்தின் அடிப்படை அலகு என்ற நவ தாராளவாத பார்வை மேற்குலகில் முதன்மைப்படுத்தப்படும் போது இவ்வாறு சிங்கிள் மதர் ஆக வாழும் பெண்கள் மேலான அவமதிப்புகள் செய்யப்படுகின்றன. இதன் அடிப்படை அவர்கள் வேலை செய்வதில்லை. அரச உதவித்தொகையில் வாழ்கிறார்கள். உழைத்து அரச வரிகட்டுபவர்களின் தயவில் வாழ்கிறார்கள் என்ற பரப்புரை.

இலங்கை போன்ற நாடுகளில் காலனித்துவ வருகையும் முதலாளித்துவமும் பல மாற்றங்களை சமூக , கலாசார தளங்களில் ஏற்படுத்தியதும் நவீன தனிக்குடும்ப முறை உருவானதும் வரலாற்று நிகழ்வுகள். ஏற்கனவே சமூகங்களில் இருக்கும் பெண்கள் பற்றிய கருத்தியலும் காலனித்துவ காலங்களில் நிகழ்ந்த மாற்றங்களும் ஒத்திசைந்த நிகழ்ச்சிப்போக்கில் எழுந்த உரையாடல்களில் திரண்ட கருத்தியலையே நாம் வரித்துக்கொண்டிருக்கிறோம்.

ஒழுக்கம் ,அறம் என்பவை ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரு குறிப்பிட்ட சமூகங்களின் அரசியல் கலாசார பொருளாதார தளங்களில் உருவாக்கப்பட்டவையே. இங்கு அதிகார அலகுகளும் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றன. ஆண்கள் பெரும்பாலும் அனைத்து சமுதாயங்களிலும் அதிக அந்தஸ்தையும் அதிகாரங்களையும் கொண்டிருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆனால் உலகளாவிய சில அறங்கள் அனைத்து சமூகங்களுக்கும் பொதுவானவை. அது ஒரு மனிதனை இன்னொருவர் துன்புறுத்துவது என்ற அடிப்படையில் எழுந்தவை.

இவ்வகையில் ஒருவரது அனுமதியின்றி ஒருவருடன் பாலியல் உறவை மேற்கொள்வது என்பது ஏற்றுக்கொள்ள முடியாததும் பாலியல் வன்முறையாகவும் சித்தரிக்கப்படுகிறது . அதே போல் ஒரு நிறுவனத்தில் அதிகாரத்தில் இருப்பவரோ, நில உடமையாளரோ, உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவரோ, பல்கலைக்கழக ஆசிரியரோ அல்லது ஒரு முதலாளியோ தனக்கு கீழே இருப்பவர் ஒருவருக்கு சில நெருக்கடிகளை உருவாக்கி , சலுகையை ஆயுதமாக்கி உறவு கொண்டால் அதனை பாலியல் சுரண்டலாக கருத முடியும். இங்கு சமூக வர்க்க, பால் நிலை ஏற்றத்தாழ்வின் காரணமாக எழும் அதிகாரம் முக்கிய பங்கு வகிக்கிறது. சினிமாத்துறை, பல்கலைக்கழகங்கள், மத நிறுவனங்கள், கட்சிகள், பராமரிப்பு நிலையங்கள், குடும்ப அமைப்புகள் போன்ற இடங்களில் இவ்வாறான அத்துமீறல்கள் நிகழ்கின்றன.

தமிழ் நாட்டில் தமக்கு நடிக்க வாய்ப்பு வழங்குவதெனில் டைரக்டர், நடிகர் என பலருடன் உடலுறவு கொள்ள நடிகைகள் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். இப்போ பல நடிகைகள் அவற்றை வெளிப்படையாக சொல்லியிருக்கின்றனர். நடிகைகள் சொல்வதனால் அது ஊடகங்களில் வருகின்றது. அதே போல் மத்திய தர வகுப்பு பெண்கள் வேலைத்தளங்களிலும், அரசியல் தளங்களிலும் , விளையாட்டு அமைப்புகளிலும், பயணங்களிலும் தமக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல்கள், பாலியல் சுரண்டல்களை பேசக்கூடிய சூழல் இப்போ உருவாகியுள்ளது.

ஆனால் கடை நிலை ஊழியர்கள், தொழிலாளர்கள், விவசாயக்கூலிகள் ஆக இருக்கும் பெண்கள் மேலான பாலியல்சுரண்டல்களோ அத்துமீறல்களோ பெரிதாக ஊடகங்களிலோ பொது வெளியிலோ பேசப்படுவதில்லை என்பது கசப்பான உண்மை. அதற்காக மத்தியதர பெண்கள் தமது பிரச்சனைகளை வெளியே சொல்வதை குறைத்து மதிப்பிட முடியாது. சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த அது அவசியமே.

ஆனால் ஒரு பல்கலைக்கழக மாணவியுடன் ஒரு பல்கலைக்கழக ஆசிரியர் இருவரின் விருப்பின் அடிப்படையில் பாலியல் உறவு கொள்ளும் போது எவ்வாறு இதனை அணுகுவது. ஆசிரியரின் அந்தஸ்து, அதிகாரம் அந்த சூழலிலும் இருக்கிறது. ஆனால் உறவு கொள்ளும் மாணவியும் ஆசிரியரின் அந்தஸ்து ,அதிகாரம் என்பவற்றை அறிந்தே உறவை மேற்கொள்கிறார். அது போல ஆசிரியரும் அந்த அந்தஸ்தை பயன்படுத்தியிருக்கும் சாத்தியக்கூறுகளும் இருக்கும். அத்துடன் ஒருவர் மேல் ஒருவருக்கான பாலியல் ஈர்ப்பு என்பது உயிரியல் சம்பந்தமானது மட்டுமல்ல அவர்களது குண இயல்புகள் மற்றும் பல சமூக கலாசார விடயங்களும் தாக்கம் வகிக்கின்றன என சொல்லமுடியும்.

பாலியல் சுரண்டல் என்ற பதத்திற்கான அர்த்தத்தை எவ்வாறு புரிந்து கொள்வது என்பதில் சிரமங்கள் உண்டு . இருவர் தமது சுய விருப்பத்தால் இருவர் உடல் உறவில் ஈடுபடுவது அவர்களின் தேர்வு என்ற போதும் ஆழமாக பார்த்தால் சுய விருப்பம் என்பதும் பல சமயங்களில் ஆதிக்கம், அந்தஸ்து என்ற பல பரிமாணங்களால் நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வகையில் அணுகும் போது புதிய பிரச்சனைகள் எழுகின்றன.

இலங்கையை பொறுத்தவரை வழமையில் பெண்கள் பல துறைகளில் பணி புரியினும் சமூக அரசியல் வெளியில் அவர்களின் பங்கு பொதுவாக குறைவானதே. சமூக அரசியல் விடயங்கள் ஆண்களுக்கானது என்ற சிந்தனைமுறையின் காரணமாக அவ்வாறு பெண்கள் தமது பங்கை செலுத்த வரினும் அதற்கான பெரும் சமூகமதிப்புகொடுக்கப்படுவதில்லை.

அத்துடன் கட்சிகளிலோ சமூக அமைப்புகளிலோ அவர்கள் பங்கு பற்றினும் அவர்களுக்கான உரிய இடத்தை அந்த நிறுவனங்கள் பெரும்பாலும் கொடுப்பதில்லை.

இன்னொருபுறம் பல இளம் பெண்கள் அரசியல், இலக்கியம் , மற்றும் சமூகத்தளங்களில் தமது பங்கு அவசியம் என்பதை உணர்ந்து அவற்றில் பங்கு பற்றும் போது பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். ஒன்று அவர்களது பங்களிப்புக்கான மதிப்பு பெரும்பாலும் கொடுக்கப்படுவதில்லை. மற்றது பாலியல் ரீதியாக அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள்.

இவ்வாறு பொதுப்பணிகளில் ஈடுபடும் பெண்கள் பெரும்பாலும் சுய சிந்தனை கொண்டவர்கள். முக்கியமாக முற்போக்கு அமைப்புகளில் பொதுப்பணிகளில் ஈடுபடுபவர்கள் பாலியல் சமத்துவத்தை வலியுறுத்துபவர்களாக இருப்பர். அதேவேளை சமூகத்தில் இருந்துவரும் அனைத்து ஒழுக்க விதிகள், நடைமுறைகளையும் முற்றாக நிராகரித்தவர்களுமல்ல. இது ஆண்களுக்கும் பொருந்தும்.

சுயசிந்தனை, பகுத்தறிவு மற்றும் முற்போக்கு சிந்தனை கொண்ட பெண்களை வெறும் செயலற்றவர்களாக கருதி பாதிக்கப்பட்டவர்கள் என்ற பச்சத்தாப அணுகுமுறை பிரச்சனைக் குரியது. பொது வெளிக்கு வரும் முற்போக்கு சிந்தனை கொண்ட பெண்கள் , ஆண்களுடன் சேர்ந்து பணிபுரியும் சந்தர்ப்பங்கள் உருவாகும் போது ஒரு ஆணின் மேல் பெண்ணுக்கு பாலியல் ஈர்ப்பு அல்லது காதல் வருவது இயல்பானதே. திருமணம் செய்த ஆண், பெண் என்ற நெறி முறையை மீறும் நிகழ்வுகளும் நடப்பதற்கான வாய்ப்புகளும் இருக்கும். இங்கு பாலியல் பொறாமைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களும் நிகழும். உதாரணமாக ஒருவர் இன்னொரு வருடன் பாலியல் .காதல் தொடர்பு களை வைத்திருந்துவிட்டு, அதே சமயம் இன்னொருவரின் மேல் மையல் கொள்ளும் போது அல்லது தொடர்புகளை துண்டிக்கும் போது துண்டிக்கப்பட்டவர் உளரீதியான துன்பத்துக்கு ஆளாவது நிகழும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பல பிரச்சனைகள் உருவாகும். ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுதல், ஆத்திரப்படல் என்பவை இயல்பாக எழும். இந்த உள ரீதியான தாக்கத்திற்கு ஒரு காரணம் பாலியல் பொறாமை எனலாம். மற்றது சில எதிர்பார்ப்புகளுடன் ஒரு உறவை மேற்கொள்ளும் போது அந்த எதிர்பார்ப்புகள் ஏமாற்றமாகும் போது ஏற்படும் உள ரீதியான பாதிப்புகள். ஆனால் இந்த எதிர்பார்ப்புகள் என்பது ஒன்றாக வாழ்தல் என்ற கருத்தியல் பின்னணியில் எழும் போது தான் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

அதேவேளை, சில ஆண்கள் பொது வெளிக்கு வரும் பெண்களை தமது பாலியல் வேட்கைக்கு பயன்படுத்தும் சாத்தியங்கள் இருக்கின்றன என்பதனையும் மறுக்கமுடியாது. இதனை எப்படி அணுகுவது என்பது கருத்தில் எடுக்கப்பட வேண்டியது. பாலியல் ஈர்ப்பு இயல்பானதாக இருக்கும் போது அது சமூக விழுமியங்களால் கட்டுப் படுத்தப்படும் நிகழ்ச்சிப்போக்கில் அந்தக்கட்டுப்பாட்டை மீறுபவர்கள் பிரச்சனையானவர்களாக பார்க்கப் படுகிறார்களா என்ற கேள்வி எழுகிறது. இங்கு பாலியல் ஈர்ப்பால் எழும் பாலியல் வன்முறை அல்லது பாலியல் துன்புறுத்தல் என்பதை வேறாக பார்க்கவேண்டும். ஏனெனில் அது இன்னொரு மனிதரை துன்புறுத்தும் நிகழ்வு. அதேவேளை பாலியல் உறவால் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தியவரின் மன அழுத்தம் பற்றி எவ்வாறு கணிப்பிடுவது என்ற கேள்வியும் தொக்கி நிற்கிறது. சில சமயங்களில் பாலியல் உறவு எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி நிகழும் போது பெரும் பிரச்சனைகள் உருவாவதில்லை எனலாம். அது சில சந்தர்ப்பங்களில் ஓரிரு தடவை நிகழும் பாலியல் உறவு. ஆனால் சில எதிர்பார்ப்புகளுடன் நிகழும் பாலியல் உறவில் ஒருவரை ஒருவர் உடமையாக கருதும் நிலை ஏற்படும் போது சம்பந்தப்பட்டவர் இன்னொரு உறவை மேற்கொள்கையில் அல்லது உறவை முறிக்கையில் இந்த மன அழுத்தம் ஏற்படுகிறது. இங்கு தான் இயலாமை, ஆத்திரம் போன்ற உணர்வுகள் தோன்றுகின்றன. இதனை எவ்வாறு கையாள்வது என்பது கேள்வியாக முன்னிற்கிறது.

சமீபகாலத்தில் கட்சி உறுப்பினர் ஒருவர் மேலான பாலியல் குற்றச்சாட்டும் இலக்கியப்பரப்பில் முன்னிலை வகிப்பவர் ஒருவர் மேலான பாலியல் குற்றச்சாட்டும் சம்பந்தப்பட்ட பெண்களால் முன்வைக்கப்பட்டன. அவர்கள் முன்வைத்த குற்றச்சாட்டு பெண்கள் பொது வெளியில் பணி செய்ய வருதல் குறைவு. அவ்வாறு வரும் ஒரு சில பெண்களை ஆண்கள் குறி வைத்து உறவு கொள்வதால் இளம் பெண்கள் பொது வெளியில் பணி செய்வதற்கு தடையாக இருக்கிறது என்பதாகும். இந்த குற்றச்சாட்டில் நியாயப்பாடுகள் இருக்கின்றன. குறிப்பிட்ட ஆண்கள் தமது அந்தஸ்தை பயன்படுத்தி இவ்வாறான செயல்களில் ஈடுபடுகிறார்கள் எனவே இது தவிர்க்கப்படவேண்டியது என்பதே அவர்களது நிலைப்பாடு.

ஆனால் இதனை எவ்வாறு கையாள்வது என்பதில் பாரிய பிரச்சனைகள் உருவாகின்றன. ஒரு அமைப்பில் இருக்கும் பெண் அல்லது ஆண் தனது பாலியல் ஈர்ப்பை கட்டுப்படுத்த வேண்டும் என சட்டம் போட முடியாது. அல்லது கண்காணிப்பு குழுவை அமைக்கவும் முடியாது.

உதாரணத்துக்கு அமைப்பில் இருக்கும் ஒரு பெண்ணும் ஆணும் சேர்ந்து பழகி பின்னர் திருமணம் செய்து கொண்டாலோ சேர்ந்து வாழ தொடங்கினாலோ அதற்கான அங்கீகாரம் கிடைத்து விடுகிறது. குடும்ப உறவுக்கான அங்கீகாரம் என்ற சிந்தனையின் மறுபக்கமே இது என தோன்றுகிறது. அத்துடன் பாலியல் அறம் என்ற உரையாடல் மூலமாக இது பார்க்கப்படுகிறதா என்ற சந்தேகமும் எழுகிறது. எனவே சட்டம் போடுவதற்கான முன்னிபந்தனைகள் என்ன என்பது கேள்விக்குறி ஆகிறது.

பெண்கள் பொதுவெளியில் வரும் போது ஆண்கள் அவர்களை பாலியல் நோக்கில் மட்டும் அணுகுவது பிரச்சனைக்குரியதே. ஆனால் இதற்கான விழிப்புணர்வை பெண்கள் மத்தியிலும் ஆண்கள் மத்தியிலும் ஏற்படுத்துவதே அவசியமாகப்படுகிறது. ஒரு சில ஆண்கள் பாலியல் உறவை மேற்கொண்டு அப்பெண்களுக்கு சில நம்பிக்கைகளை ஏற்படுத்தி பணம் வாங்கி ஏமாற்றி இருக்கிறார்கள். இதனை பாலியல் சுரண்டல் என சொல்லமுடியும். ஆனால் அனைத்தையும் பாலியல் சுரண்டல் என்ற பதத்துள் அடக்குதல் கேள்வியாக எழுகிறது.

ஒரு முதலாளித்துவ சட்ட அமைப்பில் கூட சுயவிருப்பின் அடிப்படையில் இருவர் பாலியல் உறவு கொண்டால் அவர்களில் ஒருவரை குற்றவாளியாக காண்பதில்லை.

இன்னொரு புறம் பெண்ணியவாதிகளை விட பெண்ணியவாதிகளாக தம்மை காட்டிக்கொள்ளும் சில ஆண்கள் பாலியல் குற்றவாளி, பாலியல் சுரண்டல்காரன் என்ற பதாகைகளை தூக்கிக்கொண்டு , பெண்களின் பாதுகாவலர்களாகவும், நியாயம் கேட்பவர்களாகவும் தம்மை முன்னிறுத்துகின்றனர். இவர்கள் பாலியல் பொறாமை காரணமாகவே இவ்வாறு நடந்து கொள்கிறார்களா என்ற வலுவான சந்தேகம் வருகிறது. இவர்கள் 'பாதிக்கப்பட்ட' பெண்களுக்கு ஆதரவாக குரல் எழுப்புவதாக பாவனை செய்யினும் அவர்களின் குறிக்கோள் குறித்த ஆணை மையமாக வைத்து பரப்புரை மேற்கொள்வதாகவே இருக்கிறது. நாங்கள் மற்ற ஆண்களை விட சிறந்தவர்கள் என்று நிரூபிக்கும் நிகழ்ச்சி நிரலாகவே இவர்களைப் பார்க்கமுடிகிறது. பாலியல் சமத்துவத்தை முன்னெடுப்பதல்ல இவர்களது நோக்கம். அனைத்து ஆண்களையும் இந்த வரையறைக்குள் பொதுமைப் படுத்தவில்லை. பிரக்ஞைபூர்வமாக இதனை அணுகுபவர்களும் இருக்கின்றனர்.

பாலியல் உறவு என்பது இயல்பானது. அதற்கான அற நெறிகள் நிலவிவரும் அரசியல்பொருளாதார கலாசார தளங்களின் அடிப்படையில் கட்டப்பட்ட கருத்துருவாக்கங்கள் எனவே கட்டுரையாளர் பார்க்கிறார். இந்த அற நெறிகள் நித்தியமானவையல்ல. குறிப்பிட்ட சமூக பொருளாதார கலாசார நெறிகளினால் உருவாகும் உரையாடல்களினால் எழுந்த கருத்தியல் கட்டுமானமே இவை என்பது கட்டுரையாளரின் கருத்து.

பால் நிலை சமத்துவம் என்பது மனித குலத்துக்கு அவசியமானது. பாலியல் உறவுகளிற்கும் பாலியல் சமத்துவத்திற்கும் உள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் பரிசீலிப்பதும் காலத்தின் தேவையாக இருக்கின்றது என்பதே எனது பார்வை.

இக்கருத்துக்கள் முழுமையானவை அல்ல என்பதும் யதார்த்தம். அ




## பாலியல் சுரண்டல் பற்றிய ராகவனின் கட்டுரையினை எதிர்கொள்ளல்

அரங்கம் பத்திரிகையில் ஏப்ரல் 12அன்று பிரசுரிக்கப்பட்ட பாலியல் சுரண்டல்-ஒரு பார்வை எனும் ராகவனின் கட்டுரைக்குப் பதிலளிக்கும் முகமாக, Heterosexual (ஆணுக்கும் பெண்ணுக்கு மிடையிலான பாலியல் நாட்டம்) உறவுகளை மையப்படுத்தி எழுதப்பட்ட பதில்.

மேற்குறித்த கட்டுரையினை முழுதாக வாசித்த நாளிலிருந்து அதற்குப் பதில் எழுதவேண்டும் எனும் எண்ணம் மனதைக் குடைந்து கொண்டே இருந்தது. அக்கட்டுரையின் நோக்கம் என்னவென்பது திரு. ராகவனுக்குத் தெரியுமளவிற்கு, அதனை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் கூட அது தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. புத்திசாலித்தனமெனக் கருதி தெளிவாகவும், வெளிப்படையாகவும் பாலியல் சுரண்டல் தொடர்பான குற்றஞ் சாட்டப்பட்டவர்களை பிணையெடுப்பதுடன், கிரிசாந்தி னுடைய கட்டுரைகளின் தொடர்ச்சியான இக்கட்டுரை, பாலியல் சுரண்டல்காரரர்களுக்குப் பரிந்து பேசுவதனை மற்றுமொரு தளத்திற்குக் கொண்டு செல்கின்றது. இக்கட்டுரைக்கு எதிராக எழக்கூடிய விமர்சனங்களை கட்டுப்படுத்துவற்கு எவ்வளவுதான் முன்னாயத்தங்களுடன் கட்டுரை எழுதப்பட்டிருந்தாலுங் கூட அத்தகைய முன்னாயத்தங்கள் இக்கட்டுரையின் அபத்தங்களிலிருந்து கட்டுரையாளரை மீட்பதற்குப் போதுமானதாயில்லை.

பாலியல் சுரண்டல்கள் தொடர்பில் பேசுபவர்கள், பெண்கள் பல ஆண்களுடன் உறவு கொள்வதையோ, ஆண்கள் பல பெண்களுடன் உறவு கொள்வதையோ (Multiple relationships) கேள்விக் குட்படுத்தவில்லை, அத்தகைய உறவுகளில் இருப்பதென்பது அவரவர் பாலியல்பு (Sexuality). பாலியல் உரிமை மற்றும் தெரிவுடன் தொடர்புபட்டது. அத்தகைய உறவில் ஈடுபடும் தரப்பினர் தமக்குள் அவ்வுறவு.கள் தொடர்பில் வெளிப்படையாகவும், பொறுப்பு உணர்ச்சியுடனும் இருக்க வேண்டியது அத்தகைய உறவுகளின் அடிப்படையாகும். அவ்வாறல்லாமல் பலருடனான உறவை தமது இணைகளுக்கு. காதலருக்கு மறைத்து, முன்னுக்குப் பின் முரணான தகவல்களை உறவிலிருக்கும் ஒவ்வொருவரிடமும் கூறி பொய் பித்தலாட்டங்கள் செய்து பெண்களை தமது பாலியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதையே சுரண்டல் என்கிறோம். இவ்வாறு, பாலியல் சுரண்டலில் ஈடுபடுபவர்களால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அவர்களது பாலியல்பு, பாலியல் உரிமை, தெரிவு என்பன மறுக்கப்படுவதோடு அநீதியும் இழைக்கப்படுகிறது என்கின்ற புரிதலின் அடிப்படையிலேதான் பாலியல் சுரண்டல்கள் வெளிப்படுத்துகின்றன.

ஆனால் ராகவன் பாலியல் ஒழுக்கம் தொடர்பில் சமூகப் பொதுப்புத்தியில் நிலவும் கருத்துக்களை அப்பட்டமான சுரண்டல்கள் பற்றிய வெளிப்படுத்தல்களுடன் முடிச்சுப் போடுவதன் மூலமும் பெண்ணியவாதிகளுக்கு ‘கலாசார காவலர்கள்‘ சாயம் பூசுவதன் மூலமும் சுரண்டல்களையும் திட்டமிட்ட பாலியல் சுரண்டல்களையும் தனிமனித ‘ஒழுக்கவாதமாக‘ மடைமாற்றப் பார்க்கிறார்.

..ஒரு குறிப்பிட்ட சமூகக் கட்டமைப்பில் பாலியல் உறவு சம்பந்தமான உரையாடல்களின் (discourse) திரட்சியால் எழுந்த கருத்தியல் பரிமாணத்தை கொண்டே பாலியல் உறவுகள் பற்றிய பார்வை எம்மிடம் உள்மனக்கிடக்கையில் இருந்து எழுகிறது. இந்த ஒழுங்குபடுத்தப்பட்ட சிந்தனை முறையை கேள்விக்குட்படுத்தா விட்டால் நமது பார்வை ஒரு குறிப்பிட்ட ஒழுக்க நெறி என்ற வரையறைக்குள் சிக்கிக்கொள்ளும்..

பாலியல் சுரண்டல் தொடர்பில் வெளிப்படுத்துபவர்கள் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் குடும்ப அமைப்பினை ஒழுங்கான ஒழுக்கமான அமைப்புமுறையாகக் கருதுவதனால் அதிலிருந்து வேறுபட்ட உறவுகளை. குறிப்பாக Multiple relationships போன்ற உறவுகளை ஒழுக்கம்சார்ந்த கண்ணோட்டத்தின் ஊடாக அணுகுவதனால் அதனை பாலியல் சுரண்டல் என்பதாக தவறான முறையில் வியாக்கியானம் செய்கின்றனரா எனக் கேள்வியெழுப்பப்படுகின்றது, அதற்குப் பதில் மிகவும் தெட்டத்தெளிவானது. ஒழுக்கவாதக் கண்ணோட்டத்தில் பாலியல் சுரண்டல்கள் எனும் பதம் பயன்படுத்தப்படவில்லை. மாறாக, பாலியல் சுரண்டல் என்றால் என்ன எனும் தெளிவுடனும், புரிதலுடனுமே அவ்வெளிப்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆணும் பெண்ணும் சேர்ந்துவாழும் குடும்ப முறையினைத் தேர்வு செய்திருப்பவர்கள் அனைவருமே அதனை ஒழுக்கவாத, பழமைவாத அடிப்படையில் எடுத்தவர்கள் என்பது அபத்தமானது. பாலியல்பு சார்ந்த தேர்வாக ஏற்றுக்கொண்ட இருவருக்குமான குடும்ப அமைப்பு முறையாக அது இருக்கலாம் இல்லையா? இத்தகைய முற்போக்குபேசும் கட்டுரையாளர் உட்பட பாலியல் சுரண்டல்வாதிகள் வரை அத்தகையதோர் அமைப்பு முறையினைத் தேர்ந்தெடுத்து வாழ்க்கையினை நடாத்துகின்றார்கள். அது ஒழுக்கவாதத்தின் அடிப்படையிலா?

பல பெண்களுடன் உறவில் (Multiple relationships)

அத்தகைய உறவுகளில் இருப்பதென்பது அவரவர் பாலியல்பு (Sexuality). பாலியல் உரிமை மற்றும் தெரிவுடன் தொடர்புபட்டது. அத்தகைய உறவில் ஈடுபடும் தரப்பினர் தமக்குள் அவ்வுறவு.கள் தொடர்பில் வெளிப்படையாகவும், பொறுப்பு உணர்ச்சியுடனும் இருக்க வேண்டியது அத்தகைய உறவுகளின் அடிப்படையாகும். அவ்வாறல்லாமல் பலருடனான உறவை தமது இணைகளுக்கு. காதலருக்கு மறைத்து, முன்னுக்குப் பின் முரணான தகவல்களை உறவிலிருக்கும் ஒவ்வொருவரிடமும் கூறி பொய் பித்தலாட்டங்கள் செய்து பெண்களை தமது பாலியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதையே சுரண்டல் என்கிறோம்.

இருக்கும்போது அப்பெண்களுக்கு அவ்வுறவுகளை (Relationship) ஆரம்பிக்க முன்னரோ அல்லது அவ்வுறவில் இருக்கும்போதோ தான் Multiple relationships,ல் இருப்பதையும், அது தமது பாலியல்புசார் தெரிவு என்பதையும் வெளிப்படுத்தி இருக்கவில்லை, அதனூடாக தம்முடன் உறவிலிருந்த பெண்களது பாலியல்பு, பாலியல் உரிமை மற்றும் தெரிவினை மீறியது மட்டுமல்லாமல், அப்பெண்களை உறவிற்குள் கொண்டு வருவதற்கு பாலியல் Grooming செய்வது, அவர்கள் கேள்வி கேட்கும் போதெல்லாம் தந்திரமான முறையில் முன்னுக்குப்பின் முரணான, பொய்யான தகவல்களைக் கூறி அவர்களை சமாளித்து தொடர்ந்தும் உறவில் தக்கவைத்துக் கொள்வது, அதனூடாக அப்பெண்கள் மீதான பாலியல் சுரண்டலினை மேற்கொள்வது, குறிப்பாக நலிவுற்ற நிலையிலுள்ள பெண்களை இலக்காகக் கொண்டு இவற்றை மேற்கொள்வது போன்ற பல அடுக்குகள் பாலியல் சுரண்டல் எனும் பதத்திற்குள்ளும், இவ்வெளிப்பாடுகளுக்குள்ளும் பொதிந்திருக்கின்றன.

..ரோம சாம்ராஜ்ய காலகட்டத்தில் பாலியல் உறவு என்பது வெளிப் படையானதாகவும் ஓரளவு பாலியல் சுதந்திரம் கொண்டதாகவும் இருந்தது..என ராகவனின் கட்டுரையில் சுட்டிக் காட்டப்படுகின்றது. நாமும் பாலியல் உறவுகள். பாலியல்பு தொடர்பான வெளிப்படைத் தன்மையினையே கோருகின்றோம், அதனூடாக பாலியல் சுரண்டல்களை ஓரளவுக்கேனும் மட்டுப்படுத்த வாய்ப்பிருப்பதுடன், அத்தகைய உறவுகளில் இருப்பதற்கான தெரிவு உறவில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் இருக்கும். தற்போது பேசப்படும் பாலியல் சுரண்டல்களானவை, வெளிப்படைத் தன்மையற்ற முறையில், திரிவுபடுத்தப்பட்ட தகவல்களையும் தம்மைப் பற்றிய போலியான விம்பத்தினையும் உண்மையென நம்பச்செய்து உறவினை ஏற்படுத்தி, அதனைப் பேணியதுடன், தேவை முடிந்ததும் நுட்பமாக கழற்றி விட்டமை போன்றவற்றினையே பேசவிழைகின்றன.

**பாலியல் சுரண்டல்கள் தொடர்பான வெளிப்பாடுகளின் பின் பாலியல் சுதந்திரம் தொடர்பில் பெருமளவு பேசப்படுகின்றது. ஆனால் அவையனைத்தும் ஆண்களது கண்ணோட்டத்தில் தமது நலனை மையப்படுத்திய உரையாடல்களாக இருக்கின்றதேயன்றி, எவ்விதத்திலும் பெண்விடுதலைக்கும், பால்நிலை சமத்துவத்திற்கும், பெண்களது பாலியல் சுதந்திரத்திற்கும் அவற்றால் பயனேதுமில்லை.**

**பெண்களுக்கான பாலியல் சுதந்திரம் என்பது பெண்களாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும். ஆணாதிக்க மனநிலையில் அல்லது பெண்களைப் பாலியல்ரீதியாகச் சுரண்டுவதனை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் பரிந்துரையாக இல்லாமல், பெண்களுக்கான பாலியல் சுதந்திரமென்பது அவர்களுடைய பாலியல்பு, பாலியல் உரிமை மற்றும் தெரிவுபற்றிய புரிதலின் அடிப்படையில் பெண்களாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.**

பாலியல் சுரண்டல்கள் தொடர்பான வெளிப்பாடுகளின் பின் பாலியல் சுதந்திரம் தொடர்பில் பெருமளவு பேசப்படுகின்றது. ஆனால் அவையனைத்தும் ஆண்களது கண்ணோட்டத்தில் தமது நலனை மையப்படுத்திய உரையாடல்களாக இருக்கின்றதேயன்றி, எவ்விதத்திலும் பெண்விடுதலைக்கும், பால்நிலை சமத்துவத்திற்கும், பெண்களது பாலியல் சுதந்திரத்திற்கும் அவற்றால் பயனேதுமில்லை. பெண்களுக்கான பாலியல் சுதந்திரம் என்பது பெண்களாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும். ஆணாதிக்க மனநிலையில் அல்லது பெண்களைப் பாலியல்ரீதியாகச் சுரண்டுவதனை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் பரிந்துரையாக இல்லாமல், பெண்களுக்கான பாலியல் சுதந்திரமென்பது அவர்களுடைய பாலியல்பு, பாலியல் உரிமை மற்றும் தெரிவுபற்றிய புரிதலின் அடிப்படையில் பெண்களாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு பெண்ணுக்கும் பாலியல் சுதந்திரம் என்ன அர்த்தத்தினைக் கொடுக்கின்றது என்பதையும், அதனைப் பொறுப்புணர்ச்சியுடன் தாம் எவ்வாறு அனுபவிக்க விரும்புகின்றனர் என்பதையும் அவர்களே தீர்மானிக்க வேண்டும். மத்தியதரவர்க்கப் பெண்களுக்கே பாலியல் சுரண்டல்கள் தொடர்பில் வெளிப்படுத்துவதற்கு ஓரளவிற்கு சாத்தியமாகி உள்ளதுபோல பாலியல் சுதந்திரம் தொடர்பான உரையாடல்களும் மத்தியதரவர்க்கப் பெண்களுக்கு ஓரளவிற்கு மட்டுமே சாத்தியமாகி இருக்கின்றது. சமூகத்தின் விளிம்புநிலையிலிருக்கும் அடித்தட்டுவர்க்கப் பெண்களுக்கான பாலியல் சுதந்திரம் என்பது இன்றும் பேசுபொருளாகவில்லை. அதனைச் சாத்தியப்படுத்துவதற்கு, புற சமூக, பொருளாதாரச் சூழல்களிலும் சாதகமான மாற்றங்கள் ஏற்படவில்லை.

அதுதவிர, பெண்கள் பண்டமாகப் பார்க்கப்படும் சமூகத்தில் பரஸ்பர சம்மதத்துடன் பாலியலுறவில் ஈடுபடும் அநேக சந்தர்ப்பங்களில் (குறிப்பாக திருமண உறவுகள் தவிர்ந்த ஏனைய உறவுகளில்), உறவில் ஈடுபடும் ஆண், பெண் இருவருமே பாலியல் இன்பத்தினை அனுபவித்தாலும்கூட ஆணாதிக்க மனநிலையில் ஆண்கள் தாமே பெண்களை அனுபவித்துவிட்டதாக தமது நண்பர்களிடம் கூறி தம்பட்டமடிப்பதும் அதன்விளைவாக பெண்கள் சமூகத்தில் மேலும் நலிவுற்ற நிலைக்குத் தள்ளப்படுவதும், பாதுகாப்பு சார்ந்த மற்றும் வேறுபல பிரச்சனைகளுக்கு முகங்கொடுப்பதும் எமது அன்றாடமாக இருக்கின்ற

நிலையில்தான் நாங்கள் வாழ்கின்றோம். இத்தகைய சந்தர்ப்பங்களில் தாம் அனுபவித்த பெண்களின் எண்ணிக்கையில் ஒன்றைக் கூட்டியபடி ஆண்கள் அடுத்த பெண்ணை நோக்கி நகரும் நிலைதான் இன்றும் உள்ளது. இதனூடாக நாம் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, பெரும்பாலும் சமூகத்திலுள்ள ஆண்களுக்கு தாம் உறவுகொள்ளும் பெண்கள் வெறும் எண்ணிக்கைகள்தான். இத்தகைய சமூகச்சூழலில் தன்னுடைய சுயமரியாதையையும், தன்னையும் பாதுகாத்துக் கொண்டு, தன்னுடைய நலிவுற்றந ிலையினை மேலும் அதிகரிக்காது, தனது பாதுகாப்பினை உறுதிப்படுத்தியபடி தனக்கான பாலியல் சுதந்திரத்தினை பொறுப்புடன் அனுபவிக்கவேண்டிய நிர்ப்பந்தமே பெண்களுக்கு உள்ளது.

..ஒரு தனிக்குடும்ப நடைமுறையில் பெண்கள் தமது கணவனின் உழைப்பு, உதவிகளே குழந்தை வளர்ப்புக்கான நீண்டகால முதலீடாயின...

தனிக்குடும்ப நடைமுறையில் பெண்களது பராமரிப்பு வேலைகளுக்கு ஊதியம் வழங்கப்படுவதில்லை. குடும்பத்திலுள்ள பராமரிப்பு வேலைகளில் குறிப்பாக இலங்கை போன்ற நாடுகளில் ஆண்களது பங்களிப்பு பொதுவாகவே மிகவும் குறைவானதாகவே இருந்து வருகின்றது. அவர்கள் அதில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில்கூட அதனைப் பெண்களுக்குச் செய்யும் உதவியாகவே கருதுவதென்பது பால்நிலைசார் பங்குபாத்திரங்களின் அடிப்படையிலும் (Gender roles) பால்நிலைசார் அதிகார அசமத்துவ உறவுகளினடிப்படையிலும் (Gender power relations) ஆகும். அத்துடன் இதுவே சமூகப்பொதுப்புத்தியும்கூட. ஆக, இக்கருத்தானது (கணவனின் உதவியினை குழந்தை வளர்ப்பிற்கு எதிர்பார்ப்பது) அடிப்படையில் பால்நிலை அசமத்துவத்திற்குத் துணை போவதாயிருப்பதுடன், பால்நிலை அசமத்துவம் தொடர்பான ஒரேமாதிரியான நம்பிக்கைகளை (Stereotypes) மீளவலியுறுத்துவதாயிருக்கின்றது. பால்நிலை தொடர்பான மிகக்குறைந்தபட்ச கூருணர்வுகூட இல்லாமல் எழுதப்பட்டிருக்கும் இக்கட்டுரையினைப்பார்க்கும்போது, கட்டுரையின் முடிவில் எழுதப்பட்டிருக்கும் ‘பால்நிலை சமத்துவம் மனிதகுலத்திற்கு அவசியமாகும்‘ என்கின்ற கூற்றுக்கு எந்தப்பெறுமதியும் இருப்பதாகத் தோன்றவில்லை.

..ஆசியா, ஆபிரிக்காவில் உள்ள பல சமூகங்களில் கணவனின் பாத்திரம் தனிக்குடும்ப பாத்திரம் போல் இருக்கவில்லை. உதாரணமாக தாய் வழி கூட்டுக்குடும்ப சமூக அமைப்புகளில் பெண்கள் தமது குழந்தைகளை வளர்க்கவோ அல்லது தமது வாழ்க்கைக்கான பொருளாதாரத்தையோ கணவனிடம் எதிர்பார்க்கவில்லை. கணவன் பொதுவாக தனது தாய் சகோதரருடன் வாழ்வதும் அவர்களின் பொருளாதார தளங்களில் தனது உழைப்பை செலுத்துவதும் நிகழ்ந்தது. அத்துடன் தனது மனைவி வேறு ஆண்களுடன் தொடர்பில் இருக்கிறாரா என்ற பிரச்சனைகளும் எழுவதில்லை. அதேபோல் தனது கணவனுக்கு வேறு தொடர்புகள் இருக்கின்றதா என்று மனைவி பார்ப்பதும் இல்லை...

இன்று இலங்கையிலிருக்கும் சமூகஅமைப்பு தொடர்பில் நாம் யாவரும் அறிவோம். அவ்வாறிருக்க ஆசியா, ஆபிரிக்காவிலுள்ள உதாரணங்களை கட்டுரையாளர் சுட்டிக் காட்டுவதன் நோக்கம்தான் என்ன? அத்தகைய சமூகக்கட்டமைப்பு இங்கிருக்கும் சமூகச் சூழலுக்கும், பாலியல் சுரண்டல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் வெளிப்பாடுகளுக்கும் எந்தவிதத்தில் பங்களிப்புச்செய்யும்? இங்கிருக்கும் சமூகக்கட்டமைப்பில் தற்போதுள்ள நிலைமைகளில் ஆண்கள் கூறப்படுகின்ற உதாரணத்தின்வழி நடப்பதென்பது திருமணக் கட்டமைப்பிற்கு உள்ளும், குடும்ப அமைப்பிற்குள்ளும், அதற்கு வெளியிலும் பெண்கள் மீது பாலியல் ரீதியான சுரண்டலையும், உழைப்பு மற்றும் பொருளாதார சுரண்டலினையும் மேற்கொள்வதையும், சமூகத்தில் பெண்களது நிலையினையும் மேலும் மோசமடையச் செய்யுமேயன்றி அதனால் வேறு பயனேதுமில்லை. ஆக, சமூகநீதியினையும் சமத்துவத்தினையும் ஏற்படுத்துவதற்கு, தற்போதிருக்கும் சமூகச் சூழலுக்கும் காலத்திற்கும் ஏற்றவாறு என்ன செய்யலாம் என்பதற்கான முன் மாதிரிகளுடனும், உதாரணங்களுடனும் வரா விட்டாலும்கூட பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளையும், சுரண்டல்களையும் மேற்கொள்வதற்கான புதிய மாதிரிகளுடனும், உதாரணங்களுடனும் வருவதென்பது சுரண்டல்வாதிகளின் நடத்தைகளை சாதாரணமயப்படுத்தவும், அதனூடாக அவர்களைக் காப்பாற்ற முயல்வதுமன்றி வேறேது?

..கருத்தடை மாத்திரை கண்டு பிடிக்கப்பட்டதும் மேற்கு நாடுகளில் இன்னிலை மாறியது. எமது உடலை நாமே கட்டுப்படுத்துவோம். நாம் குழந்தை பெறும் இயந்திரமல்ல என்ற பதாகையில் பாலியல் சுதந்திரத்தை மேற்கத்திய முதல் அலை பெண்ணியவாத சிந்தனைமுறை வலியுறித்தியது..

மேலுள்ளவாறு குறிப்பிடுவதானது பெண்ணிலைவாத அலைகள் தொடர்பில் இருக்கக்கூடிய அலட்சியப் போக்கினையும், தரவுப் பிழையினையும் சுட்டுகின்றது.

‘முதலாம் அலைப் பெண்ணிலைவாதம் பெண்களுக்கான வாக்குரிமை, சொத்துரிமை போன்ற சட்ட உரிமைகளுக்கான போராட்டமாகவும், இரண்டாம் அலைப் பெண்ணிலைவாதம் பெண்களுக்கான அரசியல், சமூக சம அந்தஸ்து போன்றவற்றிற்கான தொடரும் போராட்டங்களாகவும், இரண்டு பெண்ணிலைவாத அலைகள் மீதான விமர்சனத்துடனும் கட்டுடைப்பு, பாலியல் சுதந்திரம், கருக்கலைப்பிற்கான சுதந்திரம் என்பவற்றை பேசுபொருளாகக்

கொண்டு நிறத்தாலும் வர்க்கத்தாலும் ஒடுக்கப்பட்ட பெண்களுக்கான போராட்டமாக மூன்றாம் அலைப் பெண்ணிலைவாதமும் அமைந்தன' (அரசி விக்னேஸ்வரன், புதியசொல் -09)

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், தமிழ்ச்சூழலில் Me too பற்றிய அறிமுகமொன்றினைச் செய்த கட்டுரைகளிளொன்றான இக்கட்டுரையைப் பதிப்பித்த புதிய சொல் மற்றும் விதை குழுமத்தின் அங்கத்தவர்களே இந்தப் பாலியல் சுரண்டல்களில் ஈடுபட்டவர்கள் என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும். அது அவ்வாறிருக்க, பாலியல் சுதந்திரத்தினை வலியுறுத்துவது முதலாம் அலைப்பெண்ணிலைவாதம் என்பது அடிப்படையில் தவறானது. இதனைக்கருத்தில் கொள்ளும்போது, ஒரு கட்டுரையினை எழுதி அதனை வெளியிடுவதற்கு முன்னர் குறைந்தபட்ச தரவுச் சரிபார்த்தலைக்கூட முறையாகச் செய்யாமல் திரிவுபடுத்தப்பட்ட கருத்துக்களைப் பரப்புவதற்கான நோக்கமும் தேவையும் என்ன எனும் கேள்வியே மேலெழுகின்றது. இது தற்கொலை முயற்சியல்லாது வேறேது?

..பாலியல் சுரண்டல் என்ற பதத்திற்கான அர்த்தத்தை எவ்வாறு புரிந்து கொள்வது என்பதில் சிரமங்கள் உண்டு..

பாலியல் சுரண்டல், பாலியல் துஷ்பிரயோகம் போன்ற பதங்கள் நன்கு வரையறுக்கப்பட்டே உள்ளன. அதனால் ஐக்கிய நாடுகள் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற வரைவிலக்கணத்தினையும், அதற்கான இணைப்பினையும் பாலியல் சுரண்டல் என்ற சொல்லினைப் புரிந்துகொள்வதில் சிரமங்களை எதிர்கொள்வோருக்காக இங்கு வழங்கியிருக்கின்றேன். இணைய இணைப்புகள் வந்தபிறகு எதையும் ஒரு சொடுக்கில் அறிந்துகொள்ளும் சூழலிருக்க பாலியல் சுரண்டல் எனும் பதத்தினை எவ்வாறு புரிந்து கொள்வதென்பது தெரியாமலே அது தொடர்பில் ஒரு கட்டுரையையே

**இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், தமிழ்ச்சூழலில் Me too பற்றிய அறிமுகமொன்றினைச் செய்த கட்டுரைகளிளொன்றான இக்கட்டுரையைப் பதிப்பித்த புதிய சொல் மற்றும் விதை குழுமத்தின் அங்கத்தவர்களே இந்தப் பாலியல் சுரண்டல்களில் ஈடுபட்டவர்கள் என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.**

எழுதுவது பேரபத்தமென்பது ஒருபுறமிருக்க பாலியல் சுரண்டல் எனும் பதத்தினைப் புரிந்து கொள்வதிலுள்ள சிரமத்துடன் பாலியல் சுரண்டல்வாதிகளைப் பிணையெடுப்பது பிரபஞ்சமட்டத்திலான அபத்தமாகும்.

The UN defines sexual exploitation and abuse as follows:

a.Sexual exploitation is any actual or attempted abuse of a position of vulnerability. differential power. or trust. for sexual purposes. including. but not limited to. profiting monetarily. socially or politically from the sexual exploitation of another.

b. Sexual abuse means the actual or threatened physical intrusion of a sexual nature. whether by force or under unequal or coercive conditions.

https://www.un.org.preventing-sexual-exploitation-and-abuse.sites.www.un.org.preventing-sexual-exploitation-and-abuse.files.un_protocol_on_sea_allegations_involving_implementing_partners_en.pdf

மேலுள்ள வரைவிலக்கணத்தின் மொழிபெயர்ப்பு பின்வருமாறு

ஐக்கிய நாடுகள் சபையானது பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் என்பவற்றினை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றது.

1. பாலியல் சுரண்டல் என்பது ஒருவரின் நலிவுற்ற நிலை, அதிகாரவேறுபாடு, நம்பிக்கை போன்றவற்றினைத் துஷ்பிரயோகஞ்செய்து அவரைத் தனது பாலியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துதல் அல்லது பயன்படுத்த முயற்சித்தல் ஆகும். இது பணரீதியான, சமூகரீதியான அல்லது அரசியல்ரீதியான ஆதாயங்களைப் பெறுவதாகவோ அல்லது வேறுவகையினதாகவோ இருக்கலாம்.

2. பாலியல் துஷ்பிரயோகமென்பது பலவந்தமாகவோ அல்லது சமமற்ற அல்லது நிர்ப்பந்தமான நிலைமைகள்கீழ் உடலில் பாலியல்ரீதியிலான அத்துமீறலினை மேற்கொள்ளுதல் அல்லது அத்தகைய அத்துமீறலினை மேற்கொள்ளப் போவதாக அச்சுறுத்தல்.

மேலுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் பார்க்கப்போனால் விதை குழுமத்தின் உறுப்பினர்கள் பாரதூரமான பாலியல் சுரண்டல்களில் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்திருக்கின்றார்கள் எனக்கூறுவது மிகையாகாது. எந்தெந்த விதங்களிலெல்லாம் அவர்கள் பாலியல் சுரண்டலிலீடுபட்டார்கள் என்பதெல்லாம் பட்டியலிடும் அளவிற்கு நீளக்கூடியவை.

..இருவர் தமது சுய விருப்பத்தால் இருவர் உடல் உறவில் ஈடுபடுவது அவர்களின் தேர்வு என்ற போதும் ஆழமாக பார்த்தால் சுய விருப்பம் என்பதும் பல சமயங்களில் ஆதிக்கம், அந்தஸ்து என்ற பல பரிமாணங்களால் நிர்ணயிக்கப் படுகிறது. இவ்வகையில் அணுகும் போது புதிய பிரச்சனைகள் எழுகின்றன..

தெரிவு, சுயவிருப்பம் என்பவை பல்வேறுபட்ட காரணிகளின் செல்வாக்குக்கு உட்பட்டவை என்பது உண்மை. ஆதைக் காரணம் காட்டி ஒருவர் ஒரு தீர்மானத்தினை மேற்கொள்வதற்கு அவசியமான தகவல்களைத் திட்டமிட்டு மறைப்பதன்மூலம், அல்லது பொய்யான தகவல்களைக் கூறுவதன் மூலம் ஒரு குறிப்பிட்ட தெரிவினை மேற்கொள்ளும் நிலைக்கு ஒருவரைத் தள்ளுவது தெரிவிற்குள்ளோ சுய விருப்பத்திற்குள்ளோ அடங்காது. அதேவேளை இத்தகைய

திரிவுபடுத்தல்கள் சமூகத்தில் நிலவும் அசமத்துவங்களுக்கும் தெரிவு மற்றும் சுயவிருப்பத்தின்மீது செல்வாக்குச் செலுத்தும் ஏனைய காரணிகளுக்கும் (இனம், மதம், சமூகம்,பொருளாதார நிலை போன்ற பல) மேலதிகமாக பெண்களைப் பாலியல் ரீதியாகச் சுரண்டுவதற்கான உத்தியாக மாறியுள்ளதனை கவனத்திற்கொள்ளத் தயக்கம் ஏன்?

..சுயசிந்தனை, பகுத்தறிவு மற்றும் முற்போக்கு சிந்தனை கொண்ட பெண்களை வெறும் செயலற்றவர்களாக கருதி பாதிக்கப்பட்டவர்கள் என்ற பச்சாத்தாப அணுகுமுறை பிரச்சனைக்குரியது..

இவ்வாறு குறிப்பிடுவதன்மூலம் பாதிக்கப்பட்டவர்கள் மீது சமூகத்திற்கு இயல்பிலேயே எழக்கூடிய தோழமை உணர்வினை (Solidarity) கட்டுரையாளர் நீக்க முயற்சிக்கின்றார். அதேவேளை பாலியல் சுரண்டலில் ஈடுபட்டவர்கள்மீது அனுதாபத்தினை உருவாக்கும் முயற்சிகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று 'அவர் தற்கொலை செய்து கொண்டால் என்ன செய்வது' என்பதுபோன்ற உணர்வு ரீதியிலான மிரட்டல்கள்.

பாலியல் சுரண்டலிலீடுபட்டவர்கள் மீதான அனுதாபத்தினை ஏற்படுத்தல், உணர்வுரீதியான மிரட்டல்கள், பாதிக்கப்பட்டவர்கள் மீதான அவதூறுகளையும், திரிவுபடுத்தப்பட்ட தகவல்களையும் பரப்புதல், பாதிக்கப்பட்டவர்களை குற்றஞ் சாட்டுகின்ற கட்டுரைகளை எழுதுதல், பாலியல் சுரண்டல் தொடர்பான நடத்தைகளை ஒழுக்கமீறலாக சாதாரணமயப்படுத்தல் அல்லது அத்தகைய நடத்தைகளை நியாயப்படுத்தல், Me too செயன்முறையின் போதாமைகளை எடுத்துக் காட்டுவதனூடாக பாதிக்கப்பட்டவர்களை வாயடைக்க முயற்சித்தல், பாதிக்கப் பட்டவர்களின் செயலாளுமை பற்றிய (Agency) ஒருமுகப்பட்ட சிந்தனையினை ஆணாதிக்கக் கண்ணோட்டத்தில் முன்வைப்பதன் மூலம் பாதிக்கப் பட்டவர்கள் இவ்வெளிப்பாடுகளில் Agency இல்லாதவர்களாக கருதப்படுகின்றார்கள் என்பதான கருத்தினை முன்வைத்து இவ்வெளிப்பாடுகளை நீர்த்துப் போகச்செய்ய முயற்சித்தல் போன்றவையே பாலியல் சுரண்டல்கள் தொடர்பான வெளிப்பாடுகளை எதிர்கொள்ளும் தந்திரோபாயமாக இருப்பதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. பாலியல் சுரண்டல் போன்ற அநீதிகளை வெளிப்படுத்துகையில் பெண்களது Agency இவ்வாறாகத்தான் இருக்கவேண்டும் என வரையறை செய்வதே ஆணாதிக்க மனநிலையின் ஒரு வெளிப்பாடாகும். பெண்களின் செயலாளுமை தொடர்பான இத்தகைய எதிர்பார்ப்புக்களும் பரிந்துரைகளும் அரைவேக்காட்டுத் தனமாக இருப்பதோடு 'ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது' என்ற பழமொழியை நினைவுபடுத்தகிறது.

..பொது வெளிக்கு வரும் முற்போக்கு சிந்தனை கொண்ட பெண்கள், ஆண்களுடன் சேர்ந்து பணிபுரியும் சந்தர்ப்பங்கள் உருவாகும் போது ஒரு ஆணின் மேல் பெண்ணுக்கு பாலியல் ஈர்ப்பு அல்லது காதல் வருவது இயல்பானதே. திருமணம் செய்த ஆண், பெண் என்ற நெறி முறையை மீறும் நிகழ்வுகளும் நடப்பதற்கான வாய்ப்புகளும் இருக்கும். இங்கு பாலியல் பொறாமைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களும் நிகழும். உதாரணமாக ஒருவர் இன்னொருவருடன் பாலியல் . காதல் தொடர்புகளை வைத்திருந்துவிட்டு, அதே சமயம் இன்னொருவரின் மேல் மையல் கொள்ளும் போது அல்லது தொடர்புகளை துண்டிக்கும் போது துண்டிக்கப்பட்டவர் உளரீதியான துன்பத்துக்கு ஆளாவது நிகழும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பல பிரச்சனைகள் உருவாகும். ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுதல், ஆத்திரப்படல் என்பவை இயல்பாக எழும். இந்த உள ரீதியான தாக்கத்திற்கு ஒரு காரணம் பாலியல் பொறாமை எனலாம். மற்றது சில எதிர்பார்ப்புகளுடன் ஒரு உறவை மேற்கொள்ளும் போது அந்த எதிர்பார்ப்புகள் ஏமாற்றமாகும் போது ஏற்படும் உள ரீதியான பாதிப்புகள். ஆனால் இந்த எதிர்பார்ப்புகள் என்பது ஒன்றாக வாழ்தல் என்ற கருத்தியல் பின்னணியில் எழும் போது தான் சிக்கல்கள் ஏற்படுகின்றன...

பாலியல் சுரண்டலை வெளிப்படுத்துவது என்பது பாலியல் பொறாமையினைக் கொண்டிருப் பதற்கான அடிப்படையாக மாறியது எப்போது? இக்கட்டுரையாளர் பாலியல் பொறாமை என்பதை எவ்வாறு வரையறுக்கின்றார்? பாலியல் பொறாமையினைக் கொண்டிருப்பதனை எதனடிப் படையில் தீர்மானிக்கின்றார்? பாலியல் சுரண்டல் தொடர்பான வெளிப்பாடுகளை முறையாக எதிர்கொள்ளத் திராணியற்று பாலியல் பொறாமை எனும் வெற்றுச்சொற்களின் பின் மறைந்துகொள்ளும் முயற்சியாக மட்டுமே இதனைப் பார்க்க முடிகின்றது. ஆக, உறவு முறியும்போது, திருமணத்திற்குப் புறம்பான உறவிலீடுபடும்போது ஏற்படும் பாலியல் பொறாமையின் காரணமாக இவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள் என்பது கயமையும் பாதிக்கப்பட்டவர்களைக் குற்றஞ்சாட்டுவதும் அல்லாமல் வேறேதுமல்ல.

பாலியல் சுரண்டல் தொடர்பான வெளிப்பாடுகள் மிகவும் அரிதாகவே மேற்கொள்ளப்படும். திருமணக் கட்டமைப்பிற்குள் மேற்கொள்ளப்படும் பாலியல் சுரண்டல்கள் உட்பட அனைத்து வகையான சுரண்டல்களும் கூட குடும்ப கௌரவம், ஆணாதிக்க சமூகத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணின் எதிர்காலம் போன்ற காரணங்களுக்காகவும், வேறுபல காரணங்களுக்காகவும் வெளிப்படுத்தப்படுவதுமிகவும் அரிது. அவ்வாறிருக்க இத்தடைகளையும் எதிர்கொண்டு ஒரு பெண் தனக்கேற்பட்ட அநீதி தொடர்பில் பேசத் துணிந்தால், பாலியல்

பொறாமை எனக்கூறுவது போன்ற அயோக்கியத்தனம் வேறில்லை. அது தவிர கட்டுரையாளர், பாதிக்கப் பட்டவர்களின் அனுபவம் தொடர்பான எவ்வித பிரக்ஞையுமில்லாது, அவற்றினை அறிந்து கொள்வதற்கான குறைந்தபட்ச முயற்சியைத் தன்னும் மேற்கொள்ளாது இத்தகைய தீர்ப்பிடலினை எந்த அடிப்படையில் மேற்கொள்ளத் துணிகின்றார்? அப்படி இருக்கலாம் போல, இப்படி இருக்கலாம் போல என்பதான கதைகளைக் காற்றில் பறக்கவிடுவதும், சதிக் கோட்பாடுகளை (Conspiracy theories) உருவாக்கிக் கட்டுரை எனும் பெயரில் வெளியிடுவதும்தான் பாலியல் சுரண்டல்களை எதிர்கொள்ளும் வழிமுறைகளா?

*..இன்னொரு புறம் பெண்ணியவாதிகளை விட பெண்ணியவாதிகளாக தம்மை காட்டிக்கொள்ளும் சில ஆண்கள் பாலியல் குற்றவாளி, பாலியல் சுரண்டல்காரன் என்ற பதாகைகளை தூக்கிக்கொண்டு, பெண்களின் பாதுகாவலர்களாகவும், நியாயம் கேட்பவர்களாகவும் தம்மை முன்னிறுத்துகின்றனர். ..*

பெண்ணிலைவாதி எனும் சொல் பற்றிய புரிதலின் போதாமையே இத்தகைய கருத்தினை வெளிப்படுத்துவதற்குக் காரணமாயிருக்கின்றது. ஆண்கள் பெண்ணிலைவாதிகளாக இருக்க முடியும், ஆண்கள் பாலியல் சுரண்டல் உள்ளடங்கலாக பெண்களுக்கெதிராக அநீதிகள் இழைக்கப்படுகையில் அதனை வெளிப் படுத்துவதற்கும், கேள்வி கேட்பதற்கும், பாதிக்கப்பட்ட பெண்களுடன் Solidarityஇனை வெளிப்படுத்துவதற்கும் முடியும். ஆனால் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடும் ஆண்களை கட்டுரையாளர் எதிர்மறையான முறையில் பெண்ணிலை வாதிகளாக வரையறுக்கின்றார். அதன்மூலம் பெண்ணிலை வாதிகள் தொடர்பாகவும் ஒரு எதிர்மறையான பிம்பத்தினை உருவாக்க முயல்கின்றார். பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறைகள் தொடர்பில் செயற்படவிரும்பும் ஆண்களை முத்திரை குத்துகின்றார்.

ஆண்கள் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவதென்பது பாலியல் பொறாமையினைக் கொண்டிருப்பதற்கான அடிப்படை யாகுமா? அப்படியானால் பாலியல் சுரண்டல்வாதிகளைக் காப்பாற்ற முயல்பவர்களும் தம்மளவில் சுரண்டல்வாதிகளாக இருக்கின்றார்கள் என வாதிட முடியுமல்லவா? ஒழுக்க வாதத்தின்மூலம் கட்டுரையாளர் தன்னை முற்போக்கானவராகக் காட்டிக்கொள்ளப் பார்க்கின்றார் எனக்கூற முடியுமல்லவா? அதுதவிர பெண்களின் பாலியல் சுதந்திரம், விடுதலை போன்றவைகுறித்து பாலியல்சுரண்டலிலீடுபட்ட ஆண்கள் பேசும்போதும், அறிக்கைகள் வெளியிட்டபோதும் கட்டுரையாளர் அவர்களைப் பெண்ணிலை வாதிகளாக விளிக்கவில்லையே! ஆகவே கட்டுரையாளரின் இத்தகைய சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் ஒரு வலுவான கருத்தியல் அடிப்படைகள் ஏதேனும் இருக்கின்றனவா? இக்கட்டுரையினை கருத்தியல் கட்டுக்கதையாக அல்லாது வேறு எவ்வாறு அணுகுவது?


*..ஒரு சில ஆண்கள் பாலியல் உறவை மேற்கொண்டு அப்பெண்களுக்கு சில நம்பிக்கைகளை ஏற்படுத்தி பணம் வாங்கி ஏமாற்றி இருக்கிறார்கள். இதனை பாலியல் சுரண்டல் என சொல்லமுடியும். ஆனால் அனைத்தையும் பாலியல் சுரண்டல் என்ற பதத்துள் அடக்குதல் கேள்வியாக எழுகிறது..*

ஒரு சில ஆண்கள் பாலியல் உறவை மேற்கொண்டு அப்பெண்களுக்கு சில நம்பிக்கைகளை ஏற்படுத்தி பணம்வாங்கி ஏமாற்றியி ருக்கின்றார்கள். இதனை பாலியல் சுரண்டல் என சொல்ல முடியுமென்பது பாலியல் சுரண்டல் தொடர்பிலான அறிவிலும் புரிதலிலும் இருக்கக்கூடிய போதாமைகளையே காட்டுகின்றது. பணத்துடன் பாலியல் உறவு தொடர்புபடுவது மட்டுமே பாலியல் சுரண்டலாகாது என்பதை மேலுள்ள வரைவிலக்கணங்களைப் பார்க்கும் எவருக்கும் புரிந்துவிடும். அனைத்தையும் பாலியல் சுரண்டல் எனும் பதத்திற்குள் அடக்குதல் கேள்வியாக எழுகின்றதெனக்கூறும் கட்டுரையாளர் அனைத்தையும் என குறிப்பிடுவது எவற்றை? ஒருவேளை அனைத்தையும் என குறிப்பிடப்படுபவை எவை எனப்பட்டியலிட்டால் அவை பாலியல் சுரண்டலா இல்லையா என வாசகர்களே தீர்மானித்துக் கொள்ளலாம் இல்லையா?

*..ஒரு முதலாளித்துவ சட்ட அமைப்பில் கூட சுயவிருப்பின் அடிப்படையில் இருவர் பாலியல் உறவு கொண்டால் அவர்களில் ஒருவரை குற்றவாளியாக காண்பதில்லை..*

இது மிகவும் பொதுமைப் படுத்தப்பட்ட, அபத்த மான கருத்தாகும். சிறுவர்களுடனும், மனநிலை பாதிக்கப் பட்டவர்களுடனும் அவர்களது சுயவிருப்பத்துடன் பாலுறவு கொள்ளுதல் சட்டப்படி ஏற்றுக் கொள்ளப்படுகின்ற விடயமா? அல்லது சுயவிருப்பென்பதை வளர்ந்தோருடன் மட்டுமே மட்டுப்படுத்திக் கொள்வதாலேயே கட்டுரையாளர் இத்தகையதோர் கருத்தினைக் கூறுகின்றாரா? திரிவுபடுத்தப்பட்ட தகவல்களைக் கூறுவதன்மூலம் நம்பிக்கையினை ஏற்படுத்தி பெறப்படும் சம்மதத்தினை முதலாளித்துவ சட்டக்கட்டமைப்பினைக்கொண்டு பாவநீக்கம்செய்யும் முனைப்பு எதற்கானது?

இவையெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். உண்மையிலேயே பால்நிலை சமத்துவம் தொடர்பான பிரக்ஞையும், விருப்பும் கட்டுரையாளருக்கு சிறிதளவேனும் இருக்குமாயின் இனிவரும் காலங்களில் இத்தகைய அபத்தமான, பெண்களுக்கு விரோதமான கட்டுரைகளை தகவல் மற்றும் தரவுப்பிழைகளுடன் எழுதுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.




# தொகுப்பாசிரியர் பதிப்பாசிரியர்

**சுகன்**

புலமைத்துவம் சார் வழியில் ஒரு நூல் அறிமுகப்படுத்தப்படுமென்றால் அது எல்லோருக்கும் ஒரு கொடுப்பினை. வரப்பிரசாதம். உதாரணத்திற்கு, ஆ.இரா. வேங்கடாசலபதி பதிப்பாசிரியராக இருந்து கொண்டுவந்த நூல்கள் கடின உழைப்பும் பொறுப்பும் புலமையும் கொண்டது.

ஆ.இரா.வேங்கடாசலபதி (A.R.Venkatachalapathy) தமிழகத்தின் குறிப்பிடத்தக்க ஆய்வாளர்களுள் ஒருவர். இவர் தில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பதிப்பு வரலாறு பற்றிய ஆய்வில் முனைவர் பட்டம் பெற்றவர். புதுமைப்பித்தனின் எழுத்துக்களைச் செம்பதிப்பாகத் தொகுத்துள்ளார். கடந்த 30 ஆண்டுகளில் தமிழ் வரலாற்று, பண்பாட்டுத்துறைக்கு முக்கியமான 25-க்கும் மேற்பட்ட புத்தகங்களைக் கொடுத்திருக்கிறார். தற்போது சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். (இப்படியாக அவர் குறித்த அறிமுகம் இருக்கிறது.)

பின்னி ஆலை வேலை நிறுத்தம், அந்தக் காலத்தில் காப்பி இல்லை,

புதுமைப்பித்தன் கதைகள் (தொகுப்பாளர்), புதுமைப்பித்தன் கட்டுரைகள் (தொகுப்பாளர்), பாரதியின் சுயசரிதைகள்,பாரதி கவிஞனும் காப்புரிமையும் = பாரதி படைப்புகள் நாட்டுடைமையான வரலாறு, சென்று போன நாட்கள் - பதிப்பாசிரியர், வ.உ.சியின் சிவஞானபோத உரை, பாரதி விஜயா கட்டுரைகள்,

இவை சலபதியின் சில நூல்கள்.

இங்கு தொகுப்பாசிரியர் வேறு, பதிப்பாசிரியர் வேறாக கொள்ள இடமில்லை.

சலபதியைத் தவிர்த்து ஆய்வுப்புலத்திலும் நூற் தொகுப்புக்களிலும் பலர் இயங்கியிருக்கிறார்கள்.

தலித் அரசியல், ஆய்வு, இலக்கியத் தொகுப்புகளெல்லாம் இப்படி பொறுப்போடு அணுகப்பட்டவை.

அம்பேத்கர், பெரியார், அயோத்திதாசர், தொகுப்புகள், தேர்வுகள் எல்லாம் இவ்வழியமைந்தவை. இறுதியாக புத்தரது போதனைகள் சுத்த பிடகம் 5 பாகங்களாக தொகுக்கப்பட்டிருக்கிறது.

தொகுப்பு, பதிப்பு தமிழ்நாடு பௌத்த சங்கம், மெத்தா பதிப்பகம்,

இன்று மிக இழிந்த நிலையில் இத் தொகுப்பாசிரியர் பதிப்பாசிரியர் உரிமை கோரல்

**செ.கணேசலிங்கமும் நித்தியும் க்ரியா ராமும் ஒரு நூல் கைப்பிரதியில் கை வைத்தால் அங்கு சீர்மை துலங்கும். அந்த எழுத்தாளர் வியக்குமளவில் அதன் சீர்மைப்படுத்தல் இருக்கும். ஆனால் இருவரும் தாம் கைவைத்த நூலில் தம் பெயர் வருவதை விரும்பாதற்கு முக்கிய காரணமாய் அமைவது. அந்த எழுத்தாளருக்கு உரிய இடத்தை அவர் தனித்துவம் மிளிர அவரை முன்வைத்து தாம் தம் சுவடுபடாமல் ஒதுங்குவது, தம்மை மறைப்பது.**

**பல எழுத்தாளர்கள் பதிப்பு வெளியில் இப்படியாகத்தான் துலங்கியிருக்கிறார்கள். நூல் தயாரிப்பு, அச்சாக்கம் இவற்றில் அனுபவமோ போதிய அறிவோ இல்லாத, ஆனால் தம் நூல்கள் சிறந்த முறையில் வெளிவர வேண்டுமெனும் வேணவாவில் ஒருவரிடம் கொடுத்தால் எழுத்தாளரது அறியாமையைப் பயன்படுத்தி தம்மை முன்னிறுத்துவதும் அந்த நூலில் ஏறி போருக்கு அறைகூவுவதும் எந்தவகையில் அறம், நியாயம்... அநியாயமில்லையா இது!**


பாரிஸில் இழவெடுத்து நிற்கிறது. கதாசிரியர் என்பதைக்கூட விளங்கி விடலாம், ஒரு பத்துக் கதைகளைத் தொகுத்தால் தொகுப்பாசிரியர். பதிப்பாசிரியர் என ஆளுக்குப் பாதியாய் பங்கு போட்டுக் கொள்வதெல்லாம் என்ன வகையான மன நிலை ?

எடிட்டிங் என்பது சீர்மை. அதைக் குறித்து நிற்போர் சீர்மையாளர்.

அவர்கள் ஒரு படைப்பில் அல்லது தொகுப்பில் தமக்கான எல்லை எதுவரையென ஒரு நிலை எடுப்பர்.

செ.கணேசலிங்கமும் நித்தியும் க்ரியா ராமும் ஒரு நூல் கைப்பிரதியில் கை வைத்தால் அங்கு சீர்மை துலங்கும். அந்த எழுத்தாளர் வியக்குமளவில் அதன் சீர்மைப்படுத்தல் இருக்கும். ஆனால் இருவரும் தாம் கைவைத்த நூலில் தம் பெயர் வருவதை விரும்பாதற்கு முக்கிய காரணமாய் அமைவது.

அந்த எழுத்தாளருக்கு உரிய இடத்தை அவர் தனித்துவம் மிளிர அவரை முன்வைத்து தாம் தம் சுவடுபடாமல் ஒதுங்குவது, தம்மை மறைப்பது.


'Irulveli'
A repository
of post-modern Tamil writings
published to mark
the 10th anniversary
of 'Literary Meeting'
on the occasion
of 24th Series of 'Literary Meeting'
to be held
on May 30-31, 1998
in Frankfurt, Germany.

இருள்வெளி
இலக்கியச் சந்திப்பின்
10வது ஆண்டினையொட்டி (1988-1998)
ஃபிராங்பெர்ட்டில்
98 மே, 30-31 தினங்களில் நிகழும்
24வது இலக்கியச் சந்திப்பிற்காக
வெளியாகும்
பின்நவீனத்துவ
இலக்கியப் படைப்புகளின் தொகுதி.

தொகுத்ததும் தவிர்த்ததும்:
சுகன்
பாரிஸ், 15. 05. 1998

## அகர(ன்) வரிசை

கற்காலத்தில் தொடர்பு வசதிகள் எழுத்தாளர்கள் பற்றிய அறிமுகங்கள் மிகச் சொற்பமாக இருந்த நாளில் தமக்கு இசைந்தவர்களை பிடித்து ஒரு தொகுப்பை கொண்டுவருவது ஒப்பேற்றுவது வாய்ப்பான வசதியான ஒரு செயன்முறை.

இப்போதும் அதையே நியாயமுறை சொல்வது, தமக்குரிய, தத்தம் வட்டங்களையும் சதுரங்களையும் செவ்வகங்களையும் எப்போதும் பேணுவதற்கேற்றவாறான, சங்கடங்களைத் தவிர்ப்பதற்கான ஒரு முன்னெச்சரிக்கைதான். பொது அறிவித்தல் ஏன் விடுக்கப்படவில்லை என இன்று இலங்கையில் இருந்து கேட்பது ஒரு நியாயமான கேள்வியே .

இத் தொகுப்பில் பெரும்பாலும் கடந்தகாலத்தில் எழுத்துப் பேச்சு நெருக்கடிகளில் எழுதுவதில் அல்லல்களைச் சந்தித்தவர்களோ பாசிசத்திற்கு எதிராக தம் அடையாளத்தை முன்னிறுத்தியோர்களோ இல்லை.

அப்போதும் அவர்கள்தான் தம்பெருமைகளைப் பவிசுகளை எழுதினார்கள், சூழ்நிலை மாறிய பின்னும் அவர்கள்தான் இன்னும் சொல்லப்போனால் முன்னிலும் மிக்க விளங்கொளியாக தயக்கம் ஏதுமின்றி கிடைத்த அத்தனை எழுத்துப் பரப்புகளையும் வாய்ப்புகளையும் பயன்படுத்துகிறார்கள்.

முத்துலிங்கம், கருணாகரன் எல்லாம் அப்படி ஒரு 'வந்தவரை எனக்கு லாபம்' எனப் பயில்பவர்கள். சடங்கார்த்தமான இத் தொகுப்பின் எழுத்தாளர்களின் இணைப்புக் கண்ணித் தொடர்புகள் அப்படி.

சிறுகதைகளில் பரீட்சார்த்த எத்தனங்கள் கடந்து வாசிப்பிற்குச் சவாலான கதை கூறல் முறைகளும் நிலவும் மதிப்பீடுகளைக் கலைத்து எதிர்க் கதையாடல், எதிர்ப்பண்பாடு, மேலாதீத, பின்நவீன நிலைகளை சுட்டும் ஒரு கதைகூட இத் தொகுப்பில் இல்லையென்பது எதிர்பார்க்கப்பட்டதும் புரிந்துகொள்ளக்கூடியதுமாகும்.

அருமந்த ஒரு நூல் தொகுப்பு ஒரு மாமூலான, ரிஸ்க் எடுக்கத் தயாரற்ற ஒரு நிறைக்குப்போட்டாலும் இக் காலத்தில் தேறாத ஒன்றாய் அமைந்தது எவரது பிழை, அல்லது எவரதோ பிறழ்.

பொது அமைப்பான கூட்டு உழைப்பில் கனிந்த இவ் இலக்கியச் சந்திப்பின் ஒரு நூல் தொகுப்பு தனியே தமது பதிப்பகமான கறுப்புப் பிரதிகளால் வெளியிடப்படுவதென்பது ஏனைய ஒரு நூறு பதிப்பகங்களை புறக்கணிக்கும் அதன் விசனத்தைச் சம்பாதித்துக்கொள்ளும் நியாயமற்ற முறைமையுமாகும். தனிநபர்கள் தமக்கான பதிப்பகங்களில் ஒன்றைத் தேர்வது வேறு,

பல்வேறு வெளியீட்டகத் தொடர்புகள் உள்ளவர்கள் பங்குகொள்ளும் ஒரு களனில் ஒருவரின் விருப்பத் தேர்வான ஒரு பதிப்பகத்திற்கு ஒப்புக் கொடுப்பது வேறு. இதையொட்டிய கற்சுறாவின் கேள்வியில் நியாயமுண்டு.

இலக்கியச்சந்தின்பின் பேரால் தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டுள்ளது கருப்பு பிரதிகள் பதிப்பகத்திற்கு.

அகரவரிசை எழுத்தாளர்கள் என்பது எழுத்தாளர்கள் பெயர் முதலெழுத்தேயல்லாமல் அவர்கள் இனிசியல் முதலெழுத்தல்ல.

அ.முத்துலிங்கத்தின் கதை முதலில் வருவதற்கு அவர் பிரபலம் காரணமேயன்றி அவர் இனிசியல் காரணமல்ல. இந்த வகையில் பாவம் அந்தத் தம்பி அகரன். முத்துலிங்கத்தின் இனிசியலைக் காரணம் சொல்லி இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டது.

அக வானது எப்படிப் பார்த்தாலும் அ.மு இற்கு முதலில்தான் வரும்.

பல எழுத்தாளர்கள் பதிப்பு வெளியில் இப்படியாகத்தான் துலங்கியிருக்கிறார்கள். நூல் தயாரிப்பு, அச்சாக்கம் இவற்றில் அனுபவமோ போதிய அறிவோ இல்லாத, ஆனால் தம் நூல்கள் சிறந்த முறையில் வெளிவர வேண்டுமெனும் வேணவாவில் ஒருவரிடம் கொடுத்தால் எழுத்தாளரது அறியாமையைப் பயன்படுத்தி தம்மை முன்னிறுத்துவதும் அந்த நூலில் ஏறி போருக்கு அறைகூவுவதும் எந்தவகையில் அறம், நியாயம்... அநியாயமில்லையா இது!

சரி, ஒரு தொகுப்பில் பங்குகொள்ள வேண்டி எழுத்தாளர்களைக் கோரினால் எல்லோர் படைப்புகளும் அத் தொகுப்பில் இடம்பெறும் சாத்தியமற்றிருந்தால் தவிர்க்கப்பட்ட எழுத்தாளர்கள் குறித்து பொதுவெளியில் வருத்தம் தெரிவிப்பதுதானே முறையும் மரபும்.

இல்லை தம் குறுகிய பேர் அறிதலுக்காக , தம்மைப் பிரதானப்படுத்தி, பிரகடனப்படுத்தி எல்லோருடைய உழைப்பையும் சுரண்டி தமக்காக தந்திரமாக ஆதாயப்படுத்துவதில் இலக்கியத்தின் நோக்கமே இழிந்துபடுதே!

ஏற்கனவே இந்தப் பதிப்பாசிரியர் சிக்கலில் மூன்று எழுத்தாளர்கள் மனங் குமுறிப் புலம்பிக்கொண்டிருக்கிறார்கள் என அறியக்கிடைத்தது. இதில் எங்கே வாய்ப்புக் கிடைக்கும், ஏறியிருக்கலாம் என்பதற்கு மருந்துமில்லை, மாற்றுமில்லை.

இப்போது இலக்கியச் சந்திப்பு கொமிற்றி பேரில் வந்ததாக ஒரு அறிக்கைகூட இல்லை. அதையொட்டி வந்த விமர்சனங்களுக்கு தனி நபர் ஒருவர் விளக்கமளிக்கிறார்.

இத் தொகுப்பில் கொமிற்றி அங்கத்தவர்களையும் போட்டு அதைவிட தொகுப்பாசிரியர். பதிப்பாசிரியர் பிரகடனங் களெல்லாம் ஒரு அருவருப்பின் கோமாளித்தனத்தின் உச்சம்.

**இனியும் சூல் கொள்! தொகுப்பெல்லாம் செய்தது இலக்கியச் சந்திப்பு கொமிற்றிதான். ஒரு பரஸ்பரப் புரிதலில் கூட்டு உழைப்பில் செய்யப்பட்டதால் விமர்னங்கள் அதிருப்திகள் இல்லை. தனி நபர் ஆதாயங்களுக்கும் இங்கு இடமில்லை.**

**ஒருவர் செய்யும் ஈடுபாட்டில் தன் லாபம் கருதினால் ஏனையோர் உழைப்பின் நிலைதான் என்ன? பெயர் ஆசை ஒருவருக்கு இருப்பதை புரிந்தேற்றுக்கொள்ளலாம்.**

**ஆனால் பெயராசைக்காகவே தொகுப்பு வேலைகளில் இறங்கியதென பச்சையாகவே தெரிகிறது.**

பிரபாகரன் பேரில்தான் எல்லா அறிக்கைகளும் வந்தன. இதுக்குத்தானா ஆசைப்பட்டாய் பாலகுமாரா ..! வகைதான் இது.

இங்கு பதிப்பாசிரியர். தொகுப்பாசிரியர் வழி ஆதாயங்கள் ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒரு புறோசஸ்.

இனியும் சூல் கொள்! தொகுப்பெல்லாம் செய்தது இலக்கியச் சந்திப்பு கொமிற்றிதான். ஒரு பரஸ்பரப் புரிதலில் கூட்டு உழைப்பில் செய்யப்பட்டதால் விமர்னங்கள் அதிருப்திகள் இல்லை.

தனி நபர் ஆதாயங்களுக்கும் இங்கு இடமில்லை. ஒருவர் செய்யும் ஈடுபாட்டில் தன் லாபம் கருதினால் ஏனையோர் உழைப்பின் நிலைதான் என்ன? பெயர் ஆசை ஒருவருக்கு இருப்பதை புரிந்தேற்றுக்கொள்ளலாம்.

ஆனால் பெயராசைக்காகவே தொகுப்பு வேலைகளில் இறங்கியதென பச்சையாகவே தெரிகிறது.

பிராங்க்பேர்ட் இல.சந்திப்பின் அடியொற்றி பாரிஸிலிருந்து நான் இருள்வெளி தொகுப்பைக் கொணர்ந்தேன். அது பிராங்க்பேர்ட் இலக்கியச் சந்திப்புக் கொமிற்றி ஏற்பாடல்ல. ஒரு இலக்கிய மாநாட்டையொட்டி ஒரு நூல் கொண்டு வந்து பலம் சேர்ப்பதுதான்.

அப்போதிருந்த வளங்களும் அப்படியானது. இன்றைப்போல் எல்லா வசதிகளும் இல்லாக் காலமது. இணையமுமில்லை, ஈமெயிலும் தெரியாது.

அந்த இல.சந்திப்பில் வேறும் சில நூல்கள் வெளிவந்து அலங்கரித்தன. அதாவது சென்னை புத்தகத் திருவிழாவை ஒட்டி பல நூல்கள் வெளியாவது போலத்தான்.

இங்கொருவர் இமிழ் தொகுப்பிற்கு தன் நியாயம் சொல்கிறார். தங்கள் தற்குறித்தனத்திற்கு இமிழ் என்று பேர் வை! என சொன்னால் பொருத்தமாயிருக்கும்.

கோமாளித் தனத்துக்கும் ஒரு எல்லையுண்டு. அதே எதேச்சாதிகார மனநிலையில் இல.சந்திப்பின் பேரால் இன்னும் கொண்டுவருவேன்! என்று வேறு சொல்கிறார்.

இவ்வாறு இழிந்தது இன்றைய இலக்கியச் சந்திப்பு.!

இன்னொருவர் சிசிலி பிரகடனம் செய்திருக்கிறார். இல.சந்திப்பின் பேரால் எழுத்தாளர்களை அவமானப்படுத்துவது என்ற மனத் திடம் ஏற்கனவே இயல்பாய் அமைந்த ஒன்று போல் இருக்கிறது.

இல.சந்திப்பிற்கான இன்னொரு அவமானம் இது. 35 ஆண்டு காலமதில் இந்த இல.சந்திப்பு வெளியில் செலுத்தப்பட்ட அறிந்த அறியாத எல்லோரதும் உழைப்பைக் கேவலப்படுத்தும் முறை இது.

ஆசை வெட்கமும் அறியாது,

எழுத்தாளர்களே !

உங்கள் சுயமரியாதையைக் காத்துக்கொள்ள எச்சரிக்கையாகவும் விழிப்போடுமிருங்கள் !

### மட்டக்களப்புத் தமிழகம் என்னும் நாமம்:
### வரலாற்று தேடல்கள் 16



# கிழக்குத் தளபதி கேணல் கருணாவின் பின்வாங்கும் படலம்

எம்.ஆர்.ஸ்டாலின் ஞானம்

அது சித்திரை மாதத்தின் 13 ஆம் நாள். 2004 ஆம் ஆண்டு மார்ச் 04 ஆம் நாள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குள் இருந்து வெளிப்பட்ட கிழக்குப்பிளவு தொடங்கியதிலிருந்து கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மனிதனும் நிமிர்ந்து நின்ற அந்த நாற்பது நாட்களும் வெருகல் படுகொலையோடு முடிவுக்கு வந்தன.

வெருகலாற்றுப் படுக்கையில் கிழக்குப் போராளிகள் மீது வன்னிப்புலிகள் நிகழ்த்திய எதிர்பாராத படுகொலை கருணாம்மானுக்கு பேரதிர்ச்சியைத் தந்தது. தன்னைக் கொல்வதற்காக பிரபாகரன் பல்வேறு விதமான நகர்வுகளை மேற்கொள்வார் என்பது அவர் எதிர்பார்த்ததுதான். அவ்வாறாக களமிறங்கி மட்டக்களப்புக்குள் ஊடுருவ முனைந்த பொட்டம்மானின் புலனாய்வுத்துறை உறுப்பினர்கள் பலர் கைது செய்யப்பட்டுக் கொண்டிருந்தனர்.

ஆனால் ஒட்டுமொத்தமாகப் படை கொண்டு ஏவி சக போராளிகளை கொன்று குவித்து கிழக்குப் போராளிகள் அனைவரையும் எதிரிகளாகக் கணிக்கும் நிலைக்கு பிரபாகரன் வருவார் என்பதை அவர் எதிர்பார்த்திருக்கவில்லை. அதன் காரணமாகத்தான் கருணாம்மான் மெல்ல மெல்ல தனது படைக்கட்டுமானங்களின் மீதான தளர்வுகளை மேற்கொண்டு அவற்றைக் கலைக்கும் ஏற்பாடுகளை ஏற்கனவே முன்னெடுக்கத் தொடங்கியிருந்தார்.

வெருகலாற்றுக்கரையில் வழமையான கிழக்குப் புலிகளின் பாசறையொன்று நிலைகொண்டிருந்ததே தவிர பாரிய எதிர்த் தாக்குதலொன்றை சமாளிக்கும் வண்ணம் அவர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கவில்லை.

அதனால்தான் திடீரென ஏப்ரல் பத்தாம் நாள் அதிகாலை வன்னிப்படைகளால் வெருகலில் நிகழ்த்தப்பட்ட அந்த படுகொலையைத் தொடர்ந்து உடனடியாகவே அனைவரையும் பின்வாங்குமாறு பணித்தார் கருணாம்மான்.

அதுமட்டுமன்றி தானும் மட்டக்களப்பை விட்டு வெளியேறும் முடிவுக்கு அவர் வந்தார். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான படுவான்கரைப் பிரதேசத்தில் உள்ள வேப்பவெட்டுவான் என்னுமிடத்தில் அமைந்திருந்த நிதித்துறையின் முகாமுக்கு வந்துசேருமாறு மூத்த தளபதிகள் அனைவரும் அவசர அவசரமாக அழைக்கப்படுகின்றனர்.

கருணாம்மான் அமைதியாக அமர்ந்திருக்கின்றார். சுமார் இருபது வருடங்களாக அவரது ஆணைகளை ஏற்று எத்தனையோ பயிற்சிகளை, எத்தனையோ செயற்றிட்டங்களை, எத்தனையோ நிகழ்வுகளை, எத்தனையோ தாக்குதல்களை, எத்தனையோ யுத்தங்களை, எத்தனையோ சாகசங்களை, செய்து முடித்த அத்தனை தளபதிகளும் அவரது நாவிலிருந்து வரப்போகும் அந்த இறுதி கட்டளைக்காக அவர் முன்னே அமைதிகாத்து நின்றனர்.

'நமது பாதுகாப்புக்கு சந்திரிக்காவிடம் பேசியுள்ளேன். அனைத்து படையணிகளையும் கலைத்துவிட்டு

முக்கிய பொறுப்பாளர்கள் அனைவரும் கொழும்புக்குத் தப்பிச்செல்வோம்.'

உடனடியாகவே மட்டக்களப்பு அனைத்து முகாம்களையும் கட்டுப்பாடுகள், நிபந்தனைகள், ஏதுமின்றி திறந்து விடுமாறு முகாம் பொறுப்பாளர்களை நோக்கி மூத்த தளபதிகளின் கட்டளைகள் பறந்தன. அதன்படி அனைத்துவிதமான பயிற்சி முகாம்களிலும் இருந்த போராளிகள் அனைவரும் வீடுகளுக்குச் செல்ல பணிக்கப்பட்டனர். ஆயுதக் கிடங்குகளும் வாகனங்களும் ஆங்காங்கே தீச்சுவாலைக்கு இரையாகிக் கொண்டிருந்தன.

அம்மானும் அவரது முக்கிய தளபதிகளும் கொழும்புக்கு தப்பிச்செல்லும் திட்டம் உறுதியானது. ஆனால் எப்படி? எந்தப்பாதை? யார் பாதுகாப்பு? கேள்விகள் மலையாய் எழுந்து நின்றன. மௌனம் குடிகொள்ளத்தொடங்கியது.

வெருகலாற்றுக் கரையில் சுமார் 200 க்கும் மேற்பட்ட கிழக்குப்போராளிகளை கொன்று குவித்த வன்னிப்புலிகள் எழுவான்கரையின் பல இறங்குதுறைகள் ஊடாக மட்டு-அம்பாறை மாவட்டங்களுக்குள் இறங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்னும் அவசரமும் இறுதியுமான தகவல்கள் வாகரை, கரடியனாறு, போரதீவு போன்ற எல்லைக் காவலரண்களிலிருந்து பின்வாங்கிக் கொண்டிருக்கும் கருணாம்மானின் படையணிகளிடமிருந்து வந்து கொண்டிருக்கின்றன.

ஒருகணமும் தாமதிக்க முடியாது. உடனடியாக பின்வாங்கியாகவேண்டிய நிலை. ஆனால் எங்கே எப்படி போவது? இன்னும் முடிவாகவில்லை..

இதுவரைகாலமும் கருணாம்மான் என்னும் இராணுவ வித்தகனை வழிநடத்திய வேகம், வீரம், விவேகம், அதிகாரம், ஆணவம், அனைத்தையும் இழந்திருந்த அவரது குரல் வரலாற்றில் முதன் முறையாக ஈனஸ்தாயியில் ஒலித்தது. 'சந்திரிகா விடயம் சரிவராது' அம்மானின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை வாய் மட்டுமே முணுமுணுத்தது.

அடுத்தது என்ன? கிழக்கு மாகாணத்தின் மேற்கு தொடர்ச்சி மலை காடுகளூடாக தப்பிச்செல்வது ஒன்றே வழி. அது பற்றி தளபதிகள் கூடி நின்று பரிசீலிக்கின்றனர். அவ்வாறு செல்வதானால் மேற்கெல்லைக்கு அப்பாலுள்ள சிங்கள கிராமங்களுக்குள் நுழைகின்றபோது பாதுகாப்புக்குரிய ஆயுதங்கள் எதையுமே வைத்திருக்க முடியாது. அனைத்தையும் ஆங்காங்கே கைவிட வேண்டும். அதன் பின்னர் கொழும்புவரை பாதுகாப்புக்கான உத்தரவாதம் ஏதுமின்றி எப்படி? அந்த முடிவும் கைவிடப்பட்டது.

முதற்கட்டமாக அம்மானை சுற்றிவளைக்கும் நோக்கில் இறக்கப்பட்டுள்ள வன்னிப்புலிகளின் விசேட படையணிகளை திசைதிருப்பும் முயற்சியாக ஒரு சிறு குழு மட்டும் வேப்ப வெட்டுவானிலிருந்து படுவான்கரை சிறு வீதிகளூடாக மயிலவெட்டுவான் சென்று கொழும்பு றோட் எனப்படும் A-11 வீதியில் இணைந்து கொழும்பு நோக்கி பயணிப்பது என்று முடிவாயிற்று. அதன்படி நிதித்துறை பொறுப்பாளர் திருமால், புலனாய்வுத்துறை பொறுப்பாளர் றெஜினோல்ட், நிர்வாகத்துறை பொறுப்பாளர் துரை, இராணுவத் துறை பொறுப்பாளர் ஜிம்கலி தாத்தா, மூத்த தளபதியும் கருணம்மானின் சகோதரருமான றெஜி போன்றோர் முதலில் புறப்படலாயினர்.

> **இதுவரைகாலமும் கருணாம்மான் என்னும் இராணுவ வித்தகனை வழிநடத்திய வேகம், வீரம், விவேகம், அதிகாரம், ஆணவம், அனைத்தையும் இழந்திருந்த அவரது குரல் வரலாற்றில் முதன் முறையாக ஈனஸ்தாயியில் ஒலித்தது.**
>
> **'சந்திரிகா விடயம் சரிவராது' அம்மானின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை வாய் மட்டுமே முணுமுணுத்தது.**

அதன்பின்னர் மற்றைய குழுவினர் வேப்ப வெட்டுவானிலிருந்து சித்தாண்டி சென்று திருமலை வீதி எனப்படும் A15 பிரதான பாதையில் இணைந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் வகையில் புறப்பட்டனர். ஆனாலும் அப்பாதை நுழைவாயிலில் பாதுகாப்பு நிலைமைகள் உத்தரவாதப் படுத்தமுடியாத சிக்கல்கள் தோன்றியதால் இடைநடுவில் பயணம் நிறுத்தப்பட்டு மீண்டும் மேற்கு நோக்கி புலிப்பாய்ந்த கல் சந்திவரை திசை திருப்பப்பட்டது.

இறுதியாக அவர்களும் புலிப்பாய்ந்தகல் சந்தியிலிருந்து மியாங்கல் சந்தியூடாக சென்று கொழும்பு றோட் எனப்படும் A-11 வீதியில் இணைந்து முதலாவது குழுவைப் பின்தொடர்வது என்று முடிவாயிற்று. அதன்படியே அந்த மூன்று வாகனங்களும் வேக வேகமாகப் பறந்தன.

முன்னும் பின்னுமாக இரண்டு வாகனங்களுக்கும் நடுவிலே பயணிக்கும் அந்த வாகனத்தினுள்தான் கருணாம்மான் அமர்ந்திருக்கின்றார். அதுவரை காலமும் கிழக்குக்கும் வடக்குக்குமாக மட்டுமே பயணித்துக்கொண்டிருந்த அவர் தற்போது மேற்கு நோக்கி பயணிக்கின்றார். அவரோடு மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் நிலாவினி, மதனா படைப்பிரிவின் தளபதி சாவித்திரி, மற்றும் தளபதிகளான தீந்தமிழ், பிறேமினி, லாவண்யா போன்றோரும் இருந்தனர்.

'எங்கும் செல்வோம் எதிலும் வெல்வோம்' என்று களமாடிய தளபதிகளில் எவருக்கேனும் அந்த இறுதிப்பயணத்தில் எங்கு செல்கிறோம் என்றோ? எப்படி வெல்வோம் என்றோ தெரிந்திருக்கவில்லை. அவ்வேளை யில் பதட்டமும் பயவுணர்ச்சியும் பாதுகாப்புப் பற்றிய அச்ச உணர்வும் உருண்டு திரண்டு எல்லோரது

முகங்களும் வெறித்தபடி காணப்பட்டன என விபரிப்பார் அந்த வாகனத்தை ஓட்டிச்சென்ற 'பிள்ளையான்' எனப்படும் சந்திரகாந்தன்.

ஏனைய வாகனங்களில் கருணாம்மானுக்கு நெருங்கிய பொறுப்பாளர்களான பிள்ளையான், றொபேர்ட், குகனேசன்,வரதன், ஜெயந்தன்,காஸ்ட்ரோ, இன்பன், ஜீவேந்திரன், சின்னத்தம்பி, கமலக்கண்ணன், போன்றோர் பயணஞ் செய்தனர்.

கருணாம்மான் குழுவினர் A11 வீதியை அடைகின்றபோது அதாவது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச எல்லையைத் தாண்டி அரச கட்டுப்பட்டுப்பகுதிக்குள் நுழைய வேண்டும். இப்போது யாரும் ஆயுதங்களை தங்களுடன் வைத்திருக்க முடியாது. ஒவ்வொருவராக தத்தமது கையிலிருந்த ஆயுதங்களையும் கோல்சல்களையும் (இடுப்புப் பட்டிகள்) வயலோரங்களிலும் வாய்க்கால், வரப்புகளிலுமாக வீசியெறியத் தொடங்குகின்றனர். கொழும்பு வீதியை அண்மித்தாயிற்று.

அம்மானையும் அவரது தளபதிகளையும் கொழும்புவரை பாதுகாப்புடன் அழைத்துச்செல்ல அங்கே மற்றுமொரு வாகனம் தயாராகி நிற்கின்றது. அதிலிருந்து இறங்கிய வெள்ளையுடுத்த, பொன்னிற மேனியும் நல்ல உயரமும் கொண்ட அந்த மனிதர் கருணாம்மானை நெருங்கி வந்து கைலாகு கொடுத்து ஆரத்தழுவுகின்றார். அவர் வேறு யாருமல்ல பாராளுமன்ற உறுப்பினரான இருந்த அலி சாகிர் மௌலானா அவர்கள்தான். அவரது மெய்க்காவலர் ஓடிவந்து மௌலானாவிடம் ஏதோ காதோரமாக கிசுகிசுத்துச் செல்கின்றார்.

'ஓமோம் யாரும் எவ்விதமான ஆயுதங்களையும் வைத்திருக்க வேண்டாம்.' தன் வாழ்நாளில் துப்பாக்கியை தொட்டுக்கூட பார்த்திராத மௌலானா அந்தப் பெருந் தளபதிகளைப் பார்த்துக் கட்டளையிடும் காலம்.

இப்போது பிள்ளையானின் முறை அவர் இதுவரை வாகனம் ஓட்டிக்கொண்டிருந்ததால் அவரது ஆயுதம் தூக்கி வீசப்படவில்லை. உடனடியாகவே தனது இடுப்பிலிருந்த அந்தப் பிஸ்ரலை எடுத்து வீதியில் கிடந்த பொலித்தீன் பை ஒன்றை பொறுக்கியெடுத்து

**'எங்கும் செல்வோம் எதிலும் வெல்வோம்' என்று களமாடிய தளபதிகளில் எவருக்கேனும் அந்த இறுதிப்பயணத்தில் எங்கு செல்கிறோம் என்றோ? எப்படி வெல்வோம் என்றோ தெரிந்திருக்கவில்லை. அவ்வேளை யில் பதட்டமும் பயவுணர்ச்சியும் பாதுகாப்புப் பற்றிய அச்ச உணர்வும் உருண்டு திரண்டு எல்லோரது முகங்களும் வெறித்தபடி காணப்பட்டன என விபரிப்பார் அந்த வாகனத்தை ஓட்டிச்சென்ற 'பிள்ளையான்' எனப்படும் சந்திரகாந்தன்.**

அதனுள் அந்த பிஸ்ரலை பத்திரமாக சுற்றி கொண்டு வாய்க்காலொன்றை நோக்கி ஓடுகின்றார். அங்கேயொரு இடத்தில் அதனை பத்திரமாக புதைத்துவிட்டு மீண்டும் ஓடிவருகின்றார். அத்தனை பதட்டமான சூழ்நிலையிலும் நின்று நிதானித்து எடுத்த முடிவு அது. இப்போது கருணாம்மான் மௌலானாவின் பாராளுமன்ற உறுப்பினருக்குரிய அரச வாகனத்தில் ஏறிக்கொள்கின்றார். மௌலானாவின் அரச மெய்க் காவலர்கள் கருணாம்மானுக்கு இருபுறமும் அமர்ந்து கொள்கின்றனர். நான்கு வாகனங்களும் கொழும்பு நோக்கி பயணிக்கின்றன.

ஏப்ரல் 14ஆம் திகதி அதிகாலையில் கொழும்பை வந்தடைந்த கருணாம்மான் குழுவினர் ஹில்டன் ஹோட்டலில் தங்கிக்கொள்ள முடிவாகின்றது. அங்கேயே கருணாம்மானும் அவருடன் பயணித்த நான்கு பெண் தளபதிகளும் மற்றும் அவர்களுக்குதவியாக ஜெயந்தன், வரதன் போன்றோரும் இருந்து கொள்வதாக ஏற்பாடாகியது. பிள்ளையான், குகனேசன்.... போன்றவர்களுடன் முதலாவது குழுவில் பயணித்து வந்திருந்தவர்களும் இணைந்து சுமார் 20 பேர் வேறு ஒரு ஹோட்டலில் தங்கிக் கொண்டனர்.

**பாராளுமன்ற உறுப்பினரான இருந்த அலி சாகிர் மௌலானா**



## 13 வது பாராளுமன்றத் தேர்தல்

பதின்மூன்றாவது பாராளுமன்றத் தேர்தலானது 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் திகதி இடம்பெற்றது. வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் தமிழர்களின் ஏகபிரதிநிதியாக பிரபாகரனை அங்கீகரிக்கக் கோரும் ஆணையாகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் 2004 ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தை முன் வைத்திருந்தனர். அதனடிப்படையில் குறித்த தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைக் கூட தமிழீழ விடுதலைப்புலிகளே தீர்மானிக்கும் அளவுக்கு செல்வாக்குச் செலுத்தியிருந்தனர்.

இதன் காரணமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தவர்களில் பெரும்பாலானோர் தமிழீழ விடுதலைப் புலிகளின் போசகர்களாகவும் நெருங்கிய ஆதரவாளர்களாகவும் இருந்தனர்.

ஆனால் தேர்தல் நடைபெறவிருந்த தினத்துக்கு ஒரு மாதகாலத்துக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினுள் கிளம்பிய 'கிழக்குப்பிளவு' என்னும் பூகம்பம் அனைத்தையும் தலைகீழாகப் புரட்டிப்போட்டது. அதன் காரணமாக கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட வேட்பாளர்கள் பெரும் குழப்பத்துக்குள்ளாகினர். இதனால் மட்டக்களப்பு வேட்பாளர்கள் இரண்டு அணிகளாக பிளவு பட்டு நிற்கும் நிலைக்கு உள்ளானார்கள். கருணாம்மான் அணி, பிரபாகரன் அணி என்று இரு வேறு அணிகளாக தம்மை முன்னிறுத்தவேண்டிய அவசியம் அவர்களுக்கு எழுந்தது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரும் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான ஜோசேப் பரராசசிங்கம் வன்னித்தலைமைக்கு விசுவாசமாகவும் ஏனையவர்களில் ஏறக்குறைய அரியநேந்திரன் தவிர்ந்த ஏனையோர் அனைவரும் கிழக்குத்

**தேர்தல் நடைபெறவிருந்த தினத்துக்கு ஒரு மாதகாலத்துக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினுள் கிளம்பிய 'கிழக்குப்பிளவு' என்னும் பூகம்பம் அனைத்தையும் தலைகீழாகப் புரட்டிப்போட்டது. அதன் காரணமாக கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட வேட்பாளர்கள் பெரும் குழப்பத்துக்குள்ளாகினர். இதனால் மட்டக்களப்பு வேட்பாளர்கள் இரண்டு அணிகளாக பிளவு பட்டு நிற்கும் நிலைக்கு உள்ளானார்கள். கருணாம்மான் அணி, பிரபாகரன் அணி என்று இரு வேறு அணிகளாக தம்மை முன்னிறுத்தவேண்டிய அவசியம் அவர்களுக்கு எழுந்தது.**

தலைமைக்கு விசுவாசமானவர்களாகவும் தம்மை பிரகடனப்படுத்திக் கொண்டனர். இத்தகவல்களை உறுதி செய்துகொள்ள அரியநேந்திரன் அவர்களை தொடர்பு கொண்டபோது 'நான் என்றுமே வன்னித்தலைமைக்கு விசுவாசமாகவே இருந்தேன். கிழக்கிலிருந்து கருணாம்மானை மறுதலித்து வன்னிக்கு ஓடிச்சென்ற கரிகாலன் போன்றவர்களுடன் இரகசியத்தொடர்பில் இருந்தேன். ஆனால் அவற்றை அப்போது பகிரங்கமாக வெளிப்படுத்த முடியவில்லை.' என ஒப்புக்கொண்டார்.

இதன் காரணமாக கிழக்குப்பிளவை ஆதரித்து நின்ற வேட்பாளர்களை தேர்தலுக்கு முன்பாக கொலை செய்யும் படலத்தை வன்னிப்புலிகள் ஆரம்பித்தனர். அதன் தொடக்கமாக கிழக்குப் பிளவை ஆதரித்து பிரச்சாரம் செய்த இராஜன் சத்தியமூர்த்தியை தேர்தலுக்கு மூன்று நாட்களுக்கு முன்பாகவே வன்னிப்புலிகள் படுகொலை செய்திருந்தனர். எனினும் ஏனையவர்களையும் கொலைசெய்து அழித்துவிடுமளவுக்கு அவர்களால் மட்டக்களப்புக்குள் ஊடுருவ முடியவில்லை. இராஜன் சத்தியமூர்த்தி கொல்லப்பட்ட பின்னர் ஒரு காகம், குருவி கூட மட்டக்களப்புக்குள் காலடி வைக்க முடியாத அளவுக்கு கருணாம்மானின் பாதுகாப்புக்கு கட்டமைப்புக்கள் பலப்படுத்தப் பட்டிருந்தன.

இராஜன் சத்தியமூர்த்தியை வன்னிப்புலிகள் படுகொலை செய்தமையானது மட்டக்களப்பு மக்களை பெரும் அதிர்ச்சிக் குள்ளாக்கியது. இதன்காரணமாக


ஜோசேப் பரராசசிங்கம்

வன்னிப்புலிகள் மீதும் அவர்களுக்கு ஆதரவாக தமிழ் தேசியம், தேசியத் தலைவர் என்று பேசித்திரிந்த ஜோசேப் பரராசசிங்கம் போன்றோர் மீது பெரும் எதிர்ப்பலைகள் உருவாகியிருந்தன.

ஜோசேப் பரராசசிங்கம் 1989ஆம் ஆண்டு தேர்தலில் முதன் முதலாக மட்டக்களப்பில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு படுதோல்வியடைந்தவர். எனினும் அதே பட்டியலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சாம் தம்பிமுத்து அவர்களை கொழும்பில் வைத்து தமிழீழ விடுதலைப்புலிகள் படுகொலை (1990 ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் திகதி) செய்த பின்னர் அவரது இடத்துக்கு ஜோசேப் பரராசசிங்கம் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் தொடர்ந்து வந்த இரு தேர்தல்களில் அவரை மட்டக்களப்பு மக்கள் தமது பிரதிநிதியாக தெரிவு செய்திருந்தனர். அதன்படி அவர் சுமார் 14 வருடகாலமாக மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவராகும். அவர் மீதான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் ஒரு புறமிருந்தாலும் கணிசமான மட்டக்களப்பு மக்கள் அவரை ஆதரித்து வந்தனர். ஜோசேப் பரராசசிங்கம் உண்மையிலேயே யாழ்ப்பாண வம்சாவளியைச் சேர்ந்தவரெனினும் வந்தாரை வாழவைக்கும் மட்டக்களப்பு மக்கள் அவரை ஒருபோதும் அந்நியராக கணித்திருந்தார்களில்லை.

ஆனால் வேட்பாளர்களில் ஏறக்குறைய அனைவரும் கருணா சார்பு நிலையெடுத்து கிழக்கு பிளவை ஆதரித்து நின்ற வேளையிலே ஜோசேப் பரராசசிங்கம் மட்டுமே கிழக்கு மக்களின் உணர்வுகளை மதியாது பகிரங்கமாகவே ‘தமிழ் தேசியத்தை ஆதரிப்பவர்கள் எனக்கு வாக்களியுங்கள்‘ என்கின்ற பிரச்சாரத்தை செய்தார். வடக்கா? கிழக்கா? என்னும் கேள்வி எழுந்தபோது அவர் வடக்குப் பக்கமே சரிந்தார். அதன் ஊடாக இந்தத் தேர்தலானது வடக்கும் கிழக்கும் இணைந்த நிர்வாகத்தின் கீழ் இருப்பதா? அன்றி கிழக்கு மாகாணத்துக்கு தனியான நிர்வாக கட்டமைப்புத் தேவையா? என்கின்ற மறைமுக ஆணையொன்றுக்கான தேர்தலாகவே இடம்பெற்றது.

**தமிழ் ‘தேசியத்துக்கு துரோகம் செய்ய மாட்டேன்‘ என்று கிழக்கு பிளவை எதிர்த்து பிரபாகனுக்கு விசுவாசம் தெரிவித்து தேர்தல் பிரசாரம் செய்த ஜோசேப் பரராசசிங்கம் மற்றும் பாக்கியசெல்வம் அரியநேந்திரன் போன்றோர் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் படுதோல்வி அடைந்தனர். அதேவேளை குறித்த 2004 ஆம் ஆண்டு தேர்தலின் போதுதான் முதன் முதலாக அரசியலில் காலடி பதித்த தன்மன்பிள்ளை கனகசபை, செல்வி. கதிர்காமர் தங்கேஸ்வரி, எஸ். ஜெயானந்த மூர்த்தி, கிங்ஸ்லி இராசநாயகம் ஆகிய நால்வரும் பெரு வெற்றியீட்டினர். மரணமடைந்த போதிலும் இராஜன் சத்தியமூர்த்திக்கு 24727 மக்கள் தமது விருப்பு வாக்குகளை வழங்கி அவரை மாண்புறச்செய்து வரலாறு படைத்தனர்.**

இவ்வாறான நிலையில்தான் பல்வேறுபட்ட பதட்டங்களுக்கும் மத்தியில் திட்டமிடப்பட்டது போன்று ஏப்ரல் 02ஆம் திகதி அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் பாராளுமன்றத் தேர்தல் இடம்பெற்றன. இத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பெற்றுக்கொண்ட வாக்குகள் 161,011 ஆகும். அதனடிப்படையில் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு நான்கு ஆசனங்கள் கிடைத்தன.



பாக்கியசெல்வம் அரியநேந்திரன்:

ஆனால் தமிழ் ‘தேசியத்துக்கு துரோகம் செய்ய மாட்டேன்‘ என்று கிழக்கு பிளவை எதிர்த்து பிரபாகனுக்கு விசுவாசம் தெரிவித்து தேர்தல் பிரசாரம் செய்த ஜோசேப் பரராசசிங்கம் மற்றும் பாக்கியசெல்வம் அரியநேந்திரன் போன்றோர் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் படுதோல்வி அடைந்தனர். அதேவேளை குறித்த 2004 ஆம் ஆண்டு தேர்தலின் போதுதான் முதன் முதலாக அரசியலில் காலடி பதித்த தன்மன்பிள்ளை கனகசபை, செல்வி.கதிர்காமர் தங்கேஸ்வரி, எஸ்.ஜெயானந்த மூர்த்தி, கிங்ஸ்லி இராசநாயகம் ஆகிய நால்வரும் பெரு வெற்றியீட்டினர். மரணமடைந்த போதிலும் இராஜன் சத்தியமூர்த்திக்கு 24727 மக்கள் தமது விருப்பு வாக்குகளை வழங்கி அவரை மாண்புறச்செய்து வரலாறு படைத்தனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவானோரும் விருப்பு வாக்குகளும்

தன்மன்பிள்ளை கனகசபை - 57843

செல்வி.கதிர்காமர் தங்கேஸ்வரி - 50545

சேனாதிராஜா ஜெயானந்தமூர்த்தி - 44457

கிங்ஸ்லி இராசநாயகம் - 38633

தோல்வி கண்டோர்

பாக்கியசெல்வம் அரியநேந்திரன்- 35377

ஜோசேப் பரராசசிங்கம் - 24940

**அம்பாறை**

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டவர்களில் 2001ஆம் ஆண்டிலிருந்து பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அரியநாயகம் சந்திரநேரு முக்கியமானவராகும். இவரும் புலிகளின் சிபார்சின் பெயரில் குறித்த 2004ஆம் ஆண்டு தேர்தலில்

போட்டியிட்டார். அநேகமாக அம்பாறையில் தமிழர் ஒருவர் மட்டுமே வெல்வதற்கான வாய்ப்பு இருந்தது. இந்த அம்பாறை மாவட்ட தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு 55,533 வாக்குகளைப்பெற்று அவ்வாசனத்தை வென்றது.

ஆனால் கிழக்குப் பிளவின் பின்னர் தமிழ் தேசிய ஆதரவு என்னும் பெயரில் வன்னிப்புலிகள் சார்பு நிலையெடுத்திருந்த அரியநாயகம் சந்திரநேருவுக்கு குறைந்த அளவு (25572) விருப்பு வாக்குகளே அளிக்கப் பட்டிருந்தன. இதன்காரணமாக வன்னித் தலைமை சார்பு நிலையெடுத்திருந்த அரியநாயகம் சந்திரநேரு தோல்வியடைய அறிமுக வேட்பாளராக களமிறங்கிய கனகசபை பத்மநாதன் அதி கூடிய விருப்பு வாக்குகளுடன் வெற்றியடைந்து பாராளுமன்றத்துக்கு தெரிவானார். எனினும் தேர்தலின் பின்னரும் அரியநாயகம் சந்திரநேரு வன்னிப்புலிகளுடன் நெருங்கிய நட்புறவைப் பேணி வந்தார்.

பொதுவாகப் பார்க்கின்ற வேளையில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட மக்கள் இத்தேர்தல் ஊடாக 'வன்னித்தலைமை', 'தமிழ்த்தேசியம்' என்கின்ற கோஷங்களை நிராகரித்தனர். அதேபோல கிழக்கின் தனித்துவக் குரலை ஆதரித்தவர்களுக்கு அமோக ஆதரவு வழங்கியதன் ஊடாக கிழக்குமக்களுக்கான தனியான அரசியல் பாதை ஒன்றின் அவசியத்தையும் அவர்கள் பிரகடனம் செய்தனர்.

அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளுக்குள் இருந்து 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் கருணாம்மானால் முன்வைக்கப்பட்ட கிழக்குப்பிளவினை அங்கீகரிக்கும் ஒரு மக்கள்ஆணை 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற தேர்தல் ஊடாக வழங்கப்பட்டது. இந்த முடிவுகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்தன. அதன்காரணமாக தமது அரசியல் விருப்புகளை கிழக்கிலிருந்து ஒலிப்பதற்காக எவரும் இல்லாத நிலையை வன்னித்தலைமை உணர்ந்தது.

அத்தகைய தங்களது பிரதிநிதியாக மட்டக்களப்பில் ஒருவர் தேவை என்பதன் அடிப்படையில் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஜோசேப் பரராசசிங்கத்துக்கு தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவி ஒன்றை வழங்குமாறு வன்னிப் புலிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை அறிவுறுத்தினர். அதன்டிப்படையில் அவர் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

அதேவேளையில் கிழக்கு மக்களின் குரலாக அல்லது கருணா அணியினரின் குரலாக ஏனைய நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் செயற்படுவதை எப்படியாவது தடுத்து நிறுத்தும் திட்டமும் வன்னிப்புலிகளால் தீட்டப்பட்டது. அவர்களை நெருக்கடி கொடுத்து இராஜினாமா செய்யுமாறு வற்புறுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கருணாம்மானின் பின்வாங்கலைத் தொடர்ந்து கிழக்கினை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்திருந்த வன்னிப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவதற்கு அவர்களில் கிங்ஸ்லி இராசநாயகம் தவிர்ந்த ஏனைய மூவரும் சம்மதம் தெரிவித்தனர்.

## கிங்ஸ்லி இராஜநாயகம் படுகொலை



கிங்ஸ்லி இராஜநாயகம் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சியின் நீண்டகால செயற்பாட்டாளராவார். அதேபோன்று மட்டக்களப்பில் விடுதலை இயக்கங்களின் முன்னோடிகளுக்கு நெருக்க மானவராக இருந்து வந்தவர். இந்திய அமைதிப்படையினர் இலங்கையில் இருந்த காலங்களிலேயே இவரது நேரடி அரசியல் களச் செயற்பாடுகள் ஆரம்பிக்கின்றன. அவ்வேளைகளில் மட்டக்களப்பில் பிரபல்யமாக இயங்கிய பிரசைகள் குழு உறுப்பினர், அன்னையர் முன்னணியின் ஆலோசகர் என்று பல்வேறு வகைகளிலும் ஒரு முக்கிய சிவில் சமூக பிரதிநிதியாக இருந்தார்.

இந்திய இராணுவத்தின் காலத்தில் குறிப்பாக 'அன்னையர் முன்னணி'யின் உண்ணாவிரத நடவடிக்கைகளின் போது அதற்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டின் பெயரில் இந்திய

**அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட மக்கள் இத்தேர்தல் ஊடாக 'வன்னித்தலைமை', 'தமிழ்த்தேசியம்' என்கின்ற கோஷங்களை நிராகரித்தனர். அதேபோல கிழக்கின் தனித்துவக் குரலை ஆதரித்தவர்களுக்கு அமோக ஆதரவு வழங்கியதன் ஊடாக கிழக்குமக்களுக்கான தனியான அரசியல் பாதை ஒன்றின் அவசியத்தையும் அவர்கள் பிரகடனம் செய்தனர். அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளுக்குள் இருந்து 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் கருணாம்மானால் முன்வைக்கப்பட்ட கிழக்குப்பிளவினை அங்கீகரிக்கும் ஒரு மக்கள்ஆணை 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற தேர்தல் ஊடாக வழங்கப்பட்டது. இந்த முடிவுகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்தன.**

இராணுவத்தின் நெருக்கடிகளுக்கு உள்ளாகினார். அதேபோன்று இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்னரும் புலிகளின் ஆதரவாளர் என்னும் குற்றச்சாட்டில் இலங்கை இராணுவத்தாலும் பலமாகச் சந்தேகிக்கப்பட்டார். இதன் காரணமாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்த கொக்கட்டிச்சோலை பகுதிக்குச் சென்று சிறிதுகாலம் இடம்பெயர்ந்து வாழ்ந்தார். இதன்காரணமாக அவரது மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் பதவியானது பறியாகும் நிலைக்கு வந்தது. அதன் காரணமாக அவர் தனது வேலையை இடம் மாற்றம் பெற்றுக் கொண்டு யாழ்ப்பாண மாவட்டத்துக்கு சென்றார். அவ்வேளையில் ஏற்பட்ட யாழ்ப்பாண இடப்பெயர்வு காரணமாக அவர் சாவகச்சேரிப் பகுதிக்கு மாற்றலாகிச் செல்ல நேர்ந்தது. அவ்வேளைகளில் புலிகளுடன் ஏற்பட்ட நெருக்கம் காரணமாக தமிழீழ வைப்பகம் சார்ந்த ஊழியர்களுக்கு வழிகாட்டியாக செயற்பட்டார். அங்கு தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றதன் காரணமாக 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்புக்கு மீண்டும் திரும்பி வந்தார்.

மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான துரை போன்றவர்களின் வேண்டுகோளின் பெயரில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் யுத்தத்தில் அவயமிழந்தோர் மற்றும் குழந்தைப் போராளிகள் போன்றோரின் மறுவாழ்வுக்கான திட்டங்களில் யுனிசெப் உடன் இணைந்த வேலைத் திட்டங்களுக்கு பொறுப்பாக இருந்தார். இவ்வாறாக தான் சார்ந்த மக்களின் விடுதலைக்காக அதுவரைகாலமும் அயராது பாடுபட்ட அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குள் கிழக்குப் பிளவு ஏற்பட்ட போது அதற்கான நியாயங்களை துணிவுடன் அங்கீகரித்தார்.

ஆனால் வன்னிப்புலிகளோ அவரது கருத்துச் சுதந்திரத்தையும் கிழக்கு மக்களின் உணர்வுகளையும் மதிக்கத் தயாராக இருக்கவில்லை. அவர் தேர்தலில் வென்றபோது மட்டக்களப்புத் தளபதிகள் ஊடாக அவரை இராஜினாமா செய்யுமாறு வற்புறுத்தினர்.

அந்த வற்புறுத்தலை அவர் பொருட்படுத்தவில்லை. கொழும்பு சென்று பதவியேற்பதற்கான ஆயத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டார். நிச்சயமாக அவர் பதவியேற்கின்ற பட்ஷத்தில் அவர் கிழக்கின் தனித்துவக்குரலாக ஒலிப்பார் என்பதனால் அவரை உடனடியாகவே வன்னிக்கு வந்து தமிழ்ச்செல்வனை சந்திக்குமாறு அழைப்பு வந்தது.

அவருடன் கூடவே தனது இளைய மகளையும் (இன்றுவரை அச்சம் தாளாது வாழும் அவரது குடும்பத்தினர் மகளின் பெயரை பதிவிடவேண்டாம் என்று கேட்டுக் கொண்டுள்ளனர்.) தனது உதவியாளரான கண்ணா என்றழைக்கப்படும் உருத்திரமூர்த்தி யுவநாதன் என்பவரையும் அழைத்துக்கொண்டு வன்னி செல்கின்றார். அது ஒரு மரண பயமிக்க பயணம் எனக் குறிப்பிடும் கண்ணா அதுபற்றி இவ்வாறு விபரித்தார். ‘புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்துவிட்டால் எங்களுக்கு என்ன நடக்கும்? எது நடக்கும்? என்று தெரியாத நிலையில் அவர் என்னை ஓமந்தை சாவடிக்கு முன்பதாகவே இறக்கிவிட்டு மட்டக்களப்புக்கு திரும்பிச்சென்று விடுமாறு கேட்டுக்கொண்டார். எனக்கோ அவர்களை தனியாக ஓமந்தையைத் தாண்டி அனுப்புவதற்கு மனம் ஒப்பவில்லை. ஆனாலும் அவரின் பேச்சைத் தட்டமுடியாமல் வாகனத்தை விட்டிறங்கிய நான் வவுனியா நகருக்குள்ளேயே சுற்றிக்கொண்டிருந்தேன்’.

‘கிங்ஸ்லி ஐயா ஓமந்தை சாவடி தாண்டி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைகின்றார். முன்னரங்கப் பகுதியிலேயே இருக்கின்ற புலிகளின் அரசியற் துறை பணிமனைக்குள் அழைத்துச்செல்லப்படுகின்றார்.‘

‘அங்கே தமிழ் செல்வன் அவருக்காக காத்திருக்கவில்லை.‘

‘நீங்கள் தான் கிங்ஸ்லி இராஜநாயகமா? இதோ இந்த வெள்ளைக் காகிதங்கள் இவற்றில் உங்கள் ராஜினாமா கடிதத்தை எழுதி கையெழுத்திட்டு ஒன்றை எங்களுக்குத் தாருங்கள் மற்றயதை கொழும்பில் ஒப்படையுங்கள்.‘

ஒரு சாதாரண போராளி போன்று தோற்றமளித்த அந்த பொறுப்பாளரின் ஆணையது.

‘தம்பி தமிழ்ச்செல்வனை சந்திக்க வேண்டும்‘.

‘அவரை சந்திக்க முடியாது. காருக்குள் இருக்கும் உமது மகள் உம்மோடு மட்டக்களப்புக்கு திரும்ப வேண்டுமானால் வேகமாக சொன்ன காரியத்தை செய்யும்.‘ இடுப்பிலிருந்த கைத்துப்பாக்கியை உருவி அந்த வெள்ளைக்காகிதங்கள் மீது வைக்கின்றார் அந்த பொறுப்பாளர். இதற்கு மேல் பேசமுடியாது என்பதை புரிந்து கொண்டவராக கையெழுத்திட்டுக் கொடுத்துவிட்டு தன் மகளையாவது காப்பாற்றிக்கொண்ட திருப்தியில் மட்டக்களப்புக்கு திரும்புகின்றார் கிங்ஸ்லி இராஜநாயகம்‘ என்று அப்பயணம் பற்றிய தகவல்களுக்காக அணுகியபோது தெரிவித்தார் கிங்ஸ்லி இராஜநாயகம் அவர்களின் உதவியாளர் (பிரத்தியேக செயலாளர்களில் ஒருவராக நியமிக்கப்படவிருந்த) உருத்திரமூர்த்தி யுவநாதன் அவர்கள்.

ஆனால் மட்டக்களப்பு திரும்பிய கிங்ஸ்லி இராஜநாயகம் தனது இராஜினாமாக் கடிதத்தை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கவில்லை. அதேவேளை 13 ஆவது பாராளுமன்றம் கூடியபோது சென்று சத்தியப்பிராமணம் செய்து பதவியேற்கவுமில்லை. இதனால் ‘கௌசல்யன்‘ கொக்கட்டிச் சோலைக்கு அவரை அழைத்து இராஜிநாமா கடித்ததை விரைவில் சபாநாயகருக்கு ஒப்படைக்குமாறு கூறி இறுதி எச்சரிக்கை விடுகின்றார்.

அதையும் அவர் செவிமடுத்தாரில்லை.

இறுதியாக பாராளுமன்ற சபாநாயகரிடம் அவரை கையோடு அழைத்துச் சென்று அவரது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பிக்கச் செய்யும் பொறுப்பு வன்னித் தலைமையால் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு வழங்கப்பட்டது. அதன்படி அடைக்கலநாதன் அக்காரியத்தை வன்னிப் புலிகளுக்காக கச்சிதமாக செய்து முடித்தார் என்பது எனக்குத் தெரியும் என்று இந்த அபத்தம் கட்டுரைக்காக விபரம் கோரியபோது சந்திரகாந்தன் (பிள்ளையான்) அவர்கள் அழுத்தமாகச் சொன்னார்.

மட்டக்களப்பு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதிநிதியை பிரபாகரனுக்கு தன் விசுவாசத்தை காட்ட மறுத்த காரணத்துக்காக சத்தியப்பிரமாணம் செய்து பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்பதற்கு முன்னரே ராஜினாமாச் செய்ய வைத்தனர் வன்னிப்புலிகள்.

அதன்பின்னர் அவர் தன் சொந்த வாழ்வில் ஈடுபடலானார். மூன்று குழந்தைகளுக்கு தந்தையான அவர் தனது 63ஆவது வயதிலும் மட்டக்களப்பில் தொழிற்துறை சார்ந்து முயற்சிகளை மீளத் தொடங்கினார்.

ஆனாலும் எதிர்காலத்தில் இந்த கிழக்குப்பிளவை அடிப்படையாகக் கொண்டு புதிய கட்சி ஏதாவது தொடங்கப் படுவதானால் அதற்கு தலைமையேற்பதற்கும் வழிநடத்துவதற்கும் உரிய அனுபவம் வாய்ந்தவர் என்னும் வகையில் கிங்ஸ்லி இராஜநாயகமே மிகப்பொருத்தமானவர் என வன்னிப் புலிகள் கணிப்பிட்டனர். பிரபாகரனைப் பொறுத்தவரையில் 'எத்தனை பெரிய தியாக சீலரேயாகினும்' அவர் பிரபாகரனுக்கு மாறாக பயணிக்க நினைத்தால் அன்றே அவரது உயிர்வாழும் உரிமை பறிக்கப்படுவதுதான் நீதியாகும். இந்த நீதியின் தொடர்ச்சியில் கிங்ஸ்லி இராஜநாயகம் அவர்களுக்கும் அந்த தீர்ப்பு வழங்கப்பட்டது. 2004 ஆண்டு ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதியன்று மட்.கள்ளியங்காடு பிரதேசத்தில் வைத்து இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த மூன்று வன்னிப்புலிகள் அவர் மீது சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துச் சென்றனர்.

அவரது கொலைச்சம்பவம் பற்றிய மேற்படி தகவல்களை உறுதி செய்ய அவரது குடும்பத்தினரை தொடர்புகொண்டபோது மேற்படி விடயங்களை சொல்லிவிட்டு இறுதியாக 'அப்பாவை இராஜினாமா செய்ய வைத்த பின்னர் அவரை எதற்காக சுட்டுக் கொன்றனர்? எங்கள் அப்பா செய்த குற்றமென்ன?' என்று தழுதழுத்த குரலுடன் பேச்சை நிறுத்திக்கொண்டார் இருபது வருடங்களுக்குப் பின்னரும் அவர் வாழ்ந்த அதே வீட்டில் இன்றும் அவரது நினைவுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் கிங்ஸ்லி இராஜநாயகம் அவர்களுடைய மூத்தமகள்.

கிங்ஸ்லி இராஜநாயகம் அவர்களது இராஜினாமாவைத் தொடர்ந்து 2004ஆம் ஆண்டு மே மதம் 18 ஆம் திகதி அவரது இடத்துக்கு பாக்கியசெல்வம் அரியநேந்திரன் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

அரியநேந்திரன் கிழக்குப் பிளவுக்கு முன்னரான காலங்களில் கொக்கட்டிச் சோலையிலிருந்து வெளியான புலிகளின் தமிழ் அலை பத்திரிகை உதவி செய்தியாசிரியராகப் பணியாற்றியவர். புலிகளின் முக்கியஸ்தர் கௌசல்யனின் மைத்துனரும் வன்னிப்புலிகளின் விசுவாசியும் இவர் தனது சொந்தவாழ்வில் மிருக வைத்திய துறை உத்தியோகஸ்தராக இருந்தவர்.

மேற்படி கிங்ஸ்லி இராசநாயகம் அவர்களின் கொலையானது புலிகளால் நிகழ்த்தப்பட்டிருந்த போதிலும் அதன் பின்னணியில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் போன்றோரும் இருந்தார்கள் என்கின்ற சந்தேகமும் உண்டு என்னும் வகையில் மூத்த தமிழ் தலைவரும் சமாதானத்துக்கான யுனஸ்கோ 'மதன்ஜீத்' விருது பெற்றவருமான தமிழர் விடுதலை கூட்டணி தலைவர் ஆனந்தசங்கரி அவர்கள் படுகொலைநடந்து பத்து வருடங்களுக்கு பின்னர் 12.08.2014 அன்று இலங்கை ஜனாதிபதிக்கு கிங்ஸ்லி இராசநாயகம் அவர்களின் கொலைப்பற்றி விசாரணைகோரி ஒரு பகிரங்கக் கடிதமெழுதினார்.

அக்கடிதத்தில் அவர் கீழ்வருமாறு எழுதியிருந்தார். '2004ம் ஆண்டு தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினராக கிங்ஸ்லி இராஜநாயகம் வெற்றி பெற்றிருந்தார். அவரின் சகபாடியாகிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் திரு.கிங்ஸ்லி இராஜநாயகத்தை பாராளுமன்ற செயலாளரிடம் கூட்டிச்சென்று அவரின் இராஜினாமா கடிதத்தினை கையளிக்க வைத்தார். இதனை தொடர்ந்து திரு.இராஜநாயகம் அவர்கள் படுகொலை செய்யப்பட்டார். தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழரசு கட்சி ஆகிய இரு கட்சிகளின் நிர்வாக சபை உறுப்பினர்கள், சம்மந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்தை நிரப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோர் இக்குற்றவியல் செயல்பாடுகளிற்கு பொறுப்புகூற வேண்டியவர்களாவர். ஆகவே என்னால் கீழே கொடுக்கப்பட்டுள்ள சில தரவுகளை வைத்து சம்மந்தப்பட்ட அதிகாரிகள் பொருத்தமான நடவடிக்கை எடுத்து இலங்கையின் நீதி நிர்வாகத்தில் மக்களிற்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.' எனத் தெளிவாக குறிப்பிட்டிருந்தார்.



# பெண்டாட்டி ஊரில் இருந்து வந்திட்டா..!

# பெண்டாட்டி ஊரில் இருந்து வந்திட்டா..!




தாயகம் இணையத்தளத்தில் ஏற்கனவே வெளியானது.

பேராறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜீ

பெண்டாட்டி ஊருக்குப் போவது பற்றி துள்ளிக் குதித்து மகிழ்ச்சி கொள்ளக் கூடிய 'ஜனங்க'ராசுகள் எவ்வாறான துன்பங்களுக்கு எல்லாம் ஆளாகியிருப்பார்கள் என்பது நமக்குத் தெரியாது.

பெண்டாட்டி வீட்டில் இருக்கும் போதே நண்பர்களுடன் போய் குடிப்பதையும், தாங்கள் இளமைக்காலத்தில் துரத்தித் திரிந்து, நிறைவேறாக் காதல் கனவு கண்டு, தற்போது பேத்திகளையும் கண்டு, காதல் நோயெல்லாம் போய், நாரி நோ, மூட்டு வலி, சலரோகம் போன்ற நோய்களால் வாடும் பெண்டிர் பற்றி ஜொள் ஒழுக கதைத்து பொழுது போக்குவதையும்...

கட்டாயமாகக் கொண்டிருப்போரை தர்மபத்தினிகள் நெளிவு எடுப்பது பற்றியும் கவலை இல்லை.

வீட்டில் துன்பம் தாங்காமலும், கவனிப்பு இல்லாததாலும் தான் நண்பர்களுடன் போய் கவலையை மறக்க குடிக்கிறேன் என்று அதே நபர்கள் சொன்னால் நான் என்ன சொல்ல முடியும்?

ஒவ்வொரு குடும்பத்திலும் ஆயிரம் பிரச்சனை ஆயிரம் விதத்தில் இருக்கும். இதையெல்லாம் பொதுமைப்படுத்தி, அது பற்றியெல்லாம் தீர்ப்பளிப்பதற்கு நம்மாலாகாது.

நமக்கு அதெல்லாம் பிரச்சனை இல்லை.

ஆத்தா நம்ம விசயங்களில் தலைப்போடாது.

நானும் ஆத்தா விசயங்களில் தலைப்போடுவதில்லை.

மிஞ்சிப் போனால்... என்னுடைய பொருட்களை எடுத்து 'பத்திரமாக' வைக்கும்...

என்னை ரென்ஷன் ஆக்க!

•••

மூணு மாசம் அபிதகுஜாம்பாள் ஊரில் இல்லை.

இப்படிக்கொத்த ஒருத்தனை வீட்டில் தனியே விட்டுப் போவது பற்றியும் ஆத்தாவுக்கு எந்தக் கவலையும் இல்லை.

நாய் எங்க போகப் போகுது? உங்கினேக்க தான் சுத்திக் கொண்டிருக்கும் என்ற நினைப்பு.

நானும் அந்தக் காலங்களில் பேஸ்புக்கிலிருந்து தலைமறைவாகி விட்டேன்.

அப்படி பயம் எதுவும் இல்லை!

நான் தனியே இருக்கிறேன் என்ற விசயம் வெளியே தெரிந்தால்...

பாதுகாப்பு அரண்கள் பலவீனமான நிலையில்...

இனமான உணர்வு மிகுந்த, கனடிய தமிழ்த் தேசிய உணர்வாள மகளிர் விடுதலை அணி ஏதாவது வந்து...

டேய், நிர்வாணமா வெளியில வாடா! என்று வீதியில் நின்று சத்தம் போட்டால்...

வேலிக்கு அப்பால் உள்ள சிங்கிள் மதர்களுக்கு பதில் சொல்ல வேண்டி வரும்.

சாணக்கியமாக இந்த சூ மந்திரன் காளியாத்தாக்களிடம் தப்பித்துக் கொள்வதற்கான மந்திர தந்திர முற்காப்பு நடவடிக்கை தான்.

வாயே திறக்கவில்லை.

•••

அங்கே ஊரில் என் பேஸ்புக் நண்பிகள் பலர் இருக்கிறார்கள். போதாதற்கு வெளிநாட்டிலிருந்து போயிருந்த நண்பி, கிழக்குப் பக்கம் வாழ் நண்பி என எல்லாரும் விளக்குமாறு, உலக்கை போன்ற கனரக ஆயுதங்களால் தாக்குதல் நடத்தக் கூடிய ஆட்டிலறி ரேஞ்சுக்குள் தான் நின்றார்கள்.

போதாக்குறைக்கு சகல மதங்களிலும் பேஸ்புக் சகோதரிகள் வேறு. சொன்னால் மச்சினர்மாரை தொந்தரவு பண்ணி வாகனம் பிடித்தே போய் இறங்கியிருப்பார்கள்... அண்ணியைப் பார்க்க.

•••

ஆத்தாவை யாருக்குத் தான் பிடிக்காது.

இங்கே என்னுடைய நண்பர்கள் எல்லாரும் ஆத்தாவுக்கு அண்ணன்மார்.

என்னோடு கதைக்காத கதைகள் எல்லாம் ஆத்தாவுடன் நடக்கும்.

யார் யாருடைய துணைவிமார் சமையல் காட்சி இல்லாமல் சதா பேஸ்புக்கில் இருக்கிறார்கள் என்பது முதல், யாருக்கு பேரப்பிள்ளைகள் பெற்றுக் கொள்ளும் வயதில் வெளியில் தெரியாத பிள்ளைகள் இருக்கும் விசயம் வரைக்கும் ஆத்தா சொல்லித் தான் எனக்குத் தெரியும்.

'நாங்கள் சொன்னா, அவர் எங்களைப் பற்றி என்ன நினைப்பார்?'

ஆத்தா இங்கே இருக்கும்போதே, என் நம்பருக்கு போன் அடித்து, ஆத்தாவோடு கதைத்து, 'உவன் பேஸ்புக்கில பிட்சா, பிரியாணி, பூ எண்டெல்லாம் படம் போட்டுக் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறான். அவனுக்கு கொஞ்ச பேர் இருக்கினம், அவனைப் பப்பா மரத்தில ஏத்தி விட! கொஞ்சம் கவனிச்சு வை!' என்று அள்ளியும் வைப்பார்கள்.

போதாக்குறைக்கு சந்தேக நபர்களையும் (நபருக்கு பெண்பால் என்ன?) அடையாளம் காட்டி வைப்பார்கள்.

ஆத்தாவுக்கு சிரிப்பாக இருக்கும்.

இந்த நாயையும் தேட ஆக்கள் இருக்கினமோ? என்பதாக இருக்கக் கூடும்.

ஆத்தா பேஸ்புக்கில் இல்லாததால், இப்படி யாராவது அள்ளி வைத்தால் தான் உண்டு.

இதனால் தானோ என்னவோ, இந்த நாய் எங்கேயாவது வேலி தாண்டி வெள்ளாடுகளைத் தேடப் போய் விடுமோ என்ற நினைப்பில், என் நண்பர்களும் அடிக்கடி போன் பண்ணி பின்னணியில் பெண்கள் சிரிப்புச் சத்தம் கேட்கிறதா என்று செக் பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

•••

ஆத்தா இங்கே இருக்கும்போதே, என் நம்பருக்கு போன் அடித்து, ஆத்தாவோடு கதைத்து, 'உவன் பேஸ்புக்கில பிட்சா, பிரியாணி, பூ எண்டெல்லாம் படம் போட்டுக் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறான். அவனுக்கு கொஞ்ச பேர் இருக்கினம், அவனைப் பப்பா மரத்தில ஏத்தி விட! கொஞ்சம் கவனிச்சு வை! என்று அள்ளியும் வைப்பார்கள்.

போதாக்குறைக்கு சந்தேக நபர்களையும் (நபருக்கு பெண்பால் என்ன?) அடையாளம் காட்டி வைப்பார்கள்.

ஆத்தாவுக்கு சிரிப்பாக இருக்கும். இந்த நாயையும் தேட ஆக்கள் இருக்கினமோ? என்பதாக இருக்கக் கூடும். ஆத்தா பேஸ்புக்கில் இல்லாததால், இப்படி யாராவது அள்ளி வைத்தால் தான் உண்டு.

அடேய், நான் என்ன உட்பெட்டிக்குள் 'ஹை செல்லம், சாப்பிட்டியா செல்லம்? குளிச்சியா செல்லம்?' என்று ஜொள்ளுத் தூது விட்டுக் கொண்டாடா இருக்கிறேன்?

இல்லை, 'என்ரை மனிசி என்னை அண்டர்ஸ்டான்ட் பண்ணிறாவில்லை, அவவுக்கு உங்கள மாதிரி இலக்கியம் எல்லாம் விளங்காது' என்று கடலை போடுகிறேனா?

அல்லது, நள்ளிரவில் போன் அடித்து, 'நான் கதைக்கேக்கை உங்களுக்கு வயித்துக்குள்ள பட்டாம்பூச்சி பறக்கிற மாதிரி இருக்குமே!?' என்று ஏதாவது..?

உங்கட கவிதையை அடுத்த லெவலுக்கு கொண்டு போக உதவி செய்யிறன் எண்டு இலக்கிய பீலா விட, எனக்கு பின்நவீனத்துவமும் தெரியாது.

என்னுடைய பின்னூட்ட சேட்டை எல்லாமே, எல்லாரும் பார்க்கிறபடிக்கு பகிரங்கமாகத் தானே இருக்கிறது.

அதுவும் என்னுடைய அண்ணன்மார், அக்காமார் வேறு எனது நட்பு வட்டங்களோடு நட்பாக இருக்கிறார்கள். தெரிந்தால் பிடரியில் இரண்டு தந்து 'போய் வேலையைப் பாரடா!' என்றோ, 'என்ன ராசா, நாங்கள் எத்தனை பேரை சின்னச் சின்ன மச்சாள் எண்டு சொல்லிறது?' என்றோ சொல்ல மாட்டார்களா?

என்னுடைய சேட்டைகள் எல்லாம்...

யாருமே நினைக்காத, சம்பந்தம் இல்லாத ஒன்றைச் சொல்லி சிரிப்புக் காட்டவும்,

பேட்டைக்குள் சைக்கிள் ஹாண்டிலில் இருந்து கையை எடுத்து, நெஞ்சு பட்டனை திறந்து, கொலரை தூக்கி விட்டு, விசில் அடித்தபடியே வலம் வரும் உட்பெட்டி ஜொள்ளு மைனர் குஞ்சுகளுக்கு கடுப்பு ஏத்தவும் தானே?

•••

ஆனால் பெண் நண்பிகள் விவகாரம்

வேறு.

இவர்கள் எல்லாரையும் அறிமுகம் செய்தால்...

ஆத்தாவோடு நெருக்கமாகி, 'ஐயோ, அவ எவ்வளவு நல்லவ!? உவரை விட!' என்று ஆத்தா புராணம் தொடங்கியிருப்பார்கள்.

அதில் என்ன பிரச்சனை? என்று உங்களுக்கு கேள்வி வந்திருக்கும்.

பிரச்சனை ஒன்றுமில்லை.

இவர்கள் எல்லாரும் தமிழ்ப் பெண்டிர்.

தமிழ் பெண்டிர் ஆலோசனை சொல்கிற ஸ்டைல் எப்படியிருக்கும்?

ஏதோ மற்றவர்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட மாதிரித் தான் தொடங்கும்.

'என்னண்டு விட்டுட்டு இருக்கிறியள்? உவற்றை சேட்டையளுக்கு! நீங்கள் எவ்வளவு நல்லவ!'

இப்படியாகப்பட்ட பல தர்ம பத்தினிகளைக் கண்டிருக்கிறேன்.

வீட்டுக்காரனுக்கு யாராவது பெண்கள் போன் அடித்தாலேயே, 'நீங்கள் ஆர்? உங்களுக்கு அவரை என்னண்டு தெரியும்? என்ன அலுவலுக்கு போன் அடிச்சனிங்கள்?' என்ற செக்கியூரிட்டி கிளியரன்ஸ் முதல்... போன் நம்பரைத் தேடிப் பிடித்து, 'மற்றவளவேயின்ரை புருசன்மாரைப் புடிக்கத் (அல்லது புருஷன்மாரோட படுக்கத்) திரியிறியளோடி?' என்று தடுத்தாட் கொள்கின்ற வரைக்குமான பத்தினி தெய்வங்களைக் கண்டும் கேள்விப்பட்டும் உள்ளேன்.

ஒரு மனிதரில் அக்கறை இருப்பது வேறு. அந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வு சொல்வது வேறு.

ஆண் நண்பர்கள் மிஞ்சிப் போனால்...

'உவனைக் கொஞ்சம் கவனிச்சுக் கொள்ளு!' என்பதோடு நிறுத்திக் கொள்வார்கள்.

ஆனல் நண்பிகள் graphic details ஸோட தீர்வு நடக்கும்!

ஆத்தா ஏதோ நாளிதுவரைக்கும் கத்தியால் மரக்கறிகள் தான் வெட்டிக் கொண்டிருக்கிறது... கத்தரிக்காய், கியூகம்பர் என்று.
இவர்களை அறிமுகப்படுத்தப் போய்...
தடியைக் கொடுத்து வெட்டு வாங்கின மாதிரி...
சே...
அடியை வாங்கின மாதிரியான வேலைக்கு போகக் கூடாது என்பதால் இவர்கள் யாருக்கும் அபிதகுஜாம்பாள் ஊரில் இருப்பதைப் பற்றி மூச்சு விடவில்லை.

'நாங்கள் எண்டா பாத்துக் கொண்டு இருக்க மாட்டம். உந்த கத்தியால!'

ஆத்தாவுக்கு சமையலுக்கு இறைச்சி வெட்டிறது கூட நான் தான்.

ஆத்தா ஏதோ நாளிதுவரைக்கும் கத்தியால் மரக்கறிகள் தான் வெட்டிக் கொண்டிருக்கிறது... கத்தரிக்காய், கியூகம்பர் என்று.

இவர்களை அறிமுகப்படுத்தப் போய்...

தடியைக் கொடுத்து வெட்டு வாங்கின மாதிரி...

சே...

அடியை வாங்கின மாதிரியான வேலைக்கு போகக் கூடாது என்பதால் இவர்கள் யாருக்கும் அபிதகுஜாம்பாள் ஊரில் இருப்பதைப் பற்றி மூச்சு விடவில்லை.

சொல்லியிருந்தால்...

'ஐயோ, உங்கட மூஞ்சையைத் தான் இன்னும் பாக்கேலை, அவவையாவது நாங்கள் போய் பாக்கிறம்!' எண்டு குத்தி முறிந்திருப்பார்கள்.

•••

ஆத்தா ஊருக்குப் போய் முதலில் தங்கி நின்றது ஒரு இஸ்லாமிய சகோதரி குடும்பத்துடன். வழமை போல அவர்களுக்கு ஆத்தாவை முன்பின் தெரியாவிட்டாலும், ஆத்தா அந்த வீட்டில் ஒரு மகளாகவே ஆகி விட்டிருந்தாள்.

என்னோடு போன் கதைக்குப் போதெல்லாம், எனக்கு விருப்பம் இல்லாத ஒன்றை ஆத்தா செய்து கொண்டே இருக்கும்.

பக்கத்தில் இருக்கிற யாரையாவது கூப்பிட்டு அவர்களோடும் கதை என்று மாட்டி விடும்.

முன்பின் தெரியாதவர்களோடு கதை என்றால் எதைக் கதைப்பது?

சும்மா தேவையில்லாத சம்பந்தமில்லாத விடயங்களை இடைச்செருகி இடம் நிரப்பல் தான், பின்நவீனத்துவ கவிதை மாதிரி!

வீட்டுக்கார அம்மா, அப்பா இருவருமே கதைப்பார்கள்.

அம்மா ஏதோ ஆத்தாவை பிரிந்திருக்கும் துயரில் நான் வாடுவதைப் போல, 'நீங்க ஒண்ணுக்கும் கவலைப்படாதீங்க. அவுங்களை நாங்க கெவனமா பாத்திட்டுத்தான் இரிக்கம்' என்ற ஆறுதல் சொல்லப் போக...

நானும் என் குறும்புத்தனத்தில், 'நாங்க ஒண்ணும் கவலைப்படேலை, அம்மா, நாங்க இங்க ஜாலியா சந்தோசமாத் தான் இருக்கிறம், நீங்க வேணுமெண்டா அவவை அங்கேயே வைச்சுக் கொள்ளுங்க!' என்று விட்டேன்.

கொஞ்ச நேரம் சத்தத்தைக் காணோம். அம்மாவுக்கு என் ஜோக் விளங்கவில்லை என்றதும் சப்பென்று போய் விட்டது.

பிறகு தான் அம்மா சிரிச்சாங்க.

அதுவும் அம்மா அதை பக்கத்தில் இருக்கும் யாருக்கோ சொல்லி, அதை அந்த கூகிள் பீபி, அம்மாவுக்கு மொழி பெயர்த்து சொல்லித் தான்!

நான் சந்தோசமாக இருந்தது வேற விசயத்திற்கு.

வீட்டில் நான் வைத்த பொருட்கள் அந்தந்த இடத்திலேயே இருந்தன.

ஆத்தா இருந்திருந்தா, அவை எல்லாவற்றையும் எடுத்து 'பத்திரமாக' வைத்திருந்திருக்கும்.

அதுவே Domestic violence க்கு வழி கோலக் கூடிய அளவுக்கு எனது பொறுமையைச் சோதிக்கும்.

அந்தளவு சந்தோசத்தை நான்

வழமையில் அனுபவித்ததில்லை. நான் சமையலறையில் எனது தேவைக்காக வைத்திருக்கும் கத்தி, உருட்டுக்கட்டை, விசேட கரண்டிகள் எல்லாமே உரிய முறையில் வைக்கவென்றே விசேடமான பொருட்களை வாங்கி முறைப்படுத்தி வைத்திருந்தேன்.

மகனுக்கும் வேறு அந்த சந்தோசத்தை சொல்லி பகிர்ந்திருந்தேன்.

எனவே, என்னுடைய சந்தோசத்தை அந்த அம்மாவோடு பகிரப் போய், அவவை அதிர்ச்சிக்குள்ளாக்கிய பிரச்சனை அதோடு முடிந்திருக்கும் என்று நீங்கள் நினைத்திருப்பீர்கள்.

அம்மா என்றால் சும்மாவா?

அம்மாவிடமும் செல்போன் உண்டு.

செல்போனை அம்மா சும்மா வைத்துக் கொண்டும் இருக்க முடியாது.

அம்மாவும் வழமை போல, ஊர் பலாய் கழுவுவதுண்டு.

வீட்டுக்காரி அந்தப் பக்கமாய் இருக்க...

அம்மா யாருக்கோ போன் அடிச்சு பலாய் கழுவும் போது...

'அவுங்க அங்க சந்தோசமா இரிக்கம் எண்டு சொல்றாங்க. அங்க ஆரையோ வைச்சிருக்காங்க போல. அதுதான்!'

நாடு விட்டு நாடு போனாலும் சனி நம்மை விடாது!

வீட்டுக்காரி ஒரே பேச்சு.

'உனக்கு ஆரோட பகிடி விடுறது எண்டு தெரியாது.'

அதுக்கு நான்... 'நான் என்ன செய்யிறது? நீ தான் கதை எண்டு போனைக் குடுத்தனி!'

இப்படியாக வீட்டுக்காரி என் பேஸ்புக் நண்பிகளின் கண்ணில் அகப்படாமல் மூன்று மாதங்களின் பின் வந்து சேர்ந்தாள்.

அந்த சந்தோசத்தை 'வீட்டுக்காரி ஊரில இருந்து வந்திட்டா!' என்று தானே கொண்டாட முடியும்.

•••

அம்மாவிடமும் செல்போன் உண்டு.
செல்போனை அம்மா சும்மா வைத்துக் கொண்டும் இருக்க முடியாது.
அம்மாவும் வழமை போல, ஊர் பலாய் கழுவுவதுண்டு.
வீட்டுக்காரி அந்தப் பக்கமாய் இருக்க...
அம்மா யாருக்கோ போன் அடிச்சு பலாய் கழுவும் போது...
'அவுங்க அங்க சந்தோசமா இரிக்கம் எண்டு சொல்றாங்க. அங்க ஆரையோ வைச்சிருக்காங்க போல. அதுதான்!'
நாடு விட்டு நாடு போனாலும் சனி நம்மை விடாது!

சரி, வீட்டுக்காரி வந்து வழமை போல என்ன செய்யக் கூடும்?

என்னுடைய பொருட்களை எடுத்து 'பத்திரமாக' வைக்கும் வேலை தொடங்கி விட்டது.

நான் எனது தேவைக்கும் வசதிக்கும் ஏற்ப ஒழுங்கு முறைப்படி வைத்திருந்த பொருட்கள் எல்லாம் ஆத்தாவின் தேவைக்கேற்ற மாதிரி மாற்றியமைக்கப்பட்டன.

சமையலறையில் நான் வைத்திருந்த கத்தி காணாமல் போய் விட்டது. அதை இனி ஆத்தா தேடினாலும் 'உங்க தான்' கிடக்கும்!

உருட்டுக்கட்டை மட்டும் முன்னால் 'உள்ளேன் அம்மா!' என்று கொண்டிருந்தது.

ஏதும் அவசர தேவைக்காக ஆத்தா முன்னால் வைத்திருந்திருக்கக் கூடும்.

சமையலறை மேசையில் இருந்த சொக்கலேட் பெட்டிகள் கொஞ்சம் ஆத்தாவின் கண்ணை உறுத்த...

'இதென்ன சொக்கலேட் பெட்டியெல்லாம் இங்க கிடக்கு?

அடே, ஏண்டா வலன்ரைன்ஸ் டேக்கு எனக்கு போன் பண்ணேலை?#

அதற்கு நான் சொல்லியிருக்க வேண்டிய பதில்...

'ஆத்தா, உனக்கு அதிர்ச்சி தர வேணும் எண்டு வாங்கி வைச்சனான்!'

பிறந்த நாள் முதல் சனி பகவான் என்னை எல்லா வீடுகளிலும் இருந்து பார்த்தபடியே தானே இருக்கிறார்.

அந்த நேரமாய் பார்த்து நாக்கில் குடி கொள்ள...

'ஓ! அதோ? அது காதலர்கள் தினம் எண்டபடியா, நான் என்ரை காதலிகளுக்கு ரோசாப்பூவும், சொக்கலேட்டும் வாங்கிக் குடுத்தனான், உன்ரை நினைப்பு வரேலை!'

•••

எனவே, என்னை எங்காவது கடைகளில் இடியப்பம் வாங்கும் வரிசையில் தலையில் கட்டோடு கண்டால்...

ஏதோ God Particle ளைக் கண்டுபிடித்த Quantum விஞ்ஞானி மாதிரி...

'அண்ணை, என்ன அக்கா மண்டை உடைச்சிட்டாவோ?' என்று கேட்க தேவையில்லை.

'அது, ஒரு சின்ன அக்சிடன்ட்!'

அவ உருட்டுக்கட்டையை கையில வைச்சிருக்கேக்க, நான் அதுக்கு மேல சறுக்கி விழுந்திட்டன்.

•••

நீசக் கிரகன் சனி பகவான் எத்தனை கெடுதல்களைச் செய்தாலும், என்னை வாழ்க்கையில் ஏதோ சில எப்போதுமே காப்பாற்றிக் கொண்டு தான் வந்திருக்கின்றன.


ஆத்தா அவசரத்திற்கு தேடிய போது...


'பத்திரமாக எடுத்து' வைத்திருந்ததால், கத்தி கிடைக்காமல்...


உருட்டுக்கட்டை கிடைத்ததற்கு...

ராசி நாதன் செவ்வாயும், நேசக்கிரகங்களான சந்திரனும், புதனும்...

இரண்டாம், மூன்றாம், நான்காம் (சின்ன) வீடுகளிலிருந்து பார்த்ததும் காரணமாக இருக்கக் கூடும்.




# உலகெங்கும் அமசோனில்....

| | |
|---|---|
| இந்தியாவில்... | www.amazon.in |
| அமெரிக்காவில்... | www.amazon.com |
| கனடாவில்... | www.amazon.ca |
| இங்கிலாந்தில்... | www.amazon.co.uk |
| ஜேர்மனியில்... | www.amazon.de |
| பிரான்சில்... | www.amazon.fr |
| நெதர்லாந்தில்... | www.amazon.nl |
| அவுஸ்திரேலியாவில்... | www.amazon.com.au |
| இத்தாலியில்... | www.amazon.it |

## ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
## என்ற வார்த்தையைத்

# தேடுங்கள்...
# கண்டடைவீர்கள்!